வெளியீடு 11-5-1992 Issued 11-5-1992

363

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, அக்டோபர் 4, 1991 - தொகுதி 13 - எண் 2

Friday the 4th October, 1991 - Volume 13 - No, 2


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat,

Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

363

தமிழ்நாடு சட்ட மன்றப்
பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
தொகுதி-13 எண்-2

4.10.1991

வெளியீடு-11.6.1992

## உள்ளடக்கம்

4—10—1991..


| | பக்கங்கள். |
|---|---|
| 1. பேரவைத் தலைவர் அவர்களின் 7-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துரைகள் | 241—242 |
| 2. வினாக்கள்- விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 242—279 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 280—298 |
| 3. தகவல் கோரல்— | |
| பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற கடைமடைப் பகுதிகளுக்கு பாசனத்திற்கு கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் வந்து சேராதது குறித்து. | 299— 298 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) ஆனைமலை ஒன்றியம், பிளிச்சினாம்பாளையம் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்சிலிருந்து வெளியேற்றப்படவுள்ள கழிவு நீரால் அப்பகுதி மக்களுக்கும், கால்நடைகளுக்கும் ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து. | 303—307 |
| (ஆ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள கந்தர்வகோட்டைமற்றும் குண்ணண்டார் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் தெரு விளக்குகள் எரியாதது குறித்து. | 307—309 |
| 5. அறிவிப்புகள்— | |
| (அ) மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். | 310 |
| (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92 (ஆ. இ.) | 358 |
| (இ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.). | 131 |
| (ஈ) 1991—92 ஆம் ஆண்டிற்கான குழுக்கள் அமைப்பு. | 415—420 |
| (உ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள். | 463—474 |

158381


6. அறிக்கை அளித்தல்— பக்கங்கள்.

(அ) பொதுக்கணக்குக் குழு 311–312

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 312

7. அரசினர் தனித் தீர்மானம்—

தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை தேவையென நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்கிக் கொள்வது. 313–358

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா 313–314, 343–349

*திரு. ச. அழகிரி 314–323

திரு. செ. கு. தமிழரசன் 324–329

திரு. ஜி. பழனிசாமி 329–331

திரு. நா. சா. பழனிசாமி 331–335

திரு. எஸ். வி. சண்முகம் 335–338

திரு. எஸ். ஆண்டித் தேவர் 338–340

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் 341–433

8. முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1991-92 பொது விவாதமும் அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்— 358 371

டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 358-360, 366-368

திரு. கி. செல்வராஜ் 361

திரு. சி. சுவாமிநாதன் 361–366

9. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன் வடிவு, 1991 371–372

10. அரசினர் தீர்மானம்—

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 372ஆகியவற்றைத் தளர்த்தல். 132–133

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல். 474–475





11. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— பக்கங்கள்.

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 373–755

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 375–376

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991 377–378

(ஈ) விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. 378-380

(உ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 380–392

(ஊ) பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 392–402

(எ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991. 402–414

(ஏ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 420–428

(ஐ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 428–430

(ஒ) நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 430–437

(ஓ) வக்பு (இஸ்லாமிய அறக்கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமனம்) சட்டமுன்வடிவு 1991 437–447

(ஔ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1991 447–562

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 475–476

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 18, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு 2022
1991, அக்டோபர் 4, வெள்ளிக்கிழமை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.''

தான் செய்யத்தக்க ஓர் செயலை அச்செயலுக்கு உரிய நேரத்திலும், இடத்தையும் அறிந்து அதற்குரியவாறு விரைந்து செய்வாராயின் அவரை வெல்ல எண்ணிய பகைவரும் தம் எண்ணத்தை இழந்துவிடுவர்.

I. பேரவைத் தலைவர் அவர்களின் 47-வது பிறந்த நாளை யொட்டி வாழ்த்துரைகள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உங்களது 46-வது வயது முடிந்து 47-வது வயதைத் தொடங்குகின்ற நாள். எனவே உங்கள் பிறந்த நாளாகிய மகிழ்ச்சிகரமான இந்நாளில் இந்த அவையின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரது சார்பிலும், உங்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று போலவே, தாங்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் உங்கள் அரசியல் வாழ்க்கையில் இன்னும் பலப்பல வெற்றிகளைக் கண்டு வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று மீண்டும் இந்த அவையின் சார்பில் உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று தங்களுடைய 47-வது பிறந்த நாளில் பேரவையின் சார்பில் அத்தனை நபர்களுடைய சார்பிலும் உங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியின் சார்பில் நாங்களும் உங்களுடைய 47-வது பிறந்தநாளில் எங்களுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [1991 அக்டோபர் 4

சட்டப் பேரவைத் தலைவராக நீங்கள் இருக்கின்ற இந்தக் காலத்தில், சட்டப் பேரவையில் பல நல்ல மரபுகளை ஏற்படுத்தி, ஒரு நல்ல சட்டப் பேரவைத் தலைவராக விளங்குவதற்கான மரபுகளை ஏற்படுத்தி, நீங்கள் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்று நான் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தங்கள் வாழ்க்கையில், தங்கள் அரசியல் வாழ்க்கையில், மேலும் பல சிறப்புகளைப் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு என்னுடைய பிறந்த நாள் என்பதை, சாதாரணமாக நான் எந்த நேரத்திலேயும் நினைத்து, விழா கொண்டாடுகிற வகையிலோ அல்லது அதை நினைத்து இதை ஒரு பெரிய சிறப்பாக எடுத்துக்கொள்கிற வகையிலோ, இதுவரையிலும் நான் என்றைக்கும் என்னுடைய வாழ்நாளில் அமைத்துக் கொண்டதில்லை. ஒரு 46 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குக்கிராமத்தில் இந்த நாளில் பிறந்தேன் என்பதைத் தவிர செயற்கரிய பல காரியங்களைச் செய்து மறைந்து இருக்கிற பல பெரியார்களுடைய பிறந்த நாட்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நமக்கு இது ஒரு பெரிய சிறப்பான நாள் என்று நான் கருதியதில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்களே, என்னை வாழ்த்துகிற இந்த நல்ல வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன் என்று சொன்னால் (மேசையை தட்டும் ஒலி) அதுதான் இந்த 46 ஆண்டுகளில் நான் பெற்றிருக்கிற பேறுகள் அத்தனையிலேயும் சிறந்த பேறு என்று நான் கருதுகிற சூழ்நிலையில் இருக்கிறேன். அந்த வகையில், என்னை இந்த அளவிற்கு உயர்ந்த இடத்தில் அமர்த்திய புரட்சித் தலைவி அவர்களே, இன்றைக்கு வாழ்த்துகிற வாய்ப்புப் பெற்று இருப்பது எதிர்காலத்தில் நான் என்ன வாய்ப்புப் பெற்றாலும் அது அவர்கள் இன்றைக்கு இருந்து வாழ்த்திய இந்த வாழ்த்துரைக்கு மிகுதியாக இருக்காது என்று நான் கருதுகிறவன். அந்த வகையிலே, இந்த உயர்வுக்கெல்லாம் காரணமான புரட்சித்தலைவி அவர்களுக்கே என்னுடைய இந்த வாய்ப்பு பெற்றதற்கான நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 9.35

## 2. வினாக்கள் - விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் வினா எண். 148. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1991 அக்டோபர் 4]

148— பேராவூரணியில் நீதிமன்றம்.

*1182, திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணியில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும், முன்சீப் கோர்ட்டும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

பேராவூரணியில் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு சென்னை உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. அங்கு மாவட்ட முன்சீப் கோர்ட் ஒன்று அமைப்பது பற்றிய செயற் குறிப்பானை சென்னை உயர்நீதிமன்றம் 1987 ஆம் ஆண்டில் அரசின் ஆய்விற்காக அனுப்பியது. அதனைப் பரிசீலனை செய்த பின்னர் 1990 ஆம் ஆண்டில் அரசு அதனை பின்னால் செயல் படுத்தலாமென தள்ளி வைத்தது. எனவே சென்னை உயர்நீதி மன்றத்தால் இது மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டது. 1990 ஆம் (30—4—90) ஆண்டில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை தனியாக ஒரு மாவட்ட முன்சீப் கோர்ட் அமைப்பதற்குப் போதுமானதாக இல்லை. நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை கூடும்போது இது குறித்த செயற் குறிப்பினை சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்று கேள்வி நேரத்தின்போது எனக்கு ஒரு
பெரிய பாக்கியம் கிடைத்ததாக எண்ணி, நான் தயாராக
இருந்தேன். எதையும் புத்திசாலித்தனமாக, திறமையாக
முந்திக்கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி, மாண்பு
மிகு முதல்வர் அவர்கள் இதிலும் மிகத் திறமையான
முறையில் சிறப்பான முறையில் இங்கே நம்முடைய பேரவைத்
தலைவரை வாழ்த்தி பாராட்டியதிலே, நானும் அதில் கலந்து
அவரைப் பாராட்டி, மாண்புமிகு அமைச்சரவர்கள்
இங்கே பதிலளித்தார்கள். பேராவூரணி என்பது ஒரு
பள்ளத்தாக்கைப் போன்ற ஊராகும். மிக மிகப் பின்
தங்கிய பகுதியாகும். ஆகவே அப்படிப்பட்ட பகுதி மக்கள்
பட்டுக்கோட்டைக்குத்தான் கோர்ட்டிற்கு எல்லாம் வர
வேண்டும். அது 40 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது.
ஆகவேதான் பேராவூரணியில் கோர்ட் அமைக்க வேண்டு
மென்று நீண்ட பல வருடங்களாக நாங்களே முயற்சித்துக்
கொண்டிருக்கிறோம். சென்ற வருடம் 90-ல் அதை அமைத்திருக்
கலாம். நான் காங்கிரஸ்காரனாக இருந்த காரணத்தினாலே

தான் அதை அமைக்க வில்லை என்பது நம்முடைய அமைச்சருடைய குறிப்பிலேயே தெரிகிறது. ஆகவே அதை நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நீதி வழங்குகின்ற இந்த ஆட்சியில், பேராவூரணி மக்களுக்கும் நீதியை வழங்கி நீதிமன்றத்தை துவக்குவதற்கு நீங்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்வீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 149 திரு. வெ. தமிழரசு, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

149—ஆத்தூரில் நீதிமன்றம்.

* 1310 திரு. வெ. தமிழரசு,

திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூரில் சார்பு நீதி மன்றம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தற்போது உடனடியாக சப் கோர்ட் அமைக்கும் வரை வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரு நாள் நீதிபதிகள் ஆத்தூருக்கு வந்து பணியாற்றும் வகையில் அமர்வு நீதி மன்றம் செயல்படுத்த நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அரசு பரிசீலிக்குமா என்பதை பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரில் அந்த நீதிமன்றம் அமைக்க ரூ. 9,02,000 தொடர் செலவும், ரூ. 3,75,000 தொடரா இனச் செலவும் தேவைப்படுகிறது. நிதி பிரச்சனை தான் அங்கே நீதி மன்றம் அமைப்பதற்குத் தடையாக இருக்கிறது. அதனையும் பரிசீலனை செய்து ஒரு நிரந்தர நீதிமன்றமே ஆத்தூரில் கொண்டுவர அரசு முயலும்.



திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலூகாவில் மேற்கு எல்லையிலிருந்து மக்கள் தற்போது 85 கிலோமீட்டர் தூரம் சேலத்திற்கு கோர்ட்டிற்காக வரவேண்டி இருப்பதாலும் ஆத்தூர், தலைவாசல், ஏற்காடின் ஒரு பகுதி ஆகிய மூன்று தொகுதிகளில் உள்ள மக்கள் பயன் பெறவும், சேலத்திற்கு அடுத்த பெரிய நகரமான ஆத்தூருக்கு இந்த நிதி ஆண்டில் நீதிமன்றம் கொண்டுவரப்படுமா என்பதை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எனது முந்தைய கேள்வியிலேயே பதில் அளித்திருக்கிறேன்.

திரு. கா. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் தொகுதியில் கங்கவல்லி, தம்மம்பட்டி, கவரப்பாடி, கிழக்குராஜபாளையம், புத்தூர் போன்ற கிராமங்கள் சேலத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளன. வழக்கு விஷயமாக சேலத்திற்கு 100 கிலோமீட்டர் தூரத்திற்கு அந்தப் பொதுமக்கள் வர வேண்டியிருப்பதால் நடப்பு நிதியாண்டிலேயே அங்கே கோர்ட் செயல்படுத்த ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் அதற்கு வாய்ப்பில்லை. அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 150 திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

150— மதுரையில் குடும்ப நீதிமன்றம்.

* 2425, திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மதுரையில் சென்னையைப் போன்று ஜீவானாம்ச வழக்கு விவாகரத்து வழக்குகளை விசாரிக்க குடும்ப நீதிமன்றம் (Family Court) அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரையில் குடும்ப விவகாரங்கள் குறித்த நீதி மன்றம் (family court) ஏற்படுத்தும் செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே சென்னையை அடுத்து மதுரை நகர் பெரிய நகரமாக இருக்கின்ற காரணத்தாலே பெண்கள் விவகாரத்து வழக்குகள் மற்றும் ஜீவனாம்ச வழக்குகள் போன்றவை விசா ரணை முடிய நீண்ட நாட்கள் ஆகின்றது. மேலும் பெண்கள் மதுரை நகரைச் சுற்றியுள்ள புற நகர்ப் பகுதிகளி லிருந்தும், கிராமங்களிலிருந்தும் வந்து அலையமுடியாத சூழ் நிலை இருப்பதனால் நடப்பு நிதியாண்டில் குடும்ப கோர்ட் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகளின்படி பத்து இலட்சம் பேர் இருக்கிற இடங்களில் ஃபேமிலி கோர்ட் அமைக் கலாம் என்ற விதி இருக்கிறது. அதன்படி தற்போது மதுரை, கோவை ஆகிய இரண்டு இடங்களில் உண்டாக்க வேண்டு மென்று அரசு கருதுகிறது. ஆனால் அது உயர்நீதி மன்றத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. உயர்நீதி மன்றத்தை துரிதப்படுத்தி விரைவில் மதுரையிலும், கோவை யிலும் ஃபேமிலி கோர்ட் அமைக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. ஏ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சாதரரணமாக எல்லா வழக்குகளிலும் கட்சிக் காரர்களின் சார்பாக வக்காலத்துப் போட்டு எல்லா வழக் கறிஞர்களும் ஆஜர் ஆவார்கள். ஆனால் இந்த ஃபேமிலி கோர்ட்டிலே மட்டும் கட்சிக் காரர்கள் மட்டுமே ஆஜர் ஆக முடியும். வக்காலத்து போட்டு வழக்கறிஞர்கள் ஆஜர் ஆகாத நிலையில் அட்வகேட் ஆக்ட் 30-இல் இருக்கிறது. எனவே அந்த அட்வகேட் ஆக்ட் 30-இல் திருத்தம் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஃபேமிலி கோர்ட் என்பது கணவன் மனைவி அவர்களிடையே ஏற்பட்டுள்ள மனச் சங்கடங்களை துரிதமாக மற்றவர்கள் தலையீடு இல்லாமல் தீர்த்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஃபேமிலி கோர்ட் அமைக்கப்பட்டுள்ளது. எனவேதான் வழக்கறிஞர் களுடைய தலையீடுகள் இருக்கக் கூடாது என்று வைத்திருக் கிறது. வழக்கறிஞர்களுடைய தலையீடு இருந்தால் அது ஒரு புதிய வழக்காக ஏற்பட்டு விடும் என்று கருதி இந்தச் சட்டத்தை மத்திய அரசு, வழக்கறிஞர்கள் இந்த ஒரு பிரச் சினையிலாவது ஒதுங்கி இருக்கவேண்டும் என்று உருவாக்கி இருக்கிறார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேமிலி கோர்ட்டினாலே, வர தட்சிணை கொடுமை என்று சொல்லி ஏதாவது ஒரு பெண் இறந்துவிட்டால், வேலையில் இருப்பவர்களையெல்லாம் வேலையைவிட்டு நீக்கிவிடுகிறார்கள். நீண்ட நாட்களாக போலீஸ் அதிகாரிகளால் அந்த வழக்குகளை கொண்டு வர முடியவில்லை. ஆகவே அந்த ஃபேமிலி கோர்ட்டிலேயே வரதட்சணை வழக்குகளையும் சேர்த்து நடத்தினால் தகுந்த பரிகாரம் கிடைக்கும். சி. டி. ஆக்டிலேயே இருப்பது போன்று ஒரு டி. எஸ். பி. தான் இதை இன்வெஸ்டிகேட் பண்ண வேண்டுமென்று அரசு ஆணையிடுமா, பேமிலி கோர்ட் டிலேயே இந்த வழக்குகளும் சேர்ந்தாக் கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை நல்ல யோசனை. இதனைச் சட்டத் துறையி டத்திலே ஆலோசனை செய்து தக்க ஏற்பாடுகள் செய்யப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. சொக்கலிங்கம்

திரு. பி. சொக்கலிங்கம். : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, உங்களுடைய 47-வது பிறந்த நாளை நான் வாழ்த்தி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

திரு. பி. சொக்கலிங்கம். : மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் மேடைக்கு மேடை பேசி உள்ளார்கள். என்ன வென்றால், **சட்டம் என்பது ஒரு இருட்டறை அதில் வழக்காடும் வழக்கறிஞர்கள் ஒளி விளக்குகள் என்று அவரே சொல்லி உள்ளார். அவர் சொன்ன கருத்தை அடிப்படையாகக் கொண்டு அந்தக் குடும்ப நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் வக்காலத்து போட்டு ஆஜராக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பாரா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தனியான வழக்கு. கணவன் மனைவி ஆகிய இருவர் மத்தியிலே ஏற்படுகிற கசப்புகளைப் பெரிதாக ஆக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு தான் நல்ல அனுபவம் பெற்ற 7 ஆண்டுகள் அனுபவம் பெற்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

முதிர்ந்த வழக்கறிஞர்கள் இந்த பேமிலி கோர்ட்டுக்கு ஜட்ஜாகப் போடப்படுகிறார்கள். அங்கே ஜட்ஜாக ஆவதற்கு கூடத் தனித் தகுதி இருக்கிறது. 7 ஆண்டுகள் அனுபவம் பெற்று, நல்ல திறமை பெற்ற, நல்ல மனம் கொண்ட மனித நேயம் கொண்ட நீதிபதிகளைப் போட்டு, கணவன் மனைவி இருவரையும் அழைத்து சுமுகமாகத் தீர்க்க இந்த ஏற்பாடு. எனவே வழக்கறிஞர்கள் தேவை இல்லை. (குறுக்கீடு)

முற்பகல் 9-45

திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே.

........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம்.

திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே' கேள்வி நேரமாக இருந்தாலும் அண்ணா சொன்னதைத் தவறாகச் சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணா சொன்னதை மாற்றிக் கொள்வோம். அண்ணா சொன்னது சரியாக மாற்றப்படும். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன். : பேரவைத் தலைவர் அவர்களே. சட்ட அமைச்சர் அவர்கள் கூறுகின்ற போது வழக்கறிஞர்கள் உள்ளே நுழைந்தால் வேறு வழக்குகள் எல்லாம் முடிவாகி விடும் என்ற காரணத்தினாலேதான் இந்தக் குடும்ப நல கோர்ட்டுகளிலே வழக்கறிஞர்கள் தேவையில்லை. அதனால் அட்வகேட்ஸ் ஆக்ட்டில் இருக்கக்கூடிய 30 சட்டப் பிரிவை நாம் நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குடும்ப கோர்ட்டுக்கு ஒருவர் வருவதற்கு முன்னாலேயே, கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண் வழக்கறிஞரிடம் வந்துதான் முதலிலே நோட்டீஸை விடுகிறாள். பிறகு அவள் வழக்கறிஞரிடம் வந்துதான் அந்த வழக்கையே தயார் செய்து நீதி மன்றத்தின் முன்னாலே கொண்டு சமர்ப்பிக்கிறாள். ஆகவே, வழக்கறிஞரை விடுத்து எக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பெண் நேரடியாக நீதி மன்றத்திற்கு போகின்ற அளவிற்கு தமிழகத்திலே இன்று மக்கள் இன்னும் தெளிவு அடையவில்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையில், வழக்கறிஞர்கள் அதாவது 7 ஆண்டுகள் ஓரளவிற்கு எக்ஸ்பீரியன்ஸ் பெற்றவர்களையே—நல்ல மனம் படைத்தவர்கள் நீதிபதிகளாக அமர்த்தப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நல்ல மனம் படைத்த வழக்கறிஞர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். நிச்சயமாக வழக்கறிஞர்கள் அந்தப் பெண்களுக்கோ, மற்றவர்களுக்கோ வழிமுறையைக் காட்ட அவர்களை கோர்ட்டில் ஆஜர் செய்வதற்கு வழிவகை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கணவன்—மனைவி ஆகியவர்களுடைய மனப் பிரச்சினை. எனவே வழக்கறிஞர்கள் தேவையில்லை. நீதிபதிகளே போதும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் திருமதி பியாட்ரிக்ஸ் டிசௌசா.

Dr. (Tmt.) Beetrix D. Souza : Mr. Speaker Sir, I request that Lawyers be debarred from speaking on behalf of husbands. Because they usually take up for the men. Wives can speak on behalf of themselves. Because the wife goes to the family Court, i.e. divorce court only as a last resort and there are cases where the wife is completely disallowed any maintenance because the Lawyer invariably speaks on behalf of the husband. Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பேசியதற்கு விளக்கந்தான் சொல்லியிருக்கிறார்கள். திரு. சஞ்சய ராமசாமி.

Thiru Sanjeev Ramasamy : Hon'ble Speaker, the Hon'ble Law Minister said that 7 years experince is enough for an Advocate to become a Judge in the Family Law Court. I would request him to extend that to atleast 10 years or 12 years. 7 years is not sufficient for him or for any Judge or an Advocate who becomes a Judge in the Family Court to understand the intricacies of the couple and only if he goes to the roots of the issue can he be a good Judge. Therefore, I request that the 7 year period be increased to atleast 10 to 12 years where they can gain more experience in handling these matters.

Hon'ble Thiru K.A. Krishnaswamy : Honourable Speaker Sir, the Government will consider sympathetically the valuable suggestion made by the Hon'ble Member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப நீதி மன்றத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள பெண்கள் அவர்களுடைய வழக்கை இந்த நீதிமன்றத்திலே சரி வரச் செய்ய முடியாத சூழ்நிலையில் இருப்பதனால் இந்த மாதிரி நீதிமன்றங்களில் அவர்களுக்கு வாதாட பெண் வழக்கறிஞர்களையாவது அனுமதிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1991 அக்டோபர் 4

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண், பெண் சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவே பெண்களுக்கு மட்டும் தனிச் சலுகை காட்ட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. செல்வராஜ்.

திரு. கி. செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பநல வழக்கு மன்றம் நியமிக்கின்றபோது பெண் நீதிபதிகளை நியமித்து அந்த பெண்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு கோவை மாவட்டத்தில் வழக்கு மன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல ஆலோசனை. நீதிபதிகள் நியமிக்கின்ற போது, அது பெண்ணா, ஆணா என்று பார்க்காமல் ஆணையும், பெண்ணையும் இரண்டு பேரையுமே நியமிக்கலாம் என்பது எனது கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண் நீதிமன்றத்திற்குச் செல்கிறாள் என்று சொன்னால் வேறு வழியே இல்லை என்கின்ற ஒருகால கட்டத்திலேதான் செல்வாள். ஏனென்றால் அவள் அதை ஒரு மானப் பிரச்சினை என்று சொல்வாள். குடும்பத்தில் உள்ளவர்களும் பெண் வளைந்து போக வேண்டும், பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்வார்கள். அதனால் தீக்கிரையாகி மறிக்கின்ற அந்த கோரங்கள் தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கிறது. அகவே, அப்படிப்பட்ட பெண்கள் வெளியே வருவதே ஒரு பெரிய காரியம். தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும், வாழ வேண்டும் என்கின்ற நிலையிலே வழக்கு மன்றங்களுக்கு வருகிறாள். ஆகவே, அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே பெண் நீதிபதிகளை இலவசமாக அவர்களுக்கு வாதாட ஏற்பாடு செய்வதுதான் நியாயம் என்று நான் கருதுகிறேன். அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அனுதாபத்தோடு பரிசீலித்து, அது சாத்தியம் என்றால் ஏற்பாடு செய்யலாம்.



1991]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. ரகுபதி.

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவனாம்ச வழக்குகளிலே பெண்களுக்கு இடைக்கால நிவாரணமாக அந்தக் வழக்கு முடியும்வரை அந்தக் கணவனிடமிருந்து மாதந்தோறும் ஜீவனாம்சமாக பணம் கிடைப்பதற்கு சட்டங்களிலே திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்விப் போடுமாறு தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முதுகுளத்தூர் கோர்ட்டில் ஒரு பெண்ணுக்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஜீவனாம்ச வழக்கு பற்றியது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : ஜீவனாம்ச வழக்கு பற்றிதான் சொல்கிறேன். ஜீவனாம்ச வழக்கில் மாதம் 300 ரூபாய் கொடுக்கும்படி அந்த நீதிபதி உத்தரவிட்டார். கொடுக்க மறுத்துவிட்டார் அந்தக் கணவன். அடுத்த தடவை ஒரு மாதம் ஜெயில் என்று சொன்னார்கள். ஜெயிலுக்குப் போய்விட்டு அவர் இப்போது ஜாலியாக இருக்கிறார். அதேநேரத்தில் நல்ல வசதி வாய்ப்பும் உள்ள அந்த மனிதர், அவர் வேறொரு பெண்ணை சேர்த்துக் கொண்டு இந்தப் பெண்ணை அனாதையாக விட்டுவிட்டார். பிறகு அந்தப் பெண் என்னிடம் வந்து சொன்னார். நானும் அந்த நீதிபதியைப் பார்த்து இப்படி எல்லாம் தண்டனைக் கொடுக்கலாமா என்று கேட்டேன். எனக்கு ஒரு மாதம்தான் கொடுக்க பவர் இருக்கிறது, நான் என்ன செய்வது என்று சொன்னார். இதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே இருக்கிற சில குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் நினைவுப்படுத்தினார்கள். சட்டத்துறையைக் கலந்து அதனை சரி செய்ய இந்த அரசு முயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 151 திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

திருச்சியில் மருத்துவக் கல்லூரி

151—

*222. திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும்

(ஆ) 21-12-1967ஆம் ஆண்டு அகில உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு அன்றைய சிறு சேமிப்புக் குழுவின் துணைத் தலைவராக இருந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் திருச்சியில் நடந்தது. அவ்வமயம் நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் "காவிரி தந்த கலைச் செல்வி" என்ற நாட்டிய நிகழ்ச்சி நடத்தி மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்காக 24,37,576 ரூபாய் 94 காசை நிதியாகத் திரட்டிக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). 14-8-1991-ந் தேதி வரை அந்தத் தொகை 42,99,014 ரூபாய் 40 காசாக வளர்ந்துள்ளது. இன்றுவரை கல்லூரி ஆரம்பிப்பதற் காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, மருத்துவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்க வேண்டிய தேவை உள்ளதா ? திருச்சியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான வசதிகள் என்ன ? இந்திய மருத்துவக் கழகம் இதற்கு ஒப்புதலை தருமா ? என்பன போன்ற கருத்துக்களை எல்லாம் தீர ஆய்வு செய்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளு...

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலை... அவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து நீண்ட காலமாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. ஆகவே, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எல்லாம் விட்டுப்போன பணி களை எல்லாம் தொடர்ந்து தொய்வு இல்லாமல் நடத்துகின்ற நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் இந்தக் கல்லூரியை அமைப்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன சில வசதிகளை எல்லாம் ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே இது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன். ஆனால் நிச்சயமாக இதில் நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. இருந்தாலும் அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டு சில அனுமதிகளையெல்லாம் பெறவேண்டிய அவசியத்தின் காரணமாகத்தான் அதை நான் உங்களுக்கு ஆய்வில் இருப்பதாகத் தெரிவித்தேன். எனவே, நிச்சயமாக நல்ல முடிவு எடுக்கப்படும்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கல்லூரி தொடங்குகின்ற நேரத்தில் நம் முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நாட்டிய நிகழ்ச்சியின் மூலமாகத்தான் அதற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டிருப்பதால் 'காவிரி தந்த கலைச்செல்வி' என்கிற பெயரை அந்த மருத்துவக் கல்லூரிக்கு வைப்பதுதான் பொருத்த மாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அப்படிப் பட்ட பெயரை கல்லூரி தொடங்குகின்றபோது வைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெயரை நான் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றாலும் நிச்சயமாக ஒரு நல்ல காரியம் நடப்பதற்கு யார் அடிப்படையாக இருந்தார்களோ அதை வைத்து செய்ய வேண்டும் என்கிறவகையிலேதான் தமிழகத்திலே இருக்கின்ற மக்களுடைய உணர்வு எப்போதுமே இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். எனவே அதற்கேற்ப உரிய நேரத்திலே நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா.

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மத்தியப் பகுதியாம் திருச்சி மாவட்டத்தில், அமைக்கபடவுள்ள மருத்துவக் கல்லூரிக்கு தேவையான வசதிகளை அறிய, ஆய்வில் உள்ளதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மருத்துவத் துறையின் பல்வேறு பிரிவுகளின் சிறந்த மருத்துவ வல்லுநர்களையும், பல்வேறு பயிற்சிகளுக்கு அரசினால் அங்கீ கரிக்கப்பட்ட பயிற்சி நிலையமான மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு அருகிலேயும், ரயில் சந்திப்பு, மத்தியப் பேருந்து நிலையம், விமான நிலையம் முதலியவற்றிற்கு அருகிலேயும்,

சார்விரியிலிருந்து குடிநீர், தேவையான மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகளையும் பெறவல்ல, திருச்சி நகரத்தின் மையப் பகுதியில் தற்போது எதற்கும் பயன்படுத்தப்படாமல் இருக்கும் மத்திய அரசுக்குச் சொந்தமான சுமார் 240 ஏக்கர் நிலத்தில், மேற்படி வசதிகளையுடைய அந்த இடத்தில், மத்திய அரசிடமிருந்து நிலத்தைப் பெற்று 25 ஆண்டுகளுக்கு முன்பே நிதி திரட்டி அளித்த, நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பில் கொலு வீற்றிருக்கும் இந்த நல்ல நேரத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? இல்லையெனில், மேற்கூறிய இடத்தை தேர்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன். அங்கே இருக்கிற மருத்துவமனை சிறப்பாக இருக்கலாம்; ஆனால், மத்தியிலே இருந்து வருகின்ற அந்த மருத்துவக் கழகம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, அதன் காரணமாகத்தான் முடிந்த பதிலாக இங்கே சொல்ல இயலவில்லை. அந்த நிலையை மனதிலே வைத்துதான், அங்கே ஆரம்பிக்க முடியுமா என்பதை நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அங்கே இருக்கிற 250 ஏக்கர் நிலம் திருச்சியினுடைய மத்தியப் பகுதியிலே இருந்தாலும்கூட, அந்த 250 ஏக்கர் நிலம் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமானது என்று எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டபோது, அந்த இடத்தை அவர்கள் கொடுக்க மறுத்து விட்டார்கள். எனவே, கல்லூரிக்கு அவர்கள் கொடுக்க முன் வருவார்கள் என்பது அவ்வளவு சாத்தியமாக இருக்குமா என்பது தெரியவில்லை. இருந்தாலும், முயற்சி எடுத்துப் பார்க்கலாம். அப்படி இல்லையென்றாலும், அருகிலே ஏதாவது நிலம் கிடைப்பதற்கான ஏற்பாட்டை அரசாங்கத்தால் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய முயற்சியால் அந்த நிதி திரட்டப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக அந்த நிதியானது இருக்கிறது. ஆகவே, இடத்தைப் பற்றி யோசிக்காமல், வேறொரு இடத்தைக்கூட, ஏறத்தாழ 300 ஏக்கரா நிலத்தை கையகப்படுத்துவதற்கு நான் நிச்சயமாக உதவி செய்வேன் என்பதை இந்த நேரத்தில் உறுதிகூறி, எங்களுக்கு மிகவும் தேவையாக உள்ள மருத்துவக் கல்லூரியை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலேயே ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அதற்கு உதவி செய்வாரா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட, ஒரு மாத காலத்திற்கு முன்னாலே ஒரு 150 ஏக்கரா இருக்கிற இடத்தைக் குறிப்பிட்டு, வரைபடத்தைக்கூட என்னிடத்திலே காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது 300 ஏக்கர் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இவ்வளவு ஒத்துழைப்பு எல்லா கட்சி மன்ற உறுப்பினர்களிடத்திலேயும் இருக்கிற காரணத்தினால், அதை விரைவாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகள் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 152. திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

## ஆலங்குளத்திலிருந்து சேர்ந்தமரம் வரை நகரப் பேருந்து விடுதல்.

152—

*1369. திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளத்திலிருந்து துத்திகுளம் வழியாக சேர்ந்தமரம் வரை நகரப் பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்று ஒரே வரியில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. மக்களுடைய அடிப்படைப் பிரச்சினை. ஆலங்குளத்திலிருந்து துத்திகுளம் வழியாக நான்கைந்து கிராமங்கள் [illegible] கல்லூத்து சிவலிங்கபுரம் [illegible] இந்த [illegible] எல்லாம் ஆலங்குளம் [illegible] சேர்ந்தமரம் [illegible] இந்த [illegible] அங்குள்ள மாணவர்கள் பள்ளிக்கு

செல்ல வேண்டியிருக்கிறது. அதைப்போல, பொதுமக்கள் அந்த ஊர்களுக்குச் சென்றால்தான் ஏதாவது பொருட்கள் வாங்கு வதற்கு வசதியாக இருக்கும். வியாபாரத் தொடர்பு வைப்பதற் கும் வசதியாக இருக்கும் என்பதால், இதை மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே பஸ்ஸை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துத்திகுளம் என்ற இடத்திற்கு பேருந்துகள் முன்பு ஆறு முறை சென்று வந்தது. டீசல் தட்டுப் பாட்டின் காரணமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அங்கே பாதைகள் சரியில்லை என்ற காரணத்தைக் காட்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு சில அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். நிறுத் தப்பட்ட பேருந்துகள் அனைத்தும் வருகின்ற 15-ஆம் தேதியன்று இயக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நிறுத்தப்பட்ட அனைத்துப் பேருந்துகளும், வருகின்ற 15-ஆம் தேதி இயக்கப்படும். உங்க ளுக்கு ஏதாவது ஒரு இடத்தில் பேருந்துகள் இயக்கப்படவில்லை என்றால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-00

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சி தலைவர் ஆட்சிக் காலத்தில், மிகத் துரிதமாகப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர் கள் சொன்னது போல, டீசல் தட்டுப்பாட்டிற்குப் பின்னால் பல்வேறு இடங்களிலே நிறுத்தப்பட்ட பஸ்கள் தற்போது இயக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 15 நாட்களுக்குள்ளாக எல்லா நிறுத்தப்பட்ட பஸ்களும் விடப்படும் என்று சொல்வது உண்மையிலேயே பொது மக்கள் மிகுந்த வரவேற்பு கொடுக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். ஆதலால் எங்கள் பகுதியில் பல பஸ்கள் நிறுத்தப்பட்டிருக் கின்றன. அந்த பஸ்களையெல்லாம் மீண்டும் இயக்கச் செய்து, பொதுமக்களுடைய இந்த அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நட வடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 15-ஆம் தேதி காலை யிலேயிருந்து அத்தனை பேருந்துகளும் இயக்கப்படும். மாண்பு மிகு உறுப்பினர்கள் யாராவது, பேருந்துகள் இயக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினால், விரைந்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 153. திருமதி ரமணி நல்லதம்பி, திரு. க. பழனிசாமி, திருமதி ரெ. சியாமளா, திரு. எஸ். சண்முகநாதன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

## வீட்டு மின் இணைப்பிற்கான வைப்புத் தொகையைக் குறைத்தல்.

*60. திருமதி ரமணி நல்லதம்பி,
திரு. க. பழனிசாமி:
திருமதி ரெ. சியாமளா:
திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா க்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வீட்டு மின் இணைப்பிற்கு அனுமதி பெறுவதற்கான வைப்புத் தொகை உயர்த்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அவ்வைப்புத் தொகையைக் குறைக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) வீட்டு மின் இணைப்பிற்கு அனுமதி தருவதற்கான வைப்புத் தொகை உயர்த்தப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அது 160 ரூபாயாக இருந்தது. கருணாநிதியினுடைய காலத்திலே 360 ரூபாயாக இருந்தது. கவானருடைய ஆட்சிக் காலத்திலே அது 860 ரூபாயாக உயர்த்தப்பட்டு, நாம் வெற்றி பெற்று, பதவிப் பிரமாணம் எடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக அது அமலுக்கு வந்திருக்கிறது. இதை அரசு அறியுமா ? இந்த 860 ரூபாயை வைப்புத் தொகையாக வழங்கு வதை விட அதை வேறு எங்காவது பேங்கிலே போட்டால் அதற்கு வட்டியே வந்துவிடும். பில் கட்டவேண்டியதே வராது. அந்த அளவுக்கு அந்தத் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தி

னாலே, எப்படிப் பார்த்தாலும் ஒரு வீட்டுக்கு 10 ரூபாய், 15 ரூபாய்தான் வரும். நூற்றுக்கு ஐந்து ரூபாய் வட்டிக்கெல்லாம் விடலாம். ஆகவே, 860 ரூபாய் வைப்பு நிதியாக வைப்பதை குறைக்க அரசு முன் வருமா? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போல் இல்லாவிட்டாலும்கூட, கருணாநிதி பீரியடிலே இருந்த அந்த 360 ரூபாய் என்கிற நிலையையாவது நீட்டித்துத் தருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல டெபாசிட் தொகை அப்படியேதான் இருக்கிறது. இருக்கின்ற நிதியாதாரங்களைக் கணக்கில் கொண்டு, ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சியிலே டெவலப்மென்ட் சார்ஜ்ஸ் என்று சொல்லி, மேம்பாட்டு கட்டணம் என்கின்றஒரு கட்டண விகிதத்தை வைத்து இருக்கின்றார்கள். அதிலே கூட சில பிரச்சினைகள் எல்லாம் வந்தது. அதன்மீது கோரிக்கைகள் இந்த அரசுக்கு வந்தன. ஏற்கெனவே கட்டியவர்கள்கூட அந்தப் பணத்தைக் கட்டச் சொல்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே அரசு முடிவெடுத்து, 15-6-1991-க்கு முன்னாலே, குறைந்த மின் அழுத்தம் பெற்றிருந்தவர்கள் அந்தப் பணத்தை ஏற்கெனவே இருந்தபடி கட்டியிருந்தால், அதற்குத் தேவையில்லை என்று விதிவிலக்கு அளித்தோம். அதைப்போல இப்போது இந்த மேம்பாட்டு கட்டணம் என்கிற அளவிலே இன்றைக்கு இருக்கின்றதைப் பற்றி, நான் ஏற்கெனவே மின் வாரியம் சம்பந்தமாக பேசுகின்ற நேரத்திலே சொல்லியிருக்கின்றேன். நம்முடைய மின்வாரியத்தினுடைய நிலைமைகளைப்பற்றியும், நிலக்கரிப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, அதை கருத்தில் கொண்டு இந்த மேம்பாட்டு கட்டணம் என்று அவர்கள் நிர்ணயித்து இருக்கின்றார்கள். நம்முடைய அரசு வருவதற்கு முன்னாலே அதற்கு உத்தரவிடப்பட்டு 15-6-1991-லிருந்து அதை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள். இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் அரசினுடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்திலே, அதையெல்லாம் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே வாழுகின்ற ஏழை எளிய விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலித்தொழிலாளிகள், வைப்புத் தொகை உயர்த்தியதன் காரணமாக, வீடுகளுக்கு மின் இணைப்பு வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அதோடு இதனால் பல்லாயிரக்கணக்கான மின் இணைப்புகள் வீடுகளுக்கு வாங்கப்படாமல் இருக்கின்றன. அதோடு, மின் இணைப்பு வாங்க வேண்டுமென்றால், கம்பம், கம்பி, லேபர் சார்ஜ் அனைத்தும் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதிகமாக



செலவு செய்துதான் அவர்கள் மின் இணைப்பு வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்த வைப்புத் தொகையையாவது குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே வைப்புத் தொகையைப்பற்றிச் சொல்லும்போது. மாறுதல் இல்லை என்று சொன்னேன். டெவலப்மென்ட் சார்ஜஸ் என்று போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினைகளை வைத்து, பல்வேறு கோரிக்கைகள் இதுபோன்று வந்திருக்கின்றன. இதுசம்பந்தமாக அதிகாரிகளிடத்திலே நாங்கள் பேசியிருக்கிறோம். ஆகவே, இதுகுறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சியில் உயர்த்தப்பட்ட அந்த டெபாசிட் தொகையானது நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது குறைக்கப்படுமா என்பதை நான் அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாலே பல்வேறு உத்தரவுகளை கவர்னர் ஆட்சியிலே வழங்கியிருக்கின்றார்கள். ஆகவே, பல்வேறு பிரச்சினைகள் வருகின்ற நேரத்திலே, சில பிரச்சினைகளை மாற்றுகின்ற நேரத்திலே முடிவு எடுக்கின்றோம். இதுபோன்ற பிரச்சினையிலே இன்றைக்கு மக்களிடத்திலே இருந்து வருகின்ற கோரிக்கைகளையெல்லாம் ஏற்று இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். ஆகவே, இதுபற்றி அதிகாரிகளோடு கலந்து பேசி, வாரியத்தோடும் கலந்து பேசிமுடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

முற்பகல் 10-05

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது Development charges என்று சொன்னார்கள். அந்த டெவலப்மென்ட் சார்ஜஸ் கவர்னர் ஆட்சிக் காலத்திலே 850 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். கோயில்கள். பள்ளி வாசல்கள், அனாதை இல்லங்களுக்கு மின் இணைப்புத் தருகின்ற போது சிறப்பு விதிகளின்கீழே அவர்களுக்கு இந்த டெவலப்மென்ட் சார்ஜஸ் விதிகளிலே தளர்த்தப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[1991 அக்டோபர் 4

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே விவசாயம், குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம், பொதுக் குடிநீர் வினியோகம் போன்றவைகளுக்கு ஏற்கெனவே இந்தக் கட்டணம் விதிக்கின்ற நேரத்திலே விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் கோயில்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றி இந்த அரசு, அதிகாரிகளோடு கலந்து பேசி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நகராட்சிகளிலே அவர்கள் தங்களுடைய ஆயுட்காலம் முடிகின்ற நேரத்திலே வீட்டு மின் இணைப்பிற்குக் கொடுக்கின்ற அந்த வைப்புத் தொகையையும், வீட்டு உபயோகத்திற்குக் கொடுக்கின்ற மின்சாரத்தினுடைய கட்டணத்தையும் உயர்த்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்றைக்கு அமல்படுத்துகின்றபோது, இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னாலேதான் கட்டணம் உயர்த்தப்படுகின்றது என்ற ஒரு தவறான பிரச்சாரத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், இன்றைக்குப் பல்வேறு பிரச்சினைகள் கடந்த காலத்திலே நடந்தவைகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சரி செய்து கொண்டிருக்கிறது. அதிலே எந்த அளவுக்குப் பொது மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கும் என்பதை இந்த அரசு கவனத்துடன் பரிசீலித்து அதற்கான முடிவு எடுக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 154—டாக்டர் தே. குமாரதாஸ். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

154—

## நெய்யாறு இடதுகரைக் கால்வாய்.

*148. டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கேரள மாநிலத்திலிருந்து நெய்யாறு இடதுகரைக் கால்வாய் ஒப்பந்தப்படி தமிழ்நாட்டிற்கு முழு அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



1991 அக்டோபர் 4]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெய்யாறு இடதுகரை கால்வாய் வழியாக 150 கன அடி தண்ணீரைத் தமிழகத்திற்கு விடவேண்டுமென்று ஏற்கெனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இன்றைக்குக் கேரளப் பகுதியிலே இருக்கின்ற கால்வாய்கள் சரிவரப் பராமரிக்கப் படாத காரணத்தினால், தண்ணீர் வருவது குறைந்து இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். அதற்காக கேரளப் பகுதியிலே இருக்கின்ற அந்தக் கால்வாய்களைச் சீரமைக்க வேண்டுமென்று நம்முடைய அரசு கேரள அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கான முக்கிய முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரை சேனலுடைய கால்வாய்கள், நம்முடைய பகுதிக்குட்பட்ட கால்வாய்கள் கூடப் பெருவாரியாக பழுதடைந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், முதலாவதாக, கேரளாவில் இருந்து அவர்களுடைய ஒப்புதல் பெற்று, சரிசெய்வதற்கு முன்பாக நமது எல்லைக்குட்பட்ட சேனல்களைச் செப்பனிட்டு, பழுதடைந்து இருக்கக் கூடிய மதகுகளைச் செப்பனிடுவதற்கு அரசு இந்த ஆண்டே முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நெய்யாறு இடதுகரை பாசனக் கால்வாயை நம்முடைய பகுதியிலே சீரமைப்பதற்கு ஒரு திட்டம் இந்த அரசினிடத்திலே இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய பகுதியிலே இருக்கிற கால்வாயைப் பொறுத்தமட்டில் கேரள அரசினுடைய பகுதியில் இருப்பதுபோல், அந்த அளவுக்கு மோசமாக இல்லை இருந்தாலும், நம்முடைய குதியிலே இருக்கின்ற கால்வாயைச் சீரமைப்பதற்கு அரசுக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது. ஆகவே, கேரளாவிலிருந்து வருகின்ற தண்ணீரை அவர்களுடைய பகுதியிலே சீரமைக்கின்றபோது தான் நம்முடைய பகுதியிலே அதிகமான தண்ணீர் கொண்டு வர முடியும். ஆகவே, இரண்டு முயற்சிகளையும் ஒரே நேரத்தில் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் நம்முடைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 180 டி.எம்.சி. தண்ணீரைத்

தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்தத்
தண்ணீர் குறிப்பிட்ட காலகட்டங்களில் நமக்குக் கிடைக்
காமல் போய்விடுகிறது. பெருவாரியாகக் கன்னியாகுமரி
மாவட்டத்தில் பாதிப்பகுதியில் விவசாயம் செய்ய
முடியாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே
மற்ற பகுதிகளில் நாம் எவ்வளவு தீவிர அக்கறை காட்டி
தண்ணீரைப் பெற வேண்டுமென்று முயற்சி எடுக்கிறோமோ
அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலும், அந்த
கேரளாவிலிருந்து பெறவேண்டிய தண்ணீரை உடனடியாகப்
பெற்று அந்தப் பகுதியில் உங்களுடைய ஆட்சியில் விவசாயம்
சரிவர நடைபெற ஏற்பாடுகளைச் செய்து தர இந்த அரசு
முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கேரளா பகுதியிலே
இருக்கின்ற கால்வாயையும், நம்முடைய தமிழகத்தினுடைய
பகுதியிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற கால்
வாயையும் சீரமைப்பதற்காக தேசிய நீர் மேலாண்மைத்
திட்டம் அதாவது 'நேஷனல் வாட்டர் டெவலப்மென்ட்
ஏஜென்சி' சார்பாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, ஏறத்
தாழ 155 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்
பட்டு அது மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக
இன்றைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே இது இரண்டு
மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினையாக இருக்
கின்ற காரணத்தால் அந்த தேசிய நீர் மேலாண்மைத்
திட்டத்தின் கீழ் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்
துவது சரி என்று தமிழ்நாடு அரசு கருதுகின்றது. ஆகவே அதற்
கான முயற்சிகளைப் பொறுத்தவரையில் மத்திய அரசி
னுடைய ஒப்புதல் பெற்றவுடன் கேரள மாநிலத்திலும்
நம்முடைய பகுதியிலே இருக்கின்ற அந்தக் கால்வாயை
சீரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தர
தாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் முழுக்க, முழுக்க
என்னுடைய தொகுதியில் போகிற கால்வாய். எனவே
வருத்தத்தோடு சொல்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு
தவறான ஒரு தகவலை அதிகாரிகள் கொடுத்து இருக்கி
றார்கள். கேரள மாநிலத்தில் இருக்கின்ற சேனல் தெளி
வாக நன்றாக இருக்கிறது. ஆனால் நம்முடைய சேனல்
களில் சில்ட் எடுப்பதில்லை. மிகமிக மோசமாக



இருக்கிறது. 150 கன அடியிலே 50 கன அடி கூட கொண்டு
வர முடியவில்லை. நானே நேரடியாக பல தடவை அந்த
அமைச்சரை. கேரளாவிற்குப் பக்கத்தில் இருக்கின்ற
காரணத்தால், சந்தித்துப் பேசி இருக்கிறேன். அவர்கள்
சொல்வது உங்களுடைய சேனல்களை செப்பனிடுங்கள் ;
உங்கள் சேனல் சரியாக இல்லை ; எங்கள் சேனலைப்
பாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் நிச்சய
மாகச் சொல்கிறேன். அதிகாரிகளிடம் கேட்டால் எங்களுக்கு
பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்லி எந்தவித
மான வேலையும் நடைபெறவில்லை என்பதை
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே உங்கள்
மூலமாகக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக
நம்முடைய பகுதியில் இருக்கின்ற சேனலைச் செப்பனிட
வேண்டும். எப்போது கேட்டாலும் மத்திய அரசினுடைய
திட்டம் வருகிறது என்று சொல்லி நான்கைந்து ஆண்டு
களைக் கடத்திவிட்டார்கள். அந்த அதிகாரிகள் யாரும்
வந்து பார்ப்பதில்லை என்பதை நான் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். மேலும் அதிகாரிகள் நம்முடைய மாண்பு
மிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு தவறான கருத்தைக்
கொடுத்திருக்கிறார்கள் என்பதை உங்கள் மூலமாகச்
சொல்லிக்கொண்டு, உடனடியாக, மத்திய அரசினுடைய
பணம் வருவதற்கு முன்னால் நமக்கிருக்கிற நிதியை
வைத்தாவது அங்கே நம்முடைய பகுதியில், தமிழகத்தில்
கன்னியாகுமரியில், ஓடுகிற இடதுகரைச் சேனலைச் செப்ப
னிட அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுந்தரதாஸ் அவர்கள் இது அவர்களுடைய தொகுதிப்
பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு பிரச்
சினைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்
களுடைய தொகுதிப் பிரச்சினை என்பதைக் காட்டிலும்
நாட்டினுடைய பிரச்சினை என்பதில் இந்த அரசு
மேலும் கவனத்தோடு இருக்கிறது என்பதை
நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு
இருக்கிறேன். நம்முடைய பகுதியில் இருக்கிற கால்வாய்
களைச் சீரமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள். கால்வாய்கள்
என்று வருகிற நேரத்தில் ஒரு தடவைச் செப்பனிட்டால்
கூட மறு ஆண்டு தண்ணீர் வருகிற நேரத்தில் அதாவது
மறுபடியும் இரண்டு ஆண்டுகளோ, மூன்று ஆண்டுகளோ
கழித்து மறுபடியும் செப்பனிட்டால்தான் அங்கே நாம்
நினைக்கிற அளவுக்குத் தண்ணீரை அதாவது குறியீடு
அளவுக்குக் கொண்டு செல்ல முடியும். ஆகவே கால்வாய்ப்
பணி என்பது அவ்வப்போது செப்பனிடப்படவேண்டிய

வேலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே ஏறத்தாழ 89 கன அடி தண்ணீர் இப்போது வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே கால்வாய் சரியில்லை என்று சொல்வது அவ்வளவு நல்ல தல்ல. அவரும் தவறான தகவலைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கால்வாய் சீரமைக்கப்படவேண்டும் என்ற அவருடைய கோரிக்கை நியாயம். கால்வாய் சரியில்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கிற ஒரு திட்டம் என்கிற நேரத்தில் அந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு அதிகப்படியான நிதி பெற்று அதைச் செயல்படுத்தினால்தான் நிரந்தரமாக இருக்க முடியும் என்ற காரணத்தால் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அந்தத் திட்டத்தை எடுத்துச் செய்ய இன்றைக்கு ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் திட்ட மதிப்பீடு தயாரித்து மத்திய அரசினுடைய ஒப்ட தலுக்காகக் கொடுத்திருக்கிறோம். ஆனால் மத்திய அரசின் ஒப்புதல் வருவதற்கு முன்னாலேயே இதைச் செய்ய வேண்டு மென்று கேட்டார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனே நானே நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்த்து யார் சொல்வதில் உண்மை இருக்கிறது என்பதைத் தெரிந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 155. திரு. ச. காந்திராஜன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

155

அழகாபுரி அணைக்கட்டிலிருந்து பாசனத்திற்கு புதிய கால்வாய் வெட்டுதல்.

*277. திரு. ச. காந்திராஜன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தொகுதி, அழகாபுரி அணைக்கட்டி லிருந்து வேடசந்தூரின் மேற்கு மற்றும் கிழக்குப்பகுதி பாசனத்திற்கு புதியதாக கால்வாய்கள் வெட்டி தண்ணீர் விட ஏற்பாடு செய்யப்படுமா ?



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதியதாக கால்வாய் வெட்டி தண்ணீர் வழங்க சாத்திய கூறுகள் இல்லை.

முற்பகல் 10.15

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு அணைக்கட்டு என்பது வேடசந்தூர் பகுதியிலே பக்கத்திலே 10 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது. இது கொடைக்கானல் மலையிலே அந்த கிழக்குப் பகுதியிலே பெய்கின்ற மழை யின் மூலம் மாங்கரையாறு என்ற ஆற்றின் மூலமாகவும், சிறுமலையில் இருந்து பெய்து வருகின்ற சந்தனவர்த்தினி ஆறு என்ற ஆற்றின் மூலமாகவும் கிடைக்கக்கூடிய தண்ணீர் 1,250 ஏக்கர் நிலத்திலே, அங்கே பரப்பளவிலே நிற்கிறது. அந்தத் தண்ணீர் இப்போது வலதுபுற வாய்க்கால் மூலமாக 54 கிலோ மீட்டர் தொலைவிற்கு, ஏறத்தாழ திருச்சி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. எனவே வேடசந்தூர் என்பது வறட்சி மிக்க பகுதி. மிகவும் குறைவான பலன் அடைகின்ற பகுதியாக இருப்பதால் இந்த வலதுபுற கிழக்குப் பக்க வாய்க்காலை வெட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு கூட்டுமானத் திட்டம் ஏறத்தாழ 9 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலே இன்றைக்கு திட்டமிடப்பட்டு ஏறத்தாழ 12 மில்லியன் கன மீட்டர் ஆக அதனுடைய கொள்ளளவு நிர்ணயிக்கப்பட்டு 1,307 எக்டேர் பாசன வசதிக்கு புஞ்சை நிலங்களுக்கும், நஞ்சை நிலங்களுக்கு 446 எக்டேருக்கு மேலும் இன்றைக்கு பாசன வசதி செய்துகொண்டு இருக் கிறோம். ஆகவே இருக்கின்ற கொள்ளளவு பார்த்துதான் அடுத்த பாசன அமைப்பை நீட்டிக்கமுடியும். ஆகவே தற்போது வருகின்ற அந்த கொள்ளளவு ஏற்கெனவே இருக் கின்ற பாசனத்திற்கு போதும் என்ற அளவிலே இருக்கின்ற காரணத்தினால் அதிகமான பாசன வசதி செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய கொள்ளளவு அதிக அளவிலே இல்லை என்று சொன்னாலும்கூட 1977-லேகூட குடகனாறு அணையில் அதிகமான வெள்ளம் வந்து உடைந்து விட்ட காரணத்தினாலேயே இப்படி அடிக்கடி அந்த கொடைக் கானல் மலையினுடைய கிழக்குப் பகுதியிலே அதிகமான மழை பெய்கின்ற காரணத்தினாலே தண்ணீர் வருவதற்கு

வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து இந்த வறட்சி மிக்க பகுதிக்கு எப்படியாவது இப்போது மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது பாலைவனமாக இருக்கின்ற வேடசந்தூர் தொகுதி ஒரு சோலைவனமாக மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை வைத்துக் கொள்வதோடு அதை இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு நீர்த்தேக்கத்தைப் பொறுத்தவரையில் வருகின்ற நீரை கணக்கீடு செய்து இன்றைக்கு அந்த வரவு அளவுக்கு அந்த அணையினுடைய கொள்ளளவு இருக்கிறது. இருந்தாலும் வருகின்ற கால கட்டங்களிலே இருக்கின்ற நிலைமைகளைக் கண்காணித்து இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கவனத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு அணையானது ஆத்தூர் தொகுதி மலையிலே உற்பத்தியாகி வருகிறது. 30 நாட்களுக்கு முன்பு நானே நேரிலே சென்று, 4 கிலோ மீட்டர் தூரம்நடந்து சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அந்தத் தண்ணீர் மேலேயிருந்து அதிகப்படியான மழை பெய்து வருகிறதுபோது, ஸ்கேட்டர்ட் ஆக பிரிந்து பல இடங்களிலே நிலத்திலே விழுந்து, அது மணல் அடிக்கக்கூடிய நிலைமையில், கிணறுகள் மூடப்படும் நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே எங்கே உற்பத்தியாகின்றதோ அங்கேயே ஒரு அணையைக் கட்டி இந்தத் தண்ணீர் வீணாக இந்த ஏந்தல் கண்மாயிலே பாய்ந்து மறுபடியும் மீண்டும் வைகையிலே விழக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால்—வேடசந்தூர் பகுதி, ஆத்தூர், நிலக்கோட்டை பகுதியிலே தடுத்து தண்ணீர் கிடைப்பதற்கான ஒரு நிலைமை ஏற்படுவதற்கான வழிவகை செய்யமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற குடகனாறு திட்டத்தின் கீழ் இந்தக் கால்வாயை புதிதாக வெட்டி பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கு இந்தக் கேள்வி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் ஒரு





புதிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே வருகின்ற தண்ணீரை வீணாக்காமல் புதிய முயற்சியாக ஏதாவது பாசனத்தை மேம்படுத்த முடியுமா என்ற பிரச்சினையை இங்கே வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு சாத்தியம் இருப்பின் நிச்சயமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 156. செல்வி கோ. மல்லிகா , மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

156—

புவனகிரித் தொகுதிக்கு நெய்வேலி சுரங்க நீர்.

*306—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெய்வேலி 2-வது சுரங்கத்தின் உபரி நீரை புவனகிரி தொகுதி மக்களுக்காக குடிநீராகவும், பாசன நீராகவும் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தினுடைய உபரி நீர் ஏற்கெனவே பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) 1987-ஆம் ஆண்டு ஜூலை முதல் விருத்தாச்சலம் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் உள்ள ஏரிகள் மூலம் 6,590 ஏக்கர்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

ஆகவே புதிதாக வேறு திட்டங்கள் செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கி வரும் கங்கைபோல் வற்றாமல் நீரை வெளியேற்றிக்கொண்டிருக்கிறோம். நெய்வேலி சுரங்கப் பகுதிகளில் உள்ள பல்வேறு ஊர்களுக்கு குடிநீராக பயன்படுத்தப்படலாம். வறட்சியில் வாடும் புவனகிரிப் பகுதிக்கு வராததால் அதை அந்த பகுதிக்குத் திருப்பிவிடும் முயற்சி குறித்து நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு மறு ஆய்வு செய்யுமா ?

[1991 அக்டோபர் 4

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்றாவது சுரங்கம் வெட்டுகின்ற பணி வருகின்ற நேரத்தில், ஏற்கனவே அந்தக் கால்வாயிலே விழுகின்ற தண்ணீரை, அந்தக் கால்வாய் பகுதியிலே அந்தச் சுரங்கம் வருகின்ற காரணத்தினாலே, சுரங்க அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு சாத்தியக் கூறுகள் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே சேத்தியாதோப்பு அணைக்கட்டு மற்றும் பல பகுதிகளுக்கு இந்த உபரி நீர் செல்கின்ற காரணத்தினால் ஏற்கனவே இருக்கின்ற பாசனப் பகுதிகளை நாம் நடைமுறைக்கு இன்றைக்கு வைத்துக் கொண்டால் போதும் என்கின்ற நிலை இருக்கிறது. மூன்றாவது சுரங்கம் வருகின்ற நேரத்தில் இந்தக் கால் வாயினுடைய கொள்ளளவும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே புதிதாக இந்தக் கால்வாயை விரிவுபடுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 157. திரு. இரா. நடேசன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

157—

திருவட்டாறில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு.

*434 திரு. இரா. நடேசன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, கிராம குடிநீர்த் திட்டங்களில் பொது விநியோக இணைப்புகளுக்கு வழங்கியதுபோக, எஞ்சிய குடிநீரை வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் தற்போதைய கொள்கையின்படி கிராமக் குடிநீர்த் திட்டங்களிலிருந்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1991 அக்டோபர் 4]

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு தொகுதியிலே குலசேகரம் அருவிக்கரை போன்ற பஞ்சாயத்துக்களில் கூடுதலாக உபரி நீர் இருக்கிறது. அந்த நீரை வீடுகளுக்கு விநியோகம் செய்ய அனுமதி கேட்டபோது, கலெக்டர் அனுமதித்த போதும்கூட, அங்குள்ள செயல் பொறியாளர் அனுமதி அளிக்காமல் இருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அங்கே கூடுதலாக இருக்கின்ற தண்ணீரை விநியோகிக்கலாம் என்ற உத்தரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நீர் ஆதாரங்கள் கிடைப்பதே அரிதான நிலையில் இருக்கிறது. பல்வேறு சமயங்களில் பருவமழை பொய்க்கின்ற காரணத்தினால் அந்த நீர் ஆதாரங்களிலிருந்து கொடுக்கின்ற திறன் தமிழ்நாட்டில் குறைந்துகொண்டே வருகின்றது. அந்த அடிப்படையிலே இந்தத் திட்டங்களிலிருந்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் பேரூராட்சியில் கூடுதலாக தண்ணீர் இருக்கிறது. உண்மையிலேயே பக்கத்து பேரூராட்சிக்குக் கூட நாங்கள் எங்களது கிணறுகளிலிருந்து அங்கே கொடுப்பதற்கு சம்மதம் சொல்லி திற்பரப்பு பேரூராட்சிக்கு தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் தண்ணீர் மீதம் இருக்கிறது. அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆகையால் அந்த குலசேகரம் பேரூராட்சியிலாவது வீடுகளுக்கு இணைப்பு கொடுக்க அனுமதிப்பீர்களா ? அனுமதி கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 158. திரு. வ. மு. சுப்பிரமணியன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[1991 அக்டோபர் 4

158—

வீடு கட்டக் கொடுக்கப்படும் தொகையை உயர்த்துதல்.

*1475 திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாலுகா கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் வீடு கட்டக் கொடுக்கப்படும் ரூ. 6,000-ஐ உயர்த்தி ரூ. 10,000 ஆகக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
தாலுகா கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் வீடு கட்டக் கொடுக்கப்பட்டு வந்த கடன் தொகை ரூ. 6,000-ஐ தற்போது ரூ. 8,500-ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதை மேலும் ரூ. 10,000-ஆக உயர்த்த உத்தேசம் ஏதுமில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டட சாமான்கள் விலை ஆண்டு தோறும் ஏறிக் கொண்டிருக்கின்றன. ஆகையினால் ஒவ்வொரு ஆண்டும் கடன் தொகையை உயர்த்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கடன் தொகை 6 ஆயிரம் ரூபாயாக இருந்தது தற்போது 8,500 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தக் கடன்களை, திருப்பி செலுத்துகின்ற கடன் தொகை குறைந்துகொண்டே வருகிறது. அதை ஆய்வு செய்ததில் கடன் வசூலில் போதுமான முன்னேற்றம் இல்லாததை கருத்தில் கொண்டு கடன் வசூலை தீவிரப்படுத்த அரசு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதை உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் கொடுக்கப்படுகின்ற கடன் நபர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக வருடாந்திரத்திற்கு சுமார் 30 ஆயிரம் வீடுகள் அளவுக்கு கடன் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த கடன் தொகைகள் அரசின் மானியத்தின் மூலமும், ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்ற தொகையை வைத்தும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தற்போது இருக்கின்ற நிலையே போதுமென்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 159. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

முற்பகல் 10-25

159—

சேலம் மாவட்டத்தில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை.

*3355—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சராசரியாக பெய்யவேண்டிய மழையளவு சேலம் மாவட்டத்தில் குறைந்ததன் காரணமாக ஆழ்துளைக் கிணறுகளும் வறண்டு சேலம் மாவட்டம் முழுவதும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சராசரியாகப் பெய்ய வேண்டிய மழை அளவு குறைந்துவிட்டது. இந்த ஆண்டு மட்டுமல்ல, தொடர்ந்து 4, 5 ஆண்டுகளாகவே மழை அளவு குறைந்துவிட்டது. என்பதால் நிலத்தடி நீர் அதிகமாக வறண்டு கிடக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நிலத்தடி

நீர் வறண்டு போயுள்ள சேலம் போன்ற மாவட்டங்களையும், ஆழ் குழாய்க் கிணறுகளில் அதிகமாகத் தண்ணீர் உள்ள மற்ற மாவட்டங்களையும், எவ்வாறு வித்தியாசப்படுத்தி, சேலம் மாவட்டத்தின் நீர்ப் பிரச்சினையைப் போக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சராசரி மழை அளவைவிட இந்த ஆண்டு குறைந்திருக்கிறது என்பது உண்மை. இதனால் நிலத்தடி நீர் மட்டம் கடந்த ஆண்டு 31 மீட்டர் ஆழத்திலிருந்து 33 மீட்டராகத் தாழ்ந்திருக்கிறது. அதைக் கருத்திற்கொண்டு கடும் குடிநீர்ப் பஞ்சம் நிலவி வருகின்ற காரணத்தால், அதை மாற்றுவதற்கு, மற்ற மாவட்டங்களைக் காட்டிலும், ஆகஸ்ட் மாதம் முடிய இந்த மாவட்டத்திற்கு மட்டும் குடிநீர்ப் பஞ்சத்தைச் சமாளிக்க மொத்தம் 230 லட்சத்து 50 ஆயிரம் அந்தப் பணிகளுக்காக வழங்கி இருக்கிறது.

மேலும் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டுக்கு மட்டும் 543 இலட்சத்து 60 ஆயிரம், சுமார் 626 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது. இவற்றில் சுமார் 300 குடியிருப்புகளுக்குப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. இதுவரையில் மட்டும் சுமார் 430 இலட்சம் ரூபாய் இதற் காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே குடிநீர் வசதியற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாக ஓரளவு குடிநீராவது ஏற்படுத்த வேண்டுமென்று உத்தர விடப்பட்டு, அதன் அடிப்படையிலே சுமார் 126 ஆதி திராவிடர்கள் வசிக்கின்ற குடியிருப்புகளுக்கும், 33-க்கும் மேற்பட்ட பழங்குடியினர் வசிக்கின்ற குடியிருப்புகளுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதில் கிட்டத்தட்ட 85 சதவிகிதம் பணிகள் முடிவு அடைந்துவிட்டன. ஆகவே தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துப்படி குடிநீர்ப் பஞ்சம் இந்த மாவட்டத்தில் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 160, திரு. ஏ. டி. செல்லச்சாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.





160—

### ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்பு கட்ட நிலம் கையகப்படுத்துதல்.

*164—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்தைச் சார்ந்த ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி, எடையகோட்டை, கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு கட்டாயமாக நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

(அ) பழனி வட்டத்தைச் சார்ந்த ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிரவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு கட்டாயமாக நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. சத்திரப் பட்டி, எடையக்கோட்டை, கள்ளிமந்தையம் ஆகிய ஊர் களில் அத்தகைய செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) அதன் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| கிராமத்தின் பெயர். | நிலமெடுப்பு விவரம். | தற்போதைய நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. ஒட்டன் சத்திரம். | ஒட்டன்சத்திரம் கிராமம் சர்வே எண். பி13/1பி 14/1 பில் 96 பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க 5.68 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற், கொள்ளப்பட்டது. | சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீட்டு மனு எண். 3694/83-ல் நில உரிமையாளர் வழக்குத் தொடுத் துள்ளார். வழக்கு முடிவுறவில்லை. |

| கிராமத்தின் பெயர். (1) | நிலமெடுப்பு விவரம். (2) | தற்போதைய நிலை. (3) |
|---|---|---|
| | ஒட்டன்சத்திரம் கிராமம் உட்கடை சண்முகவேல்புரம் ஆதிதிராவிடர்களுக்கு மயானம் அமைக்க மேற்படி கிராமம் சர்வே எண். 515/3-ல் 0.10.0 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. | 4(1) பிரேரணை அரசிற்கு அனுப்பப் பட்டுள்ளது. தனி வட்டாட்சியரின் குறை நிவர்த்தி அறிக்கை அனுப்பப் பட வேண்டியுள் யுள்ளது. |
| 2. தொப்பம் பட்டி. | தொப்பம்பட்டி கிராமம் சர்வே எண். 82/2பி-ல் 14 ஆதிதிராவிடர் களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க 0.85 ஏக்கர் நிலம் கையகப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. | சென்னை உயர்நீதி மன்றத்தின் மேல் முறையீட்டு மனு எண்கள் 676/81, 685/81, 2439/81 மற்றும் 2440/81 ஆகியவற்றில் நில உரிமையாளர்கள் வழக்கு தொடுத் துள்ளனர். வழக்கு முடிவுறவில்லை. |

திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி ஒட்டன் சத்திரம் சத்திரப்பட்டி, கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி மற்றும் பல கிராமங்களில் ஆதிதிராவிட மக்களின் குடியிருப்புகளுக்கு, அது சம்பந்தப்பட்ட நிலங்களை கையகப்படுத்தும்போது, அந்த நிலத்தின் உரிமையாளர்கள் கோர்ட்டுக்குப்போய் இன் ஜெங்ஷன் வாங்கிவிடுகிறார்கள். அதனால் ஏழை அரிஜனங்கள் வீடு கட்ட முடியாத நிலை ஏற்பட்டு, பல வருடங்கள் ஆகி விடுகின்றன. நிலத்தை எடுக்கும்போது அதிகாரிகள், நிலத்தின் உரிமையாளர்களிடம் கலந்து பேசி, கோர்ட்டுக்கு போகாதவாறு வகை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் 1949 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்



பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் புறம்போக்கு நிலங்கள் கிடைக்காதபோது பட்டா நிலங்கள் கையகப்படுத்தப் பட்டு குடும்பம் ஒன்றுக்கு 3 சென்ட் நிலம் வீட்டு மனைப் பட்டாவாக வழங்கப்படுகிறது. தனியார் நிலங்களைக் கையகப் படுத்தும்போது பின்வரும் முக்கிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன:—

(1) உயர் மின் அழுத்த மின் கம்பிகள் செல்லும் நிலங் களைக் கையகப்படுத்தக்கூடாது.

(2) சிறு விவசாயிகள் நிலங்களைக் கையகப்படுத் துவதைத் தவிர்க்க வேண்டும்.

(3) தாழ்வான பகுதிகளில் உள்ள நிலங்களை தவிர்க்க வேண்டும்.

(4) கையகப்படுத்தும் நிலங்களில் குடியேற பயனாளிகள் சம்மதிக்க வேண்டும்.

(5) ஆதி திராவிடர்களின் நிலங்கள் கையகப்படுத்துவதி லிருந்து தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத பட்சத்தில் அவர்கள் சம்மதத்தை எழுத்தில் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், பழனி வட்டம், ஒட்டன் சத்திரம் கிராமம் சர்வே எண் பி. 13/1பி மற்றும் 14/1பி-ல் 96 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க 5.68 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (மணி அடிக்கப்பெற்றது)

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனு மதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : கொப்பம்பட்டி கிராமம் சர்வே எண் 82/2-பி-யில் 14 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க 0.05 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நில உரிமையாளர் கள் அதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்ததையடுத்து, இறுதி ஆணை பெறப்படாமையால் வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அது எல்லாம் நீங்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையிலேயே இருக்கிறது. விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

[1991 அக்டோபர் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 161. திரு. ஆர். ஈஸ்வரன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

161—

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*1031 திரு. ஆர். ஈஸ்வரன் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் ழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிட மக்களுககு வீட்டு மனைப்பட்டா வழங்க லம் கைடகப்படுத்தும்போது நில உரிமையாளர்கள் நீதி ன்றம் செல்வதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை டுெக் மா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே,

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக லத்னத கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்கள் தி மன்றம் செல்வதை அரசு தடை செய்ய இயலாது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா ழங்க நிலம் கையகப்படுத்தும்போது அந்த நிலத்தின் ரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் செல்வதால் பல ஆண்டுகள் கால ாமதமாகின்றது. அதை மாற்றுவதற்கு அரசு துரித டவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே, நிலுவையிலுள்ள வழக்குகளை ரசுத் தரப்பு வக்கீல் மூலம் விரைவு படுத்த டவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 162. ாக்டர் எஸ். சுந்தரராஜ் - மாண்புமிகு ஆதி திராவிடர் லத் துறை அமைச்சர்

2—

ஆதிதிராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல்.

*1723 டாக்டர் எஸ் சுந்தரராஜ் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் ழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அரசு கட்டிய ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பழுது ர்க்க அரசு நிதியுதவி அளிக்குமா?



1991 அக்டோபர் 4]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு கட்டிய ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு நிதியுதவி அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ஆதி திராவிட மக்களுக்கு நீண்ட நாள் பலனளிக்கக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு கட்டப்படும் வீடுகள் கட்டிமுடித்த வுடனேயே அல்லது குடிபுகுவதற்கு முன்பே விரிசல் ஏற்பட்டு உடைந்து விடுகின்றன. அப்படி பழுதடையும் வீடுகளை அவர்கள் பழுது பார்ப்பதற்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் அந்த வீடுகளை ரிப்பேர் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று ஆதி திதிராவிட மக்கள் எண்ணுகிறார்கள். ஆகவே, அந்த ஆதி திராவிட மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிற அரசாக விளங்குவதால், அரசு மீண்டும் அந்தக் கோரிக்கையின் மீது பரிசீலனை செய்ய நிதி உதவி அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டும்போதே, அவர்கள் சம்மதத்தின் பேரில்,—அதாவது அவர்களே ரிப்பேர்களையும் செய்து கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மேலும் நாம் ரிப்பேரை செய்துகொண்டே போனால் புதிதாக வீடுகட்டும் திட்டம் செயல்படுத்துவது கடினமாகும். எனவே நிதி நிலையை கருத்தில் கொண்டு பழுது பார்க்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.கழக ஆட்சியின் போது முதல்வராக இருந்த கருணாநிதி அவர்கள் ரத யாத்திரை வந்தபோது கட்டப்படாத அரைகுறை நிலையிலேயே இருந்த பல வீடுகள் திறக்கப்பட்டு விட்டன. அவைகளையெல்லாம் முழுமையாகக் கட்டித் தருவதற்கு அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்த விட்டுப்போன வீடுகளை கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா. எண் 4. திரு. கே. சிங்காரம். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

4—

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்.

*4840 திரு. கே. சிங்காரம் :

மாண்புமிகு வீட்டு வசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தர்மபுரி மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகப் தீர்க்க ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசால் இத்திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் திட்டப் பணிகள் துவங்கப்படும்.

திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம். சராசரி மழை அளவு குறைந்து கொண்டே வருகிற ஒரு மாவட்டம். இத்திட்டத்திற்காக ஒரு டிவிஷன் ஆரம்பிக்கப்பட்டு பணிகளும் முடிவுறும் நிலையில் உள்ளன. சுமார் 27 லட்சம் மக்கள் வாழ்கிற தர்மபுரி மாவட்டம் வருடாவருடம் குடிநீர்ப் பற்றாக்குறையால் அவதிப்படுகிறது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்க ஒரு தொலை நோக்குப் பார்வையோடு இத்திட்டத்தை விரைவாக நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனி வெங்கடப்பன்.



திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மதிப்பீடு செய்யும் போது இரும்பு கேஸ்டிங் பைப் போடப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பைப்பைப் போட்டால் இந்தத் திட்டத்தை இன்னும் மிகக் குறைந்த மதிப்பீட்டிலே செய்ய முடியும் என்பதை அரசு அறியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், 1985—86 ஆம் ஆண்டிலே சுமார் ரூ. 100 கோடிக்கு இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய விலைப் பட்டியலின்படி இத்திட்ட மதிப்பீட்டின் தொகை சுமார் ரூ. 400 கோடியிலிருந்து ரூ. 450 கோடி வரை ஆகலாம் என்று கருதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1985 ஆம் ஆண்டு தயார் செய்து பரிந்துரைக்கு அனுப்பியதில் நீர் அழுத்த ஏற்றம், காடுகள் அழிப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் ஒகேனக்கல்லில் ஓடுகிற காவிரி ஆற்று நீரின் பாதி கர்நாடக எல்லையாகவும், மீதி ஆற்று நீர் தமிழக எல்லையாகவும் இருக்கிற காரணத்தால் இத்திட்டத்திற்கு அதிகம் செலவு ஆகிறது என்று சொல்லி, ஆகவே அதற்கு மாற்றுத் திட்டமாக 20 கி.மீ. தொலைவில் உள்ள நாகமலை-பெண்ணாகரம் கூட்டுக் குடிநீர்த்திட்டம் என்ற புதிய கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை ஆய்வு செய்தால் ரூ. 400 கோடி என்பதற்குப் பதிலாக ரூ. 200 கோடியிலேயே முடித்துவிடலாம். அதனால் 30 கி.மீ. தூரத்திலுள்ள 40 கிராமங்கள் பயனடையும். ஆகவே அந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் நேரம் முடிவுற்றது.

[1991 அக்டோபர் 4

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1.—

முல்லையாற்றின் குறுக்கே அணை.

வினா எண். 18—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டம் என்னுமிடத்தில் அணைக்கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டத்தில் முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டத்தில் அணை கட்டும் செயற்குறிப்பை பரிசீலனை செய்ததில், இத்திட்டத்திற்கு அதிக மதிப்பீட்டு செலவில் குறைந்த பயன் செலவு விகிதமே இருப்பதால் இத்திட்டம் 1—11—1990 நாளிட்ட அரசு கடித (நிலை) எண். 2308-ல் கைவிடப்பட்டது.

2—

வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள்.

வினா எண். 73—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராதாபுரம் தொகுதிக்கான வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

3—

பச்சையாறு அணைத் திட்டம்.

வினா எண். 76—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:



1991 அக்டோபர் 4]

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் பச்சையாறு அணைத் திட்டத்தின் இன்றைய நிலை என்ன?

விடை—

இத்திட்டத்திற்குத் தேவையான வன நிலத்திற்கு அனுமதி பெறுவதற்காக, மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள தேவையான விவரங்கள், தலைமை வன அலுவலர் அவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. விவரங்கள் கிடைத்ததும் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்படும்.

4—

குளங்கள், கால்வாய்களை தூர் எடுத்தல்.

வினா எண். 85—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதியில், சிற்றாறு பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றை தூர் எடுக்க உலக வங்கி உதவி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விக்கு இடமில்லை.

5—

புதிய ஆரம்பப் பள்ளி ஏற்படுத்துதல்.

வினா எண். 240—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதிக்குட்பட்ட கீழ்வாணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இந்திரா நகரிலும், குப்பாண்டம்பாளையத்தைச் சேர்ந்த நஞ்சுண்டாபுரம் பெருமாள் கோவில் புதூரிலும் (கை காட்டி என்ற இடத்திலும்) புதிய ஆரம்பப் பள்ளி திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): இது குறித்து கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுதல்.

வினா எண். 249—திரு. மு. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாகப்பட்டிணம்—கூடலூர் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

நாகை—தஞ்சை—திருச்சி—கூடலூர் வரை உள்ள தற்போதைய மாநில சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்த வேண்டும் என மைய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் வந்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம்.

வினா எண். 267—திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் இயங்க புதிய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் அரசு கட்டிடத்தில் தற்போது இயங்கி வருவதாகவும், இடவசதி போதுமானதாகவும் இல்லாததால் அலுவலகத்திற்கு புதிய இடம் உசிலம்பட்டி கிராம புல எண் 477/1ஏ-ல் நிலம் தேர்வு செய்யப்பட உள்ளது என்றும், இந்த நிலம் உசிலம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி கட்டுப்பாட்டில் உள்ளதால் நில மாற்றம் தொடர்பாக மதுரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கருத்தினைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

ஆதி திராவிடர் தெருவிற்கு மின் இணைப்பு.

வினா எண். 363—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம் ராசாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு மின்சார இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம் ராசாமடம் ஆதி திராவிடர் தெருவிற்கு மின்விளக்குகள் ஏற்கெனவே உள்ளன.

9—

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண் 419—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வாணியம்பாடி தொகுதி வெள்ளக்குட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

10—

கால்நடை மருத்துவமனை நிறுவுதல்

வினா எண். 463—டாக்டர் ச. சுந்தரராஜ்; மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவப்படுமா?

விடை—

நடப்பு ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவ தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

மின்கட்டணம் வசூலிக்கும் முறையை மாற்றுதல்

வினா எண். 439—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வீடுகளில் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணம் வசூலிக்கும் முறையை மாற்றி மாதம் ஒரு முறை வசூலிக்க நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

12—

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 485—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

13—

வினா எண். 487—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

14—

ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குதல்.

வினா எண். 586—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், புதுக்கோட்டை உளூர் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

15—

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண். 606—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

ஆதிதிராவிடர் நலத்துறை துவக்கப் பள்ளி.

வினா எண். 627—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் ஊராட்சியைச் சேர்ந்த வாடிக்காட்டில் ஆதிதிராவிடர் நலத்துறை துவக்கப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

17—

வினா எண். 628—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசலில் ஆதிதிராவிடர் நலத்துறை துவக்கப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

18—

அரசு உறைவிடப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம்.

வினா எண். 636—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் காக்காயனூர் பாரஸ்ட் செட்டில்மெண்ட்டிலும் குட்டையூரிலும் தொடங்கப்பட்டுள்ள அரசு உறைவிடப் பள்ளிகளுக்கு நிரந்தரக்கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிட வேலை தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

19—

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி.

வினா எண். 744.—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார்கோவில், ஸ்ரீநிவாசபெருமாள் கோவிலுக்கு உட்பட்ட ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி தரும் திட்டத்தில் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

20—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் படுக்கை வசதி.

வினா எண். 748—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலயத்தை படுக்கை வசதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

சின்னசேலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அதிக படுக்கை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் பற்றி தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

21—

ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள்.

வினா எண். 768—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடவாசல் வட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள கடம்பங்குடி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு கட்டி வழங்கப்பட்ட ஓட்டு வீடுகள் இடிந்து குடியிருக்க முடியாமல் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

(அ) அரசு ஆணையின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகள் தாங்களாகவே சொந்த செலவில் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கும்போதே தெளிவுபட எடுத்துக்கூறப்பட்டு உடன்பாட்டுப் பத்திரத்தில் அவர்களின் இசைவும் பெறப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

கண்டிரா தீர்த்தம் கிராம ஏரியினை தூர் எடுத்தல்

வினா எண். 830—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியத்திலுள்ள கண்டிரா தீர்த்தம் கிராம ஏரியினை தூர் எடுத்து பாசன நிலங்களை வளமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியத்திலுள்ள கண்டிரா தீர்த்தம் கிராமத்திலுள்ள, கண்டிராத் தீர்த்தம் ஏரியிலுள்ள தூர்களை முழுமையாக அகற்றும் திட்டம் ஏதும் தற்போது இல்லை. வருடாந்திர பராமரிப்பின் கீழ் கண்டிரா தீர்த்தம் ஏரியில் தூர் அதிகமாக உள்ள பகுதிகளில் மண் தள்ளும் இயந்திரம் மூலம் அகற்ற ரூ. 68,000-க்கு மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இதனால் தூர்கள் அகற்றப்படுவதோடு ஏரியின் கரைகளும் பலப்படுத்தப்படும்.

23—

மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி

வினா எண். 968—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள், கட்டிட வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்ட நிதி கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கட்டிடங்கள்

24—

வினா எண். 969—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி பெண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு தளவாட சாமான்கள்—கட்டிட வசதிசெய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை; எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

25—

உயர்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்குதல்

வினா எண். 970—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் உயர்நிலைப் பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

26—

உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட வசதி

வினா எண். 973—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பைங்கால் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி, தளவாட சாமான்கள் வழங்க, ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

வினா எண். 975—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதிக்கரம்பை உயர்நிலைப் பள்ளிக் கட்டிட வசதி; தளவாட சாமான்கள் வழங்கவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கை இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும் ஆசிரியர் பற்றாகுறையைப் போக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

28—

வினா எண். 977—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி தளவாட சாமான்கள் வழங்கவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந் நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1991 அக்டோபர் 4

29—

மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி

வினா எண். 979—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி, தளவாட சாமான்கள் வழங்க, ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை-இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

வினா எண். 980—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி, தளவாட சாமான்கள், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும், ஆசிரியர் பற்றாகுறையைப் போக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

31—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடவசதி

வினா எண். 981—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், [illegible] உயர்நிலைப்பள்ளிக்கு தளவாட சாமான்கள், கட்டிட வசதி, ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1991 அக்டோபர் 4]

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

32—

மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி

வினா எண். 983— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் மேல்நிலைப்பள்ளிக்கு தளவாட சாமான்கள், கட்டிட வசதி, ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை-இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதிநிலைமைக்கு ஏற்ப கட்டிடங்கள் கட்டவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

33—

பச்சையாறு அணைக்கட்டுத் திட்டம்

வினா எண். 1050 — திரு. டி. வேலையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், நாங்குநேரி வட்டம், களக்காடு பகுதியில் உள்ள பச்சையாறு அணைக்கட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)

அணைக்கட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க வேலையாக வன நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

34—

கலிங்கப்பட்டிக்கு சாலை வசதி

வினா எண். 1152 — திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள ராமனூர், கலிங்கப்பட்டி கிராமத்திற்குச் சரியான சாலை வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அச்சாலை பராமரிக்கப் படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண். 1199—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி நயினார் கோவில் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



36—

பார்த்திபனூரில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

வினா எண். 1218 — டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பரமக்குடி தொகுதி, பார்த்திபனூரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

37—

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா

வினா எண். 1293 — திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் கீழ்ஒரத்தூர் என்ற கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

உள்ளது. ஆனால் இந்த நில எடுப்பு நடவடிக்கையினை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நில உரிமையாளர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டு, உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் மேற்கண்ட நில எடுப்பு நடவடிக்கைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளதால் நில எடுப்பு நடவடிக்கை நிறுத்திவைக்கப் பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடையானை நீக்கப்பட்டபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

போலி ரேஷன் கார்டுகள்.

வினா எண். 1480 — திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டு சனவரி முதல் கைப்பற்றப்பட்ட போலி ரேஷன் கார்டுகள் எத்தனை?

விடை—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1991–ஆம் ஆண்டு சனவரி முதல் சூலை வரை கைப்பற்றப்பட்ட போலி ரேஷன் கார்டுகளின் விவரம் பின்வருமாறு :

கோவை மாவட்டம்.

| | களையப் பட்ட போலி குடும்ப அட்டைகள். |
|---|---|
| 1991 | |
| சனவரி .. .. .. .. .. | 2,566 |
| பிப்ரவரி .. .. .. .. .. | 2,330 |
| மார்ச் .. .. .. .. ... | 3,697 |
| ஏப்ரல் .. .. .. .. .. | 3,631 |
| மே .. .. .. .. .. | 3,609 |
| சூன் .. .. .. .. .. | 3,610 |
| சூலை .. .. .. .. .. | 3,615 |
| மொத்தம் .. | 23,058 |

39—

சத்துணவு மையங்களுக்கு கான்கிரீட் கட்டிடம்

வினா எண். 1540 — திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவு மையங்களுக்கு கான்கிரீட் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

சமூக நலத்துறையின்கீழ் போதுமான நிதி வசதி இல்லாததால் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமையற் கூடம் கட்டவும் பழுது பார்க்கவும் பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.



தவிர 1991–92 ஆம் ஆண்டு வரவு—செலவு திட்டத்தின் கீழ் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்வதற்கான கருத்துரு ஒன்று அரசு பரிசீலனையில் உள்ளது.

40—

பார்த்திபனூர் கண்மாய் மராமத்து

வினா எண். 1610— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர் கண்மாய் மராமத்து செய்ய 1991—92-ல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

41—

இராமநாதபுர மாவட்டத்தில் தனியார் கல்லூரிகள்

வினா எண். 1643 — டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் தனியார் ஆண்கள் கல்லூரி மற்றும் தனியார் பெண்கள் கல்லூரி எத்தனை உள்ளன?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் அரசு உதவிபெறும் பசும்பொன் திரு. முத்துராமலிங்கத்தேவர் நினைவு கல்லூரி என்ற தனியார் ஆண்கள் கல்லூரி ஒன்றும், கீழக்கரையில் சுயநிதி அடிப்படையில் இயங்கும் தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி என்ற தனியார் பெண்கள் கல்லூரி ஒன்றும் உள்ளன.

42—

மரங்கள் ஏலம் விடுதல்

வினா எண். 1670— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புறம்போக்கில் உள்ள மரங்களை ஏலம் விடும்போது பஞ்சாயத்துக்கள் மூலம் ஏலம்விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை —

இல்லை.

43—

பட்டு வளர்ப்பு உதவி இயக்குநர் அலுவலகம்

வினா எண். 1695— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பட்டு வளர்ப்பு உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

44—

டாப்கோ கிளை அலுவலகம்

வினா எண். 1706 — டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரத்தில் உள்ள டாப்கோ கிளைகள் எத்தனை ?

(ஆ) பரமக்குடியில் இருந்து மதுரைக்கு மாற்றப்பட்ட டாப்கோ அலுவலகம் மீண்டும் பரமக்குடிக்கு மாற்றப் படுமா?

விடை—

(அ) இராமநாதபுரத்தில் டாப்கோ கிளைகள் ஏதும் இல்லை.

(ஆ) பரமக்குடியில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் (டி.பி.ஏ.பி.) ஒரு கிளை இருந்தது. தற்போது அத்திட்டம் இல்லாததால் இவ்வலுவலகம் மதுரையிலிருந்து செயல்படுகிறது.

45—

கழுகுப் புளிக்காட்டில் நூலகம்

வினா எண். 1926 — திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப் புளிக்காட்டில் ஒரு நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





விடை—

தஞ்சை மாவட்டம், கழுகுப்புளிக்காட்டில் கிளை நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை. எனினும் மேற்படி ஊரில் ஒரு பகுதிநேர நூலகம் திறப்பதற்கு தஞ்சை மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

46—

கழுகுப்புளிக்காடு உயர்நிலைப்பள்ளிக்கு இடவசதி.

வினா எண். 1931—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு உயர்நிலைப்பள்ளிக்கு இடவசதி செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

47—

நடுவிக்கோட்டை உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

வினா எண். 1941—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

48—

ஓவிய ஆசிரியர் பதவி

வினா எண். 2076—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓவிய ஆசிரியர் பதவி எத்தனை காலியாக உள்ளன?

(ஆ) இப்பதவிக்கு இராமநாதபுரம் மாவட்டத்தினர் எத்தனை பேர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து உள்ளனர்?

விடை—

(அ) 23.

(ஆ) 61.

49—

## தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

வினா எண். 2173—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கு, கோனார் தெருவில் உள்ள தொடக்கப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

50—

## சந்தனக் கட்டைகள் விற்பனை.

வினா எண் 2472—டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா: மாண்புமிகு வனம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1991 ஆம் வருடம் சந்தனக் கட்டைகளின் அதிகமான விலையேற்றத்தினால் மாநில வனத்துறையின் மூலம் அவை சரியானபடி விற்பனையாகவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) சமீபத்தில் நடந்த வளைகுடாப் போரின் விளைவாக உலகச் சந்தையில் சந்தனப் பொருட்களின் விலையில் சரிவு ஏற்பட்டது. இந்த விலைச்சரிவுதான் மாநில வனத்துறை 1991 இல் நடத்திய விற்பனையில் சந்தன மரக்கட்டைகள் குறைவாக விற்பனையானதற்குக் காரணம். அதிக விலையேற்றம் காரணமல்ல.

(ஆ) சந்தனக்கட்டைகள் விற்பனையை அதிகரிக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறவில்லை என்பதைக் குறிக்கும்.)



## 3. தகவல் கோரல்.

பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற கடைமடைப் பகுதிகளுக்கு பாசனத்திற்கு கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் வந்து சேராதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காவிரி டெல்டா பகுதியில் கடைமடைப் பகுதியில் பாசனம் பெறுவதில் இருக்கிற சிரமம் குறித்து திரு. ஆர். சிங்காரம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று என் அனுமதியைக் கேட்டிருக்கிறார். அவரை அனுமதிக்கிறேன். திரு. ஆர். சிங்காரம். சுருக்கமாகப் பேசவும்.

*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகு வறண்டு கிடந்த மேட்டூரில் தண்ணீர் பொங்கி வழிகிற காட்சியை நாமெல்லாம் பார்த்தோம். விவசாயிகள் எல்லாம் இந்த வருடம் இரண்டு முறை அல்லது மூன்று முறை சாகுபடியைச் செய்து முடிப்போம் என்று தைரியமாக இருந்தார்கள். அந்த நிலையிலே தைரியத்திற்குக் குறைவு இல்லாமல் பெரும்பகுதி விவசாயிகள், மேட்டுப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் பலன் பெற்று இன்று நடவு நட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடைமடைப் பகுதியான எங்கள் பகுதியில் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதியிலே கல்லணைக் கால்வாயிலிருந்து வருகிற தண்ணீர் இது வரை வந்து சேரவில்லை. ஆரம்பத்திலேயே நான் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னதாக, நம்முடைய புரட்சித் தலைவி, முதலமைச்சருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் தந்தி கொடுத்தேன். அதன்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரும், பொதுப் பணித் துறை அதிகாரிகளும் வந்து பார்வையிட்டு, உடனடியாக தண்ணீர் விடுவதாகச் சொல்லி, உடனடியாக தண்ணீரை விட்டார்கள். ஆனால் அப்படியும் இன்னும் தண்ணீர் போய்ச் சேரவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை இதே சட்டமன்றத்திலே நான் தெளிவாகப் பேசினேன். குடி மராமத்து என்று அந்தக் கடைமடைப் பகுதிகளுக்கெல்லாம், இருக்கின்ற வாய்க்காலுக்குச் செய்வதாகச் சொல்லி, அந்த குடி மராமத்தைச் செய்யாமல் அந்த அரசிலே இருந்த சிலர் அவர்களே மராமத்து செய்து கொண்ட காரணத்தால்தான் அந்த வாய்க்கால்கள் மராமத்து செய்யப்படவில்லை. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடுமையான

நடவடிக்கை எடுத்தாலும், அமைச்சர்கள் இடத்திலே பல
முறை சொல்லியும், பல முறை ஃபோன் செய்தும், பல முறை
அதிகாரிகள் வந்து பார்த்தும் கூட அந்தக் கடைமடைப்
பகுதிகளுக்கு தண்ணீர் போய்ச் சேரவில்லை. காரணம்
அந்த வாய்க்கால் சரியாக மராமத்து செய்யப்படவில்லை
என்பதுதான். ஆகவே அப்படிப்பட்டச் சூழ்நிலையில் அந்த
கடைமடைப் பகுதியில் இருக்கின்ற தாய்மார்கள், மக்கள்
எல்லாம், தமிழகத்தினுடைய தானைத் தலைவி, புரட்சித்
தலைவி ஆட்சியிலே கூட நாம் தண்ணீர் பெற்று நடவு நட
முடியவில்லை என்று சொன்னால் எப்படி வாழ்வது என்ற
சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அதெல்லாம் கடலோரப்
பகுதிகள். கடலுக்குப் போனால் அங்கே மிகத் தொல்லை.
ஆனால் இந்தப் பகுதியிலே தண்ணீர் இல்லை. இப்படிப்பட்ட
கஷ்டமான சூழ்நிலையில் அந்த கடைமடைப் பகுதி மக்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித்
துறை அமைச்சர் அவர்கள் இது வரையில் பல்வேறு
முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான்
என் மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்
கொள்கிறேன். பேராவூரணி பகுதி மட்டுமல்ல, ஒரத்தநாடு
பகுதி - அமைச்சருடைய பகுதி அது. (குறுக்கீடு)

முற்பகல் 10.40

உங்கள் பகுதிகளை எல்லாம் சொன்னால் எங்களுடையது,
விட்டுப்போகும். அங்கே திருத்துறைப்பூண்டி, பேராவூரணி,
பட்டுக்கோட்டை பகுதிகளில் கடைமடைப் பகுதிகளுக்கு
தண்ணீர் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களின் விசேஷ கவனத்திற்குக் கொண்டுபோய்
அந்த மக்களை நீங்கள் பார்த்து, அந்த மக்களுக்கு தண்ணீர்
போய்ச் சேருவதற்கு சாதாரணமாக அங்கு தண்ணீர் போய்ச்
சேர முடியாது; தண்ணீர் போய்ச் சேராது; ஆனால் முறை
வைக்காமல் விடவேண்டும்; முறை வைத்துக் கொண்டு விடு
கிறார்கள். தற்போது மேல் பகுதிகளில் இருக்கின்றவர்கள்
நடவு நட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதே மேல் பகுதி
யில் இருக்கிற கடைமடைப் பகுதியில் இருக்கிறவர்கள் நாற்று
பாவ வேண்டும். அதன் பிறகு நடவு நட வேண்டும். அப்
படிப்பட்ட சூழ்நிலையில் முறை வைக்காமல் இந்த புரட்டாசி
வரையிலாவது தண்ணீர் விட்டால்தான் அங்கு
தண்ணீர் போய்ச் சேர முடியும். 'முறை' என்று
சொன்னால் எல்லோரும் மண்வெட்டியை எடுத்துக்
கொண்டு ஆற்றைவெட்டுகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம்.
அந்தப் பகுதியில் எல்லோருமே போராட்டம் செய்து, தோட்
டீஸ் அடித்துவிட்டு செய்கின்ற காட்சிகளை நான் அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். நான்
இங்கே இருக்கிறேன்; ஆனால் என்னுடைய பெயரையும்
அங்கே தகவல் தந்ததாகச் சொல்லி தோட்டீஸ் அடித்து
இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தயவு செய்து
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் விசேஷ கவனம்



செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால்
இன்னும் குளத்திற்கு தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை.
குளத்திற்கும் ஏரிக்கும் தண்ணீர் விட்டு அந்த குளத்துப்
பாசனம், ஏரிப் பாசனம் செய்யும் மக்களுக்கும் நடவு நடு
கின்ற வகையிலே செய்ய வேண்டும் என்று நான் உங்களை
பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொண்டு, இதை துரித
மாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.
குறிப்பாக அலிவலம் வாய்க்கால், பண்ணை வயல் வாய்க்கால்,
ராஜமடை வாய்க்கால், அம்மனிச் சத்திரம் வாய்க்கால்,
அன்னவயல் வாய்க்கால், திருவப்பாடி வாய்க்கால்,
வீரக்குடி வாய்க்கால் போன்ற வாய்க்கால்களுக்கு தண்ணீரே
போய்ச் சேர மாட்டேன் என்கிறது. சத்தியம் செய்கிறது. ஆகவே
அப்படிப்பட்ட சூழ்நிலையில் போலீசை வைத்து அதிகாரிகளை
வைத்து அங்கு தண்ணீர் கொண்டுபோனால்தான் அது அங்கு
போய்ச் சேர முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மிக
துரிதமாக இதுவரையில் செய்தது போல இன்னும் துரித
மாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அப்படி
துரிதமாகச் செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்பு
கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ஜி. பழனிசாமி
அவர்களும் இது குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு
வந்து இருக்கிறார். அவர் பகுதிக்கும், கடைமடைப்
பகுதிக்கும் தண்ணீர் போய்ச் சேரக் கூடிய அளவுக்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

<u>திரு. ஜி. பழனிசாமி</u> : தலைவர் அவர்களே. . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் அதுதான்
கொடுத்து இருக்கிறீர்கள். அதே பொருள் பற்றியது தானே?
கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் போக வேண்டும் என்பது
தானே.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
சிங்காரம் அவர்கள் இங்கே இந்தப் பிரச்சினையை சொல்
கின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்பற்ற அரசு என்னென்ன
நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதைச் சொன்ன
தற்காக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன். அவர் கூடவே ஒரு பிரச்சினையையும்
சொன்னார். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட
உடனேயே நம்முடைய புரட்சித் தலைவி காலத்திலே தான்
இன்றைக்கு காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது என்று
சொன்னார்கள். மழை இருந்த காலங்களில் நீர் வரத்து அதி
கமாக இருந்தது. காவிரியிலே இருக்கின்ற வாய்க்கால்களின்

[திரு. எஸ். கண்ணப்பன்] [1991 அக்டோபர் 4

கொள்ளளவுக்கு யதார்த்தமாக விடுகின்ற நீரைக் காட்டிலும்
அதிக அளவிற்குத்தான் ஜி. ஏ. கனால் போன்ற பகுதிகளிலே
இன்று தண்ணீர் விட்டுக்கொண்டு இருக்கிறோம். கடைமடைப்
பகுதிகள் என்று வருகின்ற நேரத்திலே அதற்கு உள்ள
சிரமத்தையும் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அங்கே
இருக்கின்ற கால்வாய்கள் சரியான முறையிலே பராமரிக்கப்
படவில்லை என்ற காரணத்தாலே தண்ணீர் போய்ச் சேருவது
இல்லை என்பதையும் அவர்கள் சொன்னார்கள்.

நம்முடைய அரசு இன்றைக்கு பொறுப்பேற்று 100 நாட்கள்
தான் ஆகின்றன. இந்த கால்வாய் பிரச்சினையிலே
ஏற்கனவே இருந்தவர்கள் செய்த தவறுகளையும் இங்கே சுட்டிக்
காட்டினார்கள். ஆகவே, இந்தக் காவிரிப் பிரச்சினை என்பது
இந்த கால்வாய்ப் பிரச்சினைகளை நிரந்தரமாக தீர்வு செய்
யப்பட வேண்டிய பிரச்சினை என்பதையும் நம்முடைய இதய
தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு உணர்ந்து
தான், 'காவிரி மாடர்னைசேஷன் ஸ்கீம்' என்று அந்தத் திட்டத்
தையும் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கூறி
இருக்கிறார்கள். ஆகவே இந்த காவிரிப் பிரச்சினைக்கு
அந்தக் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் செல்கின்ற
அந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும்
என்பதிலே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி
அவர்களுடைய அரசு தெளிவாக இருக்கிறது என்பதை
இந்த நேரத்திலே நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச்
சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு
இருக்கிற பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும்
என்ற முனைப்போடு ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்
களுக்கும் பொதுப் பணித் துறை கண்காணிப்பாளர்களுக்கும்
மற்ற ரெவின்யூ அதிகாரிகளுக்கும் நம்முடைய புரட்சித்
தலைவி அவர்கள் உத்திரவிட்டதின் பேரில் அவர்களைத்
தொடர்பு கொண்டு இன்றைக்கு முனைப்பான நடவடிக்கை
களை எடுத்து எந்த அளவிற்கு பிரச்சினை இல்லாமல் மேலே
இருக்கின்றவர்கள் தண்ணீர் கேட்கின்ற நேரத்திலே, கீழே
இருக்கின்றவர்களுக்கு தண்ணீர் போய்ச் சேர முடியாத சூழ்
நிலை இருக்கின்றது. ஆகவே கடைமடைப் பகுதிகளுக்குத்
தண்ணீர் அளிக்கின்ற கால்வாய்களை புல்டோசர் வைத்துக்
கூட உடனடியாக சில இடங்களை எல்லாம் சீர் செய்யச்
சொல்லி இருக்கின்றோம். ஆகவே அவசரகால போர்க்கால
அடிப்படையில் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்
என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது. ஆகவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கின்ற அந்த
வாய்க்கால்களுக்கு எல்லாம் ஏற்கனவே தண்ணீர் விட வேண்டும்
என்று உத்தரவிட்டு இருக்கிறோம். இன்றைக்கு தண்ணீர்
வரவில்லை என்று ஒன்றிரண்டு பகுதிகளைச் சொன்னார்கள்.



1991 அக்டோபர் 4] [திரு. எஸ். கண்ணப்பன்]

அவைகளை என்னுடைய கவனத்திற்கு கொண்டு
வந்து இருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கைகளையும்
இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இன்றைக்கு காவிரியில் தண்ணீர் விடுகின்ற பிரச்சினையைப்
பொறுத்தவரையில் முறைவைத்து விடுவதாகச் சொன்னார்கள்.
ஏற்கனவே தண்ணீர் வரத்து 'இன்ஃபுளோ' அதிகம் இருந்தது.
இப்போது தண்ணீர் வரத்து இல்லை. ஆகவே வெளியேறு
கின்ற தண்ணீரின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆகவே
நம்முடைய பாசனம் முழுவதற்கும் நாம் கணக்கிட்டு செய்ய
வேண்டும். பருவ மழையையும் நாம் எதிர்பார்த்துக்
கொண்டு இருக்கிறோம். பருவ மழை தவறுகின்ற நேரத்
திலே ஒரு வேளை தண்ணீர் பின்னால் பற்றாக் குறையாக
வந்து கதிர் விளைச்சல் அன்றைக்கு பாதிக்கப்படுமோ என்ற
உணர்வு வந்து விடாமல் மிகவும் எச்சரிக்கையாக இந்த நட
வடிக்கையை எடுக்க வேண்டி இருக்கிறது. ஏற்கெனவே கொடுத்து
இருக்கின்ற பாசனப் பரப்பைப் பாதுகாக்க வேண்டிய சூழ்
நிலையிலும் இந்த அரசு இருக்கின்றது.

முற்பகல் 10.45

ஆகவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டு கடந்த 2½
நாட்களாக நான் அதிகாரிகளிடத்தில் தொடர்புகொண்டு
பேசியிருக்கிறேன். இன்றைக்குக் கூட அதிகாரிகளை எல்லாம்
வரச் சொல்லி முறைப்படுத்த வேண்டுமென்று சொல்லி
நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே,
நடைமுறைச் சிக்கல் இருக்கிற பிரச்சினைகளை எல்லாம்
உடனடியாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கையெடுத்துக்
கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்லியிருக்கிற பகுதிகளுக்காக
உடனடியாக இன்றைக்கு அதிகாரிகளை அழைத்து பேச
யிருக்கிறோம். அவைகளையெல்லாம் சீர் செய்து, அனைத்து
பாசனப் பரப்புக்கும் நீர் வரத்தை முறைப்படுத்தி செய்வ
தற்கு, நீர் செல்வதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு
மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

## 4. <u>கவன ஈர்ப்பு.</u>

(அ) <u>ஆனைமலை ஒன்றியம், பிளிச்சினாம்பாளையம்
கிராமத்தில் கட்டப்பட்டு வரும் விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்
லிருந்து வெளியேற்றப்படவுள்ள கழிவு நீரால் அப்பகுதி
மக்களுக்கும், கால் நடைகளுக்கும் ஏற்படவுள்ள பாதிப்பு
குறித்து:-</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆனைமலை ஒன்றியம், பிளிச்சினாம்பாளையம் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் விஜயேஸ்வரி டெக்ஸ்டைல் சிலிருந்து வெளியேற்றப்படவுள்ள கழிவு நீரால் அப்பகுதி மக்களுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து' மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை.

திருவாளர்கள் விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் ஒரு புதிய தொழிற்சாலை. இது கோயம்புத்தூர் மாவட்டம், பொள் ளாச்சி வட்டம், பிளிச்சினாம்பாளையம் கிராமத்தில் 3.15 ஹெக்டேர் (7.8 ஏக்கர்) நிலத்தில் அமைக்கப்படவுள்ளது.

இத்தொழிற்சாலை கீழ்க்கண்ட பொருள்களை உற்பத்தி செய்ய உள்ளது:—

(1) பருத்தி இழைக்கு பளபளப்பை ஏற்றுதல்—மாதத் திற்கு 24 டன்.

(2) செயற்கை இழை பின்னுதல்—மாதத்திற்கு 60 டன்.

(3) இழைக்கு மேலிடான வெதுப்பிடல்—மாதத்திற்கு 12 டன்.

பருத்தி இழை கடுங்காரமிட்டு, பதப்படுத்தப்படும். பின்னர் அதிகமான கடுங்காரத்தை நீக்க நூல் இழை தண்ணீரில் கழுவப்படும். பின்னர் அமிலம் சேர்த்து நூல் இழை சம நிலைப்படுத்தப்படும். அதன்பின் நூல் இழை தண்ணீரில் கழுவப்பட்டு, உவர் காரத்தில் சமப்படுத்தி, சுத்தம் செய்து உலர்த்தப்படும். மேலும் நூல் இழையில் உள்ள பி...



நீக்க மேலிடான வெதுப்பிடல் முறையும் கையாளப்படும். செயற்கை இழையைப் பொறுத்தவரை, அவை பின்னப்பட்டு கண்டுகளாக சுற்றப்படும்.

இந்தத் தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு 83,500 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். நாளொன்றுக்கு இத்தொழிற்சாலை யிலிருந்து 80,000 லிட்டர் கழிவுநீர் வெளியேற்றப்படும்.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் கோரி இத்தொழிற்சாலை விண்ணப்பித்துள்ளது. இத்தொழிற்சாலை அமைய இருக்கும் இடத்தைப் பார்வையிட்டபோது கட்டிடம் மட்டும் கட்டும் பணி ஆரம்பமாகியிருந்தது. இவ்விடம் பொள்ளாச்சி பாசனக் கால்வாயிலிருந்து 1.2 கி.மீ. தூரத்தில் உள்ளது என்று தெரிய வந்தது. இக்கால்வாய் 30—3—89 நாளைய சுற்றுப் புற மற்றும் வனத்துறை அரசாணை எண் 213-ல் சேர்க் கப்பட்டுள்ளது. மேலும், பொள்ளாச்சி கால்வாயின் பிரிவு கால்வாயும்,பகிர்மானக் கால்வாயும் தொழிற்சாலை அமையவிருக் கும் இடத்திலிருந்து 0.6கி.மீ. மற்றும் 1கி.மீ. தூரத்தில் உள்ளன. இந்த அரசாணையில் குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகள் குறிப் பிட்ட நீர் நிலைகளிலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் அமைக் கப்படக்கூடாது. சாயத் தொழிற்சாலைகள் இந்த அரசா ணையில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த தொழிற் சாலை, பருத்தி இழையை கடுங்காரமிட்டு பதப்படுத்தும் தொழிலைச் செய்யவிருக்கிறது.

ஒப்புதல் விண்ணப்பத்தில், சாயம் ஏற்றுதல் குறிப்பிடப்பட வில்லை. இந்த தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் பற்றிய கருத்துருவை அளிக்காததால், வாரியத்தின் ஒப்புதல் இல்லாமல் கட்டிடவேலை தொடங்கக்கூடாது என்று தொழிற் சாலைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலைக்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 213-ன்படி ஒரு கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் குடிநீர், தொட்டிகளும் குளங்களும் இருக்கிற இடங்களில் கழிவுநீர் வெளியேற்றக்கூடிய தொழிற் சாலைகளை அமைக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனம் சுற்றிலும் கிராமங்களும் விவசாய நிலங்களும் இருக்கிற அந்தஇடத்தில் கழிவு நீரை வெளியேற்றக் கூடிய ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான ப்ளோ-சார்ட்டை என்னிடம்

கொடுத்து இருக்கிறார்கள். அதிலே நாள் ஒன்றுக்கு 83,500 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. சுமார் 80,000 லிட்டர் கழிவுநீர் வெளியேற்றப்படுமென்ற ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி பார்க்கிற போது கால்நடைகளுக்கும், விவசாயத்திற்கும், குடிநீருக்கும் மிகவும் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் இதை அரசு ஆய்வு செய்து, கழிவு நீரால் பாதிப்பு ஏற்படாத வகையில் அதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசு கட்டுப்பாடு வாரியம் இதற்கு அனுமதி தரவில்லை. அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மனதில் வைத்து அதிலே சரியாக நடவடிக்கை யெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். அதிலே வெளியேறுகிற கழிவுநீரை அவர்கள் எப்படி சுத்திகரிக்கிறார்கள் என்பதையெல்லாம் அறிந்து, பின்னால்தான் அது அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராஸ்தா என்ற ஒரு மிஷினெரியையும், எப் ஃபுளுவண்ட் ட்ரீட்மென்ட் பிளான்ட் ஒன்றையும் ஏற்படுத்தி அங்கே நிறுவ இருக்கிறார்கள். ஆனால் பக்கத்திலே ஆளி யாறு கால்வாயும், ஊர்க் குளமும் இருக்கிற காரணத்தால் இதனால் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுமென்று பொது மக்கள் பதட்டப்படுகிறார்கள். ஆகவே, கழிவுநீர் வெளி யேறாத வகையில் வேறொரு தொழிற்சாலையை அந்த நிறு வனமே ஏற்பாடு செய்ய அரசு வலியுறுத்த வேண்டும். அதைப் போல கழிவுநீரால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத அளவுக்கு ஒரு உறுதிமொழியையும் வாங்கவேண்டுமென்றும் கேட்டு, அந்தவகையில் அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற மக்களு டைய உணர்வுகளைப் புரிந்து, அவர்களுக்கு எந்த பாதிப் பும் இல்லாத வகையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கைகளை நிச்சயமாக மாசு கட்டுப்பாடு வாரியம் மூலமாக அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(ஆ) புதுக்கோட்டை தொகுதியிலுள்ள கந்தர்வகோட்டை மற்றும் குன்னண்டார் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் தெரு விளக்குகள் எரியாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை தொகுதியில் உள்ள கந்தர்வ கோட்டை மற்றும் குன்னண்டார் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் தெரு விளக்குகள் எரியாதது குறித்து'' மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 36 ஊராட்சிக் கிராமங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 1,760 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 1,570 தெரு விளக்குகள் எரியும் நிலையில் உள்ளன. 190 தெரு விளக்குகள் எரியவில்லை. பல்ப், சோக் போன்ற உதிரி பாகங்கள் உடனடியாகப் பெற்று மின்வாரிய ஊழியர்கள் மூலம் மாற்றப்பட்டு விளக்குகள் எரிய வைக்கப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் குன்னண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 37 ஊராட்சிக் கிராமங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 2,240 தெரு விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன. தற்போது 1,948 தெரு விளக்குகள் எரியும் நிலையில் உள்ளன. 292 தெரு விளக்குகள் எரியவில்லை. பல்பு, சோக் போன்ற உதிரி பாகங்கள் உடனடியாகப்பெற்று மின்வாரிய ஊழியர்கள் மூலம் மாற்றப்பட்டு தெரு விளக்குகள் எரிய வைக்கப்படுகின்றன. பழுதான விளக்குகள் அப்போதைக் கப்போது உதிரி பாகங்கள் பொருத்தி எரிய வைக்கப்படுவ தால் விளக்குகள் எரியாமையால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் கவனிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்க
ளுடைய விளக்கக் குறிப்பினை நான் பார்த்தேன். படித்தேன்.
அதிலே ஏறத்தாழ 1,570 தெருவிளக்குகள் இப்போது எரிந்து
கொண்டு இருப்பதாகவும், அதேபோல, குன்னண்டார் கோவில்
ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், 1,948 தெருவிளக்கு
கள் இப்போது எரிந்து கொண்டு இருப்பதாகவும், மாண்புமிகு
அமைச்சர் அவர்களுடைய விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்
கிறார்கள். நான் தேர்தல் காலத்திலே செல்கிறபோது, சுந்தம்
பட்டி என்கிற கிராமத்தில் உள்ள அனைத்து பல்புகளும் எரிந்து
கொண்டு இருந்தன. பிறகு நன்றி சொல்லச் செல்கிற போது,
அந்த கிராமத்தில் இருக்கிற அத்தனை மக்களும். 20 நாட்களுக்கு
முன்புதான் இங்கே பல்புகளை மாட்டிச்சென்று இருக்கிறார்கள்,
ஆனால் நீங்கள் நன்றி சொல்ல வருவதற்குள்ளாக அத்தனை
பல்புகளும் தீய்ந்து போய் இருக்கின்றன, இதற்கு நீங்கள் உரிய
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அனேக
மாக நான் நன்றி சொல்லச் செல்கிறபோது அத்தனை கிராமங்
களிலும் உள்ள கிராம மக்கள் இந்தக் குறையை நிரந்தரமாகச்
சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்
தெரிவிப்பது என்னவென்றால், முந்தைய ஆட்சியாளர்கள், அங்கே
ஒப்பந்தம் போட்டு, பல்புகள், சோக்குகள், ஸ்டார்டர்கள்
போன்ற கருவிகளை வாங்கி உபயோகப்படுத்துகிறபோது, மிகவும்
தரக்குறைவான, 10 நாட்களுக்குக் கூட எரிய முடியாத தரம்
தாழ்ந்த பல்புகளை. சோக்குகளை மற்றும் ஸ்டார்ட்டர்களை
எல்லாம் வாங்கி அவர்கள் உபயோகப்படுத்துகின்ற காரணத்தால்,
15 நாட்களுக்கு மேல்—பழைய ஒப்பந்தத்தின் மூலம் வாங்கப்
படுகிற—பல்புகள் கிராமப்புறங்களில் எரிவதில்லை. இப்போ
தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனேகமாக 100-க்கு
90 சதவிதம் பல்புகள் எரிவதாக தெரிவித்திருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.
அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை வைத்திருக்கிறார்கள். அது
தவறானது, இந்த மாதிரி இருக்கிறது, கூடுதலாக என்ன
செய்யப்படும் என்பதைக் கேளுங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : சரியான, ஸ்டாண்டர்டு பல்புகள்,
சோக்குகள், மற்றும் ஸ்டார்ட்டர்களை எல்லாம் வாங்கி, அவை
களை நிரந்தரமாக எரிய விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில் இருக்கிற
நகராட்சிகள், மாநகராட்சிகள், உள்ளாட்சியில் இருக்கிற
ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளில், பல்வேறு மக்கள்



நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்தில், எங்க
ளுடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித்
தலைவி அவர்கள், முந்தைய அரசு, குறைந்த விலையைக் காரணம்
காட்டி, தரம் இல்லாத கம்பெனிகளில் இருந்து பல்வேறு பொருட்
களை வாங்கியிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, தரம்
உள்ள பொருட்களை, தரமான கம்பெனிகளிடமிருந்து நல்ல
விலை கொடுத்து வாங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்
கிறார்கள். அந்த அடிப்படையிலே, மின்சாரத் தெரு விளக்குக்
கள் பிரச்சினையாக இருந்தாலும், ஆதி திராவிடர்களுக்கு வீடு
கட்டுகிற பிரச்சினையாக இருந்தாலும், குடிநீர் வழங்குகிற திட்ட
மாக இருந்தாலும். அந்தத் திட்டங்களில் பயன்படுத்தப்படுகிற
பொருட்கள் தரமான பொருட்களாக தரமான கம்பெனிகளிட
மிருந்து வாங்குவதற்கு எங்களுடைய இதய தெய்வம் தமிழகத்தி
னுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு
இருக்கிறார்கள். முந்தைய அரசின் நிலைகள் மாற்றப்பட்டு,
புதிய நிலைகள் உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சுவாமிநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்போது கிராமப்புறங்களில் தெருவிளக்குகளைச்
சரிபார்க்கின்ற மின்சார ஊழியர்கள், மின்சார இலாக்காவின்
மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனாலும் ஊராட்சி
களைப் பொறுத்த வரையில், ஊராட்சி ஒன்றியங்களைப்
பொறுத்தவரையில், நகராட்சியாக இருந்தாலும், ஊராட்சி
ஒன்றியப் பொறுப்பாளர்கள், ஆணையாளர்கள் இவர்கள்
கட்டுப்பாட்டில் அந்த மின்வாரிய ஊழியர்கள் செயல்பட்டால்
தான் அவர்கள் சொல்கிற வேலைகளை, அவர்கள் சொல்கிற
குறைகளை, இவர்கள் அடிக்கடி எடுத்துச் செய்கின்ற நல்ல சூழ்
நிலை உருவாகும். எனவே இந்தக் குறையைப் போக்குவதற்கு
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மின்வாரிய
ஊழியர்களை ஊராட்சி ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டின்
கீழ் கொண்டுவருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்
தின்போது, மிகத் தெளிவாக இதைப்பற்றி நாங்கள் குறிப்பிட்டு
இருக்கிறோம், உள்ளாட்சித்துறையைப் பொறுத்தவரையில்,
தனியாக ஒரு பொறியியல் துறையை அமைப்பதற்கான அனு
மதியை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்க
ளிடத்திலே பெற்றிருக்கிறோம். மிக விரைவாக அதற்கான
திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்புகள்.

(அ) மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களை விதி 55-ன் கீழ் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அவை அத்தனைக்கும் பதில் பெறுகிற முயற்சியில் பேரவைத் துறை ஈடுபட்டு இருக்கிறது. இந்த விதிகளின்படி, ஒருநாளைக்கு இரண்டு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத்தான் அவையில் எடுத்துக் கொள்ள முடியும். அந்த வகையில், இரண்டு இரண்டு தீர்மானங்கள் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தாலும் எடுக்கப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கவனிக்கப்படாமல் போய்விடுமோ என்கிற கவலை எந்த உறுப்பினருக்கும் இருக்க வேண்டியதில்லை.

இன்று வரையிலும் துறைக்கு வந்திருக்கிற பல்வேறு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இன்றைய அஜெண்டாவிலே சேர்த்து எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை என்று சொன்னாலும்கூட, அவைகள் அவையில் வைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவீர்கள். அந்த வகையிலே ஏறத்தாழ 14 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், சோ. இராசாராமன், என். பன்னீர் செல்வம், எஸ். அண்ணாமலை, கே. சிங்காரம், சி. ஞானசேகரன், ஏ. சுப்புரத்தினம், ஆர். சிங்காரம், கே. ஆர். முருகானந்தம், ம. சின்னசாமி, கோ. பழனிச்சாமி, சி. ஞானசேகரன், எஸ். எஸ். ராமசுப்பு, சா. பன்னீர்செல்வம், பேரா. வரதன், பெ. பொன்னு சாமி, ஆர். சிங்காரம், எ. சம்பத், எஸ். எஸ். ராமசுப்பு, திருமதி ரமணி நல்லதம்பி, எஸ். ஆர். ஜெயராமன், டாக்டர் தே. குமார தாஸ், வி. நடேசன் பால்ராஜ், செ. ரகுபதி, கே. சிங்காரம், வ. சத்தியமூர்த்தி ஆகிய உறுப்பினர்கள் கொடுத்தது இன்று அவையில் வைக்கப்பட்டு உள்ளது. மீதம் இருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் பதில் வந்தவுடன், உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்ப வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

[முற்பகல் 10-55

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

(1) 1983—84 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(2) 1987—88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(3) 1985—86-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(4) 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் பொதுப் பணித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(5) 1979—80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தி மூன்றாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(6) 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் நகராட்சி நிருவாகம்—குடிநீர் வழங்கல் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(7) 1977—78 மற்றும் 1978—79 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் முப்பத்தி மூன்றாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் ஊரக வளர்ச்சித் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஒன்றாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(8) 1984—85 மற்றும் 1985—86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(9) 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் வாக்களிக்கப்பெற்ற மானியங்கள் மற்றும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கங்கள் ஆகியவை குறித்து ஏற்பட்ட கூடுதல் செலவு மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) (எண் 4/1989) தமிழ்நாடு மின்வாரியம் (பொருளியல் நிருவாகம்) தொடர்பான பத்திகள் குறித்த குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் 1981—82, 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுக் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.





## 7. அரசினர் தனித் தீர்மானம்.

### தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை தேவையென நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்கிக் கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது அரசால் தமிழக சட்டமன்ற மேலவையை நீக்கும் தீர்மானம் ஒன்று 14-5-1986 அன்று இந்தச் சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் 12-8-1986 அன்றும்; மாநிலங்கள் அவையில் 14-8-1986 அன்றும் அத்தீர்மானம் ஏற்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை நீக்கும் சட்டம் 1986 மைய சட்டம் 40/86-ன் படி தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை நீக்கம் செய்வது 30-8-1986 அன்று அங்கீகரிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1-11-1986 முதல் அந்தச் சட்டத்தினை அமல்படுத்த ஆணையிட்டார்கள். அன்று முதல் தமிழக சட்டமன்ற மேலவை நீக்கம் செய்யப்பட்டது. அத்தகைய புரட்சிகரமான திட்டத்தை சிதைக்கும் நோக்கத்துடன் அரசியல் விபத்தின் காரணமாக ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற மேலவையை மீண்டும் தோற்றுவிக்க வேண்டும் என்று நடவடிக்கைகள் தொடர்ந்தது. 63 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்ற மேலவையை மீண்டும் தமிழகத்தில் தோற்றுவிக்க 20-2-1989 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதனைத் தொடர்ந்து அவர்களால் மைய அரசுக்கு கடிதம் ஒன்றும் எழுதப்பட்டது. அதையொட்டி 1990 மே மாதம் மாநிலங்கள் அவையில் அன்றைக்கு ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டமுன்வடிவு மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட சமயத்தில் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதனை விவாதத்திற்கே அனுமதிக்கக்கூடாது என்று எழுந்த பெரிய எதிர்ப்பைத் தொடர்ந்து அச்சட்டம் நிறைவேற்றப்படாமல் நாடாளுமன்ற மக்களவையில் நிலுவையிலேயே உள்ளது.

முற்பகல் 11-00

தமிழக சட்டமன்றத்தில் ஏற்கெனவே இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதால் அதனை மீண்டும் தற்போது மக்களவையில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தவிர்ப்பதற்காகவே திராவிட முன்னேற்றக் கழக அரசின் தீர்மானத்தை ரத்து செய்யும் தீர்மானத்தை தற்போது கொண்டு வந்துள்ளோம். மாண்புமிகு புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்களின் பாதையை பின்பற்றி நடக்கும் இந்த அரசு, தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய முற்போக்கு கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. ஆகவே தான் புரட்சித் தலைவர் அவர்களால் நீக்கம் செய்யப்பட்ட சட்டமன்ற மேலவையை மீண்டும் தோற்றுவிக்க வேண்டாம் எனக் கருதி, இந்தத் தீர்மானத்தை பேரவையில் விவாதத்திற்காக முன்மொழிகிறேன் :

தீர்மானம்.

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்றும் அதற்குரிய சட்டத்தினை அந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்கத் தேவைப்படுகிற அரசமைப்பின் திருத்தத்திற்கான வகைமுறைகளையும் மற்றும் நாடாளுமன்றம் தேவையெனக் கருதலாகும் நிறைவுறு, இடையுறு மற்றும் விளைவுறு வகைமுறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்திய அரசமைப்பின் 169-ம் பிரிவு 1-வது உட்பிரிவின்படி தகுந்த சட்டத்தினை இயற்ற வேண்டும் என்ற இப்பேரவையின் 20-2-1989-ம் நாளன்று நிறைவேற்றப் பட்ட, தீர்மானத்தை இப்பேரவை நீக்கிக் கொள்கிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இத்தீர்மானத்தை முன் மொழிந்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பின்னர் எனது பதிலுரையைத் தருகிறேன் என்பதைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

*திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையை நீக்க வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தில் எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைகளை சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிறார் என்றால் அவர்கள் அந்த முடிவிலே உறுதியாக இருப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. எனவே அவருடைய மனதை மாற்றுகிற ஒரு முயற்சியை எனக்கு அளித்திருக்கிறீர்களே நான் அதில் வெற்றிபெற முடியுமா என்று எங்களுடைய கொறடா அவர்களிடம் கேட்டபோது, முயன்று பாருங்கள் உங்களுக்கு வெற்றி கிடைத்தாலும் கிடைக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். (சிரிப்பு) மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிய ஒரு பரந்த உள்ளம் படைத்தவர்கள். எனவே அவர்கள்





எனக்கும் ஒரு வாய்ப்பைக் கொடுத்து எங்களுடைய கொறடா அவர்களிடம் எனக்கு ஒரு நல்ல பெயர் வாங்கித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் எனது உரையைத் துவங்குகின்றேன்.

முற்பகல் 11-05

இந்த மேலவை கலைக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியதாக எனக்கு நினைவு இல்லை. ஆயினும் 1986 ஆம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதி மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த மேலவை கலைக்கப்பட வேண்டும் என்பதற்காக என்னென்ன காரணங்களைச் சொல்லியிருக்கிறார்களோ அதே காரணங்களுக்காகத்தான் இப்போதும் முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். அன்றைக்கு நாவலர் அவர்கள் சொல்லுகின்றபோது, அவை முன்னவர் அவர்கள் சொல்கின்றபோது மூன்று பிரதானமான காரணங்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (1) மேலவையை நடத்துவதற்காக ஆகின்றச் செலவு மிக அதிகமாக இருக்கிறது. (2) மேலவையிலே அங்கம் வகிக்கின்றவர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப் படாத பிரதிநிதிகள். (3) மேலவையில் சொல்லப்படுகின்ற அதே கருத்துக்களை பேரவையிலேயே நாம் பெற்றுக்கொள்ளலாம் லாம் என்கின்ற மூன்று காரணங்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதற்கான விளக்கங்களை நான் என்னுடைய உரையிலே கூறுவதற்கு முன்பாக மேலவை பற்றிய ஒரு சுருக்கமான எங்களுடைய கட்சியினுடைய கருத்தினை நான் இங்கே தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

1920 ஆம் ஆண்டு கன்னாட் என்பவர் இந்தியாவிலே வங்கத்திலும், பம்பாயிலும், சென்னையிலும் இந்த மேலவையைத் துவக்க வேண்டும் என்று முடிவு செய்து இந்த மூன்று இடங்களில் சென்னையை அவர்கள் தேர்ந்தெடுத்து, அவர்களே நேரில் வந்து இந்த மேலவையை இங்கே துவங்கியிருக்கிறார்கள். இந்த மேலவை துவக்கப்பட்டபோது, ஆந்திராத்திலும், கர்நாடகத்திலும், கேரளத்திலும் இருந்தும் பிரதிநிதிகள் இந்த மேலவையிலே அங்கம் வகித்து இருக்கிறார்கள்.

இந்த மேலவைக்கு இருக்கின்ற ஒரு மாபெரும் சிறப்பு என்னவென்றால் தென்னிந்தியாவில் இருக்கின்ற மிகப் பெரிய அறிவு ஜீவிகளான, மிகப் பிரபல்யமான தலைவர்கள் எல்லாம் இந்த மேலவையின் மூலமாகத்தான் அரசியல் உலகுக்கும், பொது வாழ்க்கைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அப்படிச் சொல்கின்றபோது ஒரு நீண்ட பெயர் பட்டியலே நாம் இங்கே குறிப்பிடலாம். பேரறிஞர்

அண்ணா அவர்கள், அம்மையார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் அவர்கள், சீனிவாஸ சாஸ்திரி அவர்கள் இப்படி ஏராளமான பேர் வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்கள், சர். ஏ. டி. பன்னீர்செல்வம், ஏ.எல். முதலியார் அவர்கள் இப்படியாகச் சொல்லக்கூடிய பேர்கள் மிக நீண்டுகொண்டே போகக்கூடிய பேர்கள் எல்லாம் மேலவையிலே இடம் பெற்றிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா கூட மேலவையின் மூலமாகத்தான் முதலமைச்சராக வந்தார்கள். இராஜாஜி அவர்கள் மேலவையின் மூலமாகத்தான் வந்தார்கள். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கூட மேலவையிலே இருந்தார்கள். இன்றைக்கு இங்கே அமர்ந்து இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ராஜ்யசபாவுக்குத் தான் முதன் முறையாகச் சென்றார்கள். எனவே இந்த மேலவை என்பது அறிவு ஜீவிகளுக்கு இருக்கின்ற ஒரு அருமையான இருப்பிடம். இங்கே இருக்கின்ற நம்முடைய நண்பர்கள் கேட்கலாம், நாம் எல்லாம் அறிவு ஜீவிகள் இல்லையா ? அவர்கள் மட்டும்தான் அறிவு ஜீவிகளா என்று கேட்கலாம். நம்மையும் தவிர்த்து (சிரிப்பு) விடுபட்டிருக்கின்ற அறிவு ஜீவிகளை எல்லாம் அங்கே கொண்டுபோய் அமரச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அன்றைக்கு அந்த மேலவை உருவாக்கப்பட்டது. மேலவையை உருவாக்குகின்றபோது கன்னாட் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். The Political Capital of India may be Delhi. But the mttellectual Capital cf India is Madras. என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் கல்கத்தாவில் இருந்த மேலவைக்கும், பம்பாயிலே இருந்த மேலவைக்கும் இல்லாத சிறப்புக்கள் எல்லாம் சென்னையிலே இருந்த மேலவைக்கு உண்டு. ஏனென்றால் இந்தியாவினுடைய புகழ்பெற்ற தலைவர்கள் எல்லாம் இந்த மேலவையிலே பேசியிருக்கின்ற பேச்சுக்களைப் பார்க்கின்றபோது மேலவைக்கும், பேரவைக்கும் இருக்கின்ற வித்தியாசம் நமக்கு நன்றாகப் புரிகிறது.

முற்பகல் 11-10

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட இந்த கப் அண்டு சாஸர் உதாரணத்தை பல்வேறு இடங்களிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். கப்பிலே இருக்கிற டீ சூடாக இருக்கும். ஆனால் அதனை சாஸரில் ஊற்றுகிறபோது அதனுடைய சூடு ஆறிவிடுகிறது. எனவே, பருகுவதற்கு சுகமாக இருக்கும். அதேபோல்தான் பேரவை, மேலவை என்று அவர்கள் அழகாக தனக்கே உரித்தான பாணியில் சொல்லியிருக்கிறார்கள்.



அதைப்பற்றி சொல்லுகிறபோது கூலிங் சேம்பர் என்று கூட சொல்லியிருக்கிறார்கள். இங்கே சூடாக இருப்பது அங்கே குளிர்ச்சியாக இருக்கும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் மேலவையை கொண்டு வந்தால் அந்த இடமும் கூலாக ஆவதற்கு ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். ஏன் என்றால் இப்போது அங்கே ஏ.சி. இல்லை. எனவே, அதையும் செய்து தரக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக மேலவை கலைக்கப்படுகிற ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மேலவையைக் கலைப்பதறகு ஒரு அழுத்தமான அரசியல் பின்னணி இருப்பதை நாம் பார்க்க வேண்டும். மேற்கு வங்கத்திலே கலைத்தபோது, ஆந்திராவிலே கலைத்தபோது எல்லாம் மேலவையிலே ஆளுங் கட்சியினுடைய பலம் குறைவாக இருந்த காரணத்திற்காக அங்கே மேலவையை அவர்கள் கலைத்தார்கள். எனவே, ஒரு அமைப்பு வருகிறபோதும்சரி, அது போகிறபோதும் சரி அதற்குச் சொல்லப்படுகிற காரணங்கள் எதுவாக இருந்தாலும் பின்னணியில் இருக்கிற காரணம் அரசியல் காரணமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஜனநாயகத்தைத் தோற்றுவித்தவர்கள் சொல்லுகிறபோது எந்த ஒரு நோக்கத்திற்காகவும் அவதாது அரசியல் நோக்கத்திற்காக ஒரு காரியத்தை செய்யக்கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு அரசு என்பதற்கு அல்லது அரசன் என்பவனுக்கு ஆயிரம் காதுகள் வேண்டுமென்று அர்த்த சாஸ்த்திரத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஏன் என்றால் பல்வேறு இடங்களிலேயிருந்து விழுகின்ற செய்தி அரசனுடைய காதுகளுக்கு கிடைத்தால் தான் அரசனால் ஒரு நல்லாட்சியை நடத்த முடியும்.

அந்தக் காலத்திலே பேரரசர்கள் இருந்தார்கள். அவர்கள் ஏராளமான அமைச்சர்களை வைத்து இருந்தார்கள் ; ஒற்றர்களையும் வைத்து இருந்தார்கள். அமைச்சர்களுக்கும் ஒற்றர்களுக்கும் வித்தியாசம் உண்டு. எப்படி வந்தாலும் செய்தி தான் வரப்போகிறது. ஆனால் ஒற்றன் சொல்லுகிற செய்திக்கும், அமைச்சர் சொல்லுகிற செய்திகும் வித்யாசம் உண்டு. ஒற்றர்கள் சொல்லுகிற செய்தி என்பது குறைகளை கண்டுபிடித்து மட்டுமே சொல்லக்கூடிய ஒரு செய்தியாக அது இருக்கும். ஆனால் அமைச்சர்கள் கூறுகிற செய்தி என்பது அது ஒரு ஆலோசனையாக இருக்கும். எனவே தான் செய்திகளிலேயே இரண்டு விதமான வேறுபாடுகள் இருந்தன.

பாரதக் கதையிலே கூட நாம் பார்க்கிறோம். விதுர நீதி என்று சொல்லுகிறார்கள். விதுரனை விடவும் நீதி சொல்லுகிற அமைச்சர் இந்த உலகத்திலே கிடையாது. ஆனால் விதுர நீதியை துரதிருஷ்டவசமாக துரியோதனர்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அங்கே பிரச்சினை ஏற்பட்டது. எனவே நம்முடைய மேலவை என்பது விதுரர்களைப் போன்று ஏராளமான அறிவு ஜீவிகளை கொண்டு வந்து பல்வேறு பிரச்சினைகளைப் பேசி தீர்த்து அதிலே இருக்கிற சாதக, பாதகங்களை எல்லாம் கலை உணர்வோடு, நய உணர்வோடு எடுத்துச் சொல்லக்கூடிய இடமாக அதை நாம் மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்,

இந்த மேலவை கலைக்கப்பட்டபோது அன்றைக்கு இருந்த எதிர்க்கட்சியால் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஒரு குற்றம் சுமத்தப்பட்டது. அவர்கள் என்ன குற்றம் சொன்னார்கள் என்றால் மேலவையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரும்பான்மையான இடங்கள் இருக்கின்றன ; ஆனாலும் அவர்கள் கலைப்பதற்கு காரணம் கருணாநிதி அவர்கள் வந்து அங்கே அமர்ந்து விட்டால்; அவர் தலைவராக அமர்ந்து விட்டால் அவருக்கு பதில் சொல்ல முடியாது என்ற காரணத்தால் தான் மேலவையை கலைத்து இருக்கிறார்கள் என்று அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக பத்திரிகைகளில் வந்த குறிப்புகளை நான் பார்த்தேன். ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை. இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களை நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு தான் நேரிலே பார்த்தேன். ஏன் என்றால் தேர்தல் காலத்திலே........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பத்திரிகைகளில் வந்தாலும், புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள் என்பதும் அப்போது கருணாநிதி அவர்கள் அங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள் என்பதும், அப்போதெல்லாம் நாங்கள் அதைப்பற்றி கவலைப்படாமல் அதை வெற்றியோடு நடத்தினோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேலவையில் சில பல மாதங்கள் கலைப்பதற்கு முன்னாலே இடம்



பெற்றுத் தான் இருந்தார்கள். அவர் மேலவைக்கு வருவதற்கு முன்னால் செய்யப்பட்டது அல்ல ; வந்து சில பல மாதங்கள் இருந்ததற்குப் பின்னர் தான் மேலவை கலைக்கப்பட்டது.

முற்பகல் 11-15

திரு. ச. அழகிரி : மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இங்கே நான் உறுப்பினராக வந்ததற்குப் பிறகு தான் அவர்களை நேரிலே பார்த்தேன். ஏனென்றால், தேர்தல் பிரச்சாரத்திற்கு எங்களுடைய ஊர்களுக்கு அவர்கள் வந்தபொழுது நாங்கள் எல்லாம் அறிவிக்கப்படவில்லை. எனவே அப்போது அவர்களை நாங்கள் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் எங்களுக்கு அங்கேயும் கிடைக்கவில்லை. அவர்களுடைய பேச்சை கேட்பதற்கு முன்பு அவர்களைப் பற்றி எங்களுக்கு இருந்த கணிப்பு என்பது வேறு. இந்த திராவிட இயக்க வரலாறு தொடர்புடைய தலைவர்களுக்கெல்லாம் இருக்கிற சொல்வன்மை அவர்களுக்கு இருக்குமா என்கிற ஒரு ஐயப்பாடு எங்களுக்கெல்லாம் இருந்தது உண்டு. ஆனால் அவர்களுடைய பேச்சை கேட்டபிறகு, அந்த திராவிட இயக்க வரலாறு படைத்த தலைவர்களுக்கு சற்றும் குறையாத சொல்வன்மை அவர்களுக்கு இருப்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே நாங்கள் கண்ணுற்றோம். நெப்போலியனைப் பற்றி சொல்வார்கள். ஒரே நேரத்தில், 24 பேர் பேசக்கூடியதையும் கேட்டு அத்தனை பேருக்கும் பதில் சொல்லக்கூடிய ஆற்றல் நெப்போலியனுக்கு இருந்ததாகச் சொல்வார்கள். எனவே, அப்படிப்பட்ட ஆற்றலை நம்முடைய முதல்வர் அவர்கள் பெறுவதற்கு மேலவையை மீண்டும் கொண்டு வந்து ஏராளமான அறிஞர்களை அதற்குள் புகுத்தி அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி, மேலும் ஒரு ஜனநாயகத் தென்றலை நம்முடைய அவைக்கு கொண்டுவரவேண்டுமென்று அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த இரண்டாம் சபை என்பதற்கு உலகம் முழுவதுமே ஒரு வரலாறு இருக்கிறது. அமெரிக்காவிலே அரசியல் சட்டத்தை தோற்றுவித்தபோது அங்கே இரண்டாவது சபை கிடையாது. முதல் சபையை மட்டுமே அவர்கள் வைத்து இருந்தார்கள். ஆனால் ஆறாண்டு காலம் கழித்து, அறிவார்ந்த வாதங்கள் முதல் சபையிலே நடைபெறவில்லை அல்லது போதுமான அளவிற்கு இல்லை என்கிற காரணத்தினால் அமெரிக்காவிலே இரண்டாவது சபையைக் கொண்டு வந்தார்கள். இங்கிலாந்திலே இரண்டாவது சபை இருந்தது. ஆனால் அது ஆளுங்கட்சிக்கு தர்மசங்கடமாக இருந்த காரணத்தினால் இரண்டாவது சபையை அங்கே கலைத்தார்கள். ஆனால் கிராம்வெல் பதவியேற்று அங்கே ஜனநாயகத்திற்கு ஊறு நேர்ந்தபொழுது, இரண்டாவது சபை

[திரு. ச. அழகிரி] [1991 அக்டோபர் 4

இருக்க வேண்டியதினுடைய அவசியம், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருதி மீண்டும் அங்கே இரண்டாவது சபையைக் கொண்டு வந்தார்கள். இப்படியாக இரண்டாவது சபை என்பதற்கு உலகத்திலேயே இருக்கிற ஜனநாயக நாடுகளில் எல்லாம் ஒரு நல்ல உதாரணம் இருப்பதை ...... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி நடைபெறுகின்ற இடங்களிலே, கேரளாவிலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிதான் ஆளுகிறது. அங்கே இதுகாறும் மேலவை இல்லாதது மட்டுமல்ல, மேலவையைக் கொண்டு வருகின்ற முயற்சியை காங்கிரஸ் கட்சி இன்னும் மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருக்கின்ற கேரளாவிலே மேலவை இல்லையென்பது உண்மை. 1957 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி பதவிக்கு வந்ததற்குப் பின்னாலே அவர்கள் மேலவை இருக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி, அங்கே மேலவை இல்லாமல் இருக்கிறது. அதற்குப் பின்னாலே காங்கிரஸ் கட்சி கூட்டணி மந்திரி சபை இரண்டு மூன்று முறை அமைத்தாலும்கூட, தேவையான மூன்றிலே இரண்டு பங்கு மெஜாரிட்டியோடு காங்கிரஸ், அங்கே ஒரு போதும் இருக்கவில்லை. அவர் சொல்லலாம், 1977-லே திரு. கருணாகரன் பதவியேற்றபோது மூன்றிலே இரண்டு பங்கு இருந்தது என்று. ஆனால் சில மாதங்கள் தான் நீடித்தது. திரு. கருணாகரன் இருந்தது ஒரே ஒரு மாதம்தான். பிறகு மூன்றிலே இரண்டு பங்கு மெஜாரிட்டி என்பது போய் விட்டது. ஆகவே, ஒரு கட்டத்திலேகூட மூன்றிலே இரண்டு பங்கு மெஜாரிட்டி கேரளாவிலே இருக்கவில்லை. எனவே, மேலவையை மீண்டும் கொண்டுவர முடியவில்லை. (குறுக்கீடு).

மான்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி நீங்கள் பேசப் போகிறீர்கள் இல்லையா ? ஆகவே உட்காருங்கள். பேசாத உறுப்பினர்கள் ஏதாவது கேட்டால் அனுமதிக்கலாம். நீங்கள் பேசும்போது எதைக் கேட்க வேண்டுமோ அதையெல்லாம் சொல்லலாம். (குறுக்கீடு) இதைப்பற்றித்தானே நீங்கள் பேசப் போகிறீர்கள் ? அப்போது பேசுங்கள். உட்காருங்கள். திரு. அழகிரி.



1991 அக்டோபர் 4]

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லாரன்ஸ் அவர்கள் ஒரு நல்ல உதாரணத்தைச் சொன்னார்கள். அதுதான் சென்னை மேலவையினுடைய சிறப்பே. பல்வேறு மாநிலங்களில் மேலவையை அமைக்கக் கூட முடியாத அளவிற்கு அங்கேயெல்லாம் சிறப்புள்ள தலைவர்கள் இல்லாதபொழுது இங்கே மேலவை அமைக்கக்கூடிய அளவிற்கு நம்மிடம் அறிவுஜீவிகள் இருந்தார்கள் என்பதுதான் இந்த மேலவையினுடைய சிறப்பே. பல மாநிலங்களில் மேலவை கிடையாது. கல்கத்தாவும், பம்பாயும், சென்னையும் தான் இந்த மேலவைக்கு வாய்ப்பான இடங்கள் எனக் கருதிதான் 1920 ஆம் ஆண்டு இங்கே மேலவையை ஆரம்பித்தார்கள். எனவே இவ்வளவு சிறப்புக்கள் நிறைந்த இந்த மேலவையை இங்கே கொண்டுவர வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. நான் அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் உதாரணம் சொன்னேன். உள்நாட்டிலேகூட அதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. பீகாரிலே மேலவை கலைக்கப்பட்டது. மேலவை கலைக்கப்பட்டு, அதற்கான அனுமதியும் வாங்கப்பட்டது. ஆனால், அதற்குபிறகு பீகார் அரசாங்கம் மேலவை இருப்பது எவ்வளவு சுவாரசியமான விஷயம் எனக் கருதி மீண்டும் மேலவையைக் கொண்டு வந்தார்கள். உத்திரப்பிரதேசத்திலே மேலவை கலைக்கப்பட்டு, ஆனால் அதனுடைய அந்தக் குறிப்பு மத்திய அரசாங்கத்திறகுச் செல்லாமலேயே அவர்கள் அதன் பிறகு அதைத் தடை செய்து விட்டார்கள். எனவே உள்நாட்டிலேயும் மேலவை இருக்க வேண்டுமென்பதிலே பல்வேறுவிதமான கருத்தோட்டங்கள் இருந்திருக்கின்றன. எனவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை, நீங்கள் இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய தமிழகத்திலே ஏராளமான அறிவுஜீவிகள் இருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட ஒரு நேரத்தில் நாராயணசாமி முதலியார் அவர்களைத் தன்னுடைய அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார்கள். அவர் சட்டமன்ற உறுப்பினர் கிடையாது. ஆனால் அவர்களுடைய அறிவாற்றலை பயன்படுத்தவேண்டுமென்பதற்காக அப்போது மேலவை பயன்படுத்தப்பட்டது. அதுபோன்று ஒரு சூழ்நிலை நம்முடைய முதல்வருக்குக்கூட ஏற்படலாம். திடீரென்று அவருடைய மனதிலே யாராவது ஒரு அறிவுஜீவியினுடைய நினைவு வந்து, அவரை அமைச்சராக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் முடிவுசெய்வார்களேயானால் அப்போது அவர்களுக்கு இந்த மேலவை இருப்பது ஒரு சாதகமாக இருக்கும் என்பதனை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-20.

நிதி விஷயத்தைப்பற்றி அவை முன்னவர் அவர்கள் 1986-ல் குறிப்பிட்டதை ஒரு பெரிய விஷயமாக நான் கருத வில்லை. ஒரு நல்ல காரியம் செய்யவேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வரவர்கள் இன்றைக்கு 322 கோடி ரூபாயை இழந்து, தமிழகத்திலே மலிவு விலை மதுவை ஒழித்து இருக்கிறார்கள். அது ஒரு பெரிய தொகை. ஒரு நல்ல காரியம் செய்யவேண்டுமென்பதற்காக 322 கோடி ரூபாயை இழக்கக்கூடிய மனதைரியமுடைய நம்முடைய முதல்வர் அவர்கள் 15, 20 இலட்சம் ரூபாய் செலவா கிறது என்கிற காரணத்திற்காக மேலவையை நீக்கவேண்டு மென்ற கோரிக்கை அவ்வளவு சரியானதாக என்னுடைய மனதிற்குப்படவில்லை. அதேபோல, இரண்டாவது காரண மான, தேர்ந்தெடுக்கப்படாத பிரதிநிதிகளுடைய ஒரு அவை வேண்டுமா என்பதற்கு நான் ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இந்தியாவினுடைய குடியரசு தலைவர் இருக்கிறார்; முப்படைகளுக்கும் தலைவர் அவர்; இந்தியாவினுடைய முதல் குடிமகன். அவர். இந்தியாவினுடைய பிரதம மந்திரி இருக்கிறார்; இந்திய அரசியலினுடைய சூத்திரதாரியாக அவர் விளங்குகிறார். இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் ஆளுநர்கள் இருக்கிறார்கள். அவர் களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தையே கலைக்கக்கூடிய அளவிற்கு ஆற்றல்படைத்த நியமன உறுப் பினர்கள். அதன்பிறகு மாநிலங்களிலே முதலமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். அந்த மாநிலத்தினுடைய ஒரு மாபெரும் சக்தியாக அவர்கள் விளங்குகிறார்கள். தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். நான் சொல்லியிருக்கிற, பட்டியலில் இருக்கிற யாராவது, அதாவது, அந்தப் பதவி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியா என்பதை நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தப் பதவி களெல்லாம், ஒன்று நியமனப் பதவிகள் அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற பதவிகள்தான். எனவே மக்களால் தேர்ந் தெடுக்கப்படாத பிரதிநிதிகள் அமர்ந்து ஒரு சபையிலே பேசலாமா என்கின்ற ஒரு கேள்வியை, 1986 ஆம் ஆண்டு அவை முன்னவர் அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். இன்றைக்கு அது எல்லோருக்குமே பொருந்தக்கூடிய விஷயம் தான். ஜனாதிபதிக்குப் பொருந்தும்; கவர்னருக்குப் பொருந்தும்; முதல்வருக்குப் பொருந்தும். எனவேதான் நாம் இவைகளையெல்லாம் மனதிலே வைத்து, இந்த மேலவையை மீண்டும் கொண்டுவரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே........ (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்குமே தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் முதல்வராக இருந்ததில்லை (குறுக்கீடு).





திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, என்னவென்றால், முதல்வர் பதவி என்பது நம்மால், சட்டமன்ற உறுப்பினர் களெல்லாம் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பதவி என்று நான் சொல்ல வந்தேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பதவி அல்ல அது. ஜனாதிபதி எப்படியோ......... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதலமைச்சர் யார் என்று மக்கள் முடிவு செய்ததற்குப் பிறகுதான், அத்தனை பேருக்கும், நமக்கும் மக்கள் வாக்களிக்கிறார்களே தவிர, வேறு யாருக்கும் வாக்களிப்பது கிடையாது. ஆகவே நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற, முதல்வர் புரட்சித் தலைவிதான் தமிழகத்தை ஆள வேண்டுமென்று மக்கள் முடிவு செய்த காரணத்தினாலேதான் எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் வாக்களித்து இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி சொல்வதைப்போல மேலவை வந்தால்தான் அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு வந்துவிடும் என்ற காரணத்தால், அவர்கள் அதை மாற்றிக்கொள்வது நல்லது என்று கருதுகின்றேன்.

முற்பகல் 11-25.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் என்று சொல்வது நம் முடைய முதலமைச்சரை அல்ல. முதலமைச்சர்களைச் சொல்கிறேன். அவ்வளவுதான். பல்வேறு மாநிலங்களில் யார் முதலமைச்சர் என்று சொல்லி, தேர்தலை நடத்துவது இடையாது. நம்முடைய மாநிலத்திலேதான் அவ்வாறு நடத்துகிறோம். பல்வேறு மாநிலங்களிலே அதன் பிறகு தான முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

எனவே, இந்த மேலவையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்கிற என்னுடைய கருத்தினை நான் சொல்லி, இந்த அரசு கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில், இவ் வளவு காலம் நாங்கள் இணைந்திருந்தாலும்கூட, இந்த நேரத்தில் நாங்கள் இணைந்து செயலாற்ற முடியவில்லை என்பதைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையை ஒழித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் நான் வழிமொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1986-லே இதே தீர்மானத்தை நாவலர் அவர்கள் இங்கே முன்மொழிய, அன்றைக்கு நானும் இதை வழிமொழிந்தேன். மீண்டும், இப்போது 1991-லே புரட்சித் தலைவி அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இடையிலே ஏற்பட்ட அரசியல் விபத்தினால், மீண்டும் கொண்டு வரப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்ததினால், இன்றைக்கு அதை நாம் ரத்து செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம்.

பொதுவாகவே, மக்கள் மன்றத்தை நேரடியாகச் சந்திக்க முடியாதவர்கள், குறுக்கு வழியிலே பதவிக்கு வரவேண்டுமென்று கருதுகிறவர்கள், இந்த மேலவையைக் கொண்டு வர வேண்டும்; கொண்டு வரவேண்டுமென்று துடியாகத் துடித்து, அன்றைக்கு நடுவிலே இந்தத் தீர்மானத்தைப் போட்டு, இன்றைக்கு நமக்கு இந்த நிலையை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் வழியிலே புரட்சித் தலைவி அவர்கள், அதை மீண்டும் செயல்படுத்த வேண்டுமென்று, இந்தத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மேலவை வேண்டுமென்று வலியுறுத்தி தீர்மானம் போட்டிருக்கிறது. இது அண்ணாவினுடைய கொள்கைக்கே நேரடியாக முரணானது. அண்ணா அவர்கள், ஆளுநர் பதவியே ஒரு மாநில அரசுக்குத் தேவையில்லை என்று சொன்னவர். ஆட்டுக்கு எப்படி தாடி தேவையில்லையோ, அப்படி நாட்டுக்கு ஆளுநர் தேவையில்லை என்றுஅவர் நகைச்சுவையாக சொன்னார். ஆளுநர் பதவியே தேவையில்லை என்று சொன்னவர் வழியிலே வருவதாகச் சொல்கிறவர்கள், இன்றைக்கு மேலவை வேண்டுமென்று சொன்னால், அது அண்ணாவுக்கு செய்கிற துரோகம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல; ஆளுநர் பதவியே வேண்டாம் என்று சொல்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, 63 பேர் மேலவையிலே இருக்க வேண்டுமென்று கடந்த முறை தீர்மானம் போட்டார்கள். இந்த 63 பேரிலே, 9 பேரை நியமனம் செய்கிற பொறுப்பு மேதகு ஆளுநருக்குப் போய்விடுகிறது. ஆக, 9 பேரை நியமனம் செய்கிற பொறுப்பை, அவருக்கு



வழங்கியிருக்கிறார்கள். அத்தகைய தீர்மானத்தைத்தான் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்டது. மேலவையை ஏற்படுத்துகிறபோது, அன்றே, அரசியல் நிர்ணய சட்டக் குழுவிலே, பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இது ஒரு சோதனையான முயற்சி. மேலவையை ஏற்படுத்துகிற முயற்சி இருக்கிறதே, இது ஒரு சோதனையான முயற்சியாகத்தான் நாம் மேற்கொண்டிருக்கிறோம். மேலவை கட்டாயமாக இருந்தாக வேண்டுமென்ற நிலைமை இருந்திருந்தால், அன்றைக்கு அரசியல் நிர்ணய சட்டத்திலே 169-ல் (1)ஆவது உட்பிரிவை வைக்காமலே விட்டிருப்பார்கள். ஏன் வைத்தார்கள்? வைத்துக் கொள்வதற்கும், எடுத்துக் கொள்வதற்கும், சேர்த்துக் கொள்வதற்கும், நீக்கிக் கொள்வதற்கும் உரிய அதிகாரத்தை அரசியல் சட்டம் எதற்கு வழங்கி இருக்கிறது? வேண்டுமானால், மேலவையை ஏற்படுத்திக் கொள்ளலாம்; தேவையில்லை என்றால் எடுத்து விடலாம் என்கிற 169 (1)-வது பிரிவை நம்முடைய அரசியல் சட்ட நிபுணர்களே அன்றைக்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இதை எடுக்கலாம் என்ற நிலையை அவர்களே அன்றைக்கே எழுதி வைத்திருந்தார்கள். எனவே தான், இறுதியிலே அவர் சொன்னார்— பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள் இறுதியிலே அந்த விவாதத்திற்குப் பிறகு சொன்னார்; வேண்டுமானால், தேவைப்பட்டவர்கள் வைத்துக் கொள்ளட்டும்; வேண்டாதவர்கள் எடுத்துக் கொள்ளட்டும் என்று சொன்னார். இன்றைக்கு வேண்டாம் என்பதால் நாம் எடுக்கிறோம். முதன்முதலாக— நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னது போல— 3 மேலவைகள் ஏற்படுத்தப்பட்டன. மேற்கு வங்கத்தில் கல்கத்தாவிலே; மகாராஷ்டிரத்தில் பம்பாயிலே; தமிழகத்தில சென்னையிலே என 3 மேலவைகளில் இன்றைக்கு ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. பம்பாயிலே, இரண்டு ஒழிக்கப்பட்டுவிட்டது. முதன்முதலிலே தொடங்கிய மூன்றிலே, இரண்டு ஒழிக்கப்பட்டு விட்டது. அதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. இந்த நடவடிக்கையை புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டிருப்பதற்குக் காரணம், சிக்கன நடவடிக்கை ஓராண்டிற்கு ஏறத்தாழ 30 இலட்சம் ரூபாய்க்கு மேலே, மேலவை இருப்பதனால் நமக்கு செலவாகும். ஏற்கனவே, பல கோடி ரூபாய்க்கான பற்றாக்குறை பட்ஜெட்டைப் போட்டிருக்கிற நமக்கு, இது தேவையில்லை. அது மட்டுமல்ல; அங்கே அறிவு ஜீவிகள் இருக்க வேண்டும்; ஆசிரியப் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். கலையுலகப் பிரமுகர்கள் இருக்க வேண்டும்; உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். இப்படி பல்வேறு பிரதிநிதிகள் மேலவையில் இருக்க வேண்டும் என்கிற ஒரு வாதத்தைச் சொல்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலே இல்லாத பட்டதாரிகளா? இந்த மாமன்றத்திலே இல்லாத ஆசிரியர்களா? இந்த மாமன்றத்திலே இல்லாத மருத்துவர்களா? இந்த மாமன்றத்தில் பெரியார்கள்,..ஏன் கலையுலக ஏகப் பிரதிநிதியாக இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியை விட கலையுலகப் பிரதிநிதி வேண்டுமா? (மேஜையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த வாதமும் சரியானதல்ல.

முற்பகல் 11.30

இன்னொன்றையும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அரசியல் சட்டம் எல்லோருக்கும் ஒரு சம வாய்ப்புத் தந்திருக்கிறது. எல்லோருக்கும் 'equal rights' இருக்கிறது. ஒருவனுக்கு ஒரு வாக்கு. ஜனாதிபதியாக இருந்தாலும் ஒரு வாக்கு. சாதாரணக் குடிமகனாக இருந்தாலும் ஒரு வாக்கு. எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் 'equal rights' ஒரு வாக்கு தான். அதுதான் நம்முடைய அடிப்படை உரிமை. ஆகவே, ஏற்கனவே ஒரு 'ஓட்டைப்' போட்டுவிடுகிறோம். ஆசிரியர்களுக்கு என்று தனி, மேலவையிலே எம்.எல்.சி. என்றால், 'teachers constituency' 'graduates constituency' என்று சொல்லி 'constituencies' ஏற்படுத்துவதன் மூலம் இந்த ஜனநாயகத்திலே இரண்டு வாக்குரிமை வருகின்றது. இது என்ன நியாயம்? அவர்கள் ஏற்கனவே ஒரு முறை சட்டமன்றத் தொகுதிக்கு என்று ஓட்டுப் போடுகிறார்கள். ஆசிரியர்களும் சட்டமன்றத் தொகுதிக்கு ஓட்டுப் போடுகின்றார்கள். மீண்டும் அவர்களுக்கு ஒரு தனி தொகுதியை ஏற்படுத்தி அவர்களுக்கு இரண்டாவது முறை ஓட்டு கொடுக்கிறோம் என்று சொன்னால் அது அடிப்படை சித்தாந்தத்தையே மாற்றுவதாக இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் இரண்டு வாக்குரிமை என்பது என்ன நியாயம்? இது ஜனநாயகத்தில் நல்ல தத்துவமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியாவிலே ஒருவருக்கு ஏழு வாக்குகள் கொடுத்து இருக்கிறார்கள். வயது வந்தவுடன் ஒரு வாக்கு; திருமணம் ஆனால் இரண்டாவது வாக்கு; திருமணம் ஆகி 10 ஆண்டுகள் விவாகரத்துச் செய்யாமல் இருந்தால் 3-வது வாக்கு; குழந்தைகள் பெற்றால் நான்காவது வாக்கு; இப்படி ஆஸ்திரேலியாவிலே ஒருவருக்கு ஏழு வாக்குகள் வழங்கப்பட்டிருக்கின்றன.. ஆஸ்திரேலியா என்பது உலகத்திலே மிகப் பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று. எனவே, ஒருவருக்கு இரண்டு வாக்குகள் தருவது எந்தவிதத்திலேயும் தவறு இல்லை என்பது என்னுடைய மேலான கருத்து என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏழு வாக்குகளும் ஒரு பதவியிலே இருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் மக்களாட்சித் தத்துவத்தைப் பின்பற்றுகிற நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய அரசியல் சட்டப்படி எல்லோருக்கும் அடிப்படை உரிமை ஒருவருக்கு ஒரு வாக்கு இருக்க வேண்டும் என்பதுதான். எனவே அதிலே அவருக்கு உடன்பாடு இருக்கும் என்று கருதுகிறேன். அந்த நம்பிக்கையிலேதான் இதை நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, மேலவையிலே சிறந்த விவாதங்கள் நடைபெறும் என்று சொல்லுகிறார்கள். பொதுவாகவே காலையிலே சட்டமன்றப் பேரவையிலே ஒரு தீர்மானம் போடுவார்கள். மாலையிலே அதே தீர்மானத்தைப் பக்கத்திலே இருக்கிற மேலவையிலே நிறைவேற்றுவார்கள். இதுவரை இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு 15 அடி வித்தியாசத்திலே இருக்கிற மேலவையிலே அதை நிறைவேற்றுவார்கள். இதுவரையில் இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்கள் அங்கே இருந்து எத்தனைத் தீர்மானங்கள் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் ஒரு இரண்டு, மூன்று தீர்மானங்களைத் தவிர எந்தத் தீர்மானமும் திருப்பி அனுப்பப்படவில்லை. ஒரு தீர்மானத்தை இங்கே நாம் பேசி, அதுவும் அன்றைக்குக் காலையிலே பேசியதை, மாலையிலே மேலவையிலே பேசி, இப்படித்தான் நடந்து கொண்டிருந்ததே தவிர, பெரிதாக ஒன்றும் புதிய தீர்மானங்களை, புதியவற்றைச் செய்துவிடவில்லை என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றைக்குக்கூட இந்தியாவிலே இருக்கின்ற 22 மாநிலங்களிலே நான்கு மாநிலங்களில் மட்டும்தான் மேலவை இருக்கிறது. 18 மாநிலங்களில் இது ஒழிக்கப்பட்டு விட்டது. நாம் மட்டும் வைத்துக் கொள்ளவேண்டும், வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது பெரும்பான்மைக்கு முரணான கருத்தாக இருக்கிறது. மிக முக்கியத் தலைவர்கள் எல்லாம் இந்தக் கருத்தை இன்றைக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்தப் பேரவையிலே இவை இருக்கக்கூடாது என்று....

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களில் இன்று 5 மாநிலங்களில் மேலவை இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்,

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய திருத்தத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். அன்றைக்கு மாபெரும் தலைவராக இருந்த ஜின்னா போன்றவர்கள், நம்மிடையே வாழ்ந்த கல்யாணசுந்தரனார் போன்றவர்கள் எல்லாம் இந்த மேலவை இருக்கக்கூடாது என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். எங்களுடைய கருத்தும் இதே கருத்துத்தான். ஏனென்றால் மேலவையிலேயும் நாடாளு மன்ற அவையிலேயும், அரசியல் அமைப்பிலே இட ஒதுக்கீடு முறை இல்லாத அமைப்புதான் இருக்கிறது. மேலவை யானாலும், நாடாளுமன்ற அவையானாலும், இட ஒதுக்கீடு அங்கே கிடையாது. இட ஒதுக்கீடு இல்லாத அந்த அவைகள் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். அதைத்தான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத் தியும் வருகின்றோம்.

1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வரான போது, அன்றைக்குப் பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டபோது பேசுகையில், மேலவையில் கூட இட ஒதுக்கீடு கொண்டு வரலாம் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மக்கள் மன்றத்திற்குத் தான் அதிக அதிகாரம் வேண்டும். மக்கள் மன்றத்திலே வேண்டுமானால் நியமன உறுப்பினர்களுக்கு அதிகாரத்தினை பகிர்ந்து அளித்து, மக்கள் சக்தியை நாம் குறைந்துப் பகிர்ந்து தவிர்த்துவிடக் கூடாது. எனவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்களே, ''மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' என்று, அதைப்போல, மக்கள் மன்றத்திற்குத்தான் நிறைந்த அதிகாரங்கள் வேண்டும். எனவே, இந்த மேலவை ஒழிப்பு நியாயம். இதைத் திராவிட முன்னேற்றக் கழகமும் பழைய நிலைமையிலே செய்து இருக்கிறது. 1969-லே வங்காள மேலவையை ஒழித்தபோது, பாராளுமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரித்து இருக்கிறது.

முற்பகல் 11.35

1985 ஆம் ஆண்டு ஆந்திராவில் மேலவையை ஒழித்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்றத்திலே அதை ஆதரித்து இருக்கிறது. ஆனால் இங்கே வருகிறபோது மேலவை வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏனென்றால் மக்கள் மன்றத்தைச் சந்திக்க பயம்; நாம் நேரடியாக இருந்து போட்டியிட முடியாது; நேரடியாகப் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது; இப்படி ஏதாவது குறுக்கு வழியில் வர முடியுமா என்கிற பயம்தான் காரணம். நான் இன்னொன்றும் சொல்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அப்படி பயம் இருக்கக் காரணம் எனக்குத் தெரியவில்லை. (மேசையை தட்டும் ஒலி) ஏனென்றால், இன்றைக்கு மேலவை [illegible]



அதிலே 63 பேர்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் வர முடியும். அதைத் தவிர வேறு வழியே இல்லை. எனவே அவர்களுக்கு அந்த பயம் வருவதற்கான காரணம் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் 'கப் அன்ட் சாசர்' என்று சொன்னதாகச் சொன் னார்கள். அதை அவர் எடுத்துக்காட்டாகச் சொன்னார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னார் கள். குடியரசுத் தலைவரை நாம் எல்லோரும் சேர்ந்துதான் தேர்ந்தெடுக்கிறோம். மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை. அவர்கள் ஏறக்குறைய நம்மால் தான் தேர்ந்தெடுக்கப்படு வார்கள். நம்மால்தான் நியமிக்கப்பட்டவர்கள்; அவர்களுக்கு சர்வ அதிகாரமும் இல்லையா என்று கேட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பலமுறை இங்கே ஜனாதிபதி பதவிக்கு நேரடியாகத் தேர்தல் வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். ஒருக்கால் அவர்கள் உயிரோடு இருந்திருப்பார்களேயானால் அதை அவர் கொண்டு வந்திருப்பார். எனவே நிச்சயமாகச் சொல்கிறேன். இதிலே காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக் கருத்து இருக்காது. அவர்கள் உயிரோடு இருக்கிறவரை இந்த கொள்கையைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார். இந்தியாவில் ஜனாதிபதியை மக்கள் நேரடியாகவே தேர்ந் தெடுக்கிற முறை வரவேண்டும்; அந்த அதிகாரத்தை வழங்க வேண்டும்; இதற்காக அரசியல் சட்டத்தை நாம் மாற்ற வேண்டும் என்கிற கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த நிலையிலேயும், எல்லா நிலை யிலும் மக்கள் மன்றம்தான் மாபெரும் மன்றம். எனவே, இந்த மக்கள் மன்றத்திற்கு நாம் நிரம்ப அதிகாரம் வழங்க வேண்டும். இதனால் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மேலவை ஒழிப்புத் தீர் மானத்தை இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற் கிறேன். மேலவை தேவையில்லை என்கிற அடிப்படையில் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி வந்திருக் கிறது. அதேபோன்று சென்ற தடவை மேலவையைக் கொண்டுவரவேண்டுமென்று இந்த அவையிலே தீர்மானம் நிறைவேற்றுகிறபோது கூட நாங்கள் எதிர்த்துத்தான் இந்த அவையிலே பேசி இருக்கிறோம். வெளிநடப்பு செய்திருக்கிறோம். எனவே நூற்றுக்கு 95 சதவீதம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய பிரதிநிதிகள் இந்த அவையிலே கருத்துச் சொல்வதற்கு மக்களுடைய தேவையான

[திரு. நா. சா. பழனிச்சாமி] [1991 அக்டோபர் 4

இந்த சட்டமன்ற மேலவையானது பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறையையொட்டி அங்கே ஹவுஸ் ஆப் காமன்ஸ், ஹவுஸ் ஆப் லார்ட்ஸ் என்று இருப்பதைப்போல, இந்திய நாடும் பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறையையொட்டி ஏற்படுத்தப்பட்ட முறையிலே, பிரிட்டிஷ் ஹவுஸ் ஆப் லார்ட்ஸ், அதற்கு நிகரான அறிஞர் சபை என்ற முறையிலே இங்கே மேலவை கொண்டுவரப்பட்டது. ஆனால் இன்று சாதாரண மக்கள் மன்றத்திலே, நம்முடைய சட்டப்பேரவையிலேகூட மேலவைக்கு அவசியமாக தேவைப்படுகின்ற அறிஞர்கள், அறிவு ஜீவிகள் என்ற பிரதிநிதிகள் இன்று சட்டமன்றத்திலேயே, அதுவும் குறிப்பாக புரட்சித் தலைவி அவர்கள் வேட்பாளர்களை தெரிவு செய்கின்ற நேரத்திலே, முன்பெல்லாம் அவர்கள் அரசியல் அனுபவத்தை மட்டுமே வைத்து தெரிவு செய்த முறையை மாற்றி இப்போது புதிய ரத்தங்கள் புகுத்தப்பட வேண்டும், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், பல்வேறு துறைகளிலே பட்டம் பெற்றவர்கள் சட்டமன்றத்திலே பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்ற முறையிலே இளைஞர்களுக்கு, படித்தவர்களுக்கு, பட்டம் பெற்றவர்களுக்கு வாய்ப்பு அளித்து அவர்கள் எல்லாம் வெற்றி பெற்று இந்த சட்டப்பேரவைக்கு வந்திருக்கின்றார்கள்.

எனவே இதிலே சொல்கிறேன். இந்தக் கருத்தை, படித்தவர்கள் அறிவு ஜீவிகளுடைய ஆலோசனை வேண்டுமென்பது இப்போது அவசியம் இல்லாத நிலை உருவாகியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலவை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி இரண்டு பக்கமும் வாதாடலாம்.

''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.''

என்பதுதான் வள்ளுவர் சொன்ன வாசகம். எனவே, மேலவை வருகின்ற நேரத்திலே சமுதாயத்திலே இருக்கின்ற பல்வேறு தரப்பினரும் இங்கே இடம் பெறமுடியாதவர்களுக்கு, தேர்தலிலே போட்டியிட்டு வெற்றி பெற்று, நம்முடைய அவையிலே இடம் பெற முடியாதவர்களுக்கு, பல அறிவு ஜீவிகள், இங்கே பெயர்களைக் கூட நம்முடைய நண்பர் இங்கே சொன்னார்கள். இன்னும் சொல்லப் போனால் டெமோகிராபர் டாக்டர் எஸ். சந்திரசேகரைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஜனத்தொகையைப் பொறுத்தவரையில், மக்கள் தொகையை குறைப்பதற்காக மிகவும் பாடுபட்டவர்கள். அவர் டெல்லியிலே அமைச்சராக வரவேண்டும் என்று விரும்பியபோது அங்கே இருப்பவர்கள் அவரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய போது அவர் மக்கள் அவைக்குச் செல்வதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருந்தது.



1991 அக்டோபர் 4] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அவரைத் தமிழக சட்டமன்றம் தேர்ந்தெடுத்த காரணத்
தினால் அங்கே அவர் அமைச்சராக ஆகி நல்ல பல திட்டங்
களைக் கொண்டு வந்தார். குறிப்பாக அவர் காலத்தில்தான்
குடும்ப நலத் திட்டம் மிக நல்ல முறையில் நிறைவேறியது
என்பதை நாம் எல்லோரும் மிக நன்றாக அறிவோம். அதே
போல இன்னும் தொடர்ந்து பல சொல்லலாம். இங்கே
பேரவையிலும் இன்றைய தினம் நிறைய பேர் அறிவு ஜீவிகள்
நிச்சயமாக இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இன்றும் ஆசிரியர்களாக
இருக்கிறார்களே அவர்கள் இங்கு வர முடியுமா என்றால்
நிச்சயமாக வர முடியாது. அவர்களைப் போன்றவர்கள்
அங்கே வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தில்தான் நாங்கள்
அதைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்வது.

முற்பகல் 11.45

இங்கே சட்டங்கள் ஏதாவது திருப்பி அனுப்பப்பட்டிருக்
கிறதா? சட்டங்கள் ஏதாவது நிறைவேறியிருக்கிறதா என்றும்
நண்பர்கள் கேட்டார்கள். டாக்டர் ஏ. எல். முதலியார்
அவர்கள் Tamil Nadu, Parks Play Fields and Open Space Act
என்ற ஒரு சட்டத்தை மேலவையிலே தனியார் தீர்மானமாக
கொண்டுவந்து, அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு,
இன்றைய தினமும் அது சட்டமாக இருக்கிறது. அதுபோல
பல சட்டங்களை நிறைவேற்ற மேலவை உறுதுணையாக
இருந்திருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில் ஏற்கனவே
இங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். ''
''மீண்டும் மேலவையை தோற்றுவிக்க வேண்டும்''
என்ற இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.
எனவே, நீங்கள் கொண்டுவருவதை நாங்கள் குறை கூற
வில்லை. உங்களுடைய எண்ணத்திலே வந்து தவறு காண
வில்லை. என்றாலும் எங்களைப் பொறுத்தவரையில் இந்தத்
தீர்மானத்திலே உங்களோடு நாங்கள் இணைந்து எங்களை
சம்பந்தப்படுத்திக்கொள்ள இயலவில்லை என்பதை நான்
இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, ஆசிரியர்
சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இந்த அவைக்கு வருவதற்கு
வாய்ப்பு இல்லையென்று குறிப்பிட்டார்கள். இன்று இந்த
அவையின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, 8 பேரா
சிரியர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பதை
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். [illegible]
நம்முடைய பேரவையின் துணைத் தலைவர் அவர்களும்

ஒரு பேராசிரியர் தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அந்தியூர் திரு. பெரியசாமி அவர்களும் ஆசிரியராகப் பணியாற்றியவர் தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனி சாமி, தொடர்ந்து பேசுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : இங்கே அறிவு ஜீவிகள் சட்ட மன்றத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால் கூட ஜன நாயக நாட்டிலே தேர்தல் முறை இருக்கிறது. அவர்களை மக்கள் மதிக்கிறார்கள் என்றால் அவர்கள் சுயேச்சையாக தேர்தலில் நின்று வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்திற்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ வருவதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. அவர்கள் தங்களை ஏதாவது அரசியல் கட்சியில் இணைத்துக்கொண்டு அந்த அரசியல் கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டு, இந்த சட்டமன்றத்தில் உறுப்பினராக வருவதற்கு எந்தவிதமான தடையும் நமது அரசியல் சட்டத்தில் இல்லை. அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத முறையில் அவர்கள் சட்டமன்றத்திலோ பாராளுமன்றத்திலோ வந்து தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றால் மக்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அறிவு ஜீவிகள் என்பதை மக்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் இங்கே நாம் புரிந்து கொள்ள முடியுமேயல்லாமல் மக்கள் மன்றத்தால் மதிக்கப்பட்ட அறிவு ஜீவிகள் என்றால் நிச்சயமாக அவர்கள் தேர்தலில் வெற்றி பெற முடியும்.

அதோடு இந்த சட்டமன்றம் மேலவையிலே நல்ல பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு, பாராளுமன்றத்திலே முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த பஞ்சாயத்து ராஜ் மசோதா மிகச் சிறப்பான மசோதா. கிராமப்புற மக்களுக்கு அடிப்படையான சுதந்திரங்கள் வழங்குகின்ற மசோதாவாக இருந்தும் கூட அந்த மசோதா ராஜ்ய சபாவிலே பெரும்பான்மை இல்லையென்ற காரணத்தினாலே அந்த மசோதா கொண்டு வரப்பட்டும், நிறைவேற்றப்படாமல் தோல்வியடையும் நிலை ஏற்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை கிராமப்புற மக்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.



எனவே, சட்டமன்ற மேலவை தேவையில்லை. இன்றைய நிதி நெருக்கடி நிலையிலும், இன்றைய ஜனநாயக நெறி முறைப்படியும் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்கள் தேவையில்லை, அவர்கள் அடங்கிய அவை அவசியம் தேவையில்லை என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரித்து எனக்கு வாய்ப் பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்.

முற்பகல் 11-50

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவை கூடாது என்று கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை நான் சார்ந்து இருக்கின்ற ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் வாழ்த்தி, வரவேற்கிறேன். இது எங்களுடைய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை மாத்திரமல்ல. இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கையும் ஆகும். இந்த ஒரு விஷயத்தில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம். இது அமரர் ஜீவானந்தம் அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் உயிர் மூச்சுக் கொள்கையாக ஏற்றுக்கொண்டவைகளில் இதுவும் ஒன்று. 1965 ஆம் ஆண்டில் நான் மாணவனாக இருந்தபோது, அறிஞர் அண்ணா அவர்களின் 'காஞ்சி' பத்திரிகையை நான் படித்திருக்கிறேன். ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு மேலவையும் தேவையா என்று அன்றைக்கே அவர்கள் கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரை வழியில், அண்ணா வழியில், அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில், அதே வழியில் முதலமைச்சரவர்கள் மேலவையை ஒழிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு அண்ணா வழியில் சரியாக நடக்கிறது என்பதையும் இந்தத் தீர்மானத்தின் மூலமாக உணர முடிகிறது (மேசையைத் தட்டும் ஒலி) மேலவைக்கு அறிவுஜீவிகள் மாத்திரமே வருவதாகச் சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். மேலவையில் இருந்து வந்த ஒருவர், அவர் மேலவை வாயிலாக அமைச்சராகவும் வந்தார். அவர் தன்னை மண்டு என்று ஒப்புக்கொண்டார். அவர் அறிஞரானவர், அவர் நன்றாக ராகம் பாடுவார், ஆனந்தமாக இருப்பார். (சிரிப்பு) அவர் இப்போது தி.மு.க.வில் இருக்கிறார்.

மேலவை என்பது பல பகுதியினரும் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒன்று என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புகிறேன். , மேலவையிலே தொழிலாளிக்குப் பிரதிநிதித்துவம் உண்டா? மேலவையிலே விவசாயிக்குப் பிரதிநிதித்துவம் உண்டா? இந்தச் சமுதாயத்தில் அடித்தளத்தில் உழைக்கின்ற பிரதிநிதிகள் மேலவையில் இருப்பதில்லை. ஆனால் மேல் தட்டு மக்கள் வந்துவிடுகிறார்கள். சில நேரங்களில் அதுவே இடைஞ்சலாக மாறிவிடுகிறது.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மேல் தட்டு மக்கள் வருவதால் தான் அதற்கு மேலவை என்று பெயர் வைத்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவு படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதை அப்படியே ஒப்புக்கொள்கிறேன். மேல் தட்டு மக்களுடைய பிரதிநிதிகள் வந்ததால்தான் நாடாளுமன்ற மேலவையிலே மன்னர்களுடைய மானியத்தை ரத்து செய்ய வேண்டு சென்ற தீர்மானம் வந்தபோது மேல் தட்டும் சேர்த்து, அழுத்தி, மீண்டும் ஒரு தேர்தலையே வரவழைத்தார்கள். ஆகவே மேலவை என்பது அவசியமற்றது. இன்னும். சொல்லப்போனால் மேலவைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இங்கே பேசியவைகள் அங்கேயும் பேசப்படும். இங்கே பேசியவைகளை அவர்களால் நிராகரிக்க முடியாது. திருப்பி அனுப்பலாம். அவ்வளவுதான். திருப்பி நாம் அனுப்பினால் 'எஸ்' போட வேண்டும். இப்படி 'எஸ்' போடுவதற்கு ஒரு அவை தேவையா? இன்னும்கூட நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைக்குக்கூட புறம்பானது அல்ல. வங்கத்திலிருந்து, கேரளத்திலிருந்து இன்னும் சில மாநிலங்களிலிருந்து மேலவை ஒழிப்புத் தீர்மானம் நாடாளுமன்றத்திற்குப் போனபோது அங்கே காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து ஏற்ற வரலாறு உண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் மீண்டும் மேலவையைக் கொண்டு வருவதற்கான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றார்கள், ஜனதா தள ஆட்சி இருந்தபோது. அப்போது நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும், எங்களுடைய தோழர் தா. பாண்டியன் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வர முயற்சி செய்த தீர்மானத்தைக் கொண்டுவர விடாமல்



தடுத்தார்கள். மேலவை என்பது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கொண்டுவரவில்லை. அந்தத் தீர்மானம் பார்லிமெண்டில் வரவில்லை. அதற்கு முன்னால் ரிட்டர்ன் பண்ணிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. அங்கே கொண்டு வர முயற்சித்து, நாங்கள் கொண்டுவர விடாமல், அதை விவாதத்திற்கு எடுக்க விடாமல் தடுத்து நிறுத்தினோம் என்பதுதான் அங்கே நடந்தது. விவாதத்திற்குக்கொண்டுவர எண்ணிய நேரத்தில் விவாதத்திற்கு எடுக்கவிடாமல் தடுத்து நிறுத்தினோம். அதைத்தான், அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : ஆகவே, மேலவை என்பது அவசியமற்றது. சொன்னார்கள், கலைஞர் கருணாநிதி அவர்கள் வந்து விடுவார்கள் என்பதற்காகச் செய்வதுபோல, அவருக்கு அப்படி என்ன இருக்கிறது? அவருக்கு அப்படிப்பட்ட ஆற்றல் இருக்குமானால் இங்கேயிருந்து ஓடுவாரா? ஓடியிருப்பாரா? (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குப் பின்னால் வந்தவர்கள்கூட இங்கே இருந்தார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பக்கத்தில் இருந்தவர் ஆகவே மேலவைக்கும், கருணாநிதிக்கும் சம்பந்தம் இல்லை. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய........

முற்பகல் 11.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது அவைக் குறிப்பில் இருப்பது சரியல்ல. திரு. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : இன்றைக்கு இருக்கக்கூடிய மாநிலத்தின் நிதிநிலைமையையும் கவனிக்கவேண்டும். ஒரு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறோம். கடுமையான கஷ்டநிலையில் இருக்கிறோம். ஆட்டோ, வேன்கள் போன்றவைகளுக்குக் கூட வரி போடவேண்டிய அளவுக்கு நிதிநிலை இருக்கிற நேரத்தில், ஒரு 30 இலட்சம் ரூபாய் இதற்குத் தேவையா? அவசியமற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோவில் ஏழை எளிய மக்கள் பயணம் செய்கிற காரணத்தால், நம் முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்டோவுக்கு வரி உயர்த்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வி. சண்முகம் : ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய நிதிநிலையில் இது அவசியமற்றது. நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வது இந்நாட்டு மக்களிடத் தில் உணர்வுகளை பிரதிபலிக்கக் கூடிய இந்த சட்டமன்றம் போதும். இந்த சட்டமன்றத்திற்கு மேல் ஒரு மேலவை இருந்துகொண்டு நாட்டாண்மை செய்கிற நிலை இந்த நாட்டுக்குத் தேவையில்லை. அத்தகைய மேலவை என்பது ஜனநாயக உணர்வுகளுக்குப் பொருத்தமானதல்ல. ஆகவே, மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படக் கூடிய சட்டங் கள் மட்டுமே இந்த நாட்டை ஆளவேண்டும். அத்தகைய நிலை உருவாகக் கூடிய முறையிலே மேலவை ஒழிக்கப்பட வேண்டுமென்ற முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்தை நான் ஏற்று அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு— ஏற்கனவே பல தீர்மானங்களை நாம் ஏகமனதாக நிறை வேற்றியதைப் போல இந்தத் தீர்மானத்தையும் ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர் சுருக்கமாக.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பிக்கும்போதே சுருக்கமாக என்று சொல்லி விட்டீர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நான் பேச வில்லை என்று சொன்னீர்கள். பிறகு நீங்கள் பேசுகிறேன் என்று சொன்னதால், நேரம் கருதி சுருக்கமாகப் பேசுங்கள் என்று சொன்னேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்த மேல் சபை ஒழிப்புத் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக ஆதரிப்பதோடு, எனது கருத் துக்கள் சிலவற்றையும் இங்கே சொல்லலாம் என்று கருது கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்கள், " நான் கொண்டுவந்துள்ள



மேலவை ஒழிப்புத் தீர்மானம் " என்று குறிப்பிட்டார். இதனைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேலவை ஒழிப்புத் தீர்மானம் ஏற்கெனவே 1986-ல் கொண்டுவரப்பட்டது. அதை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமென்று 1989-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அந்தத் தீர்மானத்தை இப்போது திரும்பப் பெறுகிறோம். அதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம். அவ்வளவுதான்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : விளக்கத்திற்கு நன்றி. இந்த மேலவை ஒழிப்புத் தீர்மானம் என்பது புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம். புரட்சித் தலைவர் காலத்திலே 1986-ல் கொண்டுவரப்பட்டு மேலவை நீக்கப்பட்டதற்குப் பின்னால் மறுபடியும் தி.மு.க. ஆட்சி காலத்திலே அதைக் கொண்டுவந்தார்கள் என்பது உண்மை. அது இன்னமும் பாராளுமன்றத்திலே நிறைவேற் றப்படாத நிலையில் தமிழகத்தில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நீக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். மேலவை கூடாது என்பதில் அழுத்தம் திருத்தமான கொள்கை யுடையது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி. எங்களது உத்தமத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தொகுதிகளுக்கே செல்லாமல், 2 தொகுதிகளில் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் நின்று வென்ற வர்கள். 1952-லே அவர்கள் இங்கே இருந்தபோது பெரு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் மேலவை மூலமாக முதலமைச்சராக வந்த நேரத்தில் இந்த மேலவை இருக்கக் கூடாது ; குறுக்கு வழியில் வருகின்ற அந்த வாய்ப்பு இருக்கக்கூடாது ; பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் வரவேண்டும் ; ஆகவே இந்த மேலவை இருப்பது சரியல்ல என்ற தீர்மானத்தை 1952-லேயே கொண்டுவந்து பேசினார்கள்.

அதைத் தொடர்ந்து எங்கள் இயக்கம் சொல்லிக் கொண்டு இருக்கிறது. இப்போது காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பல அறிஞர்கள் வருகின்ற வாய்ப்பு கெட்டு விட்டது என்று பேசினார்கள். அதற்கு பல ஆசிரியர்கள் இங்கே வந்திருக்கிறார்கள், படித்தவர்கள் இங்கேயும் வந் திருக்கிறார்கள், டாக்டர்கள் வந்திருக்கிறார்கள் என்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்கூட சொன்னார்கள்.

நண்பகல் 12-00

அதே போன்று நீதித் துறையிலே இருந்தவர்கூட
இப்போது அமைச்சராக வந்திருக்கிறார். ஆகவே, அறிவூற்று
என்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது. இந்த
மாமன்றத்தில் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே வேறு
யாரும் அந்த மன்றத்திற்கு வந்துவிட முடியாது.
காரணம், புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி
அவர்களும் மேலவை வேண்டாம் என்று கொண்டு
வருகிறார்கள் என்று சொன்னால் இந்த நாட்டு மக்கள்
அவர்கள் மீது நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள், அவர்கள்
எந்தச் சந்தர்ப்பத்திலும் பொது மக்களால் தேர்ந்தெடுக்க
பட முடியும் என்ற நம்பிக்கையோடுதான் (மேசையைத்
தட்டும் ஒலி) இந்த மேல் சபையே வேண்டாம், குறுக்கு
வழி வேண்டாம், நாங்கள் மக்களைச் சந்திக்கின்ற தலை
வர்கள் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள்.
புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்ததை
புரட்சித் தலைவி அவர்கள் வந்தவுடனே, புரட்சித் தலை
வரின் ஆட்சியை அமைப்போம் என்று தேர்தல் அறிக்கை
யில் கூறியுள்ளதை நிறைவேற்றும் முகத்தான், திராவிட
முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த மேலவை வேண்டும்
என்ற தீர்மானத்தை நீக்கக் கோரி கொண்டு வந்துள்ள
இந்தத் தீர்மானத்தை எங்களது இயக்கத்தின் சார்பிலே
ஆதரிக்கிறபோது எனக்குள்ள ஒரு ஐயப்பாட்டைத் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் இயக்கத்தைச்
சேர்ந்தவர்கள் இங்கே மேலவை வேண்டும் என்று இன்றைக்
குப் பேசியிருக்கிறார்கள். இந்த மேலவை தீர்மானம்,
மத்தியிலே போனால் நமக்கு ஆதரவு கிடைக்குமா என்ற
ஐயப்பாடு எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாராளுமன்றத்
திற்குப் போகும் தீர்மானம் அல்ல.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : இந்தத் தீர்மானத்தை
நாம் நீக்குகிறபோது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இங்கே
இருந்து அனுப்பியதைத் திரும்பப் பெறும் தீர்மானம்தான்
இது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : நன்றி. ஆகவே காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவர்களும் இதை ஏகமனதாக நிறை
வேற்றிக் கொடுக்க வேண்டும் என்று தோழமைக் கட்சியைச்
சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவர்களையும் கேட்டு
க்கொள்கிறேன். வணக்கம்.



திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர்
அவர்களே, இங்கே பார்வார்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள், இந்த
தீர்மானத்தை இங்கே நிறைவேற்றினாலும், தோழமைக்
கட்சியாக இருந்தும்கூட மேலே நிறைவேற்றித் தராமல்
விட்டுவிடுவார்களோ என்று சொன்னார்கள். பொதுவாக
காங்கிரஸ் கட்சியின் நிலை என்பது சட்டமன்றங்கள்
மேலவை வேண்டும் அல்லது வேண்டாம் என்று எப்படி
தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்களோ அதிலேயிருந்து,
மாறியதே கிடையாது. வேண்டாம் என்று நிறைவேற்றி
அனுப்பினால், எதிர்க் கட்சியாக இருந்தாலும் கூட, அந்தக்
கட்சியின் வேண்டுகோளை ஏற்று மேலவையை ரத்து செய்
திருக்கிறோம். உதாரணத்திற்கு ஆந்திராவிலே என். டி.
ராமாராவ், முதலமைச்சராக இருந்தபோது, மேலவையை
ஒழித்துவிட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறை
வேற்றி அனுப்பினார்கள். அதையும் நிறைவேற்றிக் கொடுத்
திருக்கிறது காங்கிரஸ் கட்சி. அதே போல இங்கே டாக்டர்
எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது
மேலவையை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னார்
கள். அவர்களிடத்திலே அப்போது காங்கிரஸ் கட்சியின்
நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அப்படி தெளிவு
படுத்தியதற்குப் பின்னாலுங்கூட, நீங்கள் மேலவை இருக்கக்
கூடாது என்று விரும்பினால் நிச்சயமாக காங்கிரஸ் கட்சி
அதற்குக் குறுக்கே நிற்காது என்று எங்களுடைய நிலையை
நாங்கள் சட்டப் பேரவையில் சொல்லுவோமே தவிர
காங்கிரஸ் கட்சி அதற்குக் குறுக்கே நிற்காது என்று மிகவும்
தெளிவாக அன்றையதினம் தெரிவித்ததோடு, அவர் விரும்பிய
படி மேலவை தமிழ்நாட்டிலே ஒழிக்கப்பட்டது. இப்போது,
மேலவை மீண்டும் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று,
திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம்' நிறைவேற்றிய
தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் இங்கே தீர்மானம் கொண்டு
வந்திருக்கிறார்கள். எங்களுடைய நிலையைப் பொறுத்த
வரையில் நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். மேலவை
இருக்க வேண்டும் என்று எங்கள் தேர்தல்
அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். நாங்கள் மேலவை
இருக்க வேண்டும் என்று சொல்லி நாங்கள் வாக்குகளைப்
பெற்றிருக்கிறோம். எனவே இந்தத் தீர்மானத்தில் எங்களை
ஈடுபடுத்திக் கொண்டு இங்கே உங்களுக்குத் துணையாக,
இங்கே வாக்களிக்க முடியாது என்று சொன்னேனே தவிர,
மேலே குழப்பத்திற்கு இடம் கிடையாது. இந்தப் பேரவை
எதை விரும்புகிறதோ அதற்குக் குறுக்கே நிச்சயமாக
காங்கிரஸ் கட்சி நிற்காது என்ற உத்தரவாதத்தை அளிக்
கிறேன். இதிலே சந்தேகமே வேண்டியதில்லை. ஒரே ஒரு

சிறிய விளக்கம் தர விரும்புகிறேன். ஆசிரியர்கள் 8 பேர் இந்த அவையிலே இருக்கிறார்கள். பேராசிரியர் பொன்னு சாமி இருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பேராசிரியர் பொன்னுசாமி என்னோடு சென்ற சட்டப் பேரவையில் பணியாற்றினார். இவர்கள் எல்லாம் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டு இந்தப் பேரவையிலே உறுப்பினராக இருக்கவில்லை. ஆனால் மேலவை என்று இருந்தால் ஆசிரியர்களாக பணியாற்றிக் கொண்டே அந்த மேலவையிலே உறுப்பினராக இருக்க முடியும்; ஆசிரியர் சமுதாயத்தினுடைய நேரடிப் பிரதி நிதியாக அந்த அவையிலே பணியாற்ற முடியும் என்பதை தான் சொல்ல வந்தேன் என்று கூறி, இந்த விளக்கம் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். நாங்கள், நிச்சயமாக குறுக்கே நிற்கமாட்டோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன விளக்கத்தையொட்டி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் எப்படி தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதைப் போலவே இருக்கக்கூடிய பத்து இலட்சம் அரசு ஊழியர் களும் தங்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மேலவை என்பது முழுமை பெற்றதல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இட ஒதுக்கீடு சம்பந்தமாக இரண்டு நாட்களுக்கு முன்னாலே இந்த அவை யிலே விவாதம் நடைபெற்றது. அன்றையதினம் ஒரு உறுப்பினர் கூட இட ஒதுக்கீடு காரணத்தாலே நான் பட்டம் பெறவில்லை; என்னுடைய திறமையினாலே பட்டம் பெற்றேன் என்று சொன்னார். அதேபோல ஆசிரியர்களாக இருப்பவர்கள், வியாபாரிகள், வேறு துறைகளிலே இருப்ப வர்கள் போட்டிப் போட்டு சட்டப்பேரவைக்கு வெற்றி பெற்று வரக்கூடியவர்கள் இருக்கிறார்கள். நான் இல்லை யென்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் தொழிலிலே தொடர்ந்து இருந்துகொண்டு, தேர்தலிலே நின்று வெற்றி பெற்று வரக்கூடியவர்களாக இல்லாத காரணத்தினாலோ அதற்கு ஒரு இட ஒதுக்கீடு இருப்பது போல மேலவை என்பது ஒரு இட ஒதுக்கீடு. அண்ணா அவர்கள் ஒருபோதும் மேலவை வேண்டாம் என்று சொன்னது இல்லை. அவர் 'கப் அண்ட் சாசர்' உதாரணத்தை அதற்காகத்தான்



சொன்னார். அண்ணா அவர்கள் மேலவை இருக்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் இன்றையதினம் மாறுபட்ட சூழ்நிலையிலே நீங்கள் மாறுபட்ட கருத்தைச் சொல்வதை தவறு என்று நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். எங்களாலே உங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுப் பதற்கு நாங்கள் எங்களாலே இயலவில்லை என்றுதான் சொல்கிறோமே தவிர உங்களுடைய எண்ணமே தவறு, ஏன் இப்படி ஒரு எண்ணம் வந்தது என்று நாங்கள் புதி தாக ஒரு கேள்வி எழுப்பவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலே எடுத்த முடிவு இது. அதிலே நீங்கள் மாற்றம் இல்லாமல் அப்படியே நிற்கிறீர்கள். அதை என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல எங்களுடைய தேர்தல் அறிக்கை யிலே சொன்னதை நாங்கள் மீண்டும் இங்கே நினைவு படுத்துகிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்களுடைய திருநாமத்தை உச்சரித்ததனாலே ஒரு விவரத்தைச் சொல் வது எனது கடமை. அண்ணா அவர்கள் மேலவையை ஆதரித்தார்கள், ஆதரித்தார்கள் என்று அவர்கள் வற்புறுத்து கிறார்கள். ஆனால், அண்ணா அவர்களுடைய அணுகுமுறை எது என்றால், மக்கள் அப்போது எதை விரும்புகிறார் களோ அதற்காக தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்வது அல்லது திருத்திக்கொள்வது; மறுபரிசீலனை செய்வது என்பது அண்ணாவினுடைய கொள்கை. ஒரு காலத்திலே பிரிவினையைக் கேட்டார்கள். மக்கள் விரும் பாத நேரத்திலே மாற்றிக்கொண்டார்கள். ஆக, அண்ணா இப்போது உயிரோடு இருந்தால் நிச்சயமாக மேலவையை ஆதரிக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவைகள் என்ற அமைப்புகள் அந்நியர் நம்மை ஆண்டபோது 1919 ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தக் குழு கொடுத்த அறிக்கை ஒன்றினால் உருவானவைகளாகும். அதன் பின்னர் 1935-ல் உருவான இந்திய அரசாங்கச் சட்டமும் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டது.

இப்படி நம் தேசம் அடிமைப்பட்ட காலத்தில், ஜனநாயகரீதியாக அமையும் சட்டமன்றப் பேரவைகளுக்குப் போட்டியான ஓர் அமைப்பைப் போன்றே இந்த சட்டமன்ற மேலவைகள் அமைக்கப்பட்டதாக, அவை அமைந்த காலம் தொட்டே நற்சிந்தனையாளர்கள் பலரும் கருதி வந்தனர். எனவே, நம் நாடு சுதந்திரம் அடைந்தவுடன் பல்வேறு மாநிலங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மேலவை தங்கள் மாநிலங்களுக்குத் தேவை இல்லை என முடிவு எடுத்து வந்துள்ளன. கடைசியாக மராட்டியம், பீகார், உத்திரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய 6 மாநிலங்களில் மட்டுமே 1985 ஆம் வருட வரையிலான காலத்தில் மேலவைகள் இயங்கி வந்தன. 1985-ல் ஆந்திர மாநிலத்திற்கு சட்டமன்ற மேலவை தேவை இல்லை என முடிவு எடுத்து அதை நீக்கினார்கள். தொடர்ந்து தமிழகத்தில் 14—5—1986-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் சட்டமன்ற மேலவை நீக்கப்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப் பட்டது. தற்போது இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களில் ஐந்தே மாநிலங்களில்தான் மேலவைகள் உள்ளன. இதிலிருந்தே ஒரு ஜனநாயக அமைப்பில் மேலவை வேண்டும் என்ற கருத்து எவ்வளவு வலுவிழந்த ஒன்று என்பதை எளிதில் எவரும் தெரிந்துகொள்ளலாம்.

மேலவை இருக்கலாம் என்ற கருத்துக்களை இங்கே எடுத்து வைத்துள்ள சில மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் வெளியில் இருந்து நாள்தோறும் ஏதேனும் எழுதிக் கொண்டிருக்கும் 'மேதாவிகள்' சிலருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) சில உண்மைகளை இந்த நேரத்தில் எடுத்துக் கூறுவது என் கடமை எனக் கருதுகிறேன்.

1932 ஆம் ஆண்டிலேயே தமிழகத்தில் சட்டமன்ற மேலவை தேவையற்ற ஒன்று என்ற கருத்து திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1932 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7, 8 ஆகிய இரு நாட்கள் இது பற்றிய விவாதம் இதே மன்றத்தில் நடைபெற்று, "It is resolved that in the conditions of this province, the constitution of Second Chamber is unnecessary and undesirable," என இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடிமைப்பட்டுக் கிடந்த 1932-லேயே இத்தகைய ஒரு தீர்மானம்— ஆதரித்தவர்கள் 46 பேர்; எதிர்த்தவர்கள் 22 பேர் என்ற அளவில், மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் ஆதரவு பெற்று நிறைவேறறப்பட்டுள்ளது. ஆனால்,





இன்றைக்கு சுதந்திரமடைந்த நாட்டில் வேண்டாம் என ஒழிக்கப்பட்ட மேலவை மீண்டும் எங்களுக்கு வேண்டும் என சிலர் இங்கே தீர்மானம் போட்டுள்ளார்கள் என்றால் அவர்களைப் பற்றி நாடு என்ன நினைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்தான் கூறவேண்டும்.

பிற்பகல் 12-10

மேலும் 1969-இல் மேற்கு வங்கத்தில் இருந்த மார்க்சிஸ்ட் கூட்டணி அரசான திரு. அஜாய் முகர்ஜி அவர்களது ஆட்சி அங்கேயிருந்த மேலவையைச் சட்டமன்றப் பேரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் நீக்கம் செய்தது.

இருந்தும் அதன்பின்னர் அங்கே அமைந்த காங்கிரஸ் ஆட்சி மீண்டும் மேலவையைக் கொண்டு வருவோம் என மறு தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கவில்லை. பெருந்தன்மையோடு பேசாமல் விட்டு விட்டனர். ஆனால் தமிழகத்தில்தான் புரட்சித் தலைவர் மறைவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க.வினர் புரட்சித் தலைவர் அவர்கள் செய்த அத்தனை திட்டங்களையும் அரசியல் பொறாமையோடு மாற்றும் செயல் திட்டத்தில் இறங்கினார்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா மாவட்டம் என பெயர் வைத்ததைக்கூட அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மகாத்மா காந்தி ஆராய்ச்சி நிலையம் என்றிருந்ததுகூட அவர்கள் கண்களுக்கு எரிச்சலை ஊட்டியது. அத்தனை பெயர்களையும் மாற்றினார்கள்.

அதேபோல்தான், அனாவசியமான செலவினத்தையும்— அடிமைத்தன முத்திரையினையும்— முற்போக்குச் சிந்தனைகளுக்கு முட்டுக்கட்டையாகவும் இருந்த சட்டமன்ற மேலவையினைப் புரட்சித் தலைவர் அவர்கள் ஒழித்தார் என்கிற காரணத்திற்காக மீண்டும் நாங்கள் கொண்டு வருவோம் என ஏட்டிக்குப் போட்டியான ஒரு முடிவினை எடுத்தார்கள்.

எப்படி தி.மு.க. ஆட்சியினரால் சிதைத்துச் சீரழிக்கப் பட்ட பல்வேறு பெயர்கள் மீண்டும் தற்போது சூட்டப் பட்டுள்ளனவோ அதேபோல் புரட்சித் தலைவரால் முடிவெடுக்கப்பட்ட 'மேலவை ஒழிப்பு' என்பதை மீண்டும் உறுதிப்படுத்திட இத்தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்போக்குச் சிந்தனை கொண்ட அனைத்து மேலை நாட்டுச் சிந்தனையாளர்களும் ஜனநாயக அமைப்பில் இரண்டாம் அவை எனக் கருதப்படும் மேலவை தேவை யற்றது என்பதையே மிகத் திட்டமாகக் கூறி வந்துள்ளனர்.

இதே பேரவையில் 1962-ல் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி யின் முதுபெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த, மறைந்த பெரியவர் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள் "சிக்கனம் தேவை என்று சொன்னால், மிகச் சரியான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமானால் தேவையற்ற மேலவையைக் கலைத்து விடலாம் என்பது என் அபிப்பிராயம்" எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்தில் மேலவைக்கு வழிவகுத்த அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மிகத் தெளிவுபட ஒரு கருத்தினை வலியுறுத்தியுள்ளார் என்பதை எண்ணிப் பார்த்தால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986-ல் மேலவையைக் கலைத்தது மிகச் சரியான செயல் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் காலத்திற்கேற்ப பல்வேறு மாற்றங்கள் செய்யவேண்டிய அவசியம் நேரும் என்பதைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்திருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூறுகிறார்—

"..All that we are doing by this Constitution is to introduce the Second Chamber purely as an experimental measure. We have not, by the Draft Consttiution, given the Second Chamber a permanent place; we have not made it a permanent one: we have not made it a permanent part of our Constitution. It is purely an experimental measure, as I said, and there is sufficient provision in the present article for getting rid of the Second Chamber.." என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூறியுள்ளார்.

அண்ணல் அம்பேத்கார் எவ்வளவு தெளிவாக, திட்ப மாக, உறுதியாகக் கூறியுள்ளார் பாருங்கள். "மேலவை எனப்படும் இந்த இரண்டாம் அவை எப்போதும் நிலைத் திருக்க வேண்டிய ஒன்று அல்ல; தற்காலிகமான ஏற்பாடு தான். இதனை என்றைக்கு வேண்டுமானாலும் ஒதுக்கிக் கொள்ளலாம், நீக்கிவிடலாம், கலைத்து விடலாம்" என அண்ணல் அம்பேத்கார் அவர்களே கூறியுள்ள இக்கூற்றுக் களை எல்லாம் ஆராய்ந்து அறிந்த பிறகே எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மேலவையினை நீக்கியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி).





இடையில் வந்த தி.மு.க. அரசு எம்.ஜி.ஆர். செய்த காரியங்கள் அனைத்தையும், நல்லதோ கெட்டதோ மாற்று வோம் என அரசியல் காழ்ப்புணர்வோடு நிறைவேற்றி யுள்ள தீர்மானம் தான் 'மேலவை வேண்டும்' என்ற தீர்மானமாகும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் அரசு நடத்திட சபதமேற்றுப் பொறுப்பினை ஏற்றுள்ள நாங்கள் அவர் எடுத்த முடிவின்படியும், தெரிவித்த அனைத்து முற்போக்கு சிந்தனையுள்ளம் கொண்டவர்கள் கூறியுள்ள கருத்துக்களின் படியும் தமிழகத்திற்கு மேலவை தேவையில்லை என முடி வெடுத்து இத்தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னர் வைத்துள்ளோம். இங்கே பேசிய சிலருடைய வாதப்படியே கூடப் பார்த்தாலும் மேலவை என்பது அரசுக்குத் தேவையற்ற கூடுதல் செலவை உண்டாக்குவதாகத் தான் அமையும்.

பிற்பகல் 12.15

அதே நேரத்தில் மேலவையில் படித்த பட்டதாரிகள், ஆசிரியர்கள், மகளிர், ஊராட்சி நிர்வாகத்தில் இருந்தோர் எனப் பலதரப்பட்ட வாழ்க்கை அனுபவம் பெற்றவர்கள் இடம் பெற்றிருந்தார்களே, தொடர்ந்து இடம் பெற வாய்ப்பு உள்ளதே எனக் கேட்பவர்கள், இன்றையதினம் நமது பேரவையில் இடம் பெற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் களின் கல்வித் தகுதிகளை சற்று பார்த்தாலே தெரியும். நமது சட்டமன்றப் பேரவை 10 பொறியாளர்களையும், 56 சட்ட நிபுணர்களையும், 21 டாக்டர்களையும், 7 ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்களையும், 8 பேராசிரியர்களையும், 14 முதுகலைப் பட்டம் பெற்றவர்களையும், 30 பட்டதாரி களையும் கொண்ட சிறப்பான அவையாக அமைந்து உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). பல்வேறு தகுதி மிக்கவர்களை ஜனநாயக முறைப்படி பொதுத் தேர்தல் மூலமே நாம் பெற்றிருக்கும் இத்தருணத்தில் மேலவை மீண்டும் தேவை என்பதற்கு வலுவான காரணங்கள் எழவில்லை என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே தெரிவித்த கருத்துக் களுக்கு, அவர்கள் தற்சமயம் இந்த அவையிலே இல்லை என்றாலும் கூட, பதில் அளிப்பது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன். ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், அண்மையில் மத்திய அரசாங்கம் கூட்டிய "Inter State Sub-Committee on Sarkaria Commission" என்ற ஒரு கூட்டத்தில் கூட எல்லா மாநிலங்களிலும் ஒரு யூனிபார்ம் பாலிசி இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள் என் பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய

அரசு அண்மையில் 26 ஆம் தேதி கூட்டிய ''Inter
State Sub-Committee on Sarkaria Commission'' கூட்டத்
தின் போது, ஒன்று இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்
களிலும் மேலவை இருக்க வேண்டும் அல்லது அனைத்து
மாநிலங்களிலும் மேலவையை நீக்க வேண்டும் என்ற கருத்து
வலியுறுத்தப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் இங்கே
பேசுகின்ற போது, நான் கூட எனது அரசியல் வாழ்க்கையின்
தொடக்கத்தில் முதன் முதலில் ராஜ்யசபாவிற்குத்தான் சென்
றேன் என்பதைக் குறிப்பிட்டார். அது உண்மைதான்.
ஆனால், அது நானாக எடுத்த முடிவு அல்ல. அது
என்னுடைய தலைவர், அரசியல் ஆசான், இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த முடிவு. (மேசையைத்
தட்டும் ஒலி). அன்றைக்குக் கூட புரட்சித் தலைவர்
அவர்கள் இதை என்னிடம் தெரிவித்தபோது, அவரிடம்
சென்று, என்னை ஏன் மேலவைக்கு அனுப்புகிறீர்கள்,
தேர்தலில் நின்று மக்களுடைய வாக்குகளைப் பெற்று
தேர்தலில் நிற்பதற்கு எனக்கு வாய்ப்பு அளியுங்கள் என்று
தான் அவரிடம் கேட்டேன். ஆனால், 'இல்லை, இப்போது
நான் சொல்கிறேன். நீ ராஜ்யசபைக்குச் சென்றுதான்
ஆகவேண்டும்' என்று புரட்சித் தலைவர் அவர்கள் கட்டளை
யிட்டார்கள். எனவே என்னுடைய அரசியல் ஆசானின்
கட்டளைக்குக் கட்டுப்பட்டு, நான் ராஜ்யசபை உறுப்பினராகப்
பணியாற்றினேன் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் எஸ். வி. சண்முகம் அவர்கள் இங்கே
பேசுகின்றபோது, விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்
கள், இவர்கள் எல்லாம் அல்லது இவர்களுடைய பிரதிநிதி
கள் மேலவைக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை என்பதைக்
குறிப்பிட்டார்கள். உண்மைதான். ஏற்கெனவே நான் குறுக்
கிட்டுப் பேசுகின்றபோது குறிப்பிட்டதைப் போல மேல்தட்டு
மக்கள் மட்டுமே மேலவைக்கு வருகின்ற வாய்ப்பைப்
பெற்றவர்களாக இருக்கிறார்கள். இதனால் நாட்டுமக்களுக்கு
எவ்விதப் பயனும் இல்லை என்பதுதான் உண்மையாகும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன்
அவர்கள் பேசுகின்றபோது, இங்கே பேசப்படுகிற கருத்துக்கள்
தான் மேலவையிலும் பேசப்படுகின்றன. இங்கே நிறை
வேற்றப்படுகின்ற தீர்மானங்கள்தான் மேலவையிலும் நிறை
வேற்றப்படுகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள்.
அதனுடைய மறு பக்கத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி,
மேலவையில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை
என்றால், அது திரும்ப இங்கே அனுப்பப்படும். மீண்டும்



இந்தப் பேரவையில் நிறைவேற்றினாலும் மறுபடியும் அது
மேலவைக்குப் போய் அங்கே நிறைவேற்றப்பட்டால்தான் அது
சட்டமாக முடியும். எனவே, மேலவை இருப்பதால்,
தேவையற்ற சிக்கல்கள்தான் ஏற்படும் என்பதும் உண்மையே.

இறுதியில் நான் கூறவிரும்புவது, மேலவை கூடாது
என்பது எங்கள் வாதம் அல்ல. மேலவை தேவை இல்லை
என்பதுதான்.

எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
நாம் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு நெடுங்காலமாயிற்று.
மாண்டேகு செம்ஸ்போர்டு உருவாக்கிய மேலவைகள் இந்தியா
வில் இன்றைய சூழ்நிலையில் வேண்டாம், அதுவும் ஜனநாயகத்
தின் காவல் கோட்டையாக விளங்கும் தமிழகத்தில் வேண்டவே
வேண்டாம் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) சீரிய கொள்
கையின் அடிப்படையில் எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். வழியில் நாங்கள் கொண்டு வந்துள்ள இத்
தீர்மானத்தை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்றித்
தரவேண்டுமெனக் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

பிற்பகல் 12.20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

தீர்மானம் அவையின் முடிவிற்கு வைக்கப்பெறவேண்டும்.
அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 169(1)-ன்படி இந்தத் தீர்
மானம் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்று அறிய வாக்குப்
பதிவு செய்யப்படவேண்டும். பேரவையின் முடிவை அறிய
''எண்ணிக் கணிக்கும் முறையைப்' (Division)
பின்பற்ற வேண்டும். எனவே, தற்பொழுது பேரவைச்
செயலாளர் அழைப்பு மணியை அடிப்பார்.

(அழைப்பு மணி இரண்டு நிமிடங்கள் அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அவரவர்
களுடைய இருக்கையில் அமர வேண்டும். நுழைவாயில்கள்
அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன்.

(நுழைவாயில்கள் மூடப்பட்டன).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஏற்கெனவே
அறிவித்தபடி முடிவிற்கு விடப்படுகிறது. பேரவைச்
செயலாளர் தற்பொழுது பிரிவு வாரியாக உறுப்பினர்களைப்
பெயர் குறிப்பிட்டுப் படிப்பார்.

பிளாக் 1.

தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. திரு. கா.ப. பட்டாபிராமன்.
2. பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்).
3. திரு. எஸ். அண்ணாமலை.
4. திரு. ஓ. எஸ். அமர்நாத்.
5. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.
6. திரு. வி.கே. சின்னசாமி.
7. திரு. ஆர்.டி. அரங்கநாதன்.
8. திரு. க. அர்ச்சுனன்.
9. திரு. ஆ. அறிவழகன்.
10. திரு. எஸ். அன்பழகன்.
11. திரு. எஸ். ஆசைமணி.
12. டாக்டர் ச. ஆரோக்கியசாமி.
13. திரு. எம். தங்கவேல்.
14. திரு. த. க. இராதாகிருஷ்ணன்.
15. திரு. சி. இராமசுவாமி.
16. திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்.
17. திரு. இராம. இராமநாதன்.
18. திரு. கி. இராஜன்பாபு (எ) தணிகை.
19. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.
20. டாக்டர் எம். கருப்புசாமி.
21. திரு. பி. கலியபெருமாள்.



தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்— ஒருவருமில்லை.

பிளக் 2.

தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

22. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா.
23. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
24. மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி.
25. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
26. மாண்புமிகு திரு. இராம வீரப்பன்.
27. மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி.
28. மாண்புமிகு திரு. முகமது ஆசிப்.
29. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி.
30. மாண்புமிகு திரு. மு. ஆனந்தன்.
31. திரு. துரை ராமசாமி.
32. திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.
33. திரு. ச. காந்திராஜன்.
34. டாக்டர் மு. காளிராஜன்.
35. திரு. சி. கிருஷ்ணன்.
36. திரு. க. குப்பன்.
37. திரு. ஆர். கோடி மாரி.
38. திரு. வே. கோபாலகிருஷ்ணன்.
39. டாக்டர் க. கோபால்.
40. திரு. மா. கோவிந்தராசு.
41. திரு. சிங்கை கோவிந்தராசு.

42. திரு. எஸ். சண்முகநாதன்.

43. திரு. வ. சத்தியமூர்த்தி.

44. திரு. வி. பி. சந்திரசேகர்.

45. திரு. தி. சாத்தையா.

46. திரு. கே. சிங்காரம்.

47. திரு. கு. சிவசுப்பிரமணியன்.

48. திரு. என். ஆர். சிவபதி.

49. திரு. ம. சின்னசாமி.

50. திரு. கா. சின்னசாமி.

51. திரு. ஆ. கு. சீனிவாசன்.

52. திரு. கு. சீனிவாசன்.

53. திரு. எம். கே. சுந்தரம்.

54. திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்.

55. திரு. வ. மு. சுப்பிரமணியன்.

56. திரு. வீ. சுப்பிரமணியன்.

57. திரு. ஆ. சுப்புரத்தினம்.

58. திரு. ஏ. டி. செல்லசாமி.

* * *

59. திரு. தா. செழியன்.

60. டாக்டர் எம். பி. சேகர்.

61. திரு. எம். ஜி. சேகர்.

62. திரு. பி. சொக்கலிங்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.—ஒருவருமில்லை



பிளாக் 3.

தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

63. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி.

64. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

65. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்.

66. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு.

67. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்.

68. திருமதி கே. எம். கலைச்செல்வி.

69. திருமதி கவிநிலவு தர்மராஜ்.

70. திருமதி கற்பகம் இளங்கோ.

71. திருமதி என். சி. கனகவல்லி.

72. திருமதி ரா. சக்குபாய்.

73. திருமதி டி. சக்குபாய் தேவராஜ்.

74. திருமதி அ. தி. சரஸ்வதி.

75. திருமதி ப. சரஸ்வதி.

76. டாக்டர் (திருமதி) வெ. சரோஜா.

77. திருமதி ரெ. சியாமளா.

78. திருமதி செ. சுந்தராம்பாள்.

79. செல்வி எல். சுலோசனா.

80. செல்வி பி. நிர்மலா.

81. திரு. கு. தங்கமுத்து.

82. திரு. வெ. தமிழரசு.

[illegible] திரு. [illegible] தர்மலிங்கம்.

[1991 அக்டோபர் 4

84. திரு. பெ. தர்மலிங்கம்.

85. திரு. கே. தவசி.

86. திரு. ம. தனபால்.

87. திரு. சி. தாமோதரன்.

88. திரு. எஸ். எம். துரை.

89. திரு. கே. எஸ். துரைமுருகன்.

90. திரு. மு. தென்னவன்.

91. திரு. அ. தேவராஜ்

92. திரு. மு. நடேசன்.

93. திரு. வெ. நடேசன் பால்ராஜ்.

94. டாக்டர் ஜெ. பரந்தாமன்.

95. திரு. ஏ. எம். பரமசிவன்.

96. திரு. அ. மா. பரமசிவம்.

97. திரு. க. பழனிசாமி.

98. திரு. வெ. பழனிசாமி.

99. திரு. தேனி பன்னீர்செல்வம்.

100. திரு. அ. பாப்பா சுந்தரம்.

101. திரு. ஜெ. பாலகங்காதரன்.

102. திரு. இ. பாலசுப்பிரமணியன்.

103. திரு. எம். கே. பாலன்

104. டாக்டர் வெ. புருஷோத்தமன்.



1991 அக்டோபர் 4] [பேரவைத் தலைவர்]

பிளாக் 4.

தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

105. திரு. ஜி. பழனிசாமி.

106. திரு. எஸ். ஆண்டித்தேவர்.

107. திரு. செ. கு. தமிழரசன்.

108. திரு. நா. சா. பழனிசாமி.

109. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

110. டாக்டர் இ. இராமகிருஷ்ணன்.

111. திருமதி கே. பஞ்சவர்ணம்.

112. திருமதி கே. பழனியம்மாள்.

113. திருமதி இரா. பாண்டியம்மாள்.

114. டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை.

115. திருமதி வி. ஜி. மணிமேகலை.

116. திருமதி மரியமுல் ஆசியா.

117. செல்வி கோ. மல்லிகா.

118. டாக்டர் (திருமதி) பியாட்ரிக்ஸ் டிசோசா.

119. திரு. எம். பூராசாமி.

120. திரு. வே. பெரியசாமி.

121. திரு. எம். பெரியவீரன்.

122. திரு. செ. பெருமாள்.

123. திரு. எ. தா. பொன்னுவேலு.

124. டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா.

125. டாக்டர் (திருமதி) மு. சின்னம்மாள்.

126. திரு. கே. பி. மணிவாசகம்.

127. திரு. சி. மாணிக்கம்.

128. திரு. கே. ஆர். முருகானந்தம்.

129. திரு. ஆர். முருகையா பாண்டியன்.

130. திரு. கே. முனிவெங்கடப்பன்.

131. திரு. கா. பூ. முனுசாமி.

132. திரு. து. மூர்த்தி.

133. திரு. செ. ரகுபதி.

134. திரு. டி. எம். ரங்கராஜன்.

135. திரு. த. ரத்தினவேல்.

136. திரு. வி. பி. ஆர். ரமேஷ்.

137. திரு. ஏ. ரவிக்குமார்.

138. திரு. வி. ரவிச்சந்திரன்.

139. திரு. கே. ஆர். ராஜு.

140. திரு. கே. பி. ராஜு.

141. திரு. கு. லாரன்ஸ்.

142. திரு. செ. து. வரதராஜன்.

143. திரு. ஜி. விசுவநாதன்.

144. டாக்டர் பெ. வீரபாண்டியன்.

145. திரு. தா. வேடியப்பன்.

146. திரு. என். ஜி. வேணுகோபால்.

147. திரு. டி. வேலையா.

148. திரு. கே. ஜனார்த்தனன்.



149. திரு. எஸ். ஜெயக்குமார்.

150. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

151. டாக்டர் அ. ஸ்ரீதரன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.— ஒருவருமில்லை.

பிளாக் 5.

தீர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்கும் படிக் கேட்டுக் கொள்கிறேன்.

152. திரு. செ. ஆறுமுகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.— ஒருவருமில்லை.

பிளாக் 6.

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.— ஒருவருமில்லை.

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.— ஒருவருமில்லை.

எல்லா பிளாக்குகளிலேயும் நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்— ஒருவருமில்லை.

(வாக்குகள் எண்ணிக் கணிக்கப் பெற்றன).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கு எண்ணிக்கையின் முடிவு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை ஏற்போர் 152 பேர். (மேசையைத் தட்டும் ஒலி).

மறுப்போர் ஒருவரும் இல்லை. —

நடுநிலை வகிப்போர் ஒருவரும் இல்லை. —

அவையின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்கு மேலும் இன்று அவையில் வாக்கெடுப்பின்போது வாக்களித்தவர்கள் அனைவரும்—அதாவது வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு அதிகமான உறுப்பினர்கள் தீர்மானத்தை ஏற்று வாக்களித்துள்ளதால் தீர்மானம் அவையால் நிறைவேற்றப் பட்டது என்று அறிவிக்கிறேன்.

எனக்கும் தனிப்பட்ட முறையில் பெருமகிழ்ச்சிதான்.

வெறும் பதினோரு உறுப்பினர்களாக பாராளுமன்றத்தில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவிடாமல் தடுக்க நாங்கள் பட்ட பாட்டுக்கெல்லாம் இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்கள் பலன் கொடுத்துவிட்டார்கள் என்கின்ற மகிழ்ச்சியை மாண்புமிகு உறுப்பினர்களோடு சேர்ந்து நானும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92. (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1991-92 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

### MESSAGE

"In pursuance of clause (3) of Artical 203 of the constitution of India, I Bhisma Narain Singh, Governer of Tamil Nadu, herely reccmmend to the Tamil Nadu Lesislative Assembly to make further grants to the demands for the year 1991-92."

## 8. முதல் துணை நிதிநிலை அறிக்கை.

### 1991-92 பொது விவாதமும் அவ்வாண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். 1991-92 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய [illegible]-1991 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1991-92 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை நான் பேரவை முன் வைக்கிறேன்.



| கோரிக்கை. (1) | (ரூபாய். ஆயிரத்தில்) (2) |
|---|---|
| A வருவாய்க் கணக்கில் செலவு. | |
| 2 மாநில ஆயத்தீர்வைத் துறை .. .. | 13,49 |
| 8 தேர்தல்கள் .. .. .. | 48,84 |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 48,98 |
| 11 மாவட்ட நிருவாகம் .. .. | 90,73 |
| 12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். | 5,00 |
| 13 நீதி நிருவாகம்.. .. .. .. | 56,59 |
| 15 காவல் துறை .. .. .. .. | 1,90,95 |
| 16 நியமைப்புப் பணிகள் .. .. | 3,41,80 |
| 17 கல்வி .. .. .. .. .. | 1,99,74 |
| 18 மருத்துவம்.. .. .. .. | 36,64 |
| 20 வேளாண்மை.. .. .. .. | 13 81 |
| 21 மீனளம்.. .. .. .. .. | 20,00 |
| 23 கூட்டுறவு.. .. .. .. .. | 7,29 |
| 24 தொழில்கள்.. .. .. .. | 5,31,00 |
| 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்.. | 10,00 |
| 30 சமூக நலன்.. .. .. .. .. | 1,68,93 |
| 33 வீட்டு வசதி.. .. .. .. | 12,00 |
| 34 நகர்ப்பகுதி வளர்ச்சி.. .. .. | 3 |
| 40 போக்குவரத்து பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.. | 5,81,50 |

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 அக்டோபர் 4

| | | |
|---|---|---|
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். . | 10,40 |
| 43 | பல்வகை ... .. .. | 2 |
| 47 | செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் | 38,79 |
| 48 | ஊரகத் தொழில்கள். . .. .. | 50,01 |
| 49 | குடிநீர் வழங்கல் | 7,75 |
| 50 | நகராட்சி நிருவாகம். . .. .. | 20,00 |
| 52 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு .. .. | 5,00 |
| | மொத்தம்—A வருவாய்க் கணக்கில் செலவு | 25,08,50 |

B. வருவாய்க் கணக்கில் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. . | 1,50,00 |
| 56 | பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. . | 2,07,10 |
| 59 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 1,27,94 |
| 61 | பல்வகை மூலதனச் செலவு. . .. | 32,22 |
| | மொத்தம்— B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு. | 5,17,26 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக்கொடுத்தலும்.

| | | |
|---|---|---|
| [illegible] | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். . | 1,26,62 |
| | பெரு மொத்தம் | 31,52,38 |



1991 அக்டோபர் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். திரு. கி. செல்வராஜ்.

**திரு. கி. செல்வராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மகளிர் காவல் பிரிவிற்கு 400 பதவிகளை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளதில் எந்தெந்தப் பதவிக்கு எத்தனை பேர் என்பதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,90,95,000 நிதி ஒதுக்கத்தில் ரூ. 1 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே, விவாதத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டுகிறேன். இதையடுத்து நிதி ஒதுக்க மசோதா மாலையில் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். மற்ற உறுப்பினர்கள் அதில் பேசிக்கொள்ளலாம். இதில் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் மட்டும் தங்களுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும். திரு. சி. சுவாமிநாதன்.

**திரு. சி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானிய கோரிக்கையின் பல்வேறு சிறப்பு அம்சங்களையும் மற்றும் இப்போது நிறைவேற்றப்பெற்றிருக்கின்ற வரவு செலவுத் திட்டங்கள் அத்தனையையும் மனப் பூர்வமாக வரவேற்கிறேன்.

இங்கே நிறைவேற்றப்பட்டு இருக்கின்ற பல்வேறு சிறப்பு அம்சங்களை புரட்சித் தலைவியார் அவர்களுடைய ஆட்சியில் மிகச் சிறப்பாக செயல்படுத்தி வந்திருக்கிறீர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே அண்ணல் காந்திஜி அவர்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற வகையில் இந்த நாட்டு மக்களால் பாராட்டப்படுகின்ற வகையில் மது விலக்கு கொள்கையை மிகச் சீரோடும் சிறப்போடும் இங்கே அமல்படுத்தி இங்கே தாய் குலத்தினுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறீர்கள்.

அதே போல தொழில் துறையைப் பொறுத்த வரையிலும் இந்த நாட்டை நீண்டதூர பார்வைக்கு இட்டுச் செல்கின்ற ஒரு நல்ல நோக்கத்தோடு, இந்த நாட்டில் வேலை இல்லாதவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பினை கொடுக்கின்ற நல்ல சூழ்நிலையை உருவாக்குகின்ற நோக்கத்தோடு, தொழில் துறையிலும் சிறப்பான பல அம்சங்களை நிறைவேற்றியிருக்கிறீர்கள். அதை போல அண்ணல் காந்திஜியினுடைய கிராம ராஜ்யமே ராம ராஜ்யம் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதியாதாரத்தை ஒதுக்கி, கிராமப்புறங்களில் உள்ள சாதாரண மக்கள் தங்களுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு சிறப்பான திட்டத்திற்கு வழி வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 12–45

அதே போல் நில சீர்திருத்தச் சட்டத்தை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்கிற வகையில் ஏழை எளிய விவசாய பெருங்குடி மக்களுக்கு வாழ்வு அளிக்கிற வகையில் பல சிறப்பான திட்டங்களை நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் இங்கே தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டு மக்கள் மிகுந்த பாசத்தோடு பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் அச்சம் இல்லை.

அதே போல் இங்கே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இங்கே அமர்ந்து இருக்கிற அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அவரவர்களுடைய துறைகளுக்கு ஏற்ட நல்ல முறையில் ஆய்வு செய்து அவர்களால் இயன்ற அளவுக்கு இருக்கிற நிதியைப் பொறுத்து சிறப்பான பல்வேறு அம்சங்களை நிறைவேற்றி தமிழக மக்களால் பாராட்டுகின்ற நல்ல சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இங்கே குடிநீர் பஞ்சம் என்பது மிகக் கடுமையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1¼ லட்சம் மக்கள் வாழ்கின்ற அந்த புதுக்கோட்டை நகரத்திற்கு ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் உலக வங்கியின் நிதி ஆதாரத்தோடு துவக்கப்பட்டு அது இப்போது டெண்டர் விடுகின்ற சூழ்நிலையில் இருப்பதாக அரசு அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனாலும் அந்த டெண்டர் விட்ட முறையில் தவறுகள் அல்லது டெண்டர் கோருகின்றவர்கள் அதிக பர்சென்டேஜ் கேட்டதன் காரணமாக இப்போது அது செயற்படுத்த முடியாமல் நிலுவையில் இருக்கிறது என்பதை அரசு அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் குறைகளை உடனடியாக போக்கி காவிரி தண்ணீரை புதுக்கோட்டைக்குக் கொண்டுவரவேண்டும். அந்த ஜீயபுரத்திலிருந்து



விராலிமலை, மலைக்குடிப்பட்டி, அன்னவாசல் மற்றும் இலுப்பூர் வழியாக புதுக்கோட்டை நகரத்திற்கு கொண்டு வந்து ஏறத்தாழ 3½ லட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் அந்த மிகப்பெரிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களுடைய நல்லாட்சியில் வெகு விரைவாக நிறைவேற்றித் தருமாறு உங்களை மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமணஞ்சேரி என்கிற ஊரில் கரம்பக்குடிப் பகுதியில் இருக்கிற அந்த ஊரில் ஸ்ரீ சுகந்தபரிமளேஸ்வரர் என்கிற ஆலயம் மிகவும புகழ் வாய்ந்தது, நாயன்மார்களால் பாடல் பெற்ற ஸ்தலம். அந்த ஸ்தலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் திருமணத்திறகாக வந்து போகிறார்கள். அதோடு மட்டுமல்ல, தஞ்சை, அறந்தாங்கி பகுதியில் உள்ள ஏறத்தாழ 2 லட்சம் மக்கள் போக்குவரத்திற்குரிய அங்கே பாலம் இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தை புதுக்கோட்டை மாவட்ட மக்களின் சார்பில் நாங்கள்—காங்கிரஸ்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய ரகுபதி அவர்களும், திரு. சண்முகநாதன் அவர்களும், திரு. குழந்தைவேலு அவர்களும், நானும் ஆக அந்த மாவட்டத்தில் இருக்கிற அத்தனை காங்கிரஸ்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்த பாலத்தை இந்த நிதி ஆண்டிலாவது அவசியம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். 1966 ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. இராமையா அவர்களால் கல் நாட்டப்பட்டு துவக்கப்பட்ட திட்டம், பல்வேறு போராட்டங்களை நடத்தியும் அது முடியாத சூழ்நிலையில் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள். ஆகவே, அந்தப் பாலத்தை விரைவில் இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் அந்த மாவட்டத்திற்கு ஒரே ஒரு காரியம் செய்யவேண்டும் என்று விரும்பினாலும் அதை அந்தப் பாலத்தை நிறைவேற்றிக் கொடுக்குமாறு மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தீரர் சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கவேண்டுமென்று நான் ஒரு வெட்டுத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து இருந்தேன். ஆனாலும் அதற்கு வாய்ப்பு இல்லை என்கிற சூழ்நிலையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஆனாலும் புதுக்கோட்டையைப் பொறுத்த வரையில் உங்களுக்கு மிக

நன்றாகத் தெரியும், இந்த நாடு சுதந்திரம் அடைகிறபோது புதுக்கோட்டை என்பது மன்னர் ஆட்சிக்கு உட்பட்டு அங்கே மன்னர் ஆட்சி நடைபெறற போது சாத்திர வாயலாக புதுக்கோட்டை மாவட்ட மக்களை மறற மாவட்டங்களை சேர்ந்தவர்களின் அவப்பெயருக்கு உள்ளாக வேண்டிய ஒரு சூழ்நிலை உருவெடுத்து இருந்தது. எனவே அந்த அவப்பெயரை போக்குகின்ற வகையில வீரா சத்தியமூர்த்தி அவர்கள் இந்த நாட்டிறகாகப் பாடுபட்டு, சுதந்திரம பெற்றுத்தந்த மிகப் பெரும் தியாகி ஆவார். அந்தத் தியாகியன பெயரை அந்தப் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சூட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவாகள் பெயாிட்டுக்கொடுத்து, அந்தப் புதுக்கோட்டை மாவட்டத்தை செயல்வீரர் சத்தியமூர்த்தி மாவட்டம் என்று அழைக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.50

மற்றும், கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் இங்கே பல நண்பர்கள் வந்து மனு கொடுத்திருக்கிறார்கள். விசைத்தறி நெசவாளர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிற காரணத்தால் கைத்தறி நெசவாளர்கள் இந்தத் தமிழகத்தில் இருக்கிற ஏறத்தாழ 2.25 இலட்சம் பேர் வேலையிழக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய துயரைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுத்து, நிறைவேற்றித் தந்து அவர்களுக்கு வாழ்வு கொடுக்கிற வகையில், அந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் திருத்தி இவர்களுக்கும் தொடர்ந்து வாழ்வு கொடுக்கின்ற நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி நூற்பாலை இருக்கிறது. அந்த ஆலை மூடப்பட்டு 7 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஏறத்தாழ 900 ஆலைத் தொழிலாளர்கள் பட்டினியும் பசியுமாகக் கிடந்து பலர் பட்டினியாலே இறந்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் நிதியிலிருந்து 'பி. அண்ட் சி' மில்லுக்கு எவ்வாறு ஒரு தொழிலாளிக்கு 400 ரூபாய் உதவித்தொகை கொடுத்தார்களோ அதைப்போல எங்கள் மாவட்டத்தில் வறுமையில் இன்றைக்கும் உழன்று கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கும் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை கொடுக்குமாறு மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



வெள்ளாளக்குடி என்கிற பண்ணை என்னுடைய புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இருககிறது. அங்கே இருக்கிற அதிகாரிகள் கரம்பக்குடி ஒன்றியததுல் கரம்பக்குடியில் தங்கி இருந்துகொண்டு அந்தப் பண்ணையை சரிவர செயல்படுத்தாமல் இருக்கிறார்கள. அதனால் அங்கே நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்கிற ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. பண்ணை என்ற அளவிலே அது நடந்துகொண்டிருக்கிறதே தவிர எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்கவில்லை. மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு அந்தப் பண்ணையை சிறப்பாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மாதம் 1-ந்தேதி வடகாடு என்கிற கிராமத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்களுக்கும் காங்கிரஸ் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பாகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, அது வாய்ச்சண்டையாகி மாறிக் கைகலப்பில் மாறி கடைசியில் எஸ்.பி.யால் பஞ்சாயத்து செய்யப்பட்டு இரவு 6 மணிக்கு அங்கே தடியடிப் பிரயோகம் நடத்தி, அதன் மூலம் ஒரு துப்பாக்கிச்சூடு நடைபெற்று, 2 பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், இன்னொருவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகி, அவர்களுடைய குடும்பங்கள் இன்றைக்கு பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் துப்பாக்கிச் சூட்டினால் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு அதிக நிதி உதவி கொடுத்து, அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல புதுக்கோட்டை தொகுதியில் கந்தவர்க்கோட்டையில் ஒரு எம்.பி.டி.சி. டெப்போ தொடங்குவதற்கு இடம் எல்லாம் தேர்வு செய்யப்பட்டு, இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் அந்த எம்.பி.டி.சி. டெப்போவை விரைவில் நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சிறப்பான ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அங்கே பல இலட்சம் ரூபாய் செலவில் ஒரு 'ஸ்டேடியம்' கட்டித் தருவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சி. சுவாமிநாதன்] [1991 அக்டோபர் 4

அதைப்போல இராணியர் மேல்நிலைப்பள்ளிக்கு நீங்கள் கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்று உடனடியாக கட்டிக் கொடுத்தால்தான் அங்கே பெண்கள் அதிக அளவில் படிக்க வசதியாக இருக்கும். அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறதே என்று நினைத்தால், அதில் 3,000 பெண்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் படிக்க வர இருக்கிறவர்கள், பல ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். எனவே, அந்த இராணியார் மேல்நிலைப்பள்ளிக்கு இன்னொரு கூடுதல் பள்ளிக் கட்டிடமோ அல்லது அதற்குச் சமமான இன்னொரு பள்ளிக் கட்டிடமோ கட்டிக் கொடுத்து, அந்த மாவட்ட மக்களுக்கு ஒரு சிறப்பான செயலைச் செய்து தருமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

பிற்பகல் 12.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 31 கோடியே 58 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கம் செய்யும் துணை மதிப்பீடு கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மட்டும், நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாக சில கருத்துக்களை எடுத்து வழங்கி இருக்கிறார்கள். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து அவ்வப்போது எடுக்கப்பட்டுள்ள தொகைக்கு ஈடான தொகையை ஒதுக்கித் தருவதற்காகவே இந்தத் துணை மதிப்பீட்டில் தொகைகளை கோரப்பட்டுள்ளன. இந்த துணை மதிப்பீட்டில் எந்தெந்த செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டன என்ற விவரக் குறிப்புகள், குறிப்புகளின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு தரப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதைப்பொறுத்துமட்டும் கருத்துக்கள் வழங்க வேண்டிய நிலையில் இந்த அவை இருக்கிறது என்றாலும், பல்வேறு கருத்துக்களை இதனை ஒட்டிய வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற வளர்ச்சித் திட்டங்களையும், அதிலே கூறப்பட்டிருக்கிற மேம்பாட்டுத் திட்டங்களையும், மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களையும் மாண்புமிகு உறுப்பினர் வரவேற்று அவற்றையெல்லாம், ஆதரிக்கிற வகையிலே எடுத்துச் சொன்னதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், குடிநீர் பற்றாக்குறையைப் பற்றியும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார். குடிநீர் பற்றாக்குறை, ஆங்காங்கு தேவையான



1991 அக்டோபர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளவுக்கு மழை பெய்யாததன் காரணமாக கடுமையாகியிருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்து, அதற்கான தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். வழக்கம் போல், ஆண்டுக்காண்டு, குடிநீர் வழங்குவதற்காக, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, செய்யப்படுகின்ற செலவினங்களும் ஒரு பக்கம் நடைபெறுகின்றன. குடி நீருடைய இன்றியமையா தன்மையை உணர்ந்துதான், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதன் மூலமாக அந்தந்த ஒன்றியப் பகுதிகளினுடைய பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்று ஏற்பாடு செய்யப்பட்டதை இந்த அவை நன்கு உணரும். இதிலே, முதல் உரிமையாக, முதல் அம்சமாக குடிநீருக்குத்தான் ஒதுக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு மேற்கொண்டு இருப்பதன் காரணமாக, இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தின் மூலமும் சரி, நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற தொகைகளின் அடிப்படையிலேயும் சரி, எங்கெங்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், வேறு உயர் மட்டத் தொட்டிகளின் மூலமாக நீர் வழங்கும் திட்டத்தையும் நிறைவேற்ற முடியுமோ, அங்கெல்லாம் அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை, அந்த அந்தத் துறையினர் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையிலே ஓரளவுக்குத் தீர்க்க முடியும். ஆக அந்த ஒரு கோடி ரூபாய்த் திட்டத்திலே, முதல் உரிமை குடிநீருக்கு வழங்க வேண்டுமென்றும் இந்த அரசு எடுத்துத் தெரிவித்திருக்கிறது.

கைத்தறி நெசவாளர்கள் படுகின்ற கஷ்டங்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விசைத்தறி வளர்ச்சி ஒரு பக்கம் நடைபெறுகிறபோதே, கைத்தறியாளர்கள் எதிர்காலத்திலே பயன் பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். ஒரு காலத்திலே கைத்தறியாளர்கள், விசைத்தறி வேண்டாம், வேண்டாம் என்று சொன்னதன் காரணமாக, நம்முடைய மாநிலத்திற்கே பல்லாண்டுகளுக்கு முன்பாக வரவேண்டிய விசைத் தறிகள் எல்லாம், கர்நாடக மாநிலத்திற்கும், மகாராஷ்டிரா மாநிலத்திற்கும் சென்றுவிட்டதன் காரணமாக, விசைத்தறியின் மூலமாக வருகின்ற பலன்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், மறைமுகமாக பலபேர் 'லைசன்ஸ்' இல்லாமல் விசைத்தறிகளை இங்கே கொண்டு வந்து வைத்து, அவற்றின் மூலமாக ஏராளமான தொகையை லாபமாக சம்பாதித்து, வேறு வழியே இல்லாமல் அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அளவுக்கு அரசு ஆளானது. ஒருபக்கம் கைத்தறியாளர்களைக் காப்பாற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்றாலும், இந்த விசைத் தறித்துறையிலே, கைத்தறியாளர்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்களுடைய

கூட்டுறவுச் சங்கங்களுக்கு அல்லது அவர்களே ஏற்றுக் கொள்கிற அளவுக்கு முன்னுரிமை தந்து, அவர்களை அந்த வகையிலே ஊக்குவித்தால், கைத்தறியின் மூலம் கிடைக்கிற வருமானத்தை விட, விசைத்தறியின் மூலம் கைத்தறியாளர்கள் குடும்பங்களுக்கு அதிகம் கிடைக்கும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் பரவலாக இந்தத் திட்டத்திற்கும் நாம் ஆதரவு தந்திருக்கிறோம். அதே நிலையில், கைத்தறியாளர்களுக்குத் தரவேண்டிய உரிமைகள் அத்தனையையும் இந்த அரசு வழங்கும் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு பல வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பல்வேறு கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், பல்வேறு துறைகளைப் பற்றிய கருத்துக்களை அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று சொல்லி இது ஒரு மணிக்குள்ளாக முடிக்க வேண்டிய தன்மையில் இருப்பதன் காரணமாக, இந்த துணை மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

பிற்பகல் 1.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது பிற்பகல் 1.00 மணி. விவாதம் முடிவுற்று வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். எனவே, இப்பொழுது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கி. செல்வராஜ்.

திரு. இ. செல்வராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

1991 ஆம் ஆண்டுக்குக் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 14–10–1991 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1991–92 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும், என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெறுகிறது,

(மேசையைத் தட்டும் ஒலி)



## நிறைவேற்றப்பெற்ற 1991—92-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை என். | | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|---|
| (1) | | (2) |
| | **A. வருவாய்க் கணக்கில் செலவு.** | |
| 2 | மாநில ஆயத்தீர்வைத் துறை .. .. | 13,49 |
| 8 | தேர்தல்கள் .. .. .. | 48,84 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. | 48,99 |
| 11 | மாவட்ட நிருவாகம்— .. .. | 90.73 |
| 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 5,00 |
| 13 | நீதி நிருவாகம் .. .. .. .. | 56,59 |
| 15 | காவல் துறை .. .. .. .. | 1,90,95 |
| 16 | நிபணைப்புப் பணிகள் .. .. .. | 3,41,0[illegible] |
| 17 | கல்வி .. .. .. | 1,99,74 |
| 18 | மருத்துவம் .. .. .. .. | 36,64 |
| 20 | வேளாண்மை .. .. .. | 13,81 |
| 21 | மீனளம் .. .. .. .. | 20,00 |
| 23 | கூட்டுறவு .. .. .. .. | 7,29 |
| 24 | தொழில்கள் .. .. .. .. | 5,31,00 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் .. | 10.00 |

| கோரிக்கை எண். (1) | | (ரூபாய் ஆயிரத்தில்). (2) |
|---|---|---|
| | **A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.** | |
| 30 | சமூக நலன் .. .. .. .. | 1,68,93 |
| 33 | வீட்டு வசதி .. .. .. | 12,00 |
| 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 3 |
| 40 | சாலைப் போக்குவரத்து பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 5,81,50 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் .. .. .. | 10.40 |
| 43 | பல்வகை .. .. .. .. | 2 |
| 47 | செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் | 38,79 |
| 48 | ஊரகத் தொழில்கள் .. .. .. | 50,01 |
| 49 | குடிநீர் வழங்கல் .. .. .. | 7,75 |
| 50 | நகராட்சி நிருவாகம் .. .. .. | 20,00 |
| 52 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு .. .. | 5,00 |
| | மொத்தம்—ஏ. வருவாய்க் கணக்கில் செலவு .. .. .. | 25,08,50 |
| | **B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.** | |
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 1,50,00 |
| 56 | பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 2,07,10 |
| 59 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு | 1,27,94 |



| கோரிக்கை எண். (1) | | (ரூபாய் ஆயிரத்தில்). (2) |
|---|---|---|
| | வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி. | |
| 61 | பல்வகை மூலதனச் செலவு .. .. | 32,22 |
| | மொத்தம்—பி. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு .. .. .. .. | 5,17,26 |
| | **சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பி கொடுத்தலும்.** | |
| 62 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. .. .. | 1,26,62 |
| | பெரு மொத்தம் .. .. .. | 31,52,38 |

### 5. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 9. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்).

<u>நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1991.</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

10. அரசினர் தீர்மானம்.

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தொடர் இன்றோடு முடிய வேண்டும் என்கின்ற எண்ணம் பெரும்பாலான உறுப்பினர் பெருமக்களுக்கும் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, சட்டமுன்முடிவுகளையும் நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துழைப்புத் தருவீர்களானால் இன்றே முடிக்கும் போகலாம்: அல்லது இந்தச் சட்டமுன்வடிவுகளை எல்லாவு விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க வேண்டும் என்கின்ற நிலை இருக்குமானால் நாளைக்கும் ஒத்திப்போட வேண்டிய அவசியம் ஏற்படும்.

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விருந்தும் இந்த [illegible] அமைய இருக்கிறது. ஆகவே, முதையெல்லாம் மனதில் கொண்டு முழு ஒத்துழைப்பையும் தருவீர்களானால் இந்தச் சட்டமுடிவுகளையெல்லாம் நிறைவேற்ற



வாய்ப்பு ஏற்படும் என்று கருதி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நாளை எடுத்துக் கொள்ளலாம் என்ற தன்மையிலிருந்து இன்றே அதையும் நிறைவேற்ற வேண்டிய தன்மைகள் இருக்கின்றன. ஆகவே, நாளைய தினம் சட்டமன்றம் இருந்தால்தான் நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்ற முடியும். ஆகவே, இந்த விதியைத் தளர்த்தி, இன்றே அந்த நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

சட்டமன்றப் பேரவை விதி 30,130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, ''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2] சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 52/1991) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்னும் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இதர சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றியதற்குப் பிறகு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு மாலையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். இப்போது ஏனைய சட்டமுன்வடிவுகள்.

11. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1991–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/ 1991) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 41/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 42/1991) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1991 அக்டோபர் 4

பிரிவுகள் 2 முதல் 10 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 42/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்.'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையை தட்டும் ஒலி).



[1991 அக்டோபர் 4]

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 43/1991). மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 43/1991). ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1991) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-10

(ஈ) விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1991), மாண்புமிகு நிதியமைச்சர்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 44/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகுப் பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 44/91) நிறைவேற்றப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

<u>(உ) மது விலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 45/1991). மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன் வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் சில திருத்தங் களை மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்குகின்ற வகை





யிலே இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நிச்
சயமாக நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே இன்று
மதுவைப் பூரணமாக இங்கே ஒழித்து இருக்கின்ற மாண்புமிகு
முதல்வர் அவர்கள் வேறு சில திருத்தங்களையும்
இந்தச் சட்டத்திலே இங்கே கொண்டு வந்திருந்தால் மிக
நலமாக இருக்கும். அதைக் கொண்டு வரவேண்டும் என்ற
ஒரு கோரிக்கையை உங்கள் முன்னாலே. வைக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். இப்போது தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்
தில் இருக்கக்கூடிய 4 (1) (ஏ) போன்ற குற்றங்கள், சாராயம்
அல்லது மற்ற மதுப் பொருட்களை வைத்திருந்தால் அது
பெயிலபிள் என்ற குற்றமாக இருந்து கொண்டிருக்கிறது.
ஜாமினில் விடக்கூடிய குற்றமாக இருக்கிறது. அது ஜாமினில்
விடக்கூடாத குற்றமாக அரசு அதை மாற்றி அதற்கான ஒரு
திருத்தத்தை கொண்டுவர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை
நான் அவைக்கு முன்னாலே வைக்கிறேன்.

அதேபோல, மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்கு
வதற்காக இன்னொன்றையும் செய்யலாம். இப்போது
இருக்கக்கூடிய மது விலக்குச் சட்டத்தில் இருக்கக்கூடிய
குற்றத்தை வெறும் 'பைன்' போட்டுவிட்டு விடக்கூடிய ஒரு
பிரிவாக 4(1) (ஏ) செக்ஷன்படி இருப்பதால் அதோடு
சேர்த்து கண்டிப்பாக இவ்வளவு ஜெயில் தண்டனை என்ற
மேன்டேட்டரி புரோவிஷனாக ஒரு குற்றம் செய்தால்
குறைந்த அளவு ஓராண்டுக் காலம் ஜெயில் தண்டனை
என்றும் அதாவது பைன் வந்து ரூபாய் 4 ஆயிரம் 5 ஆயிரம் என்று
கண்டிப்பாக வைத்தால் மாநிலத்தினுடைய வருவாய் நிச்
சயமாகப் பெருகும். ஆகவே, இந்த இரண்டு கருத்துக்களை
அரசு கருத்தில் கொண்டு நிச்சயமாக இந்த இரண்டு திருத்
தங்களையும் 'நான்-பெயிலபிள் ஆக மாற்றவேண்டும். மேன்
டேட்டரியாக கண்டிப்பாக ஜெயில் தண்டனை கொடுத்து
பைனை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து
இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அவைத் தலைவர்
அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி,
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு

*திரு. எச். எம் ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1991 ஆம் ஆண்டு (தமிழ் நாடு மதுவிலக்கு
திருத்த ) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட/
முன்வடிவு எண். 45/1991)-ல் பேச அனுமதி தந்த உங்களுக்கு
நன்றியைக் கூறி ஓரிரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

தேசப் பிதா மகாத்மா காந்திஜி அவர்களுடைய 123-வது ஆண்டிலே, 100-வது நாளை வெற்றிகரமாக கொண்டாடிய தமிழ்நாடு அரசு, 322 கோடி ரூபாய் வருமான இழப்பையும் பார்க்காமல் மலிவு விலை மதுவினை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த தினமான 15-7-1991 முதல் நிறுத்த வேண்டும் என்ற அளவிலே சட்டம் கொண்டு வந்து தமிழ்நாட்டு மக்களுக்காக, கோடிக்கணக்கான தாய்மார்களுடைய கண்ணீரை துடைக்கும் வகையிலே செய்ததற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இதேமாதிரி நமது அயல்நாட்டு மதுவையும் வேண்டாம் என்று இருந்தார்களே யானால், இன்னும் அது சிறப்பாக இருந்திருக்கும். நிதிநிலை பற்றாக்குறைக்காக தான் செய்திருக்கிறார்கள் என்பதும் அல்லாமல், இந்த சட்டத் திருத்தத்தில் 60 ரூபாய் உள்ள ஒரு புருப் லிட்டருக்கு 70 ரூபாய் என்ற அளவிலே ஒரு புருப் லிட்டருக்கு 10 ரூபாய் அதிகமாக்கும் அளவுக்கு ஒரு சட்ட திருத்தத்தை முன் வைத்திருக்கிறார்கள். அதிகப் பணம் பெறுவது தான் முக்கிய நோக்கம் அல்ல என்பது நன்றாய் தெரிய வருகிறது. காரணம் என்னவென்றால் குடிக்கும் நபர்களின் எண்ணிக்கையைக் கண்டிப்பாகக் குறைக்கும் நோக்கத்துடன்தான் 60 ரூபாயிலிருந்து 70 ரூபாய் என்று செய்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் இந்த வகையில் குற்றங்களைச் செய்யும் நபர்களுக்கு இந்த அபராதத்தை 'பைன்' என்று சொல்லுகிறோமே, இந்த அபராதத் தொகையை நீதி மன்றங்களில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகப்படுத்துமாறு நான் ஒரு கோரிக்கையை தங்கள் மூலமாக நமது அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் இந்தமாதிரி மதுவினுடைய தீமைகள் போதை மருந்தினுடைய தீமைகள், கொடுமைகள் போன்றவைகளுக்காக, 'பிரச்சாரக் குழு' நமது மாநிலத்தில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பிரச்சாரக் குழுவின் தலைவராக இருக்கிறார்கள். அந்தமாதிரி அதிகமான அளவிலே நீதிமன்றங்களின் மூலமாக வசூலிக்கப்படும் அபராதத் தொகை அல்லது 'பைன்' என்று சொல்லுகிறோமே அந்தத் தொகைகள் பூராவும் இந்தப் பிரச்சாரத்திற்காக உபயோகப்படுத்துவதன் மூலம் நமது மாநிலத்திலுள்ள எல்லா குக்கிராமங்களிலுமுள்ள மக்களுக்கும்,



அதிலும் முக்கியமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கும் நல்லவகையிலே தெள்ளத் தெளிவாக நாம் தெரிவிப்போம் என்றால் கண்டிப்பாக இந்த குடியினுடைய தீமைகளையும், போதை மருந்துகளினுடைய தீமைகளையும், மக்கள் கண்டிப்பாக அறிந்து நாளடைவில் அவர்கள் அதை விட்டுவிடுவார்கள் என்ற உண்மையையும் நான் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நல்ல திரைப்படங்கள், வாழ்க்கைக் கல்வி போன்ற படங்கள் மூலமாக குடியின் தீமைகளையும், போதை, மருந்துகளின் தீமைகளையும் மக்களுக்கு நல்லமுறையில் காண்பிக்கலாம் அல்லது மாநிலத்தில் உள்ள சிறந்த பேச்சாளர்களை வைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பி அங்கே அவர்களின் மூலமாகவும், வீடியோ கேசட்டின் மூலமாகவும் குடியின் தீமைகளையும், போதை மருந்தின் தீமைகளையும் நாட்டு மக்களுக்கு அறிவித்து அதன்மூலம் நாளடைவில் அவர்கள் எந்தத் தீமைகளிலும் ஈடுபடாமல் அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வரலாம் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இந்த வகையில் 60 ரூபாயிலிருந்து 70 ரூபாய்க்கு ஒரு புருப் லிட்டருக்கு ஏற்றியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இதன்மூலம் கண்டிப்பாக நாட்டு மக்களிடையே குடிப்பவர்களுடைய எண்ணிக்கைக் குறையும் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்த மதுவிலக்குச் சட்ட முன்வடிவிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த வருவாய் ஈட்டக்கூடிய மதுவிலக்கு 'பில்'லிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரும் 322 கோடி ரூபாய் வந்தால் கூட அதை பெரிதாக எண்ணாமல் துச்சமென மதித்து ஏழையெளிய தாய்மார்களுடைய கண்ணீரை துடைக்க வேண்டுமென்ற ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தி கொடுத்திருப்பதற்காக பெண்களின் சார்பாக, தாய்மார்களின் சார்பாக என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் அவர்களுக்கு நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த மதுவிலக்கு பிரச்சாரக் குழுவிலே, என்னையும் ஒரு அங்கத்தினராக நியமனம் செய்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

வருவாய் வராவிட்டாலும் கூட நாம் சற்று கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால் — அதாவது ஏற்கனவே காய்ச்சக் கூடியவர்கள், மது குடிக்கக் கூடியவர்கள் இப்படிப் பட்டவர்களை எல்லாம் உடனே போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போகிறார்களே, அவர்கள் எல்லாம் பிடித்துக் கொண்டு போனால் என்ன, உடனே 100 ரூபாய் கட்டினால் போதும் என்ற நிலையில் 100 ரூபாய் கட்டினால் போயிற்று என்று சொல்லிவிட்டு அதை கட்டி விட்டு உடனே ஓடி வந்து விடுவார்கள். அந்த சூழ்நிலை இப்போது இல்லையென்றாலும் கூட அது ஆங்காங்கே மறைமுகமாக எங்கே காடு இருக்கிறது, எந்தப் பக்கம் புதர்கள் இருக்கிறது, எங்கே மரம் வளர்ந்து காடுகள் இருக்கிறது என்று பார்த்து அங்கே, ஓரிரு இடங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக எனக்கு சில தபால்கள் வந்திருக்கின்றன.

பிற்பகல் 1-20

முதலமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் எங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்களோ அங்கே உள்ள வி.ஓ., எஸ்.ஐ. மற்றும் போலீஸ் துறையில் இருக்கக்கூடிய ஏட்டு, கான்ஸ்டபிள் அத்தனை பேரும் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற நிலைமையை உருவாக்கி இருக்கிறார்கள். அதன்மூலமாக உண்மையிலேயே இன்றைக்குச் சற்று கடுமையான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அந்த எஸ்.ஐ. கள் அதில் கண்ணும் கருத்துமாக இருந்து, அவற்றைப் பிடிக்க முனைந்திருந்தாலும் அவர்கள் கண்ணிலே மண்ணைத் தூவிவிட்டு, காய்ச்சுவதாகத் தெரிகிறது. இதையெல்லாம் போக்க வேண்டுமென்றால், யார் காய்ச்சுகிறார்களோ அவர்களுக்கு ஓராண்டுக் காலம் தண்டனை கொடுக்க வேண்டும். சட்டத்திலே 'நான்-பெய்லபிள்' என்று இருக்க வேண்டும். 'பெய்லபிள்' என்று இருக்கக்கூடாது. காய்ச்சக் கூடியவர்களுக்கு 2,000 ரூபாயாவது — நமக்கு வருமானம் வர வேண்டுமல்லவா — நீங்கள் அபராதம் போட்டு, அந்த இடத்திலேயே கட்ட வேண்டுமென்ற நிலைமையை உருவாக்கினால் அவர்கள் அதைக் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காய்ச்சுவது என்பது பெரிய குற்றம். குடிப்பவர்களுக்கு ஓராண்டு தண்டனை, ஆயிரம் ரூபாய் அபராதம் என்று ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் இன்னும் சற்று நன்றாக இருக்கும். இந்த பில்லைப் படித்துப் பார்த்தேன். இப்போது பாட்டில் 60 ரூபாய் என்பதை 70 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். இன்னும் 40 ரூபாய் சேர்த்து 100 ரூபாய் ஆக்குங்கள். அப்படி ஆக்கினால் அதையும் வாங்கி



குடிக்கத் தயாராக இருக்கிறார்கள். குடிப்பதை நிறுத்த முடியாமல் அலைகிறார்கள். குடித்துக் குடித்து காலப் போக்கில் கைகால் உதறி, கும்பிப்போய், கண் தெரியாமல், தெருவில் விழக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அரசு 100 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குத் திருத்தச் சட்ட முன்வடிவிற்கு ஆதரவு தருகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களும் இதை வரவேற்று இருப்பதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வந்ததினுடைய நோக்கத்தையும் அவர்கள் பாராட்டி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதன்மூலமாக 390 கோடி ரூபாய் ஓராண்டு முழுவதும் நமக்கு நஷ்டம் ஏற்படுமென்றாலும், இதனால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் நன்மையைக் கருதி அந்த இழப்பையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறதென்ற நிலைமையிலேதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மதுவிலக்கை நடைமுறைப் படுத்துவதிலே மிக உன்னிப்பாக இருக்கிறார்கள்.

"நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்"

என்று வள்ளுவப் பெருந்தகையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நமக்கு நன்மை, ஆதாயம் கிடைக்கிறதென்றாலும், நியாயம் அல்லாத, நேர்மை அல்லாத அத்தகைய பணிகளின் மூலம் அந்த ஆக்கம் வருமானால் அந்த ஆக்கத்தை விரும்பக்கூடாது. அந்த ஆக்கத்தை விட்டு விடுவதுதான் நல்லது என்று சொன்னதற்கு இணங்க, இதன்மூலம் பெருந்தொகை நஷ்டம் ஏற்பட்டாலும், இந்தக் கொள்கையின் மூலம் சமுதாயம் சீர்படுகிறது. சமுதாயம் மேம்பாடு அடைகிறது என்பதால்தான் இதனைத் தீவிரமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனைமேலும் தீவிரப்படுத்துவதற்கான யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்களும் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். இந்தச் சட்டத்தை ...

இன்னும் கொஞ்சம் கடுமையாக ஆக்க வேண்டுமென்றும், தண்டனை அளவை இன்னும் கொஞ்சம் கடுமையாக ஆக்க வேண்டுமென்றும், இதன்மூலம் விதிக்கப்படக்கூடிய அபராதத் தொகை அதிகமாக இருக்குமானால், இந்தக் குற்றத்தைச் செய்ய யாரும் முன்வர மாட்டார்கள் என்று அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மேலும் இந்தச் சட்டம் வலிவு பெற வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, இதை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் கூறிய அந்தச் சீரிய யோசனைகளை உரிய நேரத்தில் அரசு மனதில் கொண்டு, இந்த மதுவிலக்குச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களைக் கொண்டுவரும்போது, அவர்கள் கூறியதன் அடிப்படையிலே திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது நாம் படிப்படியாகவும் போக வேண்டும், ஆணித்தரமாகவும் போக வேண்டும், இதிலே குறைபாடுகள் எதுவும் இல்லாமலும் போக வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் போகிறோம். இந்த அரசினுடைய பூரண மது விலக்குக் கொள்கைதான் கொள்கை என்றாலும், இப்போது மலிவு விலை மதுவை மட்டும் ஒழிப்பதன் மூலமாக ஏழை எளிய மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் முதற்கட்டமாக நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-25

எடுத்த எடுப்பிலே அகலக்கால் வைத்து அவதிப்படாமல் இருப்பதற்காகவும், எடுத்த எடுப்பிலே அதிக ஆசைப்பட்டு ஒன்றைக் கொண்டுவந்துவிட்டு நிறைவேற்ற முடியாமல், தவிப்பதை விட முதலில் ஏழை எளிய பாட்டாளி மக்களைப் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கின்ற மலிவு விலை மதுவை ஒழிப்பதன் மூலம் இதை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலிலே இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதேபோன்று இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற அன்னிய நாட்டு மது வகைகளையும் ஒழிக்கின்ற தன்மையும் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். முதலிலே நாம் இதிலே வெற்றி காணவேண்டியிருக்கிறது.

இதற்கு முன்னாலேயும் மதுவிலக்குக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் கூட, இந்த மீற எளிதிலே மீறுவதற்கான வழிவகைகளை எல்லாம், அதற்கேற்றாற்போல் குடிப்பவர்களும் கண்டுபிடித்து வைத்திருந்தார்கள். அகம் பாவத்தோடும் இருந்தார்கள். ஆக மதுவிலக்குக் கொள்கை



நடைமுறையில் இருந்ததே தவிர, அதை நடைமுறைப் படுத்த முடியாத அளவுக்கு இந்தக் கொள்கையின் நோக்கம் சீர்கெட்டுத்தான் இருந்தது. அதை அழுத்தம் திருத்தமாக சீர்பெற வைக்கவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகக் கடுமையாக ஆங்காங்கு இருக்கிற கிராம அதிகாரிகளையும் ஆங்காங்கு பணியாற்றுகின்ற காவல்துறையைச் சேர்ந்தவர்களையும் பொறுப்பாக ஆக்கி, அதிலே அவர்கள் தவறுவார்களேயானால் அவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் கூட செய்கின்ற அளவுக்கு கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற முறையில் விதிமுறைகளையும் அவர்கள் வகுத்து வைத்திருக்கிறார்கள்.

அதன் காரணமாக ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிற பாங்கினையும் மக்கள் எதிர்பார்த்ததை விட அதிகமான அளவுக்கு கட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதையும் இந்த மதுவிலக்கு மீறப்படாமல் தடுத்து நிறுத்தப்படுவதற்கான வழிவகைகள் ஏற்பட்டிருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல தடவையிலே பல இடங்களையும் பார்த்து இந்த அவையிலேயே பாராட்டியிருப்பது மிக மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இன்னும் விட்டகுறை தொட்ட குறை கொஞ்சம் நஞ்சம் எங்காவது இருக்குமேயானால் அதை முழுவதும் அடியோடு, இப்படி புறம்பாக நடப்பதை தடுத்து நிறுத்தவேண்டுமென்ற நோக்கத்தில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த அரசும் மிக முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வருவதை, மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள். இதற்கு பொதுமக்களுடைய நல்லாதரவும் ஒத்துழைப்பும் தேவை. மன்ற உறுப்பினர்களைப் போன்ற பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் இருக்குமேயானால் ஆங்காங்கே இருக்கிற சிறு சிறு குறைபாடுகள் கூட ஏற்படாத அளவுக்கு நாம் தடுத்து நிறுத்த முடியும்.

சட்டம் ஒன்றினாலேயே மதுவிலக்குக் கொள்கை முழுவதையும் நாம் நடைமுறைப் படுத்த முடியாது என்றாலும் மக்கள் குடிக்காது இருக்கின்ற ஒரு தன்மைக்கு மதிப்பு செலுத்துகின்ற தன்மையையும், குடிக்காமல் இருக்கின்ற ஒரு தன்மைக்கு மரியாதை செலுத்துகின்ற தன்மையும் நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்றால் நாட்டிலுள்ள நல்லவர்களும் மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர்களும் மக்களுக்கு நெறிமுறைகளை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு நல்ல கருத்துக்களை வழங்குவோர்களும் இதற்குப் பெருந்துணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 அக்டோபர் 4

ஆகவேதான் இதற்காக ஒரு பிரச்சாரக் குழு அமைத்து அதன் மூலமாக, நாடகங்கள் மூலமாகவும் கலை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும், திரைப்படங்களின் மூலமாகவும் தொலைக் காட்சியின் வாயிலாகவும், வானொலி மூலமாகவும் எவ்வளவுக்கெவ்வளவு இதிலே பிரச்சாரம் செய்து, இந்தக் கருத்துக்கு நல்ல ஊக்கமும் ஆக்கமும் ஏற்படுத்த முடியுமோ, அதை ஏறபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அந்தக் குழுவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதனுடைய பணிகள் எல்லாம் நிறைவேறுகின்றபோது, எல்லோருடைய ஒத்துழைப்பும் இதற்கு மிகமிகத் தேவையாக இருக்கிறது. வேறுபல மாநிலங்களில் கூட இதைக் கடைப்பிடிக்க முடியாமல் உள்ளதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் கட்சியே ஆட்சிக்கு வந்திருந்தாலும் கூட இதை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் கைவிட்டுவிடக் கூடிய நிலையில்தான் இருப்பார்கள். இப்போதும் குஜராத் மாநிலம் ஒன்றுதான் நடைமுறைப்படுத்தி வருகிறது என்றாலும், அங்கும் அந்த சட்டத்தை முழுவதும் நிறைவேற்ற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. இதிலும் தமிழகம் தான் எடுத்துக்காட்டாக இருக்கும் என்றே சொல்கிற அளவுக்கு இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகள், ஓரளவுக்கு வெற்றிகரமாக ஆகியிருக்கிறது. இந்தக் கட்டத்தில் நாம் வெற்றி பெற்றபிறகு படிப்படியாக செல்லவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த அன்னிய மதுக் கடைகளைப் பொறுத்தவரையிலும் செயல்பட வேண்டியிருக்கிறது. நாளடைவில் பூரண மதுவிலக்கு கொண்டுவருகிற நோக்கம் வருகிறபோது இதையும் எடுத்துவிடும் சூழ்நிலை வரும். அதுவரையிலும் இப்படி எடுத்துக் கொண்டிருக்கிற திட்டங்களை வெற்றி பெறச்செய்வதுதான் அரசின் நோக்கம். 1-5-1981-லே 1 ப்ரூப் லிட்டருக்கு 35 ரூபாய் இருந்தது. பிறகு 28-2-1989-ல் 55 ரூபாயாக ஆக்கப்பட்டது. 25-10-1989-ல் ரூ. 60 ஆக, ஆக்கப்பட்டது. இதை மேலும் உயர்த்தி இப்போது 5-9-1991 முதல் ரூ. 70 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல இதிலே இரண்டு நோக்கங்கள் நிறைவேற வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். ஒன்று இதைக் குடிப்பவர்களின் எண்ணிக்கை குறையவேண்டும் என்பதற்காக இதனுடைய விலையை உயர்த்துவோமேயானால் குடிப்பவர்களுடைய எண்ணிக்கை குறையும். இது ஒன்று.



1991 அக்டோபர் 4]

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்பட்ட இழப்பை ஓரளவிற்குச் சமாளிக்கலாம் என்கின்ற எண்ணம், இந்த இரண்டு எண்ணங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரித்திருப்பதற்காக நன்றியைத் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி இந்த அவையினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலிவு விலை மதுவை ஒழித்ததோடு இப்போது கள்ளச்சாராயம் காய்ச்சுவது கிட்டதட்ட 80, 90 சதவிதம் குறைந்துவிட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரே ஒரு கோரிக்கை. இதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவதை ஒரு தொழிலாக பல ஆண்டுகளாக பலர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இப்போது வேலை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு, பல, ஏழைக் குடும்பங்கள் என்ன செய்வதென்றுகூட தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே 'எமர்ஜென்சி' காலத்தில் பூரண மதுவிலக்கு வந்த நேரத்தில் இருந்த அப்போதைய கவர்னர் சுகாதியா அவர்கள், தொடர்ந்து கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக் கெல்லாம் ஒரு வாழ்க்கையை உண்டாக்க வேண்டும் என்று கருதி, அதற்காக பல திட்டங்களைத் தயாரித்துக் கொடுத் தார்கள்; அரசாங்கத்திலிருந்து 'லோன்' கொடுத்தார்கள். அதே போல தங்கக் கட்டுப்பாடு வந்த நேரத்தில், மொரார்ஜி தேசாய் அவர்கள்கூட அந்தத் தொழிலில், இருப்பவர்களுக்கு ஒரு மறு வாழ்வு தொடங்குவதற்கு உதவி செய்தார்கள். அது போல கள்ளச் சாராயத்தைக் காய்ச்சிக் கொண்டே இருந்து, இப்போது வேலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிற ஏழையெளிய மக்களுக்கு அரசு ஏதாவது நிவாரணம் அளிக்கிற வகையில் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாட்டிலே நிலவுகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு பல்வேறு திட்டங்களை நாம் முனைப்புள்ளத்தோடு மேற்கொண்டு வருகிறோம். இருந்தாலுங்கூட வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவும், வேலை வாய்ப்புக்காக ஏற்படுத்துகிற வேலைகளுடைய தன்மையையும் பார்க்கும் போது, இரண்டுக்கும் இடையே உள்ள இடைவெளி ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அகில இந்தியாவைப் பொறுத்த வரையில் கணக்கிட்டாலும் சரி, மாநிலத்தைப் பொறுத்த வரையில் கணக்கிட்டாலும் சரி, வேலை வாய்ப்பு வேண்டும் என்று எண்ணுகிற தகுதி படைத்தவர்கள், படித்து முடித்துவிட்டவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு ஏற்படுத்திட வேண்டும் என்ற நோக்கத்திலே தான் குடிசைத் தொழில்களை பரவலாக்க வேண்டும் என்றும், சிறு தொழில்களை அதிகமாக ஆக்க வேண்டும் என்றும், நடுத்தரத் தொழில்களுக்கும், பெருந் தொழில்களுக்கும் நல்ல ஆக்கம் தர வேண்டும், ஊக்கம் தர வேண்டும், அவைகளுக்கெல்லாம் உதவித் தொகை தர வேண்டும் என்ற முறைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அரசுத் துறை மட்டுமல்லாமல், தனியார் எந்த அளவிற்கு வந்தாலும், அவர்களுக்கும் வாய்ப்பு அளிக்க முடியும். அரசும் பொதுத் துறையின் மூலமும், தனியார் துறையின் மூலமும், கூட்டுறவுத் துறையின் மூலமும் முயல வேண்டும் என்ற தன்மைகளை வைத்துத்தான் பல்வேறு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுவதன் காரணமாக, காய்ச்சிக் கொண்டே இருந்து அதிலே பெரும் வருமானத்தை ஈட்டி இப்போது தடுக்கப்பட்டுவிட்டதன் காரணமாக பிழைப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஏற்கனவே மரம் ஏறிகளாக இருந்தவர்கள் வேலை இல்லாமல் போகிறபோது அவர்கள் வந்து பதிவு செய்து கொள்வார்கள். அப்படி மற்ற வகைகளிலே வருவார்கள். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் யார், யார், என்று நாம் அறிந்துகொள்ள பதிவு செய்ய வருவார்களா என்று கேட்டால், அப்படி வருவார்களா, என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது. நான் காய்ச்சிக் கொண்டிருந்தேன் என்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் அவர்கள் சொல்லுவது மாதிரி வாய்ப்புகளை நாம் ஏறபடுத்துவோமேயானால், அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் குடிசைத் தொழிலோ, கிராமத் தொழிலோ, சிறு தொழிலோ ஏறபடுத்திவிடுவோமேயானால், அந்த வகையிலே அவர்கள் தங்களுடைய பணியிலிருந்து திசை திரும்பு



கின்ற வகையில் காய்ச்சுகின்ற பணியிலிருந்து மாறி வேறு தொழில்களுக்குச் செல்வதறகான சூழ்நிலை ஏறபடும். அப்படிப்பட்டச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்கான தன்மைகள், அவர் சொன்ன கருத்தை அடிப்படையாக வைத்து அரசு சிந்தித்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 45/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள், தலைமையில் பேரவை பிற்பகல் 4.00 மணியளவில் கூடியது.

## 11. சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (ஊ) பல்கலைக்கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 46/1991). மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.



மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த(இரண்டாம்திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்*

*திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற பல்கலைக் கழகங்களில் ஆட்சிப்பேரவை, ஆட்சிக்குழு, கல்வி அலுவல் நிலைக்குழு (Senate, Syndicate, Standing Committee on Academic Affairs) இதுபோன்ற கமிட்டிகளில் பதவிகளின் பதவி காலத்தை ஒழுங்குபடுத்துவதற்காகக், கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறபோது சில முக்கியமான செய்திகளை இங்கே சொல்ல விரும்புகிறேன். இப்போது செனட், சிண்டிகேட் போன்ற அமைப்புகளில் ஆசிரியர்கள், அரசாங்கத்தில் கல்வித் துறையில் பணியாற்றுகிறவர்கள், பேராசிரியர்கள், போன்றவர்கள் அங்கம் வகிக்கிற நிலைமை இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் இன்றைக்கு 'டிம்ட் யூனிவர்சிட்டி' இரண்டும் சேர்த்து 14 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

இந்த அத்தனை பல்கலைக் கழகங்களுக்கும் ஒரே ஒரு கல்விச் செயலாளர் இருக்கிறார். டைரக்டர் ஆப் காலேஜியட் எஜுகேஷன் என்று ஒருவர் இருக்கிறார். இந்த பல்கலைக்கழகங்கள் மாதம் ஒன்றுக்கு ஒரு சிண்டிகேட் மீட்டிங் நடத்துவதாக வைத்துக்கொண்டால் இருக்கிற செயலரும், இயக்குநரும் இந்தக் கூட்டங்களுக்குப் போவதைத் தவிர வேறு வேலைகளைக் கவனிப்பதற்கு வாய்ப்பு இருக்காது என்றுதான் கருதுகிறேன்.

எனவே, இதைப் பரிசீலித்து, சீர்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் கல்வியானது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இன்னும் பல ஆண்டுகளுக்கு அதிகமாக தனியாரை நம்பித்தான் இருக்க வேண்டுமென்ற நிலையிருப்பதை யாரும் மறுக்க முடியாது. இருக்கிற கல்லூரிகளில் மூன்றில் இரண்டு பங்கு கல்லூரிகள் தனியார் கல்லூரிகள். அது சுயநிதி கல்லூரியாக இருந்தாலும் சரி, அல்லது உதவி பெறும் கல்லூரியாக இருந்தாலும் சரி, அது தனியாரிடம்தான் இருக்கிறது என்பதை நாம் இன்றைக்கு மறந்து விட முடியாது.

ஆக, இப்படி கல்விப் பணியிலே தனியார்கள் அதிகமாக ஈடுபட்டு வருகின்றபோது, அவர்களுக்கு இந்த செனட், சிண்டிகேட் போன்ற அமைப்புகளிலே உரிய பங்கு இருந்தால்தான் கல்விப் பணியை திறம்படச் செய்ய முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4-05 பிற்பகல்.

அதுமட்டுமல்ல நான் இந்த மாமன்றத்திலே நுழைந்தபோது ஒரு கருத்தை வெளியிட்டேன். தமிழ்நாட்டிலே கல்வியின் தரத்தை நாம் உயர்த்தவேண்டும் என்று சொன்னால், ஸ்டான்டிங் கவுன்சில் ஆன் ஹையர் எஜுகேஷன் என்ற அமைப்பு இருக்கவேண்டும் என்று சொன்னேன். அப்படிச் சொல்வதற்குக் காரணம், பல்கலைக்கழகங்களுக்கு நிறைய பணம் பல்கலைக் கழக மானியக் குழுவிலேயிருந்து வருகின்றது. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பல்கலைக் கழக மானியக் குழு டெல்லியிலே இருப்பதாலே டெல்லிக்கு அண்மையிலே இருக்கிற மற்ற மாநிலங்கள், யு.பி., ஹரியானா மற்றும் பீகார் போன்று இருக்கிற மாநிலங்கள், அண்மைக் காலமாக அந்த மானியங்களை மிக எளிதாகப் பெற்று விடுகின்றன. எனவே இந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு, தென் பிராந்தியத்திற்கு ஒரு மையம் திறக்கப்படவேண்டும் என்று நீண்டகாலமாக ஒரு கோரிக்கையை நாம் வைத்து இருந்தோம். ஆனால் இன்று வரையில், அது திறக்கப்படவில்லை. ஆகவே, இந்தக் கோரிக்கை ஏற்கப்படாவிட்டாலும் கூட, இந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கும், பல்கலைக்கழகத்திற்கும் ஒரு பாலமாக இருந்து செயலாற்றுவதற்குத்தான் இந்த ஸ்டாண்டிங் கவுன்சில் ஆன் ஹையர் எஜுகேஷன் இருக்கவேண்டும் என்று நான் சொன்னேன்.

அதுமட்டுமல்ல, தனியார் கல்லூரிகள் நிறைய பெருகி வருகிறபோது, தனியார் கல்லூரிக்கும் அரசுக்கும் சில பிரச்சினைகள் இருக்கும். தனியார் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் சில பிரச்சினைகள் இருக்கும். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் நல்லமுறையில் தீர்க்கப்படவேண்டும் என்று சொன்னால், அதற்கு இப்படி ஒரு அமைப்பு இருப்பது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தப் பல்கலைக் கழகங்களிலே உள்ள செனட்டிற்கு அதாவது ஆட்சி மன்றக் குழுவிற்கு தனியார் கல்லூரிகளிலேயிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால், ஆட்சிக் குழுவிற்கு, அதாவது சிண்டிகேட்டிற்கு யாருமே வர முடியாத நிலை, குறிப்பாக பாரதியார் பல்கலைக் கழகத்திலே இருக்கிறது. அங்கே இருக்கிற மொத்தக்



கல்லூரிகளிலே மூன்றில் இரண்டு பங்கு கல்லூரிகள் தனியார் வசம் இருந்தும் கூட, இந்த ஆட்சிக் குழுவிலே தனியார் கல்லூரிகளுடைய செயலருக்கோ, தாளாளருக்கோ இடம் இல்லாத நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல, இந்த ஆட்சிக் குழுவிற்கு கல்வி அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில், ஆளுநர் 3 பேர்களை நியமிக்கிறார்கள். நான் சான்றாகச் சொல்வேன். பாரதியார் பல்கலைக்கழகத்திலே இந்த ஆட்சிக் குழுவிற்கு 2 பேர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் அரசியல் அடிப்படையிலே நியமிக்கப்பட்டவர்கள். சுத்தமாக, திராவிட முன்னேற்றக் கழகத்திலே பொறுப்பிலே இருப்பவர்கள். அவர்கள் எந்தத் தகுதியிலே நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று கேட்டால் ''அகடமிக் எக்ஸ்பர்ட்ஸ்'' என்று சொல்லப்படுகிறது. ஒரு சாதாரண வக்கீலை அகடமிக் எக்ஸ்பர்ட்ஸ் என்ற பெயரிலே அங்கே நியமிக்கப்பட்டு இருப்பது அந்தப் பல்கலைக்கழகத்திற்கு எந்தவிதத்திலும் பயன் அளிப்பதாக இல்லை. எனவேதான் இதையும் மாற்றி, வரப்போகின்ற காலங்களிலே இந்தப் பல்கலைக்கழகங்கள் செம்மையாகப் பணியாற்ற வேண்டும் என்று சொன்னால், இந்த ஆட்சிக் குழுவிற்கு நியமிக்கப்படுகின்றவர்கள், அரசியல் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படாமல், உண்மையான அகடமிக் எக்ஸ்பர்ட்டாக இருப்பவர்களை நியமிப்பதற்கு நாம் வழிவகை செய்யவேண்டும் என்று நான் இங்கே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 4-10.

அதேபோல் கல்வித்துறையிலே அடிக்கடி உயர் பதவியிலே இருப்பவர்கள் மாற்றப்படுகின்ற காரணத்தினால் அவர்களுடைய சேவை நீண்ட காலத்திற்குக் கிடைப்பதில்லை. என்னைப் பொறுத்தமட்டில் உறுதியாகச் சொல்ல முடியும். அந்த மிக உயர்ந்த பதவியில் இருக்கிறவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருப்பதைவிட அவர்கள் சிறந்த கல்விச் சிந்தனையாளர்களாக இருப்பார்கள் என்று சொன்னால், நம்முடைய கல்வித் துறையானது மிக நல்ல முறையில் வளர்வதற்கு வாய்ப்பிருக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றபோது, இதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, அமலாக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்த முன்வடிவு என்பது நம்முடைய புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சியிலிருந்த சமயத்தில் பல்கலைக் கழகங்களுடைய Senate, Syndicate Academic Council போன்ற அமைப்புகளில் ஒரு சிலர் எப்படியோ நீண்டகாலமாக இடம் பிடித்து, மற்றவர்கள் யாரும், புதியவர்கள், புதிய சிந்தனையாளர்கள் உள்ளே நுழைய முடியாமல் தடுத்துக்கொண்டு, அவர்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அல்லது வேறு சில காரணங்களினால் அந்தக் குழுக்களிலே இடம் பெற்றுக்கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டுமென்று கருதியும், புதிய உற்சாகமுள்ளவர்கள், புதிய சிந்தனையாளர்கள், புதிய தகுதிகளைப் பெற்றிருக்கிறவர்கள் அந்தக் குழுக்களிலே இடம் பெறவேண்டுமென்று கருதி, இந்த பல்கலைக் கழகங்களிலுள்ள இந்தக் குழுக்களில் ஒரு குறிப்பிட்ட உறுப்பினர் மூன்று ஆண்டுக் காலம் பதவித் தகுதியுள்ள இந்தப் பொறுப்புகளுக்கு, இரண்டு தடவைகளுக்கு மேல் அதிகமாக ஆறு ஆண்டுகாலத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார். ஆனால் காலையிலே நாம் சட்டமன்ற மேலவையை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை, புரட்சித் தலைவர் எடுத்த முடிவைத்தான் இந்த அரசு பின்பற்றும் என்று நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து இந்த மன்றத்தினுடைய ஒருமித்த ஆதரவைப் பெற்றார்களோ, அதைப்போலத்தான் இடையிலே விபத்தாக ஏற்பட்ட ஒரு அரசு புரட்சித் தலைவர் எந்தெந்த திட்டங்களை, எந்தச் சட்டங்களை உருவாக்கினாரோ, நிறைவேற்றினாரோ, அவற்றையெல்லாம் மாற்றுவது என்கிற அடிப்படையை மாத்திரம் வைத்துக் கொண்டு, இந்தச் சட்டத்தையும் அன்றைக்கு மாற்றினார்கள். ஆகவே மீண்டும் புரட்சித் தலைவருடைய எண்ணத்தை இந்த மக்களுக்குப் பயன்படுகிற முறையில், புதியவர்கள் பல்கலைக்கழகங்களிலே இடம் பெறவேண்டுமென்கிற உணர்வோடு, புரட்சித் தலைவர் காலத்திலே நிறைவேற்றப் பட்ட இந்தச் சட்டத் திருத்தத்தைத்தான் இடையிலே வந்த அரசு ஏதோ காழ்ப்புணர்ச்சி கருதியோ, அல்லது வேறு காரணத்தினாலோ புரட்சித் தலைவர் நிறைவேற்றிய திட்டங்கள் நடைமுறையிலே இருக்கக் கூடாது என்று கருதியதினாலோ என்னவோ அதை மாற்றியதை இன்றைக்கு நாம் மீண்டும் புரட்சித் தலைவருடைய கருத்திற்கு சட்டமுன்வடிவாக உயிரூட்டம் கொடுத்து நிறைவேற்றுவதற்காக இந்த அவையின் முன்னே வைத்திருக்





கிறோம். நம்முடைய மாண்புமிகு திரு. லட்சுமணன் அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர்கள் கல்வித்துறையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள், அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் State Council for Higher Education என்ற கல்வித்துறையினுடைய மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்தபொழுது அவர்கள் அந்தக் கருத்தை, எடுத்துச் சொன்னார்கள். நான் அன்றைக்கே பதில் அளிக்கிறபோது அப்படிப்பட்ட ஒரு அமைப்பு உருவாகப் போகிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துவிட்டார்கள் என்பதை நான் அன்றைக்கே அவையிலே அறிவித்திருக்கிறேன்.

அந்த ஒரு குழு மிக விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது. 2 குழுக்கள் அறிவிக்கப்பட இருக்கின்றன. கல்வித் துறைக்கு என்று ஒரு ஆலோசனைக் குழு, ஆனால் அது ஸ்டேட் கவுன்சில் ஃபார் ஹையர் எஜுகேஷன் என்பது, சட்டப்படி அமைக்க வேண்டிய ஒரு ஸ்டேண்டிங் கமிட்டி. ஆகவே இது சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட வேண்டிய ஒன்று. இது அமைக்கப்பெற்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று பல்கலைக் கழகங்களுக்கும், யூ.ஜி.சி. என்கிற யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷனுக்கும், அல்லது பல்கலைக் கழகங்களுக்கும் இடையிலே இருக்கிற கல்லூரிகளுக்கும்— கல்வித் துறையில் உயர் கல்வியை பொறுத்தவரையில் எந்தப் பிரச்சினைகள் எழுந்தாலும், அதை தீர்ப்பதற்குப், நிர்வாகத்தை சரிப்படுத்துவதற்குப், சிலபஸ் போன்ற பாடத் திட்டங்களை வகுப்பதற்கும் இந்தக் கல்விக் குழு, இந்த அமைப்பு மிகச் சிறந்த முறையிலே பயன்படும், என்பதை நான் ஏற்றுக் கொண்டு மிக விரைவிலே அந்த இரண்டு குழுக்களையும் அமைக்க இருக்கிறோம் என்பதை நான் உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 4-15

அதைபோன்று யு.சி.ஜியினுடைய ரீஜனல் பிரான்ச். அவர்களிடத்திலே நாங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். மாநில அரசின் சார்பிலேயும் சொல்லியிருக்கிறோம். தென் பிராந்தியத்திற்கு—சென்னை பாநகரம் தென்னகத்தினுடைய தலைநகரம், கல்வித் துறைக்கு மாத்திரம் அல்ல, நீண்டகால வரலாற்று பின்னணியோடு பார்த்தாலும் அது ஒரு தலைநகரமாக விளங்குகிறது. ஆகவே அங்கே அந்த ரீஜனல் பிரான்ச்சை யு.ஜி.சிக்கு தொடங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அவர்கள் அதை அனேகமாக கொள்கை அளவிலே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே அதையும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதைப்போல இன்னொரு கருத்தைச் சொன்னார்கள்.

நம்முடைய புரட்சித் தலைவர் காலத்திலேதான் தமிழகத்திலே பல்கலைக் கழகங்கள் அதிகமாக தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பல்கலைக் கழக செனட்—சிண்டிகேட், இந்த அக்காடமிக் கவுன்சில் என்கிற அந்த குழுக்களில் நம்முடைய கல்வித் துறையைச் சார்ந்த இயக்குநர்கள் அல்லது செயலாளர் அதிலே இடம் பெறுகிற காரணத்தால் அவர்களுக்கு பல்கலைக் கழகங்களுடைய குழுக்கள மாதத்திறகு ஒரு முறை, அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நடைபெறுகிற கூட்டங்களில் கலந்துக் கொள்வதற்கே அவர்களுக்கு நேரம் போதாது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போல் தனியார் கல்லூரிகளுடைய பிரதிநிதிகளும் அந்தக் குழுவிலே அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல ஆட்சிக் குழுவிற்கு நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும். நம்முடைய அரசு வருவதற்கு முன்பு, ஆளுநர் அவர்கள் சான்சிலர், என்கிற அந்த உரிமையில் அல்லது அதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்களுடைய கருத்துக்களைப் பெற்றோ அல்லது ஏதோ நிலைமையிலே அந்த உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கக் கூடும். ஆனால் நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் குழுவின் அமைப்பில் மிகச் சிறந்த கல்வி நிபுணர்கள் தான் இடம் பெறவேண்டும் அல்லது கல்வித் துறையோடு தொடர்பு கொண்டவர்கள் தான் இடம் பெற வேண்டும் என்ற கருத்தை மிகத் தெளிவாக முடிவு எடுத்திருக்கிறார்கள்.

அதற்கு உதாரணமாக நான் சொல்ல வேண்டுமானால் அண்ணா தி.மு.க.வினுடைய தேர்தல் அறிக்கையில் இந்த கல்வித் துறைக்கு என்றே நிரந்தர ஆலோசனைக் குழு, ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்ததையொட்டி கல்வித் துறை மானியம் வந்தபோது அதை ஒரு கொள்கை முடிவாக அறிவிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒப்புதலுக்காக ஒரு குறிப்பை அனுப்பினோம். அதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களை தலைவராகக் கொண்டு மாநில கல்வித் துறை ஆலோசனைக் குழு அமைக்கப்படலாம் என்று தெரிவித்த நேரத்தில், அவர்கள் மிகத் தெளிவாக இந்த குழுவிற்கு நான் தலைவராக இருக்க வேண்டும் என்பதில்லை. யாராவது மிகச் சிறந்த கல்வியாளர்களை கல்வி நிபுணர்களைப் போட்டு, அவர்களுடைய தலைமையில் இந்த மாநில ஆலோசனைக் குழு அமைக்கப்படலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள், இதை நான் எடுத்துச் சொல்வதற்கு காரணம், கல்வித், துறை கல்வியாளர்களால், கல்வி நிபுணர்களால் கல்வித்



துறையில் அனுபவம் பெற்றவர்களால் நடத்தப்பட வேண்டும் என்கிற உணர்வை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு சான்றாகத்தான் இதை எடுத்துக் காட்டுகிறேன்.

பிற்பகல் 4-20

நம்முடைய தனியார் கல்லூரிகளுடைய பிரதிநிதிகள் இந்த குழுக்களிலே முன்னாலே இடம் பெறாமல் போனதற்கு காரணம் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சிக்குப் பிறகு தான் தனியார் துறைக்கு ஊக்கம் அளித்து இந்த கல்வித் துறையிலே அதிக வாய்ப்புகள் வழங்கப் பெற்று இன்றைக்கு, கலைக் கல்லூரிகளோ அல்லது பொறியியல் கல்லூரிகளோ அல்லது தொழில் நுட்ப பயிலகங்களோ தனியார்கள் அதிக அளவிலே இன்றைக்கு இதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆகவே நான் இவை எல்லாவற்றையும் மனதிலே வைத்துக்கொண்டு நான் இன்னொன்றையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் மூலம் இந்த அவைக்கும் மக்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு இப்போது கொண்டு வந்த இந்த சட்ட திருத்தம் ஒரு அவசரத்திற்காக நீண்டகாலமாக அங்கே இடம் பிடித்துக்கொண்டிருக்கின்ற சில பெருச்சாளிகளை விரைவிலே நீக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத் திருத்தம். ஆனால் மிக விரைவில் தமிழகத்திற்கு என்று ஒரே ஒரு பல்கலைக்கழகச் சட்டம் என்கின்ற வகையில் யூனிவர்ஸிடீஸ் ஆக்ட்-தமிழ்நாடு யூனிவர்ஸிடீஸ் ஆக்ட் என்று ஒரே சட்டம் கொண்டுவர இருக்கிறோம். அப்படி கொண்டுவரப்படுகின்ற போது இந்த பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலே இருக்கின்ற பல்வேறு விதிமுறைகளிலே மாறுபாடுகள், பல குறைபாடுகள் நீக்கப்படும் — இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய சட்டங்களின் ஆரம்பமே வெள்ளைக்காரன் காலத்திலே உருவாக்கப்பட்ட மெட்ராஸ் யூனிவர்ஸிட்டி ஆக்ட்டிலேயிருந்து தொடர்ந்து வந்துகொண்டு இருக்கின்ற வாழையடி வாழையாக வருகின்ற பரம்பரை. ஆகவே இன்னும் வெள்ளைக்காரனுடைய அந்த உணர்வுகள் தொட்டுக்கொண்டே வருகிறது. அதைத்தான் காலையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கூட (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : சட்டமன்ற மேலவைத் தொடர்பான விவாதத்தில் கூட எடுத்துச் சொன்னார்கள். ஆகவே நம்முடைய பல்கலைக்கழகச் சட்டங்கள்

என்பது நம்முடைய மெட்ராஸ் யூனிவர்ஸிட்டி ஆக்ட் 1850 அல்லது 60-லே கொண்டு வந்த அந்தச் சட்டத்தை தொடர்ந்து 1920-லே புதுப்பிக்கப்பட்டு வந்துகொண்டே இருக்கின்ற சட்டதிட்டங்கள். ஆகவே இந்த விதிமுறைகளை எல்லாம் மாற்றி இந்த காலத்திற்கேற்றவாறு இன்றைக்குள்ள கல்வி நிலைமைக்கு ஏற்றவாறு பல்கலைக் கழகங்களுடைய வளர்ச்சிக்கு ஏற்றவாறு கல்லூரிகளுடைய வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஒரு புதிய ஒருங்கிணைந்த ஒரே மாதிரியான எல்லா பல்கலைக் கழகங்களையும் இணைக்கிற ஒரு சட்டமுன்வடிவு மிக விரைவிலே தமிழகத்திலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை நான் உங்கள் மூலம் தெரிவித்துக்கொண்டு இன்னொரு கருத்தையும் சொல்கிறேன். இன்றைக்கு வளர்ந்துகொண்டு இருக்கின்ற பல்கலைக் கழகங்களுடைய சூழ்நிலை நடைமுறை அங்கே இருக்கின்ற நிர்வாக முறைகள் எல்லாம் கூட நம்முடைய மாண்புமிகு லட்சுமணன் போன்றவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். அது ஒரு தன்னாட்சி அமைப்பு என்று நாம் அதை அமைத்து இருக்கிறோம். ஆனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 18 கோடி ரூபாயை இந்த சட்டமன்றம் தான் நிறைவேற்றி அவர்களுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் நாம் பணம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோமே தவிர அங்கே என்ன நடைபெறுகிறது என்று கேட்பதற்குக் கூட சில நேரத்தில் அரசாங்கத்திற்கு அனுமதியே கிடைக்கமாட்டேன் என்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு பழையகால சட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் மாற்றப்படும். இங்கே கூட அவர்கள் சொன்னார்கள் சான்ஸலர், புரோ-சான்ஸலருடைய அந்த அனுமதியோடு தான் அல்லது ஆலோசனையோடு தான் நியமிக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். சில நேரத்திலே அப்படி ஆலோசனைகள் பெறாமலும் நியமிக்கப்படுகின்றன. இந்த புரோ சான்ஸலர் என்பது ஒரு அலங்காரப் பதவி அல்ல. புரோ சான்ஸலர் ஒரு அரசாங்கத்திற்கு தரப்படுகின்ற ஒரு அதிகாரம் என்பதும் இனி வரப்போகின்ற அந்த பல்கலைக் கழக சட்டத்திலே அதற்கு உயிரோட்டம் உள்ள ஒரு பதவி தான் என்பதையும் அதிலே சேர்க்கின்ற வகையில் அதற்கான நிபுணர்கள், கல்வித் துறையைச் சார்ந்தவர்கள், அனுபவம் மிக்கவர்கள் அந்த சட்டமுன்வடிவை தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இப்போது இந்தச் சட்டமுன்வடிவு என்பது புரட்சித் தலைவருடைய லட்சியத்தை இடையிலே சிதைத்த ஒரு ஆட்சியினுடைய கருத்தை மாற்றி அந்தச் சிதைவைப் போக்கி மீண்டும், அவருடைய எண்ணத்திற்கு உயிரோட்டம் வழங்குகின்ற சட்டத்திருத்தம். ஆகவே, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 37 முடிய. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 37 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 4-25

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம [illegible] மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்க[illegible]



15838

" 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1991) நிறைவேற்றப்பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)
மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)
ஏற்போர் அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்)
திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1991). மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 47/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும் "
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளுடைய திருத்த சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



தனியார் கல்லூரிகள் என்பது தமிழகத்திலே ஒரு காலத்திலே அகில இந்தியாவினை ஆண்டு கொண்டு இருந்த ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்றவர்களை உருவாக்கிய மிகச் சிறந்த கல்லூரிகளாக இருந்து வந்திருந்த நிலைமைகள் வரலாறுகள் எல்லாம் மாறி இன்று தனியார் கல்லூரிகள் ஒரு மோசமான நிலைக்கு வந்து கொண்டிருப்பதை எல்லாம் சரி செய்வதற்காக நம்முடைய அரசு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். பல கல்லூரிகள், சிறப்பான கல்லூரிகள் எல்லாம் இன்று பெயர் மங்கி அவைகள் எல்லாம் இன்று ஒரு வியாபாரஸ்தலமாக பலவிடங்களில் இருந்து கொண்டு இருக்கின்றன. நம்முடைய அரசு கல்லூரிகளில் இருக்கின்ற பேராசிரியர்களுக்கு பாதுகாப்பு அளித்து இருக்கிறார்கள். நல்லமுறையில் கை நிறைய சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் அந்த மாணவர்களுடைய கல்வி, முறையாக இருக்கிறதா அவர்களுக்கு முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதற்கு எந்தவிதமான பாதுகாப்பும் இதுவரை கொடுக்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. நம்முடைய ஏராளமான மாணவர்கள் கல்லூரிகளில் படித்து அண்டர் கிராஜிவேட்டாக அதாவது பட்டம் பெறாத படித்தவர்களாக வந்து கொண்டு இருப்பதை இன்று நாட்டில் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வித் துறையில் உள்ள ஏராளமான பேராசிரியர்களுக்கு கை நிறைய சம்பளம் கொடுக்கின்ற அந்த நிலையில் அவர்களுகடைய வேலைக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற இந்த நேரத்தில் கல்வியிலே கவனம் செலுத்தக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் எல்லாம் இன்று நம்முடைய மாணவர்களுக்கு நல்ல அறிவை புகட்டுகின்ற அளவுக்கு போதுமான அளவுக்கு அமையவில்லை என்கின்ற சூழ்நிலையை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே மறுபடியும் ஒவ்வொரு கல்லூரியையும் எந்த முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஒரு ஆய்வுக்குழு மூலம் அறிந்து தனியார் கல்லூரிகள் ஆனாலும் சரி அரசுக் கல்லூரிகள் ஆனாலும் சரி ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று பார்க்கின்ற பணியை அவர்கள் மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

எங்களுடைய முதுகுளத்தூர் தொகுதியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த மண்ணில் 20 ஆண்டுக்கு முன்பு ஒரு தனியார் கல்லூரி அவருடைய பெயரால் தொடங்கப்பட்டது. அந்தக் கல்லூரி நிர்வாகம்

சரிவர செயல்படவில்லை என்ற காரணத்தால் அந்தக் கல்லூரி நீண்ட நாள் மூடியிருந்தது. நான் இந்த சட்ட மன்றத்திலே 1977 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக வந்த நேரத்தில் அப்போது இருந்த கல்வி அதிகாரிகள், மற்றவர்களை எல்லாம் அணுகி அந்த பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரால் இருக்கின்ற அந்தக் கல்லூரியை நடத்தவேண்டுமென்று நான் முயற்சி செய்து மறுபடியும் நிர்வாகத்தை எல்லாம் அழைத்துப் பேசி, நிர்வாகம் சரிவர வராத காரணத்தால் நம்முடைய அரசாங்கமே பொறுப்பு ஏற்று அந்தக் கல்லூரி இப்போது நடந்துகொண்டிருக்கிறது.

பிற்பகல் 4.30

அரசாங்கம் கைநிறையச் சம்பளத்தைப் பேராசிரியர் களுக்குக் கொடுக்கின்றது. ஆனால், கட்டிடம் கிடையாது. பேராசிரியர்கள் பாடம் நடத்துவது கிடையாது. பேராசிரி யர்களின் எண்ணிக்கையைவிட மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்தக் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. மாபெரும் தலைவரும், இந்தத் தேசத்திற்காக அரும்பாடுபட்டவரும் தெய்வமும், தேசியமும் இரு கண்கள் எனக் கருதுபவருமான பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரால் நடை பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய கல்லூரி இன்று பாழ்பட்டுக் கிடக்கின்ற அந்தக் காட்சியினை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நேரில் பார்க்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுதெல்லாம் ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால் அது சாதாரணமான ஒரு காரியமாக இருக்க முடியாது. கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தால்கூட ஒரு கல்லூரியை இப்பொழுது தொடங்குவது என்பது மிகக் கடினம். இவ்வளவு சிரமத் திற்கிடையில் எங்களுடைய வறண்ட பகுதியில் கல்வித் துறையில் ஒரு கல்லூரி இருக்கிறது என்று சொன்னால் அந்தத் தனியார் கல்லூரியைச் சிறப்போடும், செம்மை யோடும் நடத்த வேண்டிய பொறுப்பு நம்முடைய அரசுக்கு உண்டு. அந்தத் தனியார் கல்லூரிக்கு எப்படிக் கட்டிடம் கட்டுவது, அரசே அதை ஏற்றுக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதா நம்முடைய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஒரு காலத்தில் இராம நாதபுரம் மன்னருக்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்த தற்காக மன்னர் அவர்கள் 22½ கிராமங்களைத் தான மாகக் கொடுத்ததாக ஒரு வரலாறு இருக்கிறது. அந்த 22½ கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்



அவருடைய பெயரில் இருக்கின்றன. அந்த நிலங்களை யெல்லாம் வைத்துத்தான இந்தக் கல்லூரியைத் தொடங்கி னார்கள். ஆனால், அந்த நிலங்களையெலலாம் உழுபவர்களிட மிருந்து அந்தக் கல்லூரிக்கு எந்தவிதமான வருமானமும் கிடைப்பதில்லை.

கல்லூரி என்பது தனியார் கல்லூரியாக இருந்தாலும், அரசு கொடுக்கின்ற சம்பளத்தின் காரணமாகத்தான் அந்த கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் கூட அந்தக் கல்லூரியை ஒரு தடவை பார்த்துள்ளார்கள். எங்கள் பகுதியில் இருக்கின்ற சூழ்நிலை யில் இந்தக் கல்லூரி ஒன்றுதான் எங்களுக்குக் கல்வி கொடுக்கக்கூடிய வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரியை ஒன்று அரசு கல்லூரியாக எடுத்து, ''பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அரசு கல்லூரி' என்ற பெயர் வைத்து, அதற்கான கட்டிடங்களைக் கட்டி, மற்ற தள வாடங்களை ஏற்படுத்தி, சிறப்பான கல்லூரியாக அதை ஆக்கித்தர வேண்டும்; அல்லது சென்னையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பச்சையப்பன் கல்லூரியைப் போன்று அதை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியாக ஒரு 'trust' -ஐ ஏற்படுத்தி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரில் இருக்கின்ற நிலங்களை, அவர் பெயரில் இருக்கின்ற சொத்துக்களையெல்லாம் கூட அதற்கு உரிமையாக்கி, மிக நல்ல பேரறிவாளர்கள், நல்ல பெரும் தனக்காரர்கள் இவர்களையெல்லாம் அதில் அங்கத்தினர் களாக்கி அந்தக் கல்லூரியை ஒரு சிறந்த கல்லூரியாக ஆக்கித்தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திருத்தம் என்பது இன்று மிக முக்கியமான ஒரு திருத்தம் ஆகும். காரணம் பல கல்லூரிகள் இன்று வியாபார நோக்கத்தோடு நடந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு நடக்கின்ற தனியார் கல்லூரிகளையெல்லாம் ஒழுங்கு படுத்தி, அரசு முழுக்கவனம் செலுத்தி, கல்வித் துறையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எல்லாம் என்ன சொல் லுகிறார்கள் என்று சொன்னால், ஒரு பிரிவில் ஒரு அதிகாரி கொடுக்கின்ற கடன்கள் அனைத்தையும் வசூல் செய்த பிறகு தான் உனக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்று சொல்லு கிறார்கள். அதே போல் இந்தக் கல்லூரிகளிலும், பணியாற்று கின்ற பேராசியர்களுக்கு, அந்த மாணவர்கள் வெற்றி

பெற்றால்தான் உங்களுக்கு எதிர்காலத்தில் பதவிஉயர்வு அல்லது சம்பள உயர்வு என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டு, இந்தச் சட்டத்திருத்தத்தை ஆதரித்து, உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) பியாட்ரிக்ஸ் டி'சோசா.

Dr. (Thrimath.i) BEATRIX D' SOUZA : Hon. Speaker, Sir, as a Christian and a representative of a minority community, I am, in principle, against undue interference by the Government and infringement of the rights of private minority institutions, Christian or otherwise, by the Government. However, when justice is not rendered to teachers and when, despite a Government Order and the recommendation of the Syndicate of the Madras University, five teachers-four of them Christians-are in imminent danger of being dismissed after long years of service, then, it is right and proper for the Government to step in. I know that the Bishop has pleaded on behalf of these teachers but in vain. To quote Shakespeare, "Something is rotten in the State of Denmark",. I refer to the state of affairs in the Madras Chrisitan College. A domestic enquiry has been conducted, a show-cause notice has been issue and, within a few days from now, five College teachers who hav served the Madras Christian College faithfully for long will be dismissed. Their only fault appears to be that they have undergone an orthodex influence in an authonomous college which has been in existence for over 150 years and which has a long tradition of liberalism. The time has come for the Hon. the Minister for Education, who has been apprised of the situation, to step in and protect the rights of these teachers, with the powers given to the Government by the Prvate Colleges ((Regulation) Act,. Since it is Christians who are being admonished, the rights of the Government in this regard are upheld by the Chrstians themselves. Therefore the Government has the rights and the sacred duty to protect these individuals against an unjust and harsh system. Thank you

பிற்பகல் 4.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் கல்லூரிகள் பற்றிய இந்தச் சட்டத் திருத்த முன்வடிவு என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்ததைப் போன்று தனியார் நிர்வாகத்திலே இருக்கின்ற கல்லூரிகள் பலவற்றில் அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற்றுக்



கொண்டும், அரசாங்கத்தினுடைய உதவி பெறாத நிலைமையிலும் நிர்வகிக்கப் படுகின்ற கல்லூரிகளில் பலமுறைகேடுகள் நடக்கின்ற நேரத்தில் அந்தக் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு அதிலே பயிலுகிற நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிற போது அரசாங்கம் தலையிடுவதற்கு என்று ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அதாவது 'பிரைவேட் காலேஜ் ரெகுலேசன் ஆக்ட்' என்று தனியார் பள்ளி, கல்லூரி ஒழுங்குபடுத்துகிற சட்டங்கள். அந்தச் சட்டத்திலே தான் ஒரு விதிக்கு இப்போது திருத்தம் கொண்டு வந்து உங்கள் முன்னாலே விவாதத்திற்கு வைத்திருக்கிறோம். அதிலே 10 ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதை இன்னும் 5 ஆண்டுகள் அதிகப்படுத்தி 15 ஆண்டுகள் வரை அரசாங்கம் அந்தப் பொறுப்பிலே வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் இப்போது வைக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய சாரம்.

இங்கே மாண்புமிகு ஆங்கிலோ இண்டியன் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் திருமதி. டி'சோசா அவர்கள் ஒரு மைனாரிட்டி கல்லூரி பற்றிய சில குறிப்புகளையும் இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் நம்முடைய இந்திய நாட்டின் தலைவர்களில் ஒரு தலைவராகத் திகழ்ந்த நம்முடைய வணக்கத்திற்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரால் நடைபெறுகிற அந்தக் கல்லூரியில் நடைபெற்ற நாமெல்லாம் வருந்துவதற்குரிய அந்த நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்லி அது இப்போது அரசின் பொறுப்பிலே நடைபெற்றாலும் அது தினசரி செத்து, செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிற ஒரு கல்லூரியாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி அதை அரசே ஏற்றுக்கொண்டு ஒரு அரசு ஏற்றுக்கொள்ளலாமா, முழுமையான உயிருடைய கல்லூரியாக அந்தப்புகழ் மிக்க தலைவருடைய பெயராலே நினைவுச் சின்னமாக விளங்குகிற அந்தக் கல்லூரியை அரசே பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்கள். நான் அந்த இரண்டு கருத்துக்களுக்கு மாத்திரம் விளக்கம் சொல்லி அமைகிறேன்.

பிற்பகல் 4-40

நம்முடைய தேவர் பெருமகன் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்கள் பெயராலே இருக்கிற கல்லூரியைப் பொறுத்தவரையில் அதை யார் நிர்வகிப்பது என்பதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு உயர்நீதி மன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கிறது. ஆனால் இதற்கிடையில் நிர்வாகச் சீர்கேடுகளை காரணம் காட்டித்தான் இன்றைக்கு அரசாங்கம் அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் முயற்சி

எடுத்து வழக்கிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறவர்களிடத்தில் பேசி நீங்கள் அதற்கு தீர்வு காண்பீர்களேயானால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே, தலைவர் அவர்களே உங்கள் மூலமாக, இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த பசும்பொன் தேவர் பெருமகன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை ஒரு புகழ்மிக்க அரசு கலலூரியாக மாற்றுவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப்போதே அரசு கல்லூரி போன்றுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே நடைபெறுகின்ற செலவுகள் அனைத்தும் அரசினிடத்திலே இருந்து தான் பெறப்படுகிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக அது தனியார் கல்லூரி என்ற பெயரிலே அந்தச் சொத்துக்களுக்காகவோ அல்லது நிர்வாகத்திற்காகவோ அல்லது எந்தக் காரணத்திற்காகவோ யார் யாரோ அதிலே போட்டிப்போட்டுக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருப்பதைத் தீர்ப்பதற்காக நீதிமன்றத்திற்கு சென்று இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் மாத்திரம் இதிலே தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் போன்ற, அந்தப் பகுதியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் இன்னும் சொல்லப்போனால் நம்முடைய சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களும், இந்தப பொறுப்பை ஏற்றுக்கொண்டால், மிக விரைவிலே இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பார்களேயானால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்கு பயன்படுகின்ற அந்தக் கல்லூரியை மிகச் சிறந்த கல்லூரியாக மாற்ற இந்த அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி பியாட்ரிக்ஸ் டி' சோசா அவர்கள் இந்த சென்னை கிருஸ்துவ கல்லூரியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். தனியார் கல்லூரிகள் பற்றிய சட்டத் திருத்தம் என்ற காரணத்தால் அந்தக் கல்லூரியைப் பற்றிய பிரச்சினையும் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. ஒரு தகவலை மாண்புமிகு தலைவர் அவர்களே உங்கள் மூலம் நான் இந்த மன்றத்திற்கும் மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இன்று மக்களிலே பெரும்பாலோருக்கு இந்தத் தனியார் நிர்வாகத்திலே இருக்கிற கல்லூரிகள் அவர்களுடைய முயற்சியால், அவர்களுடைய செலவிலே நடத்தப்படுவது போன்ற ஒரு தோற்றம், எண்ணம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. நான் அதைத்தான் முன்னாலேயே சொன்னேன். 1,300 கோடி ரூபாய் நீங்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். அதிலே [illegible]யமாக மாத்திரம் சுமார் 1,200 கோடி ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த 1,200 கோடி ரூபாய்



என்பது அரசாங்க கல்லூரிகள், அரசாங்க நிறுவனங்களுக்கு மாத்திரம் அல்ல. எய்டெட் காலேஜ், நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்களே, அதே போல உதவி பெறுகிற தனியார் கல்லூரிகள் அதிலேயும் எப்படி உதவி பெறுகிறார்கள் என்றால், அங்கே இருக்கிற ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசாங்கம் சம்பளம் தருகிறது. ஒரு காலத்தில் அந்தக் கல்லூரிகள் தோன்றுவதற்கு நிலங்களைக்கூட அரசாங்கமே வழங்கி இருக்கிறது. அதற்குப் பிறகு கட்டிடங்களை கட்டுவதற்கு யார் யாரோ நிதி வழங்கியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஏற்பட்டதற்குப் பிறகு இன்றைக்கு நிர்வாகத்திலே வந்து சிலபேர் அமர்ந்துகொண்டு அவர்கள் தங்களுடைய சொத்தைப் போல அதை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். வெளியிலே இருக்கின்ற மக்களுக்கு, குறிப்பாக இந்தக் கிருஸ்துவக் கல்லூரி பற்றி விவாதத்திற்கு வந்ததால் அந்தப் பெயரைச் சொல்லிக் குறிப்பிடுகிறேன். வேறு யாரையும் புண்படுத்த வேண்டும் அல்லது அவர்களைக் குறைப் படுத்தவேண்டும் என்பதற்காக சொல்லவில்லை அல்லது சிறுபான்மை பிரிவினரைப் பற்றி அவர்களுடைய வளர்ச்சியைப் பற்றி அல்லது அவர்களுக்குள்ள உரிமைகளைப் பறிக்கவேண்டுமென்பதற்காகவும் சொல்லவில்லை. திருமதி டி. சூசா போன்ற, கல்லூரிகளில் பணியாற்றிய ஆசிரியைகள் அவர்கள் மாநில கல்லூரியிலே பணியாற்றி இப்போதுதான் நம்முடைய முதல்வர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அவர்களை நியமன உறுப்பினராக தேர்தெடுக்கப் போகிறார்கள் என்று தெரிந்ததற்குப் பின் அவர்கள் பேராசிரியையாக விளங்கியவர்கள்—ராஜினாமா செய்துவிட்டு வந்திருக்கிறார்கள். ஒரு சிறுபான்மை சமுதாயத்தை ஆங்கிலோ இந்தியர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். ஆகவே, அவர்களே ஒரு ஆசிரியர் என்கிற காரணத்தாலேதான், 'தனக்கு வந்தால்தான் தலைவலியும், காய்ச்சலும்' என்பார்களே அதேபோல ஒரு ஆசிரியர் ஆக, இந்த 'டீச்சிங் கம்யூனிட்டி' யிலே இருந்து வந்த அந்தக் காரணத்தினாலே இன்றைக்கு அந்த கிருத்துவக் கல்லூரியில் சில குறிப்பிட்ட ஆசிரியர்கள் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிற்கல் 4.45

அங்கே உண்ணாவிரதம் இருந்தார்கள். போராட்டம் தொடங்கினார்கள், அரசாங்கத்தினுடைய கவனத்திற்கே இது கொண்டுவரப்படவில்லை. காரணம் இது ஒரு மைனாரிட்டி இன்ஸ்டிட்யூசன். அதற்குப் பிறகு பல்கலைக் கழகமும் தலையிட முடியவில்லை. அரசாங்கமும் தலையிட முடியவில்லை. கடைசியில் ஆசிரியர்கள் அமைப்பு எல்லாம் அரசாங்கத்திடம் முறையிட்டதற்குப் பிறகு, அவர்களை நாங்களே அழைத்துப் பேசுகிறபோது அந்தக் கல்லூரியினுடைய முதல்வர் வந்தார் நான் உரிய முறையில் நீங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து.

கொள்ளுங்கள். ஆசிரியர்களிடத்திலே அந்த அளவில் நீங்கள் பகைமை உணர்ச்சி காட்ட வேண்டாம். குறைகள் இருந்தால், குற்றம் இருந்தால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னதற்குப் பிறகும், இப்போது 5 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்வதற்காக 'ஷோகாஸ் நோட்டீஸ்' கொடுத்திருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனுக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அநேகமாக 3 அல்லது 4 பேர் கிருஸ்தவர்கள்தான். மைனாரிட்டி வகுப்பைச் சார்ந்தவர்கள் தான். அதனால் தான் நம்முடைய திருமதி டி. சூசா அவர்கள் இந்தக் கருத்தை இங்கே தொடங்கினார்கள்.

ஆகவே, இந்த கிருஸ்தவக் கல்லூரிக்கு மாத்திரம் நாம் ஆண்டு ஒன்றுக்கு 1கோடியே 23 லட்சத்து 24 ஆயிரத்து 900 ரூபாய் சம்பளமாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த உண்மையை நீங்கள் தெரிந்துகொண்டாக வேண்டும். நாம் மற்ற விவரங்களுக்குள் இப்போது செல்ல விரும்பவில்லை. இதைப் போலத்தான் தமிழகத்தில் நடைபெறுகிற சிறுபான்மை தனியார் கல்லூரிகள். கிருஸ்தவக் கல்லூரிக்கு மட்டும் 1கோடியே 23 லட்சத்து, 24 ஆயிரத்து 900 ரூபாய் அரசாங்கம் ஆண்டுதோறும் வழங்குகிறது. இதற்குப் பிறகு வேறு செலவுகளுக்காகவும் அரசாங்கம் வழங்குகின்றது. அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

ஆகவே, ஆசிரியர்களுக்கு சம்பளம் நாம் தருகிறோம். ஆனால் ஆசிரியர்களை நியமிக்கிற உரிமை அரசாங்கத்திடம் இல்லை. ஆசிரியர்களை நீக்குகிற உரிமை அரசாங்கத்திடம் இல்லை. இந்த சூழ்நிலைகளை எல்லாம் மனதில் வைத்து தான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைக்கேற்ப அரசியல் அமைப்பு சட்டங்களே மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. சிறுபான்மையினருக்கு இருக்கிற உரிமை என்பது மிகத் தெளிவாக அரசியல் சட்டம் அமைப்பு சொல்லியிருக்கிறது. அவர்கள் 31-ல் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். "all minorities whether based on religion or language shall have the right to establish and administer the educational institutions of their choice".

என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் அரசியல் அமைப்பு சட்டம் வகுத்திருக்கிற அடிப்படை உரிமை. ஆகவே அவர்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு, அது மைனாரிட்டி மொழி சிறுபான்மையினராயினும் அல்லது மதத்து சிறுபான்மையினராயினும் அவர்கள் இந்த நிறுவனங்களைத் தொடங்குவதற்கு முழு அதிகாரம் பெற்றவர்கள். இது வளர்ந்து வளர்ந்து இந்த நிறுவனங்களுக்குள்ளே தலையிடக் கூடாது என்கிற ஒரு வைதிக மனப்பான்மையை



போன்ற ஒரு கருத்தை வலியுறுத்தி வந்த காரணத்தை இன்றைக்கு உயர்நீதி மன்றம் மறுத்து தீர்ப்பளித்திருக்கிறது. உச்ச நீதிமன்றமும் மறுத்து தீர்ப்பளித்திருக்கிறது. அவர்கள் இந்த நிறுவனங்களைத் தொடங்குவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் மற்ற விதிமுறைகள் அரசாங்க விதிமுறைகளுக்கு, பொது விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டாக வேண்டுமென்று இன்றைக்கு உச்ச நீதி மன்றத்திலும் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திலும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வழக்குகளில் இப்படி தீர்ப்புகள் வழங்கப்பெற்றிருக்கின்றன. ஒரு விதிவிலக்கு தனியார் கல்லூரி திருத்தச் சட்டம் என்பதில் இருந்தது. அப்படி ஏற்படுத்தப்பட்ட அந்த விதிவிலக்கை சென்னை உயர் நீதிமன்றமும் சுட்டிக்காட்டி அந்த விதிவிலக்கு தந்ததே தவறு. எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தான் இங்கு சட்டம் செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்டியதையொட்டி ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆசிரியர்களுடைய பிரச்சினைகளுக்காக.

அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்ட பிறகும், அந்த ஆசிரியர்களை நாங்கள் வேலையை விட்டு நீக்குகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற தனியார் கல்லூரிகள் என்பது அநேகமாக செல்ப் பினான்சிங், தங்களுடைய நிதியிலேயே நடக்கிற கல்லூரிகள் போன்றவைகளைத் தவிர மற்றவைகள் அனைத்தும், 99 சதவிகிதம் நம்முடைய அரசு வரிப் பணத்திலே. அரசினுடைய நிதி உதவியிலே நடைபெறுகிற கல்லூரிகள் தான். அது எந்த மதத்தைச் சார்ந்த, எந்த மொழியைச் சார்ந்த, எந்தப் பிரிவைச் சார்ந்த கல்லூரியாக இருந்தாலும் சரி, ஆகவே, அப்படி வருகிற காலத்தில், இந்தக் கல்வி நிறுவனங்களை ஒரு தொகுதிக்குள்ளேயே, ஒரு வரன்முறைக்குள்ளேயே உட்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் மிகுந்த எச்சரிக்கையோடும், யாருடைய உரிமைகளும் பாதிக்கப்படாத முறையில், பறிக்கப்படாத வகையில், ஆனால் அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உரிய நீதி கிடைக்கின்ற வகையிலே ஒரு சட்டமுன்வடிவை கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணமும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. சூசா அவர்கள் இந்த கிருஸ்தவக் கல்லூரிப் பிரச்சினையை இந்த சட்டமுன்வடிவிலே எழுப்பி விளக்கம் தெரிவிக்க எனக்கு வாய்ப்புத் தந்ததற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4.50

நான் அந்தக் கிருத்துவக் கல்லூரி நிர்வாகத்தை, உங்கள் மூலம் அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து யாருக்கும் நீங்கள் தீங்கு இழைக்காதீர்கள்.

இன்றைக்குப் புகழ்மிக்க இந்தக் கல்லூரியினுடைய நிர்வாகத்தின்மீது பல புகார்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தக் கல்லூரியினுடைய அமைப்புகள் பலவற்றிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளை எல்லாம் பரிசீலிக்கிற நேரத்தில் இன்னும் ஒன்றையும் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துகிற சூழ்நிலைக்கு கிருஸ்துவக் கல்லூரி இடம் அளித்துவிட வேண்டாம் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தனியார் கல்லூரிகள், சிறுபான்மை நிர்வாகக் கல்லூரியானாலும் முறைகேடுகள் நடந்தால், அங்கே அநீதிகள் இழைக்கப்பெற்றால், அரசாங்கம் தலையிட்டு ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் ஸ்பெஷல் ஆபீசர், அந்தச் சிறுபான்மைப் பிரிவைச் சார்ந்தவராக இருக்கவேண்டுமென்பது விதி. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் கிருத்துவக் கல்லூரி நிர்வாகிகளை அன்போடு கேட்டுக்கொள்வேன், புகழ்மிக்க அந்தக் கல்லூரியினுடைய சிறப்பை, பெருமையை நிலை நிறுத்துங்கள். அந்தச் சிறுபான்மை சமுதாயத்தினர் நடத்துகிற கல்லூரிகள் மிகச் சிறந்தவை என்று பெற்றிருக்கிற பெயரைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லி, இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்க்கின்ற வகையிலேதான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிறபோது, செக்ஷன் 38-லே ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டு வந்து, 10 ஆண்டுகள் கழிந்த பிறகு, ஒவ்வொர் ஆண்டாக நீட்டி, 5 ஆண்டுகள் வரையில் நீட்டிக்கலாம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது 1,200 கோடியை தனியார் கல்லூரிகளுக்கு சம்பளத்திற்காக அரசாங்கம் பணத்தைக் கொடுத்துவிட்டு, 10 ஆண்டுகளுக்குள் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அரசே ஒரு ஆணை பிறப்பித்து, அதை அரசுக் கல்லூரியாக மாற்ற ஏன் அரசு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே. 1,200 கோடியும் தனியார் கல்லூரிகளுக்கு அல்ல. அதில் ஒரு திருத்தம். தனியார் கல்லூரிகளுக்கும் சேர்த்து 1,200 கோடி ரூபாய். இந்த முறைகேடு நடைபெறுகிற தனியார் கல்லூரிகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டால் என்ன என்ற பிரச்சினை விவாதிக்கப்படுகிறது. விவாதிக்கப்



பட்டது. ஆனால் அதிலே இருக்கிற சிக்கல், அதிலே இருக்கிற சொத்துக்கள் தனியாருக்குச் சொந்தமானவை. ! கட்டிடங்கள், இடங்கள்—அப்படிப்பட்ட சொத்துக்கள் அவர்களுக்குச் சொந்தமானவை. அப்படிப்பட்ட சொத்துக்களைச் சேர்த்து எடுக்கிறபோது அது அரசியல் சட்டத்தின்படி சில அடிப்படை உரிமைகளைப் பறிக்கிறோம் என்ற சூழ்நிலை வரும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு சட்டம் நம்மிடத்தில் இல்லை. ஒருவேளை கால நிலைமை, சூழ்நிலைகள் வளர்ந்து, வளர்ந்து அப்படி எடுக்கவேண்டிய சூழ்நிலை வருமானால் அதற்குரிய சட்டத்தை உருவாக்க அரசு பரிசீலிக்கும். அப்படி ஒரு சட்டம் இயற்றப்பட்டதற்குப் பிறகு, முழுமையாக இப்படிப்பட்ட முறைகேடான தனியார் கல்லூரிகளை, ஆசிரியர்கள்-மாணவர்களுக்குத் தீங்கு இழைக்கிற கல்லூரிகளை அரசே எடுத்துக்கொள்ளும் வகையில் அந்த முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு போவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் எனனும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/1991) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.



பிற்பகல் 4.55

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஈ) 1991–92 ஆம் ஆண்டிற்கான குழுக்கள் அமைப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்கள் பற்றிய பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

சட்ட விதிகள் ஆய்வுக்குழு.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 239 (1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1991–92 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, (பேரவைத் துணைத் தலைவர்).
2. திரு. செ. பெருமாள்
3. திரு. சி. குழந்தைவேலு
4. திரு. ம. சின்னசாமி
5. திரு. வி. சுப்பிரமணியன்
6. செல்வி எல். சுலோச்சனா
7. திரு. ஜி. விசுவநாதன்
8. திரு. டி. எம். ரங்கராஜன்
9. டாக்டர் ஜெ. பரந்தாமன்
10. திரு. தஞ்சை ராமசாமி
11. திரு. இ. செல்வராஜ்
12. திரு. சோ. பாலகிருஷ்ணன்

பேரவையின் 240-வது விதியின் கீழ் மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

## அரசு உறுதிமொழிக் குழு.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 248 (1)-வது விதியின்கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை 1991–92-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. டாக்டர் பெ. வீரபாண்டியன்
2. திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்
3. திருமதி ப. சரஸ்வதி
4. திரு. கே. சின்னசாமி
5. திரு. வெ. தமிழரசு
6. திரு. வி. பி. ஆர். ரமேஷ்
7. திரு. என். ஜி. வேணுகோபால்
8. திரு. எம். பெரியவீரன்
9. திரு. எம். கே. சுந்தரம்
10. திரு. மெ. ஆண்டி அம்பலம்
11. திரு. இரா. நடேசன்
12. திருமதி ரமணி நல்லதம்பி

பேரவையின் 249 (1)-வது விதியின் கீழ் திரு. இரா. நடேசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

## அவைக் குழு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 253 (1)-ன் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1991–92-ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. கா. பு. பட்டாபிராமன் அரசு தலைமைக் கொறடா.



3. திரு. எஸ். அண்ணாமலை
4. திரு. த. க. இராதாகிருஷ்ணன்
5. திரு. சி. இராஜன் பாபு என்கிற தணிகைபாபு
6. திரு. க. அர்ச்சுனன்.
7. திருமதி கே. எம். கலைச்செல்வி
8. டாக்டர் ச. ஆரோக்கியசாமி
9. திரு. மா. கோவிந்தராஜலு
10. திரு. அராம. இராமநாதன்
11. திரு. எஸ். சண்முகநாதன்
12. திரு. த. ரத்தினவேல்
13. திரு. தா. வேடியப்பன்
14. திரு. எச். எம். ராஜு
15. திருமதி ஜெ. லோகாம்பாள்
16. திரு. எஸ். ஆர். ஜெயராமன்
17. திரு. ஆர். தங்கராஜ்
18. திரு. உ. பலராமன்

பேரவை விதி 253 (1)-ன்கீழ், மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

## பேரவை விதிகள் குழு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256-ன்கீழ் 1991-92 ஆம் ஆண்டிற்கு, பின்வரும் உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர்
3. மாண்புமிகு அவை முன்னவர்
4. மாண்புமிகு சட்ட அமைச்சர்

5. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

7. திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன், எதிர்க் கட்சித் தலைவர்.

8. திரு. கா. ப. பட்டாபிராமன், அரசு தலைமைக் கொறடா.

9. திரு. இ. இராமகிருஷ்ணன்

10. திரு. துரை. இராமசாமி

11. திரு. கு. க. துரைமுருகன்

12. திரு. வே. தம்புசாமி

13. திரு. ஜி. பழனிசாமி

14. திரு. அ. செல்வராஜ்

15. திரு. கோ. ஜானகிராமன்

16. திரு. எ. சம்பத்

17. திரு. வி. கே. லட்சுமணன்

பேரவை விதி 256-ன் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

## மனுக்கள் குழு.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 261 (1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1991–92 ஆம் ஆண்டிற்கான 'மனுக்கள் குழு'வின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. திரு. கா. ப. பட்டாபிராமன், அரசு தலைமைக் கொறடா,

2. திரு. வி. கே. சின்னசாமி

3. திரு. ஏ. டி. செல்லசாமி



4. டாக்டர் திருமதி மு. சீனியம்மாள்
5. திரு. வி. என். சுப்பிரமணியன்
6. திரு. தா. செழியன்
7. திரு. கு. சீனிவாசன்
8. திருமதி. செ. சுந்தராம்பாள்
9. டாக்டர் தே. குமாரதாஸ்
10. திரு. டி. சுதர்சனம்
11. திரு. ச. அழகிரி

பேரவையின் 261 (2)-வது விதியின் கீழ் திரு கா. ப. பட்டாபிராமன், அரசுத் தலைமைக் கொறடா அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

பிற்பகல் 5–00 மணி

## பேரவை நூலகக் குழு.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 264 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1991–92 ஆம் ஆண்டிற்கான 'பேரவை நூலகக் குழு'வின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்

2. திரு. ஆர். டி. அரங்கநாதன்

3. திரு. ஆ. அறிவழகன்

4. திருமதி என். சி. கனகவல்லி

5. திருமதி சு. தி. சரஸ்வதி

6. திரு. சி. கிருஷ்ணன்

7. திரு. பெ. தர்மலிங்கம்

8. திரு. எஸ். வி. சண்முகம்

9. திரு. அரா. பழனிசாமி

10. திரு. கே. கந்தசாமி

பேரவையின் 264 (3)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராவார்.

(பேரவைத் தலைவர்) [1991 அக்டோபர் 4

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 268 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1991—92-ஆம் ஆண்டிற்கான 'பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்' குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.

1. திரு. சி. தாமோதரன்
3. செல்வி பி. நிர்மலா
3. திருமதி கே. பஞ்சவர்ணம்
4. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்
5. திரு. கா. பூ. முனுசாமி
6. திரு. கே. ஆர். ராஜு
7. திரு. எஸ். ஜெயக்குமார்
8. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்
9. திரு. எஸ். ஆண்டித் தேவர்
10. திரு. ஏ. எம். முனிரெத்தினம்
11. திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி

பேரவையின் 268 (2)-வது விதியின் கீழ் திரு ஏ. ஏகாம்பர ரெட்டி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

11. சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஏ) டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல் கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 48/1991). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1991 அக்டோபர் 4] (திரு. க. முத்துசாமி)

''1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு) எண். 48/1991) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தண்டாயுத பாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஓரிரு வார்த்தை கள். பொதுவாக அகில இந்திய அளவிலே ''ஆல் இந்தியா இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சையன்ஸ்'' சண்டிகாரில் உள்ள மருத்துவமனை ஆகியவைகளுக்கு தனிப்பட்ட முறையிலே மத்திய அரசாங்கம் நிதி வழங்குகிறது. 1978-ஆம் ஆண்டு முன்பு சபாநாயகராக இருந்த திரு. பி. ரபிராய் அவர்கள், சுகாதார அமைச்சராக இருந்தபோது அவர் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்தவர், அவருடைய மனைவியும் ஒரு டாக்டர் - அவரிடத்திலே நாங்கள் கேட்டோம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் மைய அரசிலே இருந்து நிதி ஒதுக்கப்படுகிறது. இந்தப் பணம் டில்லியிலே உள்ள அகில இந்திய மருத்துவ மனைக்கும், சண்டிகாரில் உள்ள மருத்துவ மனைக்கும் ஒதுக்கு கிறார்கள். இது போன்றே எல்லா மாநிலங்களிலும் உள்ள தலைநகரங்களில் உள்ள ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் இப்படிப்பட்ட நிதியை ஒதுக்க வேண்டும் என்றும், இந்த மருத்துவப் பல்கலைக்கழகங்களையும் அதிலே சேர்த்து ஒவ்வொரு இடத்திற்கும் 10 படுக்கைகள் என்ற விதத்திலே இருப்பதை இன்னும் அதிகமாக விரிவு படுத்த ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் இவ்வளவு என்று வரையறுக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டோம். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்வேன் - அப்படிப்பட்ட ஒரு நிதி உதவியை நம்முடைய மாநிலத்திற்கு மைய அரசிலே இருந்து பெறுவதற்கு நாம் அத்தனை பேரும் ஒருமனதாக இருந்து பெற்று, டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை சிறப்பான முறையிலே வளர்ச்சி பெறுவதற்கும் தமிழகத்திலே இன்னும் மேன்மேலும் மருத்துவக் கல்லூரிகள் வருவதற்கும் வழி காண வேண்டும். இரண்டு மருத்துவக் கல்லூரிகள் மட்டும்தான் தமிழகத்திலே இருக்கின்றன.

ரத்கெனவே டாக்டர் புரட்சித் தலைவி எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போல மீண்டும் இந்த டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தோடு சேர்த்து. இன்னும் கூட சுய நிதியிலே யாராவது மருத்துவக் கல்லூரிகள் தொடங்க விரும்பினால் அவர்களை ஊக்குவித்து நீங்கள் சொல்வீர்களானால், அதிலே, அகில இந்தியாவிலிருந்து மெடிக்கல் ரெக்கக்னிஷன் கிடைக்காமல் போய் விடும் என்று சொல்வார்கள். ஆனால் மற்ற மாநிலங்களிலே அப்படி அல்லாமல் நம்முடைய மாநிலத்தைக் காட்டிலும் குறைவான மருத்துவ வசதிகளையும் மருத்துவ மனைகளையும் வைத்து இருக்கின்ற மற்ற மாகாணங்களிலே அவர்கள் அங்கீகாரம் பெற்றுவிடுகின்றார்கள். நம்முடைய மாநிலத்திலே அதனுடைய தரம் சிறந்ததாக இருக்க வேண்டுமென்று கருதுகிற அதே நேரத்தில் அந்த தரத்தை உயர்த்தி அந்த மருத்துவப் பல்கலைக்கழகத்தினுடைய உயர்வையும் நாம் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5.05

இன்னொன்று நம்முடைய மருத்துவ பல்கலைக்கழகத்திலிருந்தே கண்காணிக்கப்படுகின்ற ஒவ்வொரு பிரிவையும் பார்த்தால், சர்ஜன்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா, அதேபோன்று நரம்பியல்—நியுரோலாஜிஸ்ட் அதே போன்று கார்டியாலாஜிஸ்ட் இப்படி பல்வேறுவிதமான மருத்துவத் துறைகளில் அதனுடைய அகில இந்திய பிரிவுகள் எல்லாம் தமிழகத்திலேதான் முன்பு ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இப்போது நீங்கள் அதை எடுத்துப் பார்த்தால் கடந்த 4, 5 வருடங்களாக யாராவது ஒருவராவது சென்னையிலே இருந்து அகில இந்திய அளவிலே 'பேப்பர் சப்மிட்' பண்ண வேண்டுமென்று சொல்வார்கள். அதாவது 'தீசிஸ்' அப்படிப் பட்ட 'தீசிஸ்'—ஐ இதுவரையிலே அகில இந்திய அளவிலே யாரும் அங்கே கொண்டுவந்து அகில இந்திய அளவிலே ஒரு போட்டியிலே நாம் வெற்றி பெறுகின்ற அளவுக்கு அப்படிப்பட்ட முறையில் நம்முடைய சென்னையிலே இருக்கின்ற அரசாங்க ஆஸ்பத்திரியில் இருந்தோ அல்லது சென்னையிலே இருக்கின்ற பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் இருந்தோ யாருமே சென்று அப்படிப்பட்ட ஒரு புதிய உத்தியை, 'தியரி'-ஐ 'சப்மிட்' செய்யவில்லை. இதற்கு காரணங்களை நீங்கள் அலசி ஆராய்ந்து பார்த்தால் எந்த முறையிலே அவைகள் எல்லாம் அங்கே கொடுக்கப்படுகின்றன அல்லது பதவி கொடுக்கப்படுகிறதா, அவர்களுக்கு என்ன போஸ்ட் கொடுக்கிறார்கள் அதைப்பற்றி எல்லாம் பார்த்து எந்த வகையிலே கொடுத்தால் அதிலே [illegible] திறமையானவர்களை [illegible] இருக்கிறார்களா இல்லையா, இதற்கு கடந்த 4 வருடங்களாக ஏன் போட்டி





யில் தியரியை அவர்கள் சப்மிட் செய்யவில்லை என்பதை எல்லாம் நீங்கள் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த தமிழ்நாடு தான் முன்பெல்லாம் ஏன் இங்கிலாந்துக்கு கூட போய் குயின் எலிசபத்துக்குக் கூட மருத்துவம் பார்த்த டாக்டர்கள் தமிழகத்திலே இருந்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நாம் கூட சட்டமன்ற உறுப்பினர்களாகவோ, அமைச்சர்களாகவோ இருக்கின்றோம். நமக்கே அந்த மருத்துவ மனையின் மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னால் பொது மக்களுக்கு எப்படி நம்பிக்கை வரும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பொதுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற வகையிலே நாம் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆஸ்பத்திரிக்கு போக வேண்டும் என்று சொல்லவில்லை—ஆனால் அதனுடைய தரத்தை உயர்த்துகின்ற வகையிலே இந்த பல்கலைக்கழகமும் மருத்துவ மனையும் அமைய வேண்டுமென்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் சுருக்கமாகப் பேசவும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டபடி ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்லி அமர நினைக்கிறேன். மருத்துவக் கல்லூரி என்ற உடன், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சென்றவருடம் மருத்துவக் கல்லூரி பட்டப்படிப்பு இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவியை கொலை செய்து, மிகப் பெரிய அந்த குடும்பத்தை கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாக்கிய ஒரு சோக நிகழ்ச்சியை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். அந்த வழக்கு தற்போது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கடந்த தி.மு.க. ஆட்சியில் தான் இப்படிப்பட்ட ஒரு கொடூரமான நிலை ஏறபட்டது. அந்த கொலையை செய்தவர் மிகப் பெரிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெரும் புள்ளியினுடைய மகன் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்த வழக்கிலே அந்தப் புள்ளியினுடைய மகன் கைது செய்யப்படவில்லை. யாரோ அப்பாவிகளை மாட்டிவிட்டு, அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கும் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. ஆக, கல்லூரியில் படிக்கின்ற மாணவிகளுக்கு, தாய்குலத்தின் ஆட்சி நடக்கின்ற காரணத்தாலே தான் இதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலையை தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக கேட்க விரும்புகிறேன். நம்முடைய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் ஆராய்ந்து அறிந்தவர், தெரிந்தவர், புரிந்தவர், மிகத் திறமையாக நிர்வாகம் செய்யக்கூடிய

அமைச்சர் அவர். உதாரணமாக இந்தப் பேரவையில் வருகிற ஜனவரி மாதம் நான் பேசுகிறபோது அமைச்சர் அவர்களை நான் பாராட்டுவதற்காக முன்கூட்டியே இதை நான் சொல்கிறேன். அந்த மாணவியினுடைய தகப்பனார் மிகவும் ஏழ்மையானவர். கடைசியாக, இறுதியாண்டு முடிப்பதற்குள்ளாக அந்தப் பெண்ணினுடைய வாழ்க்கை முடிந்துவிட்டது. கல்லூரியில் ஹாஸ்டலில் வந்து புகுந்து அந்தப் பெண்ணையோ அல்லது வேறு பெண்ணையோ கற்பழிக்க முயற்சி செய்தபோது இந்தக்கொலையை நடத்தி—அந்தக் கல்லூரியில் முதன்மையாக திகழ்ந்த மாணவி அந்த மாணவி. அந்த மாணவியின் சொந்த ஊர் சேலம் மாவட்டம். அந்தமாவட்டத்தில் பிறந்த அவரின் குடும்பம் மிக ஏழ்மையான குடும்பம். ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து அந்த மாணவியைப் படிக்க வைத்த அந்த பெற்றோர்கள் கடனுக்கும், கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாகி இருக்கிறார்கள்.

பிற்பகல் 5.10

அப்படிப்பட்ட குடும்பத்தை பாதுகாக்கிற வகையில் அந்த மாணவியுடைய தகப்பனாருக்கு நிதியுதவி கொடுப்பதுடன்—அவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள். மகள் போய்விட்டாள். மகன் தற்போது பிளஸ்-1 படிக்கிறான். வருகிற ஆண்டு பிளஸ்-2 படிக்கிறான். வருகிற ஆண்டு அவனுக்கு முன்னுரிமை கொடுத்து எப்படியாவது கல்லூரி சீட்டு, மெடிக்கல் சீட்டு கொடுத்து, அந்த குடும்பத்தை காப்பாற்ற வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கல்லூரி மாணவிகள் படிக்கிற பகுதிகளுக்கெல்லாம் படையெடுத்து போய் பல்வேறு சம்பவங்களை தமிழ்நாட்டிலே நடத்தியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக தஞ்சையில் பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இன்னும் கூட நடந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனித்து அந்த மாணவிகளுக்கு, தஞ்சை கல்லூரியில் மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கிற எல்லா கல்லூரிகளிலும் இருக்கிற மாணவிகளுக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தக் குடும்பத்திற்கு தக்க பரிகாரம் காண்பதுடன், அந்த வழக்கை விரைவுபடுத்திச் செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது நிதியுதவி கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவு என்பது நம்முடைய ஆளுநர் அவர்களுக்கு, அவர் நியமித்த ஒரு குழுவின் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு, மூன்று நபர்களை பரிந்துரை செய்து, அந்த மூன்று நபர்களில் யாராவது ஒருவர் வைஸ்-சான்சிலராக நியமிக்கப்பதற்குண்டான சட்டத்தில், மீண்டும் யாராவது தகுதி படைத்தவர்களாக இல்லையென்று சொன்னால், அல்லது கவர்னர் அவர்கள், சான்சிலர் அவர்கள் அதிலே இருப்பவர்கள் தகுதி படைத்தவர்களாக இல்லையென்று அவர் கருதுவார்களானால், அந்த பட்டியலை திருப்பியனுப்பி விட்டு, வேறொரு குழுவை நியமித்து, மீண்டும் ஒரு புதிய பட்டியலை கேட்பதற்கு வழிவகைச் செய்யக்கூடிய ஒரு சட்ட திருத்தத்தை நாம் இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டுபேரும் அது முக்கியமான ஒன்று, தேவையான ஒன்று என்ற காரணத்தால் அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். எனவே, அந்த வகையில அந்தத் திருத்தத்தை மாமன்றம் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் இடையில் மருத்துவப் பல்கலைக்கழகம் என்று வந்தவுடனே இரண்டொரு கருத்துக்களைச் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பதில் சொல்லாமல் இருந்தால் சரியாக இருக்காது என்ற காரணத்திறகாக சுருக்கமாக நான் சொல்கிறேன். மத்தியிலிருந்து பணம் பெறுவதற்கான முயற்சியையெடுத்து, நம்முடைய மருத்துவத் துறைக்கு பணம் பெறவேண்டுமென்று திரு. தண்டாயுதபாணி அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். குறிப்பாக பல்கலைக்கழகங்களுக்கு மத்தியிலிருந்து சில நேரங்களில் தொடர்ந்து உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் மருத்துவப்பல்கலைக் கழகத்திற்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. அதைத் தொடர்ந்து வலியுறுத்தி பெறுவதற்கு நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தனியார் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அது தரமில்லாமல் போய்விடுகிறது என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்தால்தான் அது ஆய்விலே இருக்கிறது என்று ஏறகெனவே சொல்லியிருக்கிறன்.

அதைப்போல அகில இந்திய அளவில் நம்முடைய டாக்டர்கள் யாரும் போய் பேப்பர் பிரசென்ட் பண்ணுவது இல்லையென்று தெரிவித்தார்கள். ஆனால் வெளிநாடுகளுக்கு கூட

போய் நம்முடைய மருத்துவர்கள் மிக வெற்றிகரமாக, சிறப்பாக பணி செய்துவிட்டு வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க ஊக்கப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஜி. எச். பொறுத்தவரையில் சில இடங்களில் மோசமாக இருக்கலாம். பல இடங்களை நன்றாக வைத்திருக்கிறார்கள். நாங்கள் நேற்றைய தினம் கூட சென்று பார்த்துவிட்டு வந்தோம். ஏறத்தாழ நேற்று மட்டும் 5 குழுக்கள் தமிழகத்திலே பல்வேறு இடங்களுக்குச் சென்று அங்கே சர்ப்ரைஸ் விசிட் என்ற முறையில் பார்த்து வந்திருக்கிறார்கள். இப்போது அந்த ரிப்போர்ட்டை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். திங்கட்கிழமை அதனுடைய நடவடிக்கை என்ன என்பது பத்திரிக்கை வாயிலாக தெரிவிக்கப்பட இருக்கிறது. எனவே விரைவாக அப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 5.15

உறுப்பினர் சிங்காரம் அவர்கள் தஞ்சையிலே நடந்த அந்த கொலை சம்பந்தமாக தெரிவித்திருக்கிறார்கள். எற்கெனவே அரசு இதை கவனத்திலே எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அவர்களுக்கு நிவாரண உதவியா, அல்லது அந்தக் குழந்தைகளுக்கு படிப்பதற்கான வாய்ப்பா என்பதை எல்லாம் இப்போது சொல்ல முடியாது என்றாலும், பின்னாலே அதைப் பற்றி பரிவோடு நாம் பரிசீலிக்கலாம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாதுகாப்பு பற்றிச் சொன்னார்கள், அங்கே அதைச் சுற்றி காம்பவுண்ட் வால் கட்டுவதற்காக மற்ற வசதிகளைசெய்து கொடுப்பதற்காக. பாதுகாப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்காக 16 லட்சம் ரூபாயை அரசாங்கம் அந்த ஹாஸ்டலுக்காக ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தச் சட்டத் திருத்தம் என்பது மிக அவசியமான ஒன்று என்ற காரணத்தால் ஒரு மனதாக இதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏத்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏத்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் னம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏத்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

[திரு. சு. முத்துசாமி] [1991 அக்டோபர் 4

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 48/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போரே 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போரே 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஐ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1991). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.



1991 அக்டோபர் 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

ஏற்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

(9) நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1991). மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1991 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. தண்டாயுதபாணி.





திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த டவுன் பிளானிங் அண்ட் கன்ட்ரி. 'இந்த நகர்-ஊர் அமைப்புத் திட்ட சட்டத்தி னுடைய 124-வது பிரிவின் 1-ஆம் உட்பிரிவானது, அமைப் புத்திட்டக்குழுமம், 'பிளானிங் அத்தாரிட்டி' எதுவும் அச் சட்டத்தின்படியோ, அல்லது அதன்கீழ் செய்யப்படும் விதி களின் படியோ' தன் அலுவலர்களை புரிந்து வருவதற்கு, தனக்கு இயலுமாறு செய்துகொள்வதற்கு 'ஒரு திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5.20

இந்தத் திருத்தம் கொண்டு வந்து அந்த பிளானிங் அதாரிட்டிக்கு நாம் அதிகாரம் கொடுப்பதிலே தவறில்லை. ஆனால் அந்த அதிகாரத்தை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுவும் 2 வருடம், 3 வருடங்களுக்கு முன் பாகவே 4 மாடி கட்டியிருந்தாலோ, அல்லது 5 மாடிக் கட்டிடம் கட்டியிருந்தாலோ, இப்போது வந்து முந்தைய தேதி போட்டு மூன்று மாடி தான் கட்டவேண்டுமென்று ஒரு விதி கொண்டுவந்தால், அந்த நான்காவது, ஐந்தாவது மாடியை இடிக்க வேண்டி வரும். அதை இடத்திற்கு ஏற்றாற்போல் அங்கே வரைவு திட்டங்களுக்கு ஏற்றாற்போல், நாம் அதைப் பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஏற்கெனவே இந்த புற நகர் வளர்ச்சியிலேயும், அந்த நகர்ப் புறத்திலேயும், ஊர்களிலேயும் பல்வேறு திட்டங் களைப் போட்டு இப்படித்தான் கட்டிடங்கள் கட்டவேண் டும், இப்படித்தான் ரோடு அமைப்பு இருக்கவேண்டும் இப்படித்தான் 'டிரையினேஜ்' இருக்க வேண்டுமென்று, எல்லாம் வரைவுகள் போட்டு ஏறகெனவே செயல்படுத்தி இருப்பார்கள். ஆனால் இன்றைய தினம் அப்படி ஒரு நிலைமை ஒவ்வாததாக இருந்தால் பழைய நிலைக்கு திரும்பி, 4, 5 வருடங்களுக்கு முன்பாக தேதியிட்டு இப்படித்தான் இருக்க வேண்றுமென்று இப்போது செய்தால், அது பொதுமக்களை பாதிக்காத வண்ணம் செய்யவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த அதிகாரத்திலே பொதுமக்கள் கட்டிடங்களைக் கட்டுகிற போது, நீங்கள் இந்த இடத்திற்கு மேலே கட்டக் கூடாது என்று அப்போதே நாம அவர்களை கட்டுப்படுத்த வேண்டும். அப்படி கட்டுப்படுத்துவதற்கு தவறுகின்ற பட்சத்திலே, எங்கே தவறு நடக்கிறது என்று சொன்னால், அந்த அதிகாரிகள், எம்.எம்.டி.ஏ விலோ அல்லது டவுன் பிளானிங்கிலோ இருக்கிறவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடுகிறார்கள். காரணம்

அங்கேதான் ஊழல் ஏற்பட்டு, சரி அவன் கட்டிக்கொண்டு
போகட்டும் என்று இருந்துவிட்டு, நானும் போய் அங்கே
பரிசோதனை — இன்ஸ்பெக்ட் செய்துவிட்டு வந்தேன். அப்போது
அது சரியாகத்தான் இருக்கிறது என்று சொல்லி, அப்போது
சர்டிபிகேட் கொடுத்து விடுகிறார்கள். பிறகு போய்
பார்த்தால், ஒரு மாடி அதிகமாக இருக்கிறது. அவர்கள்
கோர்ட்டிலே போய் நான் கட்டி விட்டேன் என்றுசொல்லி
ஸ்டே வாங்கிவிடுகின்றார்கள். அல்லது லிப்ட் போடுவதற்
வதற்கு ஒரு பக்கத்திலே வைத்து 4 மாடிகளுக்கு லிப்ட்
போட்டு விட்டேன். ஆகவே அதைத் திரும்ப இடிக்க
முடியாது என்று சொல்கின்ற அளவிற்கு இருக்கிறது.
ஆகவே இந்த அதிகாரத்தை அவர்களுக்கு அளிக்கும்போதே
அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் ஆகாமல் இருக்கும் வண்ணம்
நாம் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் மெத்த பணி
வன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பம்பாய், கல்கத்தா, போன்ற பல்வேறு பெரு நகரங்களை
எல்லாம் நாம் பார்த்தால், பம்பாய், கல்கத்தாவைக் காட்டி
லும் நாம் கொஞ்சம் குறைவாகத்தான் கட்டியிருக்கிறோம்.
அங்கேயெல்லாம் 22 மாடி, 30 மாடிக் கட்டிடங்கள் எல்லாம்
கட்டப்பட்டிருக்கின்றன. இப்போது பெரு நகர வளர்ச்சி
ஏற்படுகின்ற அளவிற்கு காலத்திற்கேற்ப நம்முடைய அளவு
நிர்ணயங்களையும் நாம் சரிசெய்து கொள்ளவேண்டும்.
அதற்குத் தக்கவாறு செய்து கொள்ளவேண்டுமென்று நான்
இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இந்த தீர்மானத்தோடு பொதுவாக 21
நகராட்சிகளையும், 2 டவுன் ஷிப்புகளையும் திட்டத்திலே
கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைப்போல் குடியாத்தம்
நகரையும் அதிலே சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நான்
பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லவேண்டுமென்றால், குடியாத்தத்திற்கு
மாண்புமிகு அமைச்சரவர்கள் பெருந்தன்மையோடு ரூ. 2.4
கோடி குடிதண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கித் தந்திருக்கி
றார்கள். பேரவை வாயிலாகவே அவரை நான் மன்றாடி
கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதத்திலோ, அல்லது வரு
கின்ற மாதத்திலோ அவர்களாகவே வந்து அதற்கு
அடிக்கல் நாட்டி, குடியாத்தம் நகருக்கு பெருமை சேர்க்க
வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன்.

புதியதாகச் சொல்வது என்னவென்று சொன்னால், இப்
போது ஜார்ஜ் டவுன் இருக்கிறது, என்றால், நீங்கள் போய்
அந்த வீடுகளை எல்லாம் இடித்துவிட்டு, அங்கே ரோடு
களைப் போட முடியாது. ஏறகெனவே இருப்பதை நாம்



ஒன்றும் செய்ய முடியாது. 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்'
கொடுத்து அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தால் என்ன நடக்கும்
என்பதை, அதிலே நீங்கள் உட்கார்ந்து அவர்களுக்கு ஆலோ
சனைகளையும், அறிவுரைகளையும், அதற்கு வேண்டிய
தகுதிவாய்ந்த ஒரு குலையும் நீங்கள் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தைக் கொண்டு
வருகின்ற அதே நேரத்தில் அது செம்மையாக நடை
பெறுவதற்கு ஒரு பாதுகாப்புக் குழுவையும் ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டுமென்றும், அதிலே சட்டமன்ற உறுப்பி
னர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டு,
அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5.25

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நகர் ஊரமைப்புச் சட்டத்
தின் 124 ஆம் பிரிவு திட்டக் குழுமங்கள் அரசின் அனுமதி
யுடன் ஒழுங்கு முறை விதிகளை இயற்றுவதற்கு வகை
செய்து வருகின்றது. முன் தேதியிட்டு, இவ்விதிகளுக்கு செயல்
வடிவம் கொடுப்பதற்கு தற்போது சட்டத்திலே இடம் இல்லை.
அந்தக் காரணத்தினால் தான் அதற்கு வகை செய்ய
வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு 1971 ஆம்ஆண்டு
நகர்-ஊரமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு
வரவேண்டும் என்று கருதி அரசின் பரிசீலனையில் இருந்து
வந்தது. அந்த அடிப்படையில் தான் சென்னை பெரு
நகர் வளர்ச்சிக் குழுமத்தின் சமுதாய நல வளர்ச்சிப் பிரிவு
பணியாளர்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து, அதாவது 1980 ஆம்
ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஒழுங்கு முறை
விதிகள் செயலுக்கு வரும் முன்னரே, சென்னை பெருநகர்
வளர்ச்சி குழுமத்தில் பணியில் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.
ஆனால் 1980 ஆம் ஆண்டு பணி ஒழுங்கு முறை விதிகள்
இப்பணிகளுக்கும் சேர்த்து அமையாத காரணத்தால், அவர்
களுடைய பணிகளை முறைப்படுத்த அரசினால் இயல
வில்லை. இதனைத் தொடர்ந்து அவர்களுடைய பணி
களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டு
வசதி வாரியம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள
இயலும் என்று கருதப்பட்டது. எனவே தான் இப்பணி
யாளர்களின் பணிகள் 27—2—1981 ஆம் நாளில் இருந்து
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், மற்றும் தமிழ்நாடு வீட்டு
வசதி வாரியம் ஆகியவற்றிற்கு மாற்றப்பட்டது. பணி
விதிமுறைகள் ஏதும் இல்லாத காரணத்தால் சென்னை
பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பணியாற்றும் இப்பணியாளர்
களின் பணிகளை முறைப் படுத்த இயலவில்லை. அதனால்
இப் பணியாளர்கள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில்
சில ஆண்டுகள் பணியாற்றி இருந்தபோதிலும் அந்தப் பணிக்
காலத்தை வரன் முறைப்படுத்த இயலாததால் பணிச் சலுகைகள்
பலவற்றை அவர்களால் பெற இயலவில்லை.

எனவே விதிமுறைகளுக்கு முன் தேதியிலிருந்து செயல்
வடிவம் கொடுக்கும் வகையில் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு
நகர்ப்புற ஊரமைப்பு சட்டத்தில் இந்த 24-வது பிரிவை
அவையில் சமர்ப்பிக்கப்பட்டவாறு திருத்துவதற்கு கருதப்
பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாடு 1971 ஆம்
ஆண்டு நகர் நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்
பட்ட விதிமுறைகளுக்கு முன், முன்தேதியிட்டு செயல் வடிவம்
கொடுக்க திட்டக் குழுமங்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகை
யில்தான் இந்த சட்ட திருத்த மசோதாவை இயற்றி தருமாறு
இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்கள் கூறு
கிறபோது அதில் அதிகாரிகளோ அல்லது சட்டமுன்வடிவை
செயல்படுத்துகிறவர்களோ முறைகேடாகப் பயன்படுத்தக்
கூடாது துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்று கூறினார்
கள். முறைகேடாகப் பயன்படுத்துவதற்கும் துஷ்பிர
யோகம் செய்வதற்கும் எந்த வகையிலேயும் இந்தச் சட்டத்
திருத்தத்தில் வழி வகை இல்லை என்பதை தாழ்மையோடு
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச்
சட்டத் திருத்தத்திற்கு அப்பாற்பட்டு மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சில கருத்துக்களை இம்மாமன்றத்திலே எடுத்து
வைத்தார்கள். அதற்கு பதில் சொல்லுகிற கடமையிலே
ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே தெளிவாக்க
கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகிறபோது சென்னை
மாநகரிலும் மற்றும் பல்வேறு நகரங்களிலும் கூட பல
அடுக்கு மாடி கட்டிடங்களை முறைகேடாக கட்டி விட்டு
தப்பித்துக் கொள்கிறார்கள் என்றும், அதற்கு ஏதாவது செய்
கின்ற வகையிலே சட்டத் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்
டும் என்றும் கூறினார்கள். ஏற்கெனவே இருக்கின்ற விதி
களின்படி குறிப்பாக சொல்லவேண்டுமானால் பிரிவு 56 நகர்ப்
புற ஊரமைப்புச் சட்டத்தின் படி கள ஆய்வின்போதோ
அல்லது புகார் மனுவின் பேரிலேயோ இப்படிப்பட்ட முறை
கேடான கட்டிடங்கள் வளர்ந்திருந்தால், சம்பந்தப்பட்ட
கட்டிடங்களைக் கட்டுபவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்படு
கிறது. அறிவிப்பு வழங்கப்பட்ட 30 தினங்களுக்குள்,
அவர்கள் அந்த கட்டிடத்தைச் சரி செய்யவில்லையென்றால்,
சென்னை பெருநகர் குழுமத்தின் மூலமாக அந்தக் கட்டிடங்
கள் இடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மேல்முறையீட்டின்
பேரில் கோர்ட்டிற்கு சென்றோ, அல்லது அரசாங்கத்திற்கு
சென்றோ அனுமதி பெறும் வகையில் பல முறை கேடுகள்
நடந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்
கள். அவற்றை சரி செய்கிற வகையிலேதான், மாண்புமிகு
இதயதெய்வம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய
ஆட்சியிலே சீரியான சட்ட திருத்தம் கொண்டுவர அரசு



உத்தேசித்துள்ளது. அப்படிப்பட்ட சட்டத் திருத்தம் ஒன்று
அரசினுடைய பரிசிலனையில் இருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதோடு, மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் குடிதண்ணீர் தருவதற்காக உடனடியாக
2.4 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்ததற்காக நன்றி கூறியிருந்
தார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு
புரட்சித் தலைவி அரசைப் பொறுத்த வரையில், இந்த
நாட்டிலே குடிதண்ணீர் பஞ்சம் இருக்கக்கூடாது என்பதற்
காக இப்படிப்பட்ட செயல்களை செயல்படுத்திக்கொண்டு
வந்திருக்கிறோம். இதில் பெரிதாக ஒன்றும் சொல்வதற்
கில்லை. ஆகவே நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்தக்
கருத்துக்களை ஏற்று இந்த திட்டக் குழுமங்களுக்கு அதிகாரம்
அளிக்கும் வகையிலே இச்சட்ட திருத்த மசோதாவை நிறை
வேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5.30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. ஞான
சேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்புத் திட்ட
சட்டத்தின் கீழ் முன்பெல்லாம் ஒரு விவசாய நிலத்தை
பிளாட்டாகப் போட்டு அவர்கள் ஹவுசிங் சைட்டாக மாற்றி
பிளான்ஸ் அப்ரூவல் என்றால் அது மாவட்ட அளவிலேயே
முடிந்துவிடும். இப்போது அது சென்னை மாநகரிலே
இருக்கக்கூடிய இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து தான் அப்ரூவ்
ஆகவேண்டியிருக்கிறது. ப்ளானிங் அத்தாரிட்டி இப்போது
இவராக இருக்கின்ற காரணத்தாலே, மாவட்ட அளவிலே
அதை 'டீ-சென்ட்ரலைஸ்' செய்து அமைச்சர் அவர்கள்
அதற்கான திருத்தத்தை கொண்டுவருவாரா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, விவசாய நிலங்களை வேறு உபயோகத்
திற்காக மாற்றப்பட வேண்டுமென்றால் அந்த நிலம் தற்
போதைய அளவிலே எப்படிப்பட்ட தன்மையாக இருக்கிறது
என்பதைக் கருத்தில்கொண்டுதான் அதனுடைய யூசேஜ்
என்று சொல்வார்களே அது மாற்றப்பட்டு வருகிறது. மாவட்ட
அளவிலே இருந்திருக்கின்றபோது பல்வேறு குறைபாடுகள்
இருந்த காரணத்தினாலே தான் அதை செம்மைப்
படுத்துகின்ற வகையிலே தற்போது அரசாங்கத்தின் மூலமாகவே
அதை செய்துகொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பின
ருடைய கோரிக்கையை ஏற்று அரசு கவனமாக பரிசீலிக்
கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1991 அக்டோபர் 4

மாண்புமிகு எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வக்பு வாரியத்தின் நிர்வாகத்திற்கு தனி அலுவலர் அவர்களை நியமனம் செய்வது சம்பந்தமாக இங்கு சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்பதற்காக இந்த வக்ப்பிலே நடந்த சிலவற்றை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதைச் சொல்லி தனி அலுவலர் அவர்கள் எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் நல்ல முறையிலே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இந்திய ஜனநாயக நாடு மதச் சார்பின்மை கொள் கையை அடிப்படையாகக் கொண்ட நாடு. இதனையே அடிப் படையாகக் கொண்டு பண்டித ஜவஹர்லால் நேரு முதல் எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் வரை ஆட்சி புரிந்து சென்றிருக்கிறார்கள். நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் அதனைச் சீரான முறையில் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதை நினைத்து பெருமைப் படுகிறேன்.

பிற்பகல் 5-35

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்பால் எல்லா மதத்தினரும் நல்ல அபிப்பிராயமும், நம்பிக்கையும் வைத்து இருக்கிறார்கள் என்பதை இப்பேரவையில் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் வக்பு வாரியத்தை எடுத்துக்கொள்வோ மானால் மிகவும் சீர்கேடு அடைந்திருக்கிறது. அதனை, சீரமைக்கவேண்டிய காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். தமிழகத்திலே பழுதடைந்த பள்ளிவாசல்களை மற்றும் தர்க்காக்களை வக்பு வாரியம் சரியான முறையில் பராமரிக்க வில்லை. அதற்குக் காரணம் வக்பு வாரிய நிர்வாகிகள் சரியான முறையில் செயல்படாமல் இருந்ததே ஆகும். இதனை இந்த அரசு கவனத்தில் கொண்டு வக்பு வாரியத் திற்கு நல்ல பொறுப்புள்ள, நேர்மையான தகுதியான, நிர்வாகிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மேலும் தமிழகத்தில் புதிதாக கட்டக்கூடிய பள்ளி வாசல்களுக்கு வக்பு வாரியம் வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுப்பதோடு போதிய நிதி உதவிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று வேண்டுகிறேன். அரசியல் விரோ தங்கள் காரணமாகவும், வீணான வதந்திகள் காரணமாகவும்,



1991 அக்டோபர் 4] [திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்]

இந்த வக்பு வாரியம் ஒருசிலருக்கு மட்டும் ஆதரவாக இருந்து செயல்படாமல் இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையில் செயல்படவேண்டுமென்று வேண்டுகிறேன்.

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்திலுள்ள ஜும்மா பள்ளிவாசல் சரித்திரத்திலே புகழ் வாய்ந்த பள்ளிவாசல் ஆகும். இது சுமார் 400 வருடங்களுக்கு முன்பு கட்டப் பட்ட பள்ளிவாசல் ஆகும். இதனை தற்போது புதுப்பித்து கட்டிக்கொண்டு இருக்கிற இந்த சூழ்நிலையில் இந்த வக்பு வாரியம் சில இஸ்லாமிய சமூக விரோத சக்திகளின் பேச்சைச் கேட்டு, வக்பு வாரியம் கட்சிக்காரர்களின் பேச்சைக் கேட்டு, பள்ளிவாசலைக் கட்டக்கூடாது என்று அங்கு ஒரு வழக்குத் தொடர தனியாருக்கு அனுமதி அளித்து இருக்கிறார்கள். அந்தப் பள்ளிவாசல் நிர்வாகத் தினைப் பற்றி நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 400 ஆண்டு மதிப்பு வாய்ந்த பள்ளிவாசல் என்று சொன் னேன். 400 ஆண்டுகளுக்கு முன்பு அந்த அதிராம்பட்டினம் என்பது ஒரு காட்டுப் பிரதேசம். அந்தக் காட்டில் கட்டிய அந்தப் பள்ளிவாசல் நாங்கள் தொழுகின்ற இடம். மெக்கா வில் இருக்கின்ற கௌபத்துல்லா—நீங்கள் எல்லாம் பல படங்களில் பார்த்து இருப்பீர்கள். கௌபத்துல்லா என்பது கறுப்புக் கல் நிறைந்த இடம். அந்த இடத்தை நோக்கித் தான் நாங்கள் தொழவேண்டும். அப்போது அங்கே நோக்கித் தொழுவதற்கு கிப்லாவை வைக்கவேண்டும். கிப்லா என்பது நோன்பர் மேடை. அந்த கிப்லாவை நோக்கி நாங்கள் தொழவேண்டும் என்று சொன்னால் அது எந்தத் திசையில் இருக்கிறது என்பது அப்போது அங்கே கட்டியவர்களுக்குப் புரியவில்லை. அதன் காரண மாக—அந்தப் பள்ளிவாசலைக் கட்டியவர்கள் இன்று கீழக் கரையில் அடக்கம் ஆகியிருக்கிறார்—அவர் கொத்தனாரைப் பார்த்துச் சொன்னார், என் முதுகைப் பார்த்து நீ அந்த கிப்லாவை வை என்று சொன்னார். அதன்படி அந்த, கிப்லா அவர் முதுகைப் பார்க்கும்போது மெக்காவில் இருக்கின்ற அந்த கௌபத்துல்லாவின் முதுகு தெரிந்து தான் அந்தப் பள்ளிவாசலைக் கட்டிய பெருமை உண்டு. அந்தப் பள்ளிவாசலை இன்றைக்கு புதுப்பித்துக் கட்டிக் கொண்டு இருக்கிற இந்த சூழ்நிலையில் இந்த வக்பு வாரியம், சில இஸ்லாமிய சமூக விரோத சக்திகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, வக்பு வாரிய கட்சிக்காரர்களின் பேச்சை, கேட்டு பள்ளிவாசல் கட்டக்கூடாது என்று வேண்டுமென்றே அங்கு ஒரு வழக்கைத் தொடர தனியாருக்கு அனுமதி அளித்து இருக்கிறது. வக்பு வாரியம் என்பது பள்ளி வாசல்களைக் கட்டுவதற்கு தான் அனுமதி அளிக்கும். ஆனால் தற்போது இருக்கும் வாரிய நிர்வாகிகள் பள்ளி வாசலைக் கட்டக்கூடாது என்று கூறி அதன்படியே செயல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு—2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 50/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஓ) வக்பு (இசுலாமிய அறக்கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமனம்) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்பு (இசுலாமிய அறக்கட்டளை) வாரியம் (தனி அலுவலர் நியமனம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 51/1991). மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

Hon. Thiru MOHAMED ASIF: Hon. Deputy Speaker, Sir, I move.

''that the Tamil Nadu Wakf Board (Appointment of Special Officer) Bill, 1991 (L. A. Bill No. 51 of 1991) be taken into consideration.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்.

தற்போதுள்ள வக்பு வாரிய நிர்வாகம், நிர்வாகத்தில் முறைகேடுகளைச் செய்கின்றது என்றும், அந்த வாரிய நிர்வாகிகள் முறைகேடாக நடந்தது மட்டுமல்லாமல், காழ்ப்புணர்ச்சி காரணமாக அங்கேயிருக்கின்ற ஊழியர்கள் சிலரைப் பழிவாங்குகின்ற போக்கில் இந்த நிர்வாகம் இருந்தது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அது மட்டுமல்லாமல், இந்த நிர்வாகத்தில் இருப்பவர்கள் குறிப்பாக, நிர்வாகத்தினுடைய தலைவர், இந்த வக்பு வாரியத்தினுடைய சொத்துக்களைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. உதாரணமாக சென்னை ஐஸ் ஹவுஸ் அருகில் இருக்கிற மீர்சா காதரி தர்கா டிரஸ்டுக்குச் சொந்தமான 1¼ கிரவுண்ட் நிலத்தினை மூன்று இலட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டதாகத் தெரிய வருகிறது. காரணம், இன்றைச்குச் சென்னையிலே பல இலட்சம் ரூபாய்க்குப் போகக் கூடிய அளவில் மார்க்கெட் ரேட் இருக்கின்றபோது இதை மோசடி காரணமாக ரூபாய் மூன்று இலட்சத்திற்கு விற்று விட்டதாகத் தெரிய வருகிறது.

அதைப்போலவே, வக்பு வாரியத்தில் இருக்கிற கோவையைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சென்னையிலே இருக்கிற "அஞ்சுமுனே கயிரஹ்லே இஸ்லாம்" என்ற டிரஸ்ட் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்தை வெறும் 3 இலட்சத்திற்கு பினாமி பெயரில் வாங்கி இருப்பதாகத் தெரிகிறது. அதைப் போலவே அந்த வக்பு வாரியத்தினுடைய இன்றைக்குத் தலைவராக இருக்கிறவர், மதுரையிலே எம்.எஸ்.எஸ். வக்பு போர்டு கல்லூரி நிர்வாகம் சம்பந்தமாக இருக்கிற துணை விதியை மீறி தன்னுடைய கட்சிக்காரர்களையும் நெருங்கினவர்களையும் நிர்வாகக் குழுவிலே போட்டு அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகத்தைச் சீர்குலைத்து விட்டதாக குற்றச்சாட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

பிற்பகல் 5-45

அதுமட்டுமல்லாமல் இந்த வாரியத்திலே திருச்சியிலே, வக்ப் வாரிய ஆய்வாளராக இருந்த திரு. சாகுல் ஹமீது என்பவரை, அரசியல் காரணத்திற்காக அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரு தவறான அடிப்படையில் அவரைப் பழி வாங்கி இன்றைக்கு அவர் தனது வேலையையே விட்டு விலக வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இப்படி அந்த நிர்வாகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத்தை உண்மையாக நடத்தாமல் இளைஞர்களை [illegible]



பாடுகளுக்கு எதிராக, அங்கே ஒரு கட்சி அரசியலை அந்த நிர்வாகம் புகுத்தி, குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்குச் சாதகமாக, அந்த நிர்வாகத்தை மாற்றி, அவர்கள் பல்வேறு ஊழல்களைச் செய்திருக்கிற காரணத்தால் இந்த நிர்வாகத்தை எடுத்துவிட்டு தனி அதிகாரி போடும்போது அங்கே இப்போதிருக்கிற நிர்வாகத் தலைவர் மீதும் அவரோடு சேர்ந்து அதிகார துஷ்பிரயோகம் செய்த மற்றவர்கள் மீதும் ஒரு விசாரணைக் கமிஷன் ஏற்படுத்தி அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று கேட்டு இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்,

**Hon. Thiru Mohamed Asif:** Hon. Deputy Speaker, Sir, I would like to highlight the circumstances under which the proposed Bill has been brought for consideration before this House.

The Wakf Act, 1954 provides for the better administration and supervision of Wakfs. Under the provisions of the Act, an eleven Member Board is constituted by the Government by notification. The members of the Board are selected from any one or more of the following categories of persons, namely :—

(*a*) Members of the State Legislature and Members of Parliament representing the State ;

(*b*) Persons having knowledge of Muslim law and representing associations such as State Jamiat-ul-Ulama-i-Hind or State Shia Conference ;

(*c*) Persons having knowledge of administration, finance or law ;

(*d*) Mutawallis of Wakfs situated within the State.

It is however provided that in no case more than one Mutawalli shall be appointed to the Board. It is also provided that there should be appropriate representation of Sunni and Shia Members depending upon the number and value of the Sunni and Shia Wakfs to be administered by the Board.

As may be seen from the categories listed above, the laudable intention of the Government is that eminently suitable persons with a spirit of service should be selected and appointed as Members of the Board to ensure efficient Wakf administration in the State.

பட்டுக் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும்போது எனக்கும் என் சமுதாயத்தில் உள்ள மக்களுக்கும் ஆச்சரியம் அளிப்பதோடு, மனதுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. இதன் காரணமாக இன்றையதினம் சமுதாய மக்களுக்கு நல்ல பல உதவிகளைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிற நல்ல உள்ளங்கள் வேதனைப்படுகின்றன என்பதை இப் பேரவையில் வேதனையோடு கூறிக்கொள்கிறேன். எனவே, வக்பு வாரியம் நல்லவர்கள் மீது வழக்குத் தொடருவதற்கு தனியாருக்கு அனுமதி அளித்து இருப்பதை திரும்பப் பெறுவதோடு மேற்கொண்டு இனிமேலாவது இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டு மென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை வேண்டு கிறேன். வக்பு வாரியம் அலுவல்களுக்கு மற்ற மாகாணங் களில் வழங்குவது போல் மானியம் வழங்கவேண்டுமென்றும் அவர்களுக்கு மருத்துவச் சலுகைகளை அளிக்கவேண்டு மென்றும் கூறுகின்றேன்.

தமிழக அரசு சென்ற 1982 ஆம் ஆண்டிலிருந்து உல மாக்கள், மற்றும் தேசி இமாம்களுக்கு ஒய்வு ஊதியத் தொகை ரூபாய் 250 வழங்கி வருகிறது. இந்த ஒய்வு ஊதியத் தொகை மிகவும் குறைவாக இருப்பதால் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் உலமாக்களின் ஒய்வு ஊதியத் தொகையை ரூபாய் 500 ஆக உயர்த்திக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்திட்டத்தில் 1,200 உலமாக்கள் பலன் அடைந்து வருகிறார்கள். மாண்பு மிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இதை உயர்த்தி சுமார் 3,000 உலமாக்கள் சலுகை பெறவேண்டுமென்ற வகையில் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். வக்பு வாரியத்திற்கு ஒரு கட்டிடம் கட்ட சுமார் 5 1/2 கிரவுண்ட் நிலம் வாங்கி 10 ஆண்டு களாக அதில் கட்டிடம் கட்ட முடியாமல் இருக்கிறது இதற்கு வக்பு வாரியத்திற்குப் போதிய நிதியாதாரம் இல்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாரி யத்திற்குக் கட்டிடம் கட்ட நிதி உதவியை அளிக்க வேண்டு மென்று வேண்டுகிறேன். இதற்கு முன்பு நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த வக்பு வாரியத்திற்கு நிதி நிலைமை சரியாக இல்லாததன் காரண மாக ஒரு கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பின்பு வந்த சர்க்கார், பின்னால் 3 இலட்சம் ரூபாய்தான் கொடுத்துள்ளார்கள். அதனால் அந்த வக்பு வாரி யத்திற்கு ஒன்றும் செய்ய முடியவில்லை.

பிற்பகல் 5-40

தமிழகத்தில் உள்ள இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த வர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மீது வைத்திருக்கும் நல்ல எண்ணமும், நல்ல நம்பிக்கையும்





மேலும் வளர்ந்தோங்க அவர்களுக்கு அனைத்துச் சலுகை களையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனி அதிகாரி அவர்கள் இந்த வக்பு வாரியத்திற்கு நியமனம் செய்யப்பட்டால் அந்த அதிகாரி நல்லவராக, மார்க்கத்தினுடைய அபிமானத்தைப் பெற்றவராக, எந்தக் கருத்தையும் அந்தச் சமூகத்திற்கு ஆதரவாக [illegible] சொன்னவுடன் அதைச் செய்து கொடுப்பவராக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்று நான் பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு வக்பு வாரிய அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள் கொள்கிறேன்.

அதேபோல் நான் முன்பே சொன்ன அதிராம்பட்டினம் பள்ளிவாசலை தற்போதுள்ள அமைச்சர் அவர்கள் வக்பு வாரியத்தின் காரியதரிசியை அழைத்து அந்த உத்தரவை உடனடியாக கோர்ட்டிலிருந்து வாபஸ் வாங்கி அந்தப் பள்ளிவாசலைக் கட்டிக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ம. சின்ன சாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வக்பு வாரியத்தின் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

வக்பு வாரியம் தூய்மையாக இஸ்லாமிய தத்துவத்தை [illegible] கொண்டிருக்கிறது. நல்ல தூய்மையான இஸ்லாமி [illegible] மீண்டும் அமைக்க வேண்டும். அதற்கு [illegible] தனி அதிகாரியை நியமிக்க வேண்டும் என்கிற சட்டமுன்வடிவின் மீது என்னுடைய இரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

The Wakf Board was last reconstituted by the previous Government for a period of five years from 29th May 1989. To our dismay, we have found that there was failure on the part of the Board in carrying out Statutory duties and obligations laid down in the various provisions of the 1954, Act. It has been brought to the notice of the Government that the present Members of the Tamil Nadu Wakf Board have also committed serious irregularities in the management of the properties under the control of the Board. The irregularities committed by the Board generally fall into the following categories :—

1. In a number of cases, hearings have been conducted by the Wakf Board but orders have been reserved without pronouncing final decisions causing a lot of delay ;

2. As per the Orders of the Government in letter No. 44110/XIII-1/84-3, dated 19th June 1985, the Secretary and Correspondent of the M. S. S. Wakf Board College has to be appointed by the Government from amongst the members of the Executive Committee in consultation with the Tamil Nadu Wakf Board for a period of three years. The Chairman has appointed an independent Member as the Secretary and Correspondent of the College without the approval of the Government. This wrongful order has also been challenged in the High Court and interim stay obtained by an interested body as a result of which there is a stalemate resulting in continuance of old Secretary and Correspondent and making reconstitution difficult. The Chairman has therefore violated the above Government Order.

. There have ben arrears of contribution due to Central Wakf Council, New Delhi which resulted in adverse remarks from the Government, Ministry of Welfare. The Board has therefore failed to discharge its duties.

. The Muthavalliship of the Wakf "Haji Pitchai Mohideen Rowther Wakf, Trichy" is hereditary viz., the male descendents of late Thiru. S.P.E.S. Mohamed Abubacker Rowther are to succeed as Muthavallis. In this case the widow of Mohamed Ali applied for Muthavalliship as her elder son was minor and the Board has allowed a sum of Rs. 1,000 as subsistance allowance, but there is no provision for the same in the Wakf Deed.



5. Muslim Educational Society, Ambur, is a surveyed and notified Wakf. There is no provision in the Wakf Act for deletion of any Wakf from the list of Wakfs. But on a petition filed by the General Secretary of the Society to delete the Society from the list of Wakfs on the ground that it has been registered under Societies Registration Act, the request has been complied with and the name of the Society deleted from the Wakf list.

6. A number of instances have been brought to the notice of the Government in which Wakf properties have been sold for values less than the market value or guideline value in the registers maintained by the Sub-Registrar's Office causing a great loss to the Wakf Board.

7. Wakf Board has not taken effective steps to enhance the Assessment of several Wakf properties on par with the market value with the result the Wakf income has remained stagnant and Wakf Board has not been able to discharge its obligations of paying 1 per cent contribution to the Central Wakf Council and also liabilities like Audit fees to the Local Fund Department, Survey cost to the Hindu Religious and Charitable Endowment Department. Even the administrative expenses of the Wakf Board could not be met by them.

8. There has been serious failure in carrying out repairs to the building of the M.S.S.W.B. College, Madurai and maintaining them in a proper manner, endangering the lives of the students and staff of the College. Only after my visit, the College authorities have located the class rooms in a safer building.

The failure on the part of the Wakf Board, in discharging the elementary duties and obligations cast on them by Law, has in our opinion, thrown the entire system of Wakf administration under the Wakf Act into a melting pot. We have therefore come to the conclusion that the continuance of the present Management of Tamil Nadu Wakf Board will not be proper in public interest and will be detrimental to the interests and objects of the Wakfs. The Government of Hon. Puratchi Thalaivi, the God-fearing Chief Minister with a firm faith in Almighty, fearing to do what is not piety and respecting all Religions, have

therefore taken this policy decision to take over the Management of the Tamil Nadu Wakf Board for a limited period, of one year and entrust the same to a Special Officer in order to secure its proper management. The proposed Bill provides for the appointment, in public interest, of a Special Officer for the Tamil Nadu Wakf Board. The proposed Bill also seeks to provide for the incidental matters connected with the appointment of the Special Officer. The proposed enactment also contains enabling powers to the effect that the Government can take action to constitute the nominated Board once the irregularities in the Board are set right, even before the stipulated period of one year for which the Special Officer is being appointed to the Board.

பிற்பகல் 5-50

In the circumstances narrated by me, I request the Hon. Members of the Assembly to approve the enactment of the Bill contemplating the take over of the management of the Wakf Board and entrusting the same to the Special Officer for a period of one year,

I am sure my reply will comply with the answers to the questions, of both the Hon. Members Thiru Abul Hassan and Thiru Chinnasamy.

பிற்பகல் 5-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



பிற்பகல் 5.55

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

Hon. Thiru MOHAMED ASIF : Hon Speaker, Sir, I move—"that the Tamil Nadu Wakf Board (Appointment of Special Officer) Bill, 1991 (L.A. Bill 51 of 1991) be passed".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1991) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

The Wakf Board was last reconstituted by the previous Government for a period of five years from 29th May 1989. To our dismay, we have found that there was failure on the part of the Board in carrying out Statutory duties and obligations laid down in the various provisions of the 1954, Act. It has been brought to the notice of the Government that the present Members of the Tamil Nadu Wakf Board have also committed serious irregularities in the management of the properties under the control of the Board. The irregularities committed by the Board generally fall into the following categories :—

1. In a number of cases, hearings have been conducted by the Wakf Board but orders have been reserved without pronouncing final decisions causing a lot of delay ;

2. As per the Orders of the Government in letter No. 44110/XIII-1/84-3, dated 19th June 1985, the Secretary and Correspondent of the M. S. S. Wakf Board College has to be appointed by the Government from amongst the members of the Executive Committee in consultation with the Tamil Nadu Wakf Board for a period of three years. The Chairman has appointed an independent Member as the Secretary and Correspondent of the College without the approval of the Government. This wrongful order has also been challenged in the High Court and interim stay obtained by an interested body as a result of which there is a stalemate resulting in continuance of old Secretary and Correspondent and making reconstitution difficult. The Chairman has therefore violated the above Government Order.

3. There have ben arrears of contribution due to Central Wakf Council, New Delhi which resulted in adverse remarks from the Government, Ministry of Welfare. The Board has therefore failed to discharge its duties.

4. The Muthavalliship of the Wakf "Haji Pitchai Mohideen Rowther Wakf, Trichy" is hereditary viz., the male descendents of late Thiru. S.P.E.S. Mohamed Abubacker Rowther are to succeed as Muthavallis. In this case the widow of Mohamed Ali applied for Muthavalliship as her elder son was minor and the Board has allowed a sum of Rs. 1,000 as subsistance allowance, but there is no provision for the same in the Wakf Deed.



5. Muslim Educational Society, Ambur, is a surveyed and notified Wakf. There is no provi ion in the Wakf Act for deletion of any Wakf from the list of Wakfs. But on a petition filed by the General Secretary of the Society to delete the Society from the list of Wakfs on the ground that it has been registered under Societies Registration Act, the request has been complied with and the name of the Society deleted from the Wakf list.

6. A number of instances have been brought to the notice of the Government in which Wakf properties have been sold for values less than the market value or guideline value in the registers maintained by the Sub-Registrar's Office causing a great loss to the Wakf Board.

7. Wakf Board has not taken effective steps to enhance the Assessment of several Wakf properties on par with the market value with the result the Wakf income has remained stagnant and Wakf Board has not been able to discharge its obligations of paying 1 per cent contribution to the Central Wakf Council and also liabilities like Audit fees to the Local Fund Department, Survey cost to the Hindu Religious and Charitable Endowment Department. Even the administrative expenses of the Wakf Board could not be met by them.

8. There has been serious failure in carrying out repairs to the building of the M.S.S.W.B. College, Madurai and maintaining them in a proper manner, endangering the lives of the students and staff of the College. Only after my visit, the College authorities have located the class rooms in a safer building.

The failure on the part of the Wakf Board, in discharging the elementary duties and obligations cast on them by Law, has in our opinion, thrown the entire system of Wakf administration under the Wakf Act into a melting pot. We have therefore come to the conclusion that the continuance of the present Management of Tamil Nadu Wakf Board will not be proper in public interest and will be detrimental to the interests and objects of the Wakfs. The Government of Hon. Puratchi Thalaivi, the God — fearing Chief Minister with a firm faith in Almighty, fearing to do what is not piety and respecting all Religions, have

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் எங்கே பார்த்தாலும் குடிநீர் பற்றாக்குறை மிகவும் மோசமாக இருக்கிறது. அன்றையதினம் கூட, 11-ந் தேதி என்னுடைய தொகுதியிலே போராட்டமே நடத்துவதற்கு பஸ் மறியல் செய்வதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்கள். ஆனால் அதை நம்முடைய தானைத் தலைவி மாண்புமிகு முதலமைச்சரிடம் சொன்னவுடனே கலெக்டருக்கு ஆர்டர் கொடுத்து, நீங்கள் உடனே இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம், பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினருக்கு பக்கத்தில் யாரும் நிற்கக் கூடாது. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: 25-ந் தேதிக்குள்ளாக அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுத்துதான் தீர வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். இதை நாங்கள் எந்தக் காலத்தில் மறக்கமுடியும்? உத்தரவு போட்ட பிறகு நாங்கள் இரவிலே சென்று பார்க்கும்போது மணி



12. மரியாதைக்குரிய கலெக்டர் அவர்கள் இரவு 12-00 மணி நேரத்திலே நனைந்துகொண்டே அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். மழை பெய்துகொண்டிருந்தது. கலெக்டரும் மற்ற அதிகாரிகளும் தீவிரமாக அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அதிகாரிகள் அமைச்சர்களை எந்த அளவுக்கு மதிக்கிறார்கள் என்பதற்காக, நான் இதைக் குறிப்பிடுகிறேன். (திரு. வி. கே. சின்னசாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் அனுமதித்தால்தான் விளக்கம் கேட்க முடியும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: Sir, I am not yielding. I am coming to the point. Please allow me to proceed. அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் பெண்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும்; அதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்தான் நிறைய பெண்களுக்கு வேலை கொடுக்க முடியும். இன்றைக்கு இருக்கக்கூடிய தலைவியுடைய தலைமையில் ஒரு இலட்சம் பெண்களுக்காவது, வேலை வாய்ப்பை உருவாக்கினால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னைக்கு அருகில் "மெட்ராஸ் எக்ஸ்போர்ட் ப்ராசெசிங் சோன்" என்று தாம்பரத்தில் இருக்கிறது. அங்கே 3,000 பெண்களுக்குமேல் வேலை செய்கிறார்கள். அங்கே துணி வெட்டுவதற்கு ஒரு பக்கம், தைப்பதற்கு ஒரு பக்கம், பட்டன் கட்டுவதற்கு ஒரு பக்கம் என்று ஏற்பாடு செய்து நிறைய துணிகளைத் தைத்து கப்பல் மூலமாக அமெரிக்கா, இலண்டன், ரஷியா போன்ற வெளி நாடுகளுக்கு எல்லாம் அனுப்பி வைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த ஒரே ஒரு இடத்தில்தான் 3,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போல காதி போர்டு இருக்கிறது. அது பம்பாயிலே இருக்கிறது. அதை நாம் இங்கே கொண்டு வரக்கூடிய அளவுக்கு நாம் முயற்சி செய்து, காதி போர்டின் கிளைகளை ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒன்று என்ற அளவில் உருவாக்கி, ஒவ்வொரு இடத்திலும் 5,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்கினால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எத்தனையோ பெண்கள் கணவன்மார்களால் கைவிடப்பட்டு, குழந்தைகளோடு வெளியே தெருவிலே நிற்கிறார்கள். அவர்கள் எல்லாம் தன் காலிலேயே நிற்கக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். காதி போர்டு மூலமாக ஜில்லாவுக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தால் அதன் மூலமாக அப்படிப்பட்ட பெண்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க முடியும். ஊதுபத்தி, மெழுகுவத்தி, சோப்பு, ஊறுகாய், அப்பளம் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி அந்தப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் இன்னும் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் ' பாரின் '-இல் எல்லாம் விளக்குமாரால் கூட்டுவது இல்லையாம். தமிழ்நாட்டில் நிறைய மில்கள் இருக்கின்றன. நிறைய மில்கள் இருக்கிற காரணத்தினால் அங்கே வருகிற கழிவு பஞ்சை எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து அவைகளை எல்லாம் குச்சிகளில் வைத்து கட்டி, நூலை வைத்து கட்டி, அவைகளை எல்லாம் ' தேய்ப்பதற்கு ' உபயோகப்படுத்துவதற்குரிய வழிவகைகளை செய்து, அதையும் ' பாரின் '-இக்கு அனுப்பினால் நிறைய பெண்களுக்கு அதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதுபோல, இன்றைக்கு பாலங்கள், ரோடுகள், குடிநீர், கட்டடங்கள் கட்டுவதில் கூட, இப்படிப்பட்ட வேலைகளில் எல்லாம், எங்கே எல்லாம் கிராமப்புறங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள், புதிதாக போலீஸ் ஸ்டேசன் ஆரம்பிக்கிறோமோ அங்கே எல்லாம் இவர்கள் தங்குவதற்குரிய குடியிருப்புகள் கட்டுவதற்கான முயற்சிகளையும் நீங்கள் எடுத்துக் கொள்வீர்களானால் அது நன்றாக இருக்கும் என்று கூறி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 6-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். பெரியவீரன்.

* திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 100 நாட்களாக இந்தக் கூட்டத்தை செம்மையுற நடத்தி, எனக்கு சபையில் பேசுவதற்கு காலங்கள் கிடைக்காமல் காத்துக் கிடந்த நாட்களை எண்ணி (பலத்த சிரிப்பு) கடைசி கட்டத்தில் வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிதனை சொல்லிக் கொண்டு, கடந்த 30 ஆண்டு காலமாக இந்த மாபெரும் மன்றத்தில் என்னைப் போன்ற ஒரு சாதாரண தொண்டனை உறுப்பினராக்க மறுத்து வந்த இந்த மாமன்றத்தில், இன்று ஆரம்பக் கல்வி கற்று, அனுபவ கல்வி பெற்று, அரசியலில் தேர்ச்சிப் பெற்ற ஒரு காரணத்திற்காக சாமான்யமான என்னை அன்னை அவர்கள் இன்று இந்த மாமன்றத்தில், ஒரு மணிமகுடம் போல பல கல்விகளைப் பெற்றவர்களிடத்தில் சாதாரண ஒரு தொண்டனுக்கும் வாய்ப்பு கொடுத்து இங்கே அமர செய்த மாண்புமிகு முப்பெரும் தேவியர்க்கு என் அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பாதத்தைப் பணிந்து நான் பேசத் தொடங்குகிறேன். ஏனென்றால், இதுவரைக்கும் நான் இந்த மன்றத்தில் பேசவில்லையென்று சொல்லி எனது தொகுதியில் உள்ளவர்கள் எல்லாம் போஸ்டர்கள் அடித்து ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ. இதுவரை பேசவில்லை என்று சொல்லி போஸ்டர் அடித்து ஒட்டிக் கொண்டிருக்கிறார்களாம் (சிரிப்பு) ஆகையினால் இன்று அந்தக் களங்கத்தைப் போக்க (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தினுடைய, தலைவர் அவர்கள் எனக்கு வாய்ப்பளித்ததை கருதி, எனது தொகுதியினுடைய பிரச்சினைகளை இன்று எடுத்துரைப்பதற்கு முன்வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).





பெரியகுளம் தொகுதி என்பது பெரியவீரனைப் போல படர்ந்த ஒரு தொகுதியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்றே அந்தத் தொகுதியினுடைய பிரச்சினைகளும் பலவிதமாக பரந்துள்ளன. ஏன் என்று சொன்னால், பெரியகுளம் தொகுதி என்பது கொடைக்கானலின் ஒரு பகுதியும், பெரியகுளம் கீழ் பகுதியும் ஆக சேர்ந்து 2 இலட்சம் வாக்காளர்களுக்குச் சொந்தமானது. அந்தப் பகுதியை எடுத்துக் கொண்டால் ஒரு பகுதி கேரளாவை தொட்டு வளர்ந்துகொண்டிருக்கிறது. இன்னொரு பகுதி கோயம்புத்தூர் மாவட்டத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொரு பகுதி ஆற்றூர் தொகுதியை பிடித்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு பகுதி தேனி தொகுதியை பிடித்து தொத்திக் கொண்டுள்ளது.

இவ்வளவு பெரிய தொகுதியில் இந்த மாபெரும் உருவம் தொகுதி முழுவதையும் சுற்றி பார்த்து அந்த மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணி, அறிவித்து அவர்களிடத்தில் எடுத்துக் கூறியுள்ளேன். ஆனால் அதை சபையில் கூறுவதற்கு இதுவரை சந்தர்ப்பம் கிட்டவில்லையென்றாலும் கூட இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு என் பகுதி மக்களுக்கு நல்ல பணிகளை சீர்செய்ய வேண்டுமென்று எண்ணி நான் என்னுடைய தொகுதியினுடைய அவல நிலையை கூறுகிறேன்.

அந்த வகையில் 1984 ஆம் ஆண்டு கொடைக்கானல் இளவரசியாக இருந்தது. அந்த இளவரசியை எழில் ராணியாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு பிரம்மதேவன் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த கோடைக்கானலில் உலக சமாதானப் புறாவான அன்னை தெரசா பெயரில் ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் வாழ்கின்ற கிறிஸ்தவ மக்களுக்கும் மற்றும் அந்தப் பகுதி மக்களுக்கும் பெரும் நன்மைகளைத் தேடி தந்தார்கள்.

ஆனால் சென்ற ஆண்டில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த ஆட்சியாளர்கள் அதை என்ன காரணத்திற்காக அப்படி செய்தார்கள் என்று தெரியவில்லை. அதை சென்னை மாநகருக்கு மாற்றிவிட்டார்கள். அதை மீண்டும் மீட்டுத் தருவேன் என்று வீர வசனம் பேசி (மேசையைத் தட்டும் ஒலி), அந்தப் பகுதி மக்களிடம் நான் நன்மதிப்பைப் பெற்று வந்திருக்கிறேன். அதைக் கருத்திற்கொண்டு, அந்தப் பல்கலைக்கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்குக் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில், இங்கே உள்ள அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-05.

அதே போன்று கொடைக்கானல் மலைப் பகுதி. எந்தப்புறம் பார்த்தாலும் பசுமையாகத்தான் இருக்கின்றது. ஆனால் அங்கே வாழும் மக்களுடைய நிலைதான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஏனென்றால் அந்த மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாகக் கண்டு, கேட்டறிய இதுவரையில் அந்தப் பகுதி மக்களிடம் நேரடியாகச் சென்று கேட்டதில்லை. நான் ஒரு சாதாரணத் தொண்டனாக இருந்த காரணத்தால், அவர்களிடம் நேரடியாகச் சென்று, அவர்கள் பிரச்சினைகளைக் கேட்கிறபோது, எங்களுக்கு சாப்பாடு, தண்ணீர் பற்றிக்கூட கவலையில்லை தம்பி, நாங்கள் ஒரு அவசரத்திற்கு, சிகிச்சை பெறுவதற்குப் போக வேண்டுமென்றால் சாலை வசதிகள் இல்லை. அதே நேரத்தில் வாகனப் போக்குவரத்தும் போக வழியில்லாமல், தொட்டில் கட்டி, தூக்கி, சுமந்து கொண்டிருக்கிறோம்! நீ ஒருவன்தான் இவ்வளவு தூரம் வந்து, எங்களுடைய கஷ்ட நஷ்டங்களைக் கேட்டிருக்கிறாய் (மேசையைத் தட்டும் ஒலி); ஆகையால் இந்தக் கஷ்டத்தை நீ போக்குவாய் என்று நினைத்து உனக்கு கட்சி வித்தியாசம் பார்க்காமல் வாக்களித்துள்ளோம்; உன்னுடைய திறமை எப்படியோ. நீ எப்படியாவது இந்த ரோடுகளைப் போட வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.



அதே போன்று தமிழகத்தில் சுற்றுலா ஸ்தலமாக விளங்கும் கொடைக்கானல் நகருக்கு வெளிநாடுகளிலிருந்து அன்னியர்கள் அதிகமாக வந்தாலும் கூட, அந்தப் பகுதியில் தண்ணீர்ப்—பிரச்சனை, குடிநீர்ப்பிரச்சனை மோசமாக உள்ளது. அந்தப் பிரச்சனையை நீங்கள் சுமுகமாக முடித்துக்கொடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் கருணை கூர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று 1982 ஆம் ஆண்டு பெரியகுளம் வராகநதித் திட்டத்தின் கீழ் ஓர் அணையை, சோத்துப்பாறை அணையைக் கட்டுவதற்கு ஏற்பாடு பண்ணினார்கள். கடந்த 1984 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டி துரிதமாக அந்த வேலைகள் நடந்து கொண்டிருந்தன. முந்தைய ஆட்சியாளர்கள் சொன்னதைச் செய்வோம், செய்வதைச்சொல்வோம் என்று சொன்னார்களே தவிர, வேலைகளைச் செய்யவில்லை. செய்து கொண்டிருந்த வேலைகளை எல்லாம் நிறுத்திவிட்டு, இப்போது அந்த வேலைகள் ரொம்ப மோசமான சூழ்நிலையில் உள்ளது, ஆகையால் அதைத் துரிதப்படுத்தி, கொஞ்சம் வேகமாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அதிக பட்சம் படிக்காதவன், இவன் என்ன பேசி சலுகைகள் வாங்கித் தரப் போகிறான் என்று ஏளனம் பேசி, இன்றைக்கு போஸ்டர் அடித்து ஒட்டிக்கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் இன்று இந்தச் சபையிலே (மேசையைத் தட்டும் ஒலி) பேசி, எடுத்துக் காட்டாக விளங்க வேண்டுமென்பதற்காக இதை நான் எடுத்துரைக்கிறேன். அதேபோன்று கும்பக்கரை என்று ஒரு நதி உள்ளது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முதன்முதலில் சினிமாவில் நடிக்கிறபோது, அந்தப்பகுதியிலே வந்து ஒரு படம் எடுத்தார்கள். அந்த இடம் சுற்றுலா மையம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர, அங்கே சரியான சுற்றுலா இல்லங்கள் இல்லாமல், வசதிகள் இல்லாமல் இருக்கிறது. வனத்துறை அதற்கு இடையூறாக உள்ளது, எனவே வனத்துறை அமைச்சர் அவர்களிடம் அணுகி, அந்த இடத்தை சுற்றுலா ஸ்தலமாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி மக்களுடைய பிரச்சனைகள் 1947 ல் **— சுதந்திரம் வந்தது அந்தப்பகுதியினுடைய மக்களுடைய சூழ்நிலை இன்னும் சுதந்திரம் அடையாத கிராமங்களாக, ஒரிரு கிராமங்கள் இருக்கின்றன. அந்த பின்னைத்தான்பட்டி, கோட்டார்பட்டி ஆகிய கிராமங்களுக்கு சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் சாலை வசதி இல்லாமல், பஸ் வசதி இல்லாமல் முடங்கிக்கொண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்க அகற்றப் பட்டது.

இருந்தார்கள் அந்தப்பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு போக்குவரத்து வசதிக்கும் சாலை வசதிக்கும் இங்கே சட்டத்தில் இடம் போடுவதற்கு முன்னாலேயே ஊரில் உள்ள பணத்தை ஏற்பாடு செய்து ரோடு போடுவதற்கு ஆணையிட்டு அந்த பணிகளும் அங்கே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த பகுதியில் போக்குவரத்து அமைச்சர் அண்ணன் அவர்கள் எங்களுக்கு புதிதாக 2 வாகனங்களை விட்டு என்னுடைய மானம் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6.10

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறுப்பிட்ட இடத்திற்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திலே, ஒரே வார காலத்திலே, அங்கே பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி, இதுபோன்ற உதவிக்கு நன்றி. பெரியகுளம் தொகுதி என்பது பெரிய தொகுதி. அதை 3 தாலுக்காக்களாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு அது செயல்படும் நிலையில் உள்ளது. அதுபோன்ற அந்தப் பகுதியில் 3,000-க்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்கள் உள்ளன. அந்தப் பகுதிக்கு முக்கியமான கட்டத்தை விட்டுவிட்டேன் சார் (சிரிப்பு). ஒரு ஆர்.டி.ஓ. ஆபீஸ் அந்த— அலுவலகத்தை—மண்டல போக்குவரத்து அலுவலகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கடந்த 1984 ஆம் ஆண்டு மதுரை மாவட்ட பெரிய ஆஸ்பத்திரிக்கு இணையாக பெரியகுளம் தொகுதியில் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஆஸ்பத்திரியை நிறுவினார்கள். அதை முந்தைய ஆட்சியாளர்கள் என்ன காழ்ப்புணர்ச்சியோ அல்லது என்ன செய்தார்களோ தெரியவில்லை, வேறு ஏற்பாடு பண்ணி வைத்துவிட்டு போய்விட்டார்கள். (குறுக்கீடு) ஆனால் இன்றைய தினம் வரை அது அங்கே தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் அங்கேயுள்ள மக்களிடமிருந்து அந்த ஆஸ்பத்திரி அங்கேதான் இருக்க வேண்டுமென்று தந்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. அமைச்சர் அவர்களின் உத்தரவுகள் அதிகாரி



களுக்குப் போய்ச் சேரவில்லை போல் இருக்கிறது. ஆகவே தயவுபண்ணி அந்த ஆஸ்பத்திரியை அங்கேயே இருக்கவேண்டுமாய் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இவன் போய்தான் மாற்றிவிட்டான், இவனுக்கு என்ன திறமை இருக்கிறது என்று வேறு ஏளனமாகப் பேசிவிடுவார்கள். அதையும் நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அங்கே 3 கோர்ட்டுகள் இருந்தாலும் சரியான கட்டிட வசதிகள் இல்லை. வாடகை வீடுகளில்தான் நீதிபதிகள் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த கட்டிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் திறமையாக தொழில் பண்ணுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையில் என்னைப் பேசுவதற்கும், இந்த மாமன்றத்தில் கலகலப்பை ஊட்டுவதற்கும் வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரே ஒரு வார்த்தை. தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களைபோடும் முன்பாக, என்றைக்கு எம்.எல்.ஏ. வாகப் போகிறோம், என்றைக்கு வேட்பாளர் என்று அறிவிப்பார்கள் என்று எண்ணுவதற்கு முன்னாலே தமிழகத்திலே முதல் வேட்பாளராக என்னைத் தேர்ந்தெடுத்து, பங்குனி 28-ந்தேதி என்னைக் கூப்பிட்டு மற்ற எல்லாருக்கும் சித்திரை 1-ந்தேதிதான் சொன்னார்கள். பெரியகுளம் தொகுதி உனக்குத்தான், பெரியவீரன் நீ போய் உன் தொகுதிக்கு போய், மக்களுடைய குறைகளை போக்க முயற்சி செய், மக்களுக்கு பணி செய் என்று பணித்து, வாழ்த்தி, அருள் செய்து எனக்கு ஆசி வழங்கிய என் அன்னை புரட்சித் தலைவி அவர்களுக்கு அந்த முப்பெருந்தேவியார் அவர்களுக்கு இந்த மாமன்றத்தில் என்றென்றும் கடமைப் பட்டவனாக இருப்பேன் என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வரையிலும் பேசாத குறையைத் தீர்க்கிற வகையில் பேசினாலும், சிறப்பாக தன்னுடைய கன்னி உரையை ஆற்றினார். அவருடைய பேச்சில் இந்த நாட்டுக்கு * * என்ற ஒரு இடம் இருக்கிறது. * * என்ற சந்தேகத்தோடும் அவர் சொன்னதையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கி, 1947-ல் சுதந்திரம் வந்தது என்று மட்டும் இருக்க உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு போவைத் தலைவரின் ஆணைகிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியவீரன் அவர்கள் ஒரு கோரிக்கையை முதலிலே என்னிடத்திலே சொல்லியிருந்தார்கள். அவருடைய கோரிக்கையை ஏற்றுத்தான் அது அங்கேயே இருக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. முறையாக அந்த உத்தரவு இடப்பட்டு இருக்கிறது. அவருடைய அனுமதி இல்லாமல் அது எங்கும் நகராது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியவீரன் அவர்கள் கொடைக்கானல் பகுதியிலே வெளிநாட்டுக் காரர்கள் எல்லாம் வந்து போகின்ற இடம், அங்கே தண்ணீர் பஞ்சம் தாண்டவம் ஆடுகிறது என்று கூறினார்கள். அதை அரசு உடனடியாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6.15

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், கொடைக்கானலுக்கு ஒரு நீதிமன்றம் அளித்திருக்கிறார்கள், அதனை விரைவிலே கொண்டுவருவோம் என்று நானும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வரையிலே பேசாத உறுப்பினர் பெரியவீரன் அவர்கள் பேசினார்கள். இது வரையில் பேசிப் பேசி அலுத்துப்போன திரு. ஆர். சிங்காரம் அவர்கள் (சிரிப்பு) இரண்டொரு நிமிடங்களிலே பேசி முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியது போல இதுவரையில் கடந்த 30 நாட்களாக பேசிப் பேசி அலுத்துப்போன நமக்கு எந்தவித காரியமும் ஆகாவிட்டாலும் ஒரே நிமிடத்திலே பேசி நிரம்பக் காரியங்களைப் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் பெரியவீரன் அவர்களுக்கு இந்த அவையின் சார்பாக நான் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து, அவருக்கு அறிவிப்பு செய்த மாண்புமிகு அமைச்சர்களுக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொண்டு, அவரைப் பேச



அனுமதித்த தங்களையும் பாராட்டி, இது போன்று எல்லா உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சர்களுக்குக் கொடுத்துள்ள நிரம்ப கோரிக்கைகளையும், பேசியுள்ள கோரிக்கைகளையும் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசாமல் இருந்து கொடுத்திருந்தால் உங்களுக்கும் கிடைத்திருக்கும்.

திரு. ஆர். சிங்காரம் : ஆகவே எல்லா கோரிக்கைகளையும், நிரம்ப மக்கள் எதிர்பார்க்கிற காரணத்தால், இதய தெய்வம் புரட்சித் தலைவியின் காலத்திலே நிரம்பக் காரியங்களைச் செய்வார்கள் என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிற காரணத்தால், தயவு செய்து அந்தக் கோரிக்கைகள் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே புரட்சித் தலைவியின் ஆட்சி ஏற்பட்ட பிறகு நடைபெற்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான பொது விவாதத்தின்போது சொன்னதைமீண்டும் நினைவுப்படுத்தி, அதை நிறைவேற்ற வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணியில் நடந்த ஒரு கற்பழிப்புச் சம்பவம் பற்றி. அந்த வழக்கை முடிக்க வேண்டும் என்று நான் பல முறை எடுத்துச் சொல்லியும், அந்த வழக்கை அரசு நடத்த வேண்டும் என்று எடுத்துச் சொல்லியும்கூட அதை நடத்தவிடாமல் அந்த வழக்கை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அந்தப் பெண் இன்று ஒரு அனாதையாக இருக்கிறார். அப்படிப்பட்ட அனாதைக்கு வாழ்வு அளிக்கும் புரட்சித் தலைவி ஆட்சியில் அந்த அனாதையைக் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்த வழக்கை வாபஸ் பெற்றிருக்கிறார்கள். அதை மீண்டும் புதுப்பித்து வழக்கை நடத்தி, அதற்கு முழு பொறுப்பாக ஏற்று தி.மு.க. அரசுக்கும் உதவியாக இருந்த பேராவூரணி இன்ஸ்பெக்டர் இன்னும் அதே போலீஸ் ஸ்டேஷனிலே இருக்கிறார், உடனடியாக நடவடிக்கை எடுத்து அவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் வைக்கிறேன்.

இது போன்று தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எங்கு பார்த்தாலும் கற்பழிப்புகள், கொலைகள், கொள்ளைகள் நடந்ததையெல்லாம் மறைத்திருக்கிறார்கள்

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : **

அது இன்னும் வழக்கிலே இருக்கிறது என்றும் சொல்லுகிறீர்கள். எனவே பேராவூரணியில் நடந்த ஒரு கற்பழிப்புச் சம்பவம் என்று மட்டும் அவைக் குறிப்பிலே இருக்கலாம்.

<u>திரு. ஆர். சிங்காரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இங்கே விவாதம் நடைபெற்றபோது, அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அந்தப் பெண்ணினுடைய சம்மதத்தின் பேரில்தான் **

கற்பழித்தார் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ரிக்கார்ட் ஆகியிருக்கிறது. நான்கூட அதற்குப் பதில் அளித்திருக்கிறேன். சம்மதத்தோடு கற்பழிப்பது, சம்மதம் இல்லாமல் கற்பழிப்பது என்பது எனக்குத் தெரியாது, உங்களுக்குத்தான் தெரியும் என்று நான்கூட வாதம் செய்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: ரிக்கார்டில் இருப்பதால் பேராவூரணியில் நடந்திருக்கிற கற்பழிப்புச் சம்பவம் என்று மட்டும் இருந்தால் போதும்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : பெண்ணினுடைய சம்மதம் என்றால் கற்பழிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேராவூரணியில் நடந்த ஒரு கற்பழிப்புச் சம்பவம் என்று மட்டும் அவைக்குறிப்பிலே இருக்க வேண்டும்.

<u>திரு. ஆர். சிங்காரம்</u> : அப்படிப்பட்ட உச்சக்கட்ட நிகழ்ச்சி நடந்தது இங்கேயிருந்த எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிகழ்ச்சி பேராவூரணியில் நடந்தது. அந்தப் ஃபைலை குளோஸ் செய்துவிட்டார்கள். அந்த வழக்கை குளோஸ் செய்துவிட்டார்கள். அந்த இன்ஸ்பெக்டரும் அங்கே இருந்துகொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலே இதையெல்லாம் கண்டுபிடித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இங்கே இதுவரையில் கடந்த 30 நாட்களாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப்பெற்றது.



சட்டமன்றத்திலே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், ஜனநாயக முறைப்படி எதிர்க்கட்சியாக இருந்தாலும், எதிரிக்கட்சியாக இருந்தாலும், நிரம்ப வாய்ப்புகளைக் கொடுத்து எல்லோருக்கும் சுதந்திரம் வழங்கி சிறப்பானமுறையில் பணியாற்றி நம்மையெல்லாம் கௌரவித்து, ஆதரித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 6.20.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு நிதி அமைச்சர் .

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் குறிப்பிட்டு இருக்கிற இனங்களுக்கு எவ்வளவு எவ்வளவு ஒதுக்கப்பட்டு இருக்கின்றதோ அந்த இனங்களைப் பற்றிய கருத்துக்களை மட்டுமே தான் இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவிலே கூற வேண்டும்; அதுதான் மரபு. அப்படிச் சொன்னால்தான் நானும் பதில் சொல்ல முடியும், ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பொது விவாதமாகவே எடுத்துக்கொண்டு பொதுவாக எல்லாத் துறைகளைப் பற்றியும், எல்லா குறைகளையும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவைகள் எல்லாம் சொல்லவேண்டிய குறைகள்தான். என்றாலும் கூட, சொல்ல வேண்டிய நேரம் இது இல்லை என்பதுதானே தவிர, வாய்ப்பு இதுவாக இருக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனைக்கும் பதில் சொல்கின்ற அளவுக்கு என்னிடத்திலே குறிப்புகளும் வகைகளும் இருக்காது. ஆனால் அமைச்சர் பெருமக்கள் அந்தந்த துறையைப் பற்றி எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் உள்ளத்திலே வைத்து இருக்கின்றதன்காரணமாக, அவற்றுக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்த அவை அறியும்; என்னென்ன திட்டங்களை எந்தெந்த துறைகளில் மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் அறியும். அந்த வகைகளிலே எதை எதைச் செய்ய இயலுமோ அதைத்தான் அந்தந்தத் துறைகளிலே இந்த ஆண்டு செய்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அந்தத் திட்டங்களுக்கு மேலாக எவைகளைச் சொன்னாலும்கூட, நிதி தேவை; அந்த நிதி ஆதாரம் தேடாமல் புதிய திட்டங்களை மேற்கொள்வதற்கு இயலாது. அந்த அடிப்படையிலேதான் அமைச்சர் பெருமக்கள் இங்குஎடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு எல்லாம், அவர்கள் உரிய விளை

களில் பதில் சொன்னார்கள். பரிசீலிக்க வேண்டியதைப் பரிசீலிப்போம் என்றும், அதுபற்றி முடிவு கட்ட வேண்டியதை முடிவு கட்டுவோம் என்றும் அந்த வகைகளிலே பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இப்போது நிதி ஒதுக்கீடு மசோதா ஏற்கெனவே புதிய திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு, அது எதிர்பாராத செலவில் இருந்து ஒதுக்கப்பட்டதன் காரணமாக எதிர்பாராத செலவினத்திற்குச் சேர வேண்டும் என்பதற்காக இந்த துணை மதிப்பீடு கோரிக்கைககள் இங்கே வந்து இருக்கின்றன. இதில் ஒதுக்கித்தருவதன் மூலம் எதிர்காலத்திலும் சிலபல புதிய திட்டங்களை எதிர்பாராத வகையில் நாம் நிறைவேற்ற வேண்டி வரும். இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு துறைகளைப் பற்றி எடுத்துச் சொன்ன இன்றியமையாத பணிகள் சிலவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அதற்கு இங்கே வாக்களிக்க முடியாமல் இருக்கின்ற சில இனங்களுக்கு நாம் எதிர்பாராத செலவினங்களில் தான் செலவழிக்க வேண்டி வரும். இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பல்வேறு கோரிக்கைகள், மற்றவைகளை அந்தந்த துறையினர் ஆராய்ந்து, நிதித்துறையும் ஆராய்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதை மட்டும் பொதுவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பெரியவீரன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கள், கடைசிக் கட்டமாகவும் இறுதிக் கட்டமாகவும் நெருங்குகின்ற நேரத்திலேயாவது எல்லோரும் மகிழ்ச்சியாகவே இருக்கட்டும் என்று கருதி அவர்கள் தன்னுடைய கன்னி உரையை மகிழ்ச்சிகரமான உரையாக முடித்து இருக்கிறார்கள். அதுவும் நல்லவிதமாகவே முடிகின்றது. இந்தத் தொடர்க்கூட்டம் என்பதைத் காட்டுகின்ற வகையில் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். ஆக, அவர்கள் பெரியகுளம் தொகுதிக்கு என்னென்ன தேவை என்பதை எல்லாம் சொல்லி, இன்னும் பலவற்றை விட்டு இருக்கிறார்கள். அவைகளை அடுத்த தடவைக்கு வைத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கான தன்மைகளையும் இங்கே எடுத்து இருக்கிற நடவடிக்கைகளை பொறுத்து எடுத்துச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். குடிநீர்ப் பற்றாக்குறையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதை காலையிலேயே நான் குறிப்பிட்டேன். அதற்குத்தான் முதலிடம் தரப்பட்டு இருக்கிறது என்றும், வழக்கமாக ஆண்டு தோறும் ஒதுக்கப்படுகின்ற நிதி மட்டும் அல்லாமல் இந்த ஆண்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டு இருக்கிற ஒரு



கோடி ரூபாய் திட்டத்தில் இந்த குடிநீருக்குத்தான் முன்னுரிமை தந்து. இன்றைக்கு குடிநீருக்கும் சாலை வசதிகளுக்கும் அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த வகையிலே எந்தெந்த இடங்களிலே பற்றாக்குறை இருக்கின்றதோ அந்தப் பற்றாக்குறையை நீக்குவதற்கான பெரும் முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்பதை எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

தெரசா பல்கலைக் கழகத்தை சென்னைக்குக் கொண்டு வந்ததைப் பற்றி கருத்துக்கள் இருக்கின்றன. அதை அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. இங்கே வந்ததே தவிர, தெரசா பல்கலைக் கழகத்திற்கு ஏற்ற இடமோ வாய்ப்போ வசதியோ எதுவும் இல்லை. அவைகளை எல்லாம் உருவாக்காமல் அங்கிருந்து ஏன் கொண்டுவந்தார்கள் என்பதும் தெரியவில்லை. அதையெல்லாம் கல்வித் துறையினர் ஆராய்ந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் பெரியவீரன் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற கருத்தின் அடிப்படையில் எதைச் செய்ய இயலுமா, அந்தப் பரிசிலனை முடிந்ததற்குப் பிறகுதான் அது பற்றி முடிவு எடுக்க முடியும். இப்போது அது பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை. அவர்கள் சொன்ன கருத்துக்கள் உள்ளத்திலே கொள்ளப்படும் என்பதை மட்டும் இந்த வாய்ப்பிலே எடுத்துக் கூறிக்கொண்டு, இந்த நிதி ஒதுக்க மசோதாவிலே பலரும் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் அவைகளை எல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்கு நிதிவசதியைப் பொறுத்து மேற்கொள்ளப்படும் என்பதையும் எடுத்துச் சொல்லி இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்த அவையினரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 6.25.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை

[பேரவைத் தலைவர்]

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(மேசையைத் தட்டும் ஒலி).



பிற்பகல் 6.30.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய சில விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய சில விவரங்கள்.

தமிழ்நாடு பத்தாவது சட்டமன்றப் பேரவைக்கு இவ்வாண்டு சூன் திங்கள் 15 ஆம் நாள் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் பேரவையின் முதல் கூட்டத் தொடர். 1–7–1991 ஆம் நாளன்று தொடங்கி 13–7–1991 வரையிலும் நடைபெற்றது. இரண்டாவது கூட்டத் தொடர், வரவு செலவுத் திட்டம் நிறைவேற்ற 4–9–1991 ஆம் நாளன்று தொடங்கி, இன்று 4–10–1991 வரையிலும் நடைபெற்றுள்ளது.

பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் 1–7–1991 ஆம் நாளன்று, தற்காலிகப் பேரவைத் தலைவராக நியமிக்கப்பெற்றிருந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

3–7–1991 ஆம் நாளன்று பேரவைத் தலைவரும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் பேரவையால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, பாராட்டுரைகளும், வாழ்த்துரைகளும் வழங்கப் பெற்றன.

மேதகு ஆளுநர் அவர்கள் 4–7–1991 ஆம் நாளன்று பேரவை உறுப்பினர்களிடையே உரையாற்றினார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 4–9–1991 ஆம் நாளன்று, 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தார்கள்.

முதல் கூட்டத் தொடர் மற்றும் இரண்டாவது கூட்டத் தொடர் அலுவல்கள் பற்றிய சில புள்ளி விவரங்களாவன :

முதல் கூட்டத் தொடர் :

| | |
|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் | 9 |
| பேரவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம். | 30 மணி 15 நிமிடங்கள். |

| | |
|---|---|
| ஆளுநர் உரைமீது விவாதம் நடைபெற்ற நாட்கள். | 6 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் .. | 81 |

**இரண்டாவது கூட்டத் தொடர் :**

| | |
|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் ... | 23 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் — | 11 |
| பேரவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம். | 130 மணி 52 நிமிடம். |
| உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் | 848 |

**நிதி அலுவல்கள் :**

| | |
|---|---|
| வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள். | 5 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் .. .. | 63 |
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள். | 12 (இதில் 9 நாட்கள் மாலையிலும் அவை கூடியது.) |
| உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் — | 327 |
| கொடுக்கப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | 1,393 |
| அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். | 1,251 |
| விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள். | 52 |

**வினாக்கள்—விடைகள் :**

| | |
|---|---|
| குறுகிய கால வினாக்கள் .. ... | 4 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் ... — | 162 |
| கேட்கப்பட்ட துணை வினாக்கள் — | 655 |
| குறியிடாத வினாக்கள் — ... | 125 |





**கவன ஈர்ப்புகள் :**

| | |
|---|---|
| அனுமதிக்கப் பெற்றவை .. .. .. | 111 (86 பொருட்கள்) |
| அவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை .. | 35 (23 பொருட்கள்). |

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :**

| | |
|---|---|
| அவையில் எடுத்துக் கொண்டு இசைவு மறுக்கப் பெற்றவை. | 3 |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :**

| | |
|---|---|
| அவையில் எழுப்பப் பெற்றவை .. | 3 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை | 2 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள் (முதல் கூட்டத் தொடர் உட்பட). :**

| | |
|---|---|
| அறிமுகம் செய்யப் பெற்றவை .. .. | 36 |
| நிறைவேற்றப் பெற்றவை .. .. | 36 |

**அரசினர் தனித் தீர்மானங்கள் :**

| | |
|---|---|
| வரப் பெற்றவை .. .. .. .. | 3 |
| நிறைவேற்றப் பெற்றவை .. . | 3 |

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள் :**

| | |
|---|---|
| பொதுக் கணக்குக் குழு .. .. .. | 23 |
| பொது நிறுவனங்கள் குழு .. .. | 23 |

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

| | |
|---|---|
| (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும். | 131 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள். | 167 |

பார்வையாளர்கள் :

| | |
|---|---|
| பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பெற்றவர்கள் .. .. | 23,969 |
| தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் .. .. | 9,342 |
| இதுவரையில் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோருடைய மொத்த எண்ணிக்கை. | 33,311 |

நூலகம் :

| | |
|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | 416 |
| வழங்கப்பெற்ற நூல்கள் .. .. | 556 |

நடவடிக்கைக் குறிப்புகள் :

| | |
|---|---|
| தட்டச்சு செய்யப் பெற்ற மொத்த பக்கங்கள். | 6,466 |

எல்லா நாட்களும் அவைக்கு வந்திருந்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை இதுவரையிலும் இல்லாத எண்ணிக்கை 60 என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வளவு அதிக எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் எல்லா நாட்களும் அவைக்கு வந்திருப்பது தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே இதுதான் முதல் முறை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்



களது பெயர்களையும் படிக்கிறேன். அப்போதுதான் அவர்களுக்கும் மதிப்பாக இருக்கும்; மற்றவர்களுக்கும் ஊக்கம் ஊட்டுவதாகவும் வழிகாட்டுவதாகவும் இருக்கும்.

1. திரு. எஸ். அண்ணாமலை.
2. திரு. எஸ். அன்பழகன்.
3. திரு. எஸ். ஆசைமணி.
4. திரு. செ. ஆறுமுகம்.
5. திரு. சி. இராமசுவாமி.
6. திரு. இராம இராமநாதன்.
7. திரு. இராஜன் பாபு (என்கிற) தனிவ
8. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.
9. டாக்டர் எம். கருப்புசாமி.
10. திரு. ப. கலியபெருமாள்.
11. திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.
12. திரு. சிங்கை கோவிந்தராசு.
13. திருமதி ரா. சக்குபாய்.
14. திருமதி டி. சக்குபாய் தேவராஜ்.
15. திருமதி ப. சரஸ்வதி.
16. திரு. இ. சாத்தையா.
17. திரு. ஆர். சிங்காரம்.
18. திரு. கு. சிவசுப்பிரமணியன்.
19. திரு. ம. சின்னசாமி.
20. திரு. வி.கே. சின்னசாமி.
21. திரு. கு. சீனிவாசன்.

22. திரு. எம். கே. சுந்தரம்.

23. டாக்டர் ச. சுந்தரராஜ்.

24. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

25. திருமதி செ. சுந்தராம்பாள்.

26. செல்வி எல். சுலோசனா.

27. திரு. பி. சொக்கலிங்கம்.

28. திரு. சி. ஞானசேகரன்.

29. திரு. கு. தங்கமுத்து.

30 திரு. ம. தனபால்.

31 திரு. சி. தாமோதரன்.

32 திரு. எஸ். எம். துரை.

33. திரு. அ. தேவராஜ்.

34. செல்வி பி. நிர்மலா.

35. திருமதி கே. பஞ்சவர்ணம்.

36. டாக்டர். ஜெ. பரந்தாமன்.

37. திரு. வெ. பழனிசாமி.

38. திருமதி க. பழனியம்மாள்.

39. திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்.

40. திரு. சி. பாலசுப்பிரமணியன்.

41. திரு. எம். கே. பாலன்.

42. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

43. திரு. ச. புரட்சிமணி.

44. திரு. பெ. பொன்னுசாமி.



45. திரு. போளூர் வரதன்.

46. (திருமதி) டாக்டர் சு. மணிமேகலை.

47. திரு. கே.பி. மணிவாசகம்.

48. திருமதி மரியமுல் ஆசியா.

49. (செல்வி) டாக்டர் ஜி. ஆர். மாலா.

50. திரு. கே. முனிவெங்கடப்பன்.

51. திரு. டி. எம். ரங்கராஜன்.

52. திரு. ஏ. ரவிக்குமார்.

53. திரு. எச். எம். ராஜு.

54. திரு. செ. நு. வரதராஜன்.

55. திரு. தா. வேடியப்பன்.

56. டாக்டர் பெ. வீரபாண்டியன்.

57. திரு. என். ஜி. வேணுகோபால்.

58. திருமதி ஜீனத் செர்புதீன்.

59. டாக்டர் அ. ஸ்ரீதரன்.

60. டாக்டர் (திருமதி) பியாட்ரிக்ஸ் டி'சோசா ஆகியோர் ஆவர்.

பிற்பகல் 6-35

தமிழகத்தில் ஒரு பெண் தலைவி மக்களின் பேராதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராகி இவ்வவையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வது தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே இதுதான் முதல் முறை என்ற சிறப்பையும் இந்த அவைதான் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழக வரலாற்றில் முதன் முறையாக 30 பெண்மணிகள் —தேர்தலில் நின்ற அனைவருமே —தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மற்றொரு சிறப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

இப்பேரவையில் குறிப்பாக வரலாற்றிலில்லா வகையில் முதன்முறையாக பட்டதாரிகள் 30 பேர், முதுகலைப் பட்டதாரிகள் 14 பேர், ஆசிரியர் பயிற்சி பெற்றோர் 8 பேர், வழக்கறிஞர்கள் 56 பேர், பொறியாளர்கள் 10 பேர், மருத்துவர்கள் 21 பேர், எம்ஃபில் தேர்ச்சி பெற்றோர் 4 பேர், பி.எச்.டி. பட்டம் பெற்றோர் 3 பேர், [illegible] வேறு பிரிவினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மற்றுமொரு சிறப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

இக்கூட்டத் தொடரில் குறிப்பிடத்தக்க பல சாதனைகள் நிகழ்ந்துள்ளன.

வினாக்கள்—விடைகளைப் பொறுத்தவரை, 20 நாட்களில் மொத்தம் 162 உடுக்குறியிட்ட வினாக்களுக்கு விடையளிக்கப்பெற்றுள்ளது. ஆனால் 9-வது சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் அதாவது சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதே கால அளவில் மொத்தம் 138 வினாக்களுக்குத்தான் பேரவையில் விடையளிக்கப்பட்டது.

உடுக்குறியிடாத வினாக்களைப் பொறுத்த வரை 125 வினாக்களுக்குப் பேரவையில் அச்சிட்ட விடை வைக்கப்பட்டுள்ளது. 9-வது சட்டமன்றப் பேரவையில் இதே கால அளவில் விடை அளிக்கப்பட்ட உடுக்குறியிடாத வினா ஒன்று கூட இல்லை.

குறுகிய கால வினாக்கள் நான்கிற்கு விடையளிக்கப்பட்டன. 9-வது சட்டமன்றப் பேரவையில் இதே கால அளவில் ஒரு குறுகிய கால வினாவுக்குத்தான் விடையளிக்கப்பட்டது.

உடுக்குறியிடாத வினாக்கள் பற்றிய விவரங்களை முன்னதாகவே உறுப்பினர்கள் அறிந்து, விடைகளைக் காண உதவும் வகையில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களது பெயர் மற்றும் உடுக்குறியிடாத வினாக்களின் எண்கள் ஆகியவற்றைத் தொகுத்து, உடுக்குறியிடாத வினாக்கள் பட்டியல் தயார் செய்யப்பெற்று, அவற்றிற்கான விடைகள் குறிப்பிட்ட தேதியில் அவைமுன் வைக்கப்பெறும் என்ற முறையில், இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே உறுப்பினர்களுக்குச் சுற்றறுப்பு மூலம் அறிவிப்பாகத் தெரிவிக்கப்படும் முறை நாடாளுமன்றத்தில் இருப்பதைப் போல முதன் முறையாக பத்தாவது சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றிலேயே முதல் முறையாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தொகுதிப்படி ரூ. 250, 1–9–1991 முதல் வழங்கப்படவுள்ளது.



சட்டமன்றப் பேரவையின் நிதி நிலைக் குழு உள்ளிட்ட பேரவைக் குழுக்கள், மிகக் குறுகிய காலத்திலேயே, அதாவது, பேரவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம்/உறுதிமொழி எடுத்துக் கொண்ட 13 நாட்களுக்குள்ளேயே, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பதவிப் பிரமாணம்/உறுதி மொழி எடுத்த நாளிலிருந்து சட்டமன்றம் நடைபெற்ற 9 நாட்களுக்குள்ளேயே அமைக்கப்பட்டு விட்டன. ஆனால், 9-வது சட்டமன்றப் பேரவையில் 70 நாட்கள் கழித்தே குழுக்கள் அமைக்கப்பட்டன.

இக்கூட்டத் தொடரில் 21 நாட்களுக்குள் 10 பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுக்கள்/நிர்வாகக் குழுக்களுக்கு, 24 உறுப்பினர்களும், மற்றும் ஆதரவற்றோர், அநாதை இல்லங்களின் நிர்வாகக் குழுக்களுக்கு 3 உறுப்பினர்களும் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

9-வது சட்டமன்றப் பேரவையில் 24 நாட்கள் கழித்து 5 பல்கலைக் கழகங்களுக்கு மட்டுமே உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிறப்பாகக் குறிப்பிடும் வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பெற, செப்டம்பர் திங்கள் 6, 7, 9, மற்றும் 10 ஆகிய நான்கு நாட்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிக இன்றியமையாத பொருள்கள் பற்றி பல்வேறு வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் அன்றாடம் 150-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். மாண்புமிகு அமைச்சர்களும் கருத்தரங்கிற்கு சிறப்பு பார்வையாளர்களாக வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டெல்லியில் நடைபெற்ற 37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் நமது சட்டமன்ற நிகழ்ச்சிகளை, 30—9—1991 தேதியில் பார்வையிட்டு, அப்போது நடைபெற்ற மண்டல் கமிஷன் விவாதங்கள் பற்றி பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று அளித்த விருந்தில் கலந்துகொண்டு, தமிழகத்தின் விருந்தோம்பலைப் பெரிதும் பாராட்டினர். மேலும் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட அவ்விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நன்றி தெரிவித்துப் பேசிய வெளிநாடுகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்திரா காந்தி, மார்கரெட் தாட்சர் போன்று உலகத் தலைவர்களில் ஒருவராய்த் திகழ்வார் எனப் போற்றியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேசையைத் தட்டும் ஒலி.)

தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே முதல் முறையாக
நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுப்பினர்கள்
கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்கும் தனித்
தனியாக அவையில் பதில் அளித்தார்கள். மாண்புமிகு முதல
மைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்கு எவ்வளவு உயர்ந்த
மதிப்பு அளித்துள்ளார்கள் என்பதை பேரவையும், பேரவையின்
மூலமாக நாட்டு மக்களும் அறிந்துகொள்ள இது உதவிற்று.

பிற்பகல் 6-40.

மத்திய அரசு மற்றும் மாநில அரசுத் துறை நிறுவனங்
கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்கள்
அனைத்திலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்
காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மத்திய அரசை
வலியுறுத்திடும் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்
கக்கூடிய, தீர்மானம் ஒன்றை இப்பேரவை ஒருமனதாக நிறை
வேற்றியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவையும்,
அதற்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதிகளையும் திரும்பப்
பெறவும், இந்திய நாட்டின் கடற்கரை எல்லைப் பகுதியுடன்
அவைகளை மீண்டும் சேர்க்கவும், எல்லாவிதமான உடனடி
நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் மைய அரசு மேற்
கொள்ள வேண்டுமெனக் கோரும் வரலாற்றுச் சிறப்புமிக்க
மற்றொரு தீர்மானத்தையும் இப்பேரவை ஒருமனதாக நிறை
வேற்றியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை மீண்டும் துவக்க
20—2—1989-இல் நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தை நீக்கிக்
கொள்ளும் தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித்
தலைவர் எண்ணத்தை ஈடேற்றி அவர் வழி நடக்கும் புரட்சித்
தலைவியின் அரசு இன்று காலை நிறைவேற்றியது.

நில உச்சவரம்புச் சட்டத்தை ஏமாற்றி 31 ஆண்டுகளாக
உபரி நிலம் வைத்திருந்தோர்களிடமிருந்து உபரி நிலங்களை
மீண்டும் கையகப்படுத்தும் சட்டமுன்வடிவு இக்கூட்டத் தொடரில்
தான் நிறைவேற்றப் பெற்றுள்ளது.

இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் "சிறப்புக் குறிப்பு"
அதாவது, (Special Mention) என்ற வகையில் பேரவைத்
தலைவருடைய அனுமதி பெற்று 20 முறை மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முக்கிய
பொருள்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு
வந்துள்ளனர். அவற்றில் 13 பொருள்களுக்கு மாண்புமிகு தமிழக
முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களே பதில் அளித்துள்ளார்.



பேரவை கூடிய மிகக் குறுகிய 24 நாட்களிலேயே, 11
நாட்கள் மாலையிலும் கூடி, 62 மானியக் கோரிக்கைகளும்
விரிவாக விவாதிக்கப்பெற்ற பின்னரே, நிறைவேற்றப்
பெற்றுள்ளன. மாலையிலே பேரவை அதிக நாட்கள் தொடர்ச்சி
யாகக் கூடியதும், இந்தப் பேரவையில் இப்போதுதான் என்பதும்
குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டமன்றப் பணிகளைத் தொடர்ந்து இடையறாது,
இடைவிடாது நாள்தோறும் ஆற்றிவருகின்ற மாண்புமிகு
தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை எவ்வளவு
பாராட்டினாலும் தகும். காலை, மாலை, இரவு என
இடையறாது அவையில் அமர்ந்து தேவையான விளக்கங்களை
அவ்வப்போது அளித்து பேரவை மூலம் நாட்டுக்கு அரசின்
கருத்துக்களை எடுத்துரைத்த அவருக்கு பெரிதும் நன்றிகூற
கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத்தட்டும் ஒலி).

விவாதங்களில் சூடேற்றாமல், சுவையேற்றி, ஆழமாகக்
கருத்துக்களை எடுத்துரைத்த, பெருமைக்குரிய நம்முடைய
மாண்புமிகு பேரவை முன்னவர், ஏனைய அமைச்சர்
பெருமக்கள், மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் மற்றும்
மாண்புமிகு உறுப்பினர்கள் ஆகியோரையும் உளமாரப் பாராட்டு
கின்றேன்.

உரிய நேரத்தில், அலுவல்களைச் சீரிய முறையில்
நடத்துவதற்கு எனக்குப் பேருதவியாக இருந்த பேரவைத்
துணைத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி
அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களான திருவாளர்கள்
க. அர்ச்சுனன், வ. சத்தியமூர்த்தி, திருமதி ரமணி நல்லதம்பி
டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்
தாகுக. இவ்வவையின் மாண்பினை மனதில் நிறுத்தி
நன்முறையில் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்சிகளின்
தலைவர்களுக்கும் ஏனைய கட்சிகளின் நிர்வாகிகளுக்கும்
கொறடாக்களுக்கும் பெரிதும் நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி).

அவையில் தங்களுக்குள்ள பேச்சுரிமையை முழுவதும் பயன்
படுத்தி, கடமையாற்றிய உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும்
உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நல ஆர்வத்துடன் பேரவை நடவடிக்கைகளை நன்
முறையில் மக்களுக்கு விரைந்து எடுத்துச் சென்ற தொலைக்
காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், செய்தி நிறுவனங்கள்
ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும், குறிப்பாக, மாலை

நேரங்களில், இக்கூட்டத் தொடரில்தான் பெருமளவில் அவை நடத்தப்பட்டும் கூட, பல்வேறு சிரமங்களைப் பொருட்படுத்தாது அவையின் நடவடிக்கைகள், மறுநாள் காலை செய்தித் தாள்களில் தவறாமல் வெளியிட்டு தங்கள் ஆற்றலை வெளிப்படுத்திய செய்தியாளர்களுக்கும் என் உளப்பூர்வமான பாராட்டுக்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த அவையினுடைய அலுவல்கள் செம்மையாக நிறைவேறிட உளப்பூர்வமான ஈடுபாட்டுடன் எனக்கு துணை நின்ற பேரவைச் செயலாளர் திரு. செ. சு. ஆனகிராமன் அவர்களுக்கும், பேரவையின் இதர அனைத்து அலுவலர்களுக்கும், பாதுகாப்பு அலுவலர்களுக்கும் பேரவையின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வவையின் எல்லா அலுவல்களையும் முன்நின்று சிறப்பாக நடத்தப் பெரிதும் துணையிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் தனித்தனியே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கு உங்கள் அனைவர் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

10. அரசினர் தீர்மானம்.

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேரவையின் 25 (1)-வது விதியின்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் படாமல் ஒத்திவைக்கலாம்' என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.



மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன். மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகிறது. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 6.45 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

128. 1989—90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரை லிமிடெட்டின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

129. 1989—90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

130. 1988—89 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ்).

131. 1989—90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் ஆண்டறிக்கை. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ்).

158381



(அறிவிக்கைகள், ஏனைய ஆவணங்கள்.

153. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின, 1986—87 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

154. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகள், 1990. (ஆங்கிலம்)

155. பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, 1991—92.

156. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1991—92.

157. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1991—92.

158. பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை, 1991—92.

159. பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1991—92.

160. பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை, 1991—92.

161. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஒன்றாவது அறிக்கை 1991—92.

162. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை., 1991—92.

163. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை, 1991—92.

164. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை, 1991—92.

165. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை, 1991—92.

166. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (மூன்றாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

167. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள் பட்டியல். (எண்கள் 1 முதல் 14 வரை).